
ஸ்ரீ:

# திருமலையப்பன் திருவருள் – 2



ந்யாய வேதாந்த வித்வச் சிரோமணி
ஸ்ரீ உ.வே. திருமலை அனந்தாண்பிள்ளை

**கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி**

ஸ்ரீ:

# திருமலையப்பன் திருவருள்-2

ந்யாய வேதாந்த வித்வச் சிரோமணி
ஸ்ரீ உ.வே. திருமலை அனந்தாண்பிள்ளை

**கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி**

திருப்பதி
1998

முதல் பதிப்பு :
750 பிரதிகள்
உரிமை: ஆசிரியருக்கு .

This book is published with the financial assistance of Tirumala Tirupati Devasthanams under their scheme Aid to Publish Religious Books.

விலை : ரூ 50

கிடைக்குமிடம் :
**ஸ்ரீமான் T.A. பாஷ்யம்,**
7,பரோடா தெரு விரிவு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

அச்சிட்டோர் :
**கோடேடி கிராபிக்ஸ்,**
64, தம்பையாரெட்டி ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை -600 033.

ஸ்ரீ:

திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்

# முன்னுரை

அடியேனுடைய பதினொரு கட்டுரைகள் 'திருமலையப்பன் திருவருள் ' என்னும் பெயருடன், 'கீதாசார்யன் பதிப்பகம்' வாயிலாக 1997 ஜனவரியில் வெளிவந்துள்ளமை பலரும் அறிந்ததே. இப்போது, மேலும் அடியேனெழுதிய இருபது கட்டுரைகள் அடங்கிய புத்தகமொன்று 'திருமலையப்பன் திருவருள்-2' என்ற பெயருடன் வெளிவருகிறது. இக்கட்டுரைகளில் ஏற்பட்டுள்ள குற்றங்களைப் பெரியோர்கள் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றேன்.

இதனை அச்சிடுவதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்த திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளுக்கு அடியேனுடைய நன்றியை விநயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதுதன்னை அச்சிடும்போது, அச்சுத்தாள்கள் திருத்துவதும் ஒப்புநோக்குவதும் செய்து மிகவும் உறுதுணையாக இருந்த அடியேனுடைய தம்பி ஸ்ரீமான் சிரஞ்சீவி கோபாலாசாரியர்க்கும் (ஓய்வு பெற்ற வியாகர ணத்துறைத்தலைவர் S.V.O. காலேஜ், திருப்பதி),ஸ்ரீமான் சிரஞ்சீவி டாக்டர் M. வரதராஜனுக்கும் (திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழத்துறை விரிவுரையாளர்), அடியேனது மனமார்ந்த நன்றியையும் ஆசியையும் தெரிவிக்கிறேன்.

இப்புத்தகத்தை நல்லமுறையில் அச்சிட்டு உதவிய ஸ்ரீமான்-கோடேடி கிராபிக்ஸ் உரிமையாளர் G.வேங்கடேச்வர ராவ் அவர்களுக்கு அடியேனுடைய நன்றி உரித்தாகுக.

பக்கத்திலேயே இருந்துகொண்டு, அச்சிடுங் காரியத்தை ஊக்கமாகக் கவனித்து நிறைவேற்றித்தந்த அடியேனுடைய தம்பி சிரஞ்சீவி ஸ்ரீமான் பாஷ்யத்துக்கு அடியேனுடைய மனமார்ந்த ஆசியை வழங்குகிறேன்.

திருப்பதி
1-8-98

இங்ஙனம்
தி.அ. கிருஷ்ணமாசார்யதாஸன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருவேங்கடமுடையானும் மங்களாசாஸனமும் | 1 |
| 2. | பொய்கையாழ்வாரும் திருவேங்கடமும் | 8 |
| 3. | பகவானுடைய பக்த வாத்ஸல்யம் | 21 |
| 4. | திருக்கச்சி நம்பிகள் வைபவம் | 32 |
| 5. | ஸ்தோத்ரமும் ரஹஸ்யமும் | 43 |
| 6. | அஷ்டச்லோகீ ஸாரம் | 63 |
| 7. | ஸ்ரீராமாயணம் - த்வய விவரணம் | 73 |
| 8. | திருக்கோட்டியூர் நம்பிகள் இராமாநுசருக்கு உபதேசித்தது திருமந்த்ரார்த்தமா சரமச்லோகார்த்தமா? | 92 |
| 9. | உயிர்நிலை - (அர்த்த பஞ்சகம்) | 103 |
| 10. | ஆதிசேஷனுடைய அவதாரங்கள் | 112 |
| 11. | வால்மீகியின் வாழ்த்துக்கள் | 121 |

| | | |
|---|---|---|
| 12. | ஜீவாத்மாவின் ஆகாரத்ரயம் | 138 |
| 13. | நம்மாழ்வார் பாடலில் இறை | 143 |
| 14. | பகவத் விஷயம் | 150 |
| 15. | ஞானப்பிரான் (திருக்கடன்மல்லை) | 158 |
| 16. | அருளிச்செயலில் ஸ்ரீகாஞ்சீஸ்வாமிகளின் அரியபாடங்கள் | 178 |
| 17. | திருப்புட்குழி விஜயராகவப் பெருமாள் | 194 |
| 18. | வாழும் சோம்பர் | 201 |
| 19. | க்ருஷ்ணன் | 213 |
| 20. | ஆழ்வார்களும் அருளிச் செயல்களும் | 218 |

# 1

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

# திருவேங்கடமுடையானும் மங்களாசாஸனமும்

ஸ்ரீராமாயணத்தில் வால்மீகி முனிவரின் முதல் வாக்காகிய 'மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகம: சாச்வதீஸ்ஸமா:, யத்க்ரௌஞ்சமிதுநாத் ஏகமவதீத் காமமோஹிதம்' என்னுமிந்த ச்லோகம் அன்றிலின் இரட்டையில் ஆண் பறவையை அடித்துக் கொன்ற வேடனுக்குச் சாபமாக ஏற்பட்டது. ஹே அம நிஷாத! யத் க்ரௌஞ்சமிதுநாத் காமமோஹிதம் ஏகம் அவதீ:, தத் சாச்வதீ:ஸமா: ப்ரதிஷ்டாம் மாகம:- என்று அந்வயம் கொள்க. ஓ தரித்திரம் பிடித்த வேடனே! எக்காரணத்தினால் அன்றிற் பறவையின் இரட்டையை அணுகி, காதலால் மோஹமடைந்த ஒரு ஆண்பறவையைக் கொன்றாயோ, அக்காரணத்தினால்(நீ) பல ஆண்டுகள் நிலைபெற்று வாழமாட்டாய் (விரைவிலேயே மரணமடைவாய்) என்பதே அந்தச் சாபம்.

மஹரிஷியின் முதல்வாக்கு சாபமாக மட்டும் இராதென்று கருதிய நம்பூர்வாசார்யர்கள் அதனை இராமபிரானுக்கு மங்களாசாஸனமாக நிர்வஹித்தருளினர். ஹேமாநிஷாத யத் க்ரௌஞ்சமிதுநாத் காமமோஹிதம் ஏகம் அவதீ:, தத் த்வம் சாச்வதீ: ஸமா: ப்ரதிஷ்டாம் அகம:- என்று அந்வயம் கொள்க. ஹே ஸ்ரீநிவாஸனே! எக்காரணத்தினால் அரக்கரிரட்டையை (மந்தோதரியையும் இராவணனையும்) அணுகி அவற்றில், சீதையின் திறத்தில் அநியாயமாகக் காதல் செய்து மோஹித்த ஆணான இராவணனைக்

கொன்றாயோ, அக்காரணத்தினால் நீ பல்லாண்டு பல்லாண்டு வாழக்கடவாய்-என்பதே அம்மங்களா சாஸனம். மா-நிஷீததி அஸ்மிந் (திருமகள் இவனிடம் உறைகிறாள்) இதி மாநிஷாத: என்ற வ்யுத்பத்தியினால் மாநிஷாத: என்பது அலர்மேல் மங்கையுறை மார்பனான ஸ்ரீநிவாஸனைக் குறிப்பிடுமாறு காண்க. திருவின் மணாளன் என்னாமல், திருமகளுறையும் மார்பன் என்றதனால் ஸ்ரீநிவாஸனாகிய திருவேங்கட முடையானையே விளித்து 'நீ வெகுநாட்கள் வாழவேணும் என்று மங்களாசாஸனம் பண்ணுவதாகக் கொள்ளல் தகும்.

ஸ்ரீவேங்கடாசலமாகாத்மியம் வராகபுராணம் முதற் பகுதி 49வது அத்தியாயத்தில், தசரதசக்ரவர்த்தி வசிஷ்டர் சொற்படி திருமலைக்கு வந்து தவமியற்றி நான்கு பிள்ளைகளைப் பெற்றதாகவும், பவிஷ்யோத்தரபுராணம் முதலத்தியாயத்தில் ஸ்ரீஜநகமகாராஜன் தனது பெண்ணான சீதைக்கு நல்ல வரன் கிடைக்க வேணுமென்று தவமியற்றி ஸித்திபெற்றதாகவும் உள்ளமை வால்மீகி முனிவர் அறிந்தவிஷயமாதலால், இராமபிரானை அழைக்கும் போது, அவ்விராமபிரானோடு ஒற்றுமையுடைய திருவேங்கடமுடையானுடைய பெயரைக்கொண்டு, மாநிஷாத = ஸ்ரீநிவாஸனே! என்றழைத்தாரென்று கருதுதல் மிகவும் பொருந்தும்.

ஸ்ரீவைஷ்ணமதத்திற்கு மதிள்கள் போல் காப்பாக அமைந்த இரண்டு நூல்களில் இராமாயணமாகிய ஒரு நூலினைக் கண்டோம். இனித்திருவாய்மொழியென்னும் மற்றொரு நூலினையும் காண்போம். நம்மாழ்வார் இந்நூலில் வீற்றிருந்தேழுலகும் (4-5) பதிகத்தில் 'போற்றி' என்று எம்பெருமானுக்கு மங்களாசாஸனம்

செய்தருளினார். இப் பதிகத்தில் திருவேங்கட முடையானையே ஆழ்வார் கவிபாடினதாக ஆசாரியர்கள் அருளியிருப்பதற்குச் சேர மங்களாசாஸனமும் அவ்வெம்பெருமானைப் பற்றியதே என்னக் குறையில்லை. வேறெந்த அர்ச்சாவதாரத்தின் ப்ரஸ் தாவமுமில்லை இப்பதிகத்தில் என்பதையும் குறிக்கொள்க. இப்பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில் 'மாரிமாறாத தண்ணம்மலை வேங்கடத்தண்ணலை- காரிமாறன் சடகோபன் சொல்- இப்பத்தால்' என்று குறிக்கப்பட்டுள்ளதனால் இப்பதிகம் முழுதும் திருவேங்கடமுடையானைப் பற்றியதேயாகும். இப்பதிகத்தில் மற்றும் சில பாசுரங்களில் ஆழ்வார் அருளிய அடைமொழிகளும் வேங்கடத்தண்ணலுக்குப் பொருந்தும். 'மையகண்ணாள் மலர்மேலுறைவாள் உறைமார்பினன்' (4-5.2) என்பதும் அலர்மேல் மங்கையுறைமார்பனான திருவேங்கடைமுடையானைச் சேரும். கூனற் சங்கத்தடக்கையவனை (4-5-9) என்பதும் கூனேறுசங்கமிடத்தானான (பெருமாள் திரு 4-1-1) திருவேங்கடமுடையானையேசேரும். 'நமக்கும் பூவின்மிசைநங்கைக்கும் இன்பனை' (பிராட்டிக்கு இன்பந்தருவதற்கு முன்னமே நமக்கு இன்பனானவனை) என்றதனால் கூறப்பட்ட- நம்மோடு பேதமில்லாமல் கலந்து பழகுந் தன்மையாகிய சீலகுணமும் திருவேங்கடமுடையானுடையதே என்பதை 'மாரிமாறாத' (4-5-11) பாட்டின் வ்யாக்யானங்களில் உரையாசிரியர்கள் விளக்கி யருளியுள்ளார்களாகையால், இவ்வீற்றிருந்தே ழுலகும் பதிகம் பூர்ணமாகத் திருவேங்கட முடையானுடையதேயாகையால், இதுதன்னில் முதல் பாசுரத்தில் 'போற்றி' என்று ஆழ்வார்

*அருளிய மங்களாசாஸனமும் திருவேங்கடமுடையா னொருவனையே சாருமென்பது திடமாயிற்று. மேலும் நம்மாழ்வார் திருவேங்கடவனை 'எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை- திருவேங்கடத்தண்ணல் (3-3-2) என்று தமது குலதெய்வமாகவும், 'குலதொல்லடியேன்' (6-10-1) என்று தம்மைப் பரம்பரையாக அவன்-தன்னடிமையாகவும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்ததனால் வீற்றிருந்தேழுலகும்' பதிகத்தில் அவர் தம் குலதெய்வமாகிய திருவேங்கட முடையானுக்கேயன்றோ பல்லாண்டு பாடுவது பொருத்தமுடைத்து.*

*இனி - பொங்கும் பரிவாலே பல்லாண்டு பாடிப் பெரியாழ்வாரென்னும் பெயர் படைத்த பட்டர்பிரானைக் காண்போம். அவர்தமக்கும் குலதெய்வம் திருவேங்கட முடையானேயாவன். 'சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்' (பெரியாழ்-5-4-1) என்று விளித்து, 'எம்மனா என் குலதெய்வமே' (5-4-3) என்று குறித்தருளியுள்ளது காண்க. 'பறவையேறு பரம்புருடா' (5-4-2) என்ற பாசுரத்தின் வ்யாக்யானத்தில் வ்யாக்யான சக்கரவர்த்தியாகிய பெரியவாச்சான் பிள்ளை 'திருவேங்கடமுடையான் கருடவாகனமேறி வந்து பெரியாழ்வாரைப் பரமபதத்தேறக் கொடுபோவதற்காக த்வரிக்கிறான்' என்று அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது. மேலும் 'பெரும்பதமாகின்றதால்' (5-4-2) என்ற விடத்தில், 'பெரும்பதம்' என்றதற்கு, 'பெரியதரம்' என்றுபொருள் அருளிச் செய்து, அதுதன்னை 'மேல்சாத்தும் பரியட்டமும் பெற்றுத் திருப்பொலிந்த சேவடி தன் சென்னியின் மேல் பொறிக்கப் பெற்றுத் திருப்பல்லாண்டு பாடினபடி' என்று விவரித்*

தருளியிருக்கிறார் அவர்.ஆக, பெரியாழ்வார் பாண்டியராஜசபையில் பரதத்வநிர்ணயம் செய்து கிழியறுத்தவுடன், யானைமேலேறி ஊர்வலம் வருவதைக் கண்டுமகிழ, மதுரையில் ஆகாசத்தில் தோன்றிய பறவையேறு பரம்புருடனை - அதாவது முற்காட்டியபடி திருவேங்கடமுடையானையே முதல் முன்னம் பல்லாண்டு பாடியதாகப் பெரியவாச்சான்பிள்ளை குறித்தருளியிருப்பதாகக் கொள்ளுதல் மிகப்பொருந்தும். மேலும் 'மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா' என்பது திருவேங்கடமுடையானைப் பற்றிய விளியே என்பதற்கு அத்தாட்சிகள் பல உள்ளன.

மணிவண்ணன் திருவேங்கடமுடையானே. ஆழ்வார் திருமகளாரான ஆண்டாள் தையொரு திங்கள் (நாச் 1-1-1) பதிகத்தில் முதன்முதலில் வேறொருவரையும் ப்ரஸ்தாவியாமல், 'வேங்கடவற்கென்னை விதிக் கிற்றியே' என்றும், வேங்கடவாணனென்னும் விளக்கினில் புக வென்னை விதிக்கிற்றியே (1-3) என்றும் திருவேங்கடவனை இருமுறை ப்ரஸ்தாவித்து, கடைசிப் பாசுரத்தில் 'மணிவண்ணற்கென்னை வகுத்திடு' என்று அப்பெருமானையே மணிவண்ணனாகக் கூறி முடித் தருளினமை காண்க. பெரியாழ்வார் 'சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்' (பெரியாழ் 5-4-1) என்று விளித்து, அவனையே 'மருப்பொசித்தாய் மல்லடர்த்தாய்' (5-4-7) என்று விளித்தருளி மல்லாண்ட திண்டோளு டைமையை அருளியிருத்தலையும் காண்க.

நம்மாழ்வார் வேறொரு மூர்த்தியின் ப்ரஸ்தாவ மில்லாத 'சார்வேதவநெறித்' (திருவாய் 10-4) திருவாய்மொழியில் 'மலைமேல்தான் நின்று என் மனத்துளிருந்தானை' என்று திருவேங்கடமுடையானைக்

குறித்தருளி, அவனையே இறுதியில் 'மல்திண்டோள் மாலை' என்றும் 'மாலுக்குப்பதிகத்தில் (6-6) 'மற்பொருதோளுடைமாயப் பிரான்' என்று குறிப்பிட்டு, அவனையே முடிவில் 'கட்டெழில் சோலை நல்வேங்கடவாணனை' என்றும் திருவேங்கட முடை யானை மல்லாண்டதிண்டோளனாக அருளியிருத்தலை நோக்குக.

மங்கையர் கோனும் 'மல்லார்தோள்வட வேங்கட வனை வரச்சொல்லாய் பைங்கிளியே '(பெரிய திரு 10-10-5) என்றும், 'வில்லார் மலிவேங்க டமாமலைமேய மல்லார்திரடோள் மணிவண்ணனம் மானை' என்றும் மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனாகத் திருவேங்கட வனை அருளிச் செய்திருப்பது இதனை வலியுறுத்து கின்றது. மேலும் அவர் மானமருமென்னோக்கித் (11-5) திருமொழியில் 'வெள்ளத்தான் வேங்கடத்தானேலும் கலிகன்றியுள்ளத் தினுள்ளேயுளன்' என்று திருவேங்கட வனைக் குறிப்பிட்டு, இருந்தமிழ்நூற் புலவரான அவருக்கு உலகமுண்ட பெருவாயன் திருவேங்கடவ னென்பது நினைவுக்கு வந்ததனால், அவ்வுலகமுண்ட சரித்திரத்தை விரிவாக எடுத்துரைக்கும் 'மைந்நின்ற கருங்கடல்வாய்ப்' (11-6) பதிகத்தில் 'மல்லாண்ட தடக்கையால் பகிரண்டமகப்படுத்த காலத்து' என்று திருவேங்கடவனுடைய மல்லாண்டதிண்டோள்களைக் குறித்திருக்கிறார். இங்கு ஒரு கேள்வியெழும் :- இப்பதிகத்தில் 'கண்ணாளன் கண்ணமங்கைநகராளன்' (7) என்று திருக்கண்ண மங்கையெம்பெருமானை ப்ரஸ்தாவித்ததனால் இம்மல்லாண்டதடக்கை அப்பெரு மானைச் சேராதா என்று. இதற்கு விடை- திருவேங்கட முடையானோடு திருக்கண்ணமங்கைப் பெருமானுக்கு

ஏதோ ஆழ்வார் மட்டுமறிந்த ஸாம்யமொன்றைக் கொண்டு 'மைந்நின்ற' பதிகத்தில் திருக்கண்ணமங்கை யானைக் குறித்துள்ளார். இந்தஸாம்யமில்லாவிட்டால் ஒருநல்சுற்றம் (10-1) பதிகத்தில் பல திவ்யதேசங்களைப் பேசுமிடத்து, 'கருநெல்சூழ் கண்ணமங்கையுள் காண்டுமே' (10-1-1) என்றவுடன், 'பொன்னை மாமணியை அணியார்ந்ததோர் மின்னை வேங்கடத் துச்சியில் கண்டுபோய்' (10-1-2) என்று திருவேங்கட முடையானைப்ரஸ்தாவிக்கமாட்டாரல்லவா?

ஆக இதுகாறும் கூறியவாற்றால் பெரியாழ்வார் 'மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு' என்று பல்லாண்டு பாடியது திருவேங்கடமுடையானையே என்பது திடப்படுத்தப் பட்டதாயிற்று.

அலர்மேல் மங்கையுறை மார்பன் வாழி.

# 2

# பொய்கையாழ்வாரும் திருவேங்கடமும்

*'க இதி ப்ரஹ்மணோ நாம தேந தத்ராஞ்சிதோ ஹரி:, தஸ்மாத் காஞ்சீதி விக்க்யாதா புரீ புண்ய விவர்த்தநீ' (க: என்பது பிரமதேவனது பெயர், அப்பிரமனால் அச்வமேதயாகம் செய்து ஹரியான ஸ்ரீமந்நாராயணன் பூஜிக்கப்பட்ட தலமாதல் பற்றி அத்தலம் காஞ்சி என்று பிரசித்தமாய்ப் புண்யத்தை மேன்மேலும் வளரச்செய்வதாயிற்று) என்ற காஞ்சீ மாஹாத் மியச்லோகத்தின்படியே பிரமனால் பூஜிக்கப்பட்ட பேரருளாளப் பெருமாளென்னும் ஸ்ரீஹஸ்திகிரிநாதரின் பெருங்கருணை நோக்கத்திற்கு இலக்காய், அவர்தமது பூர்வாவதாரமாதலால் பெரியபெருமாளென்று புகழ்பெற்ற, விண்ணோர் தொழுங்கண்ணனான வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தனது திருவடி நிழலில் அமைந்ததுமானதோர் தாமரைத்தடாகத்தில் ஓர் பொற்றாமரை மலரினின்றும், த்வாபரயுகத்தில் 862900 ஆண்டுகள் சென்ற பின்பு ஸித்தார்த்திவருஷம் ஐப்பசி மாதம் சுக்லபக்ஷம் அஷ்டமி செவ்வாய் கூடிய விஷ்ணுநக்ஷத்திரமான ச்ரவணத்தில், திருமாலின் திருச்சங்காகிய ஸ்ரீபாஞ்சஜந்யத்தின் அம்சத்துடன் ஓர் மஹாநுபாவர் அவதரித்தருளினார். இவர் பொய்கையில் அவதரித்ததனால் அதுவே நிரூபகமாகப் பொய்கை யாழ்வாரெனப்பட்டார். இவர் முதலாழ்வார்கள் மூவருள்ளும் முதல்வராவர்.*

*இங்ஙனம் திருக்கச்சிநகரில் திருவவதாரம் செய்தருளிய இவ்வாழ்வாருக்குத் தத்வஜ்ஞானமுண்டான வகையை இவர் அருளிய பாசுரத்தால் அனுபவிப்போம்.*

ஒன்றும்மறந்தறியேன் ஓதநீர்வண்ணனை நான் இன்று மறப்பனோ ஏழைகாள் --- அன்று கருவரங்க த்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன் திருவரங்கமேயான் திசை.(முதல் திருவந்தாதி-6)

முன்பொருகால் 'மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்கண்வைத்த' திருவரங்கத்தெம்பெருமான் இப்போது 'கல்லார் மதிள்சூழ் கச்சிநகர்த்திசை நோக்கி இப்பொய்கையாழ் வார்க்காகத் தனது திருக்கண்களை மலரவைத்தானாம், இவ்வாழ்வாரைத் தாமரைமலருள்ளிடமான கர்ப்பத்தில் வாஸம் செய்யும்போதே கடாக்ஷித்துத் தன்னுடைய ஸ்வரூப ரூப குணசேஷ்டித விபூதிகளை உள்ளபடியே இவர்க்குக் காட்டினானாம். இவரும் கண்டாராம். அப்பெருமானைத் தொழுதாராம். கர்ப்பவாஸம் பண்ணும்போதே அவற்றைக் கண்டறிந்து சிறிதும் மறவாத இவர் மலரிலிருந்து வெளித்தோன்றிய பின்பு அவற்றை மறப்பதற்கு ப்ரஸக்தி இல்லை என்று அறிவிலிகளான ஸம்ஸாரிகளைக் குறித்துப் பேசுகிறார் இப்பாட்டில்.

அன்று கருவரங்கத்துட்கிடந்து, திருவரங்கம் மேயான்திசை, கைதொழுதேன் கண்டேன், ஒன்றும் மறந்தறியேன், ஓதநீர்வண்ணனை நான் இன்று மறப்பனோ ஏழைகாள்-- என்று அந்வயம் காட்டியருளுகிறார் பெரியவாச்சான்பிள்ளை.

கர்ப்பவாஸம் செய்து கொண்டிருந்த அக்காலத்தில், 'ஐயோ வருத்தப்பட்டாயே' என்று மனமிரங்கித் திருவரங்கப்பெருமான் கடாக்ஷிக்க, அவன் தன்னுடைய எங்குமுள்ளும் புறமும் நிறைந்த திவ்யாத்மஸ்வரூபம், திவ்யமங்களவிக்ரஹம், அவற்றின்கண் உள்ள

திருக்கல்யாணகுணங்கள், திருவிளையாடல்கள், பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமாகிய உபயவிபூதிகள் ஆகிய இவற்றையெல்லாம் கண்டேன், கைதொழுதேன். அவற்றில் ஒன்றையும் மறந்தறிய மாட்டேன். கடல் போலே கறுத்து ச்ரமஹரமான வடிவையுடைய அப்பெருமானை- மறப்பதற்கு இடமுள்ள கர்ப்பவாஸகாலத்திலேயே மறந்தறியாத நான் பிறந்த பிறகு பிறர்க்கு உபதேசிப்பதற்கு உரிய இக்காலத்தில் மறப்பனோ அறிவில்லாத மூடர்களே, சொல்லுகேன் கேண்மின் - என்கிறார் இப்பாசுரத்தால் என்க.

திருவரங்கம் மேயான்திசையென்றது- திருவரங்கத்திலே மனம்பொருந்திப்பள்ளி கொண்டவன் விஷயத்திலே- என்று பொருள்பட்டு- அவன்தன்னுடைய ஸ்வரூப ரூப குண சேஷ்டித விபூதிகளைக் குறிப்பதாகும். ஆக இப்பாட்டினால் - அழகிய மணவாளன் கடாக்ஷத்தாலே தமக்குத் தத்வஜ்ஞானம் உண்டானமையை ஆழ்வார் அருளிச்செய்தாராயிற்று.

இவ்வாறு இவருக்கு உடற்பிறவி திருகச்சியெம் பெருமான்கள் திருவருளாலென்பதும், உயிற்பிறவியாகிய அறிவின்மலர்ச்சி அணியரங்கத்தெம்பெருமான் திருக்கண்ணோக்கத்தினாலென்பதும் அறிந்தோம். இனி உடலெடுத்து அறிவும் மலர்ந்த பின்பு செய்ய வேண்டியது பகவத்கைங்கர்யம். அதாவது எம்பெருமானுக்கும் வாசிகமான கைங்கர்யம். அதுதன்னை நூறு பாட்டுக்களைக் கொண்ட முதல் திருவந்தாதியின் வாயிலாகச் செய்தார்.

அம்முதற்றிருவந்தாதியில் பரமபதத்தை மூன்று பாட்டுக்களிலும், திருப்பாற்கடலை எட்டுப் பாட்டுக்

களிலும், திருவெஃகாவையும் திரு வரங்கத்தையும் ஒவ்வொறு பாட்டுக்களிலும், திருக்கோவலூரை இரண்டுபாட்டுக்களிலும் திருவேங்கட மலையைப் பத்துப்பாட்டுக்களிலும் மற்றுமுள்ள வராஹாதி விபவாவதாரங்களைப் பலவிடங்களிலும் இவர் குறிப் பிட்டருளுவதைக் காணலாகும். மற்ற திவ்யதேசங் களைப்பற்றிய பாசுரங்களை விட, திருவேங்கட மலையைப் பற்றின பாசுரங்கள் அதிகமாக இருப்பதனாலும் அவை அர்த்த புஷ்டியுடையவைகளாக இருப்பதனாலும் போலும், மணவாள மாமுனிகளின் சிஷ்யர்களாய் அஷ்டதிக்கஜாசார்யர்களென்று பிரசித்தரான எண்மரில் ஒருவரான அப்பிள்ளை தாம் அருளிய வாழித்திருநாமத்தில், 'வேங்கடவர் திரு மலையை விரும்புமவன் வாழியே' என்று இவர் திருவேங்கடமலை விஷயமாக வாசிகவடிமை செய்ததையே குறித்தருளுகிறார். இங்ஙனம் திருவேங்கடத்தைப் பற்றிய பொருட்பெருமை பெற்ற பத்துப் பாசுரங்களில் சிலவற்றை இங்கு அனுபவிப்போமினி.

*(1)* எழுவார் விடைகொள்வார் ஈன்துழாயானை
வழுவா வகைநினைந்து வைகல்- தொழுவார்
வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை. (முதற்றிரு -26)

இப்பாசுரத்தில் - திருவேங்கடமலை மூவகை அதிகாரிகளின் புருஷார்த்த விரோதிகளான பாவங்களைப் போக்குமென்றும், பிராட்டியினுடையவும் நித்ய சூரிகளுடையவும் திருவுள்ளங்களைத் தூண்டுமென்றும் இத்திருமலையின் இருவகையான பெருமைகளை உணர்த்துகிறாராழ்வார்.

எழுவார்- ஐச்வர்யம் வேணுமென்று மேலும் மேலும் மனவெழுச்சியைப் பெற்றவர்கள். விடைகொள்வார்- ஐச்வர்யம் நிலையற்றதென்று அறிந்து, நிலைபெற்ற தமது ஜீவாத்மஸ்வரூபத்தை அனுபவிக்க வேணுமென்று எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றி அவ்வநுபவத்தைப் பெற்று, 'எம்பெருமானே எங்களுடைய ஆத்மாவை யனுபவிப்பதே எங்களுக்குப் போதுமானது, உன்னுடைய அனுபவம் எமக்கு வேண்டாம்' என்று அவனிடம் விடைபெற்றுப் போமவராவர். ஈன்துழா யானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார்- (ஐச்வர்யம் அழிவது, அணுவான ஆத்மாவையனு பவிப்பதாகிய கைவல்யமும் அற்பமானது என்று தெளிந்து) இனிய திருத்துழாய் மாலையணிந்து பரமபோக்யனாய் ஆராவமுதம் போன்ற எம்பெருமானை எப்போதும் நாம் பிரியாதிருக்கவேணுமென்று நினைத்துக் காலமெல்லாம் அவனைத்தொழுகின்ற பகவத்பக்தர்கள். முறையே இவ்வதிகாரிகளுடைய ஐச்வர்யாநுபவ ஆத்மாநுபவ பகவதனுபவங்களை அடையவொட்டாமல் தடை செய்யும் பாபங்களாகிய பெருந்தீயை அணைத்து அவர்கள் அவ்வப்புருஷார்த்தங்களை அனுபவிக்க வழி செய்கின்றதாம் இத்திருமலை. இந்த ஸம்ஸாரிகளுக்கு இவ்வகையுதவி செய்வதோடு நில்லாமல் வானோர் மனச்சுடரையும் தூண்டுகின்றதாம் இத்திருமலை. வானோர் ஆவார் - வானாகிய பரமபதத்திலுள்ள பிராட்டியும் நித்யஸூரிகளுமாவர். இவர்களுடைய மனம் எப்போதும் விளக்குப்போல் ஜ்வலித்துக் கொண்டுதான் இருக்கும். அதாவது பரமபதநாதனது மேன்மையை அனுபவித்துக் கொண்டேயிருக்கும். ஸம்ஸாரிகளின் மனம்போல இருண்டுகிடவாதென்றபடி. அப்படி

ஏற்கெனவே ஜ்வலித்துக்கொண்டிருக்கிற இவர்களின் மனத்தை இத்திருமலை தூண்டுவதாவது என்னென்னில்- நன்றாக ஜ்வலிக்கச்செய்வதே யாகும். 'பெரிய பிராட்டியாரே, நீர் பரமபதநாதனை விட்டுத் திருவேங்கடமுடையான் திருமார்பிலிருந்து கொண்டு அவன் தன்னடியார்கட்கு அருள் செய்யும்படி அவனைத் திருத்த வாரும்' என்று அழைத்து அவளை இருக்கச்செய்து இனி அவள் 'ஒருநாளும் இவன் திருமார்பை விட்டகலமாட்டேன்' என்று சொல்லும்படிக் கட்டளையிடுவதேயாகும். நித்யஸூரிகள்மனத்தை தூண்டுவதாவது - எப்பொழுதும் பகவானது பரத்வத்தையே அனுபவித்துக்கொண்டிருக்கையால் விளக்குப்போலே ஜ்வலித்துக்கொண்டேயிருக்கும் அவர்களின் மனத்தை 'ஹே நித்யஸூரிகளே! பரத்வத்தையே எப்போதும் அனுபவித்து அனுபவித்து உங்களுக்குச் சலித்துப் போகவில்லையா இங்கு வாருங்கள். திருவேங்கடமுடையான் வானரமும் வேடுமானவற்றிற்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் ஸௌலப்யம் ஸௌசீல்யம் ஆகிய நீர்மையையும் அனுபவியுங்கள்' என்று சொல்லி அவர்களை இங்குவந்து மெய்ந்நாமனத்தால் வழிபாடு செய்யும்படித் தூண்டுதலேயாகும்.

'வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம்' என்ற பகுதிக்கு - 'ஸர்வபாபாநி வேம் ப்ராஹு: கடஸ் தத்தாஹ உச்யதே, தஸ்மாத் வேங்கடசைலோZயம்லோகே விக்க்யாதகீர்த்திமான்' (வேம் என்பது பாபம் என்பர் பெரியோர். கடமாவது- கொளுத்துமது. பாபத்தைக் கொளுத்திவிடுவதனால் இம்மலை வேங்கடமென்று உலகில் பிரசித்தமான புகழையுடையதாகிபின்றது)

என்றுள்ள பவிஷ்யோத்தர புராணவசனம் உதாரணமாக அனுஸந்திக்கத்தக்கது.

(2) வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் நாளும்
புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தித் - திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்த ஊர். (முதற்றிரு 37)

இப்பாட்டில் பகுத்தறிவாளரான வேதியர்கள் சென்று எம்பெருமானைத்தொழும் பெருமைபெற்றதென்றும் ஆச்ரிதபக்ஷபாதியான கண்ணபிரான் திருவேங்கடமுடையானாக ஸேவைஸாதிக்கு மிடமென்றும் இத்திருமலையைக் குறித்தருளுகிறார்.

ஆயுள் செல்வம் வீடு நிலம் மக்கள் பசு சோறு சொர்க்கம் என்றிவ்வாறாகப் பலவகைப்பட்டிருக்கிற அற்ப பலன்களையும் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையும், இது உயர்ந்தது இது தாழ்ந்தது என்று அலகலகாகப் பிரித்து அறிகைக்குக் காரணமாய் நுண்ணிய கேள்விஞானம் வாய்க்கப்பெற்ற வேதியர்கள் (வேதக்கருத்துக்களை அநுஷ்டானபர்யந்தமாகக் கடைப்பிடிக்குமவர்கள்) ஒவ்வொரு நாளும் தூபம் தீபம் தீர்த்தம் முதலிய பகவதாராதனத்திற்குரிய பொருள்களைக் கைகளில் ஏந்திக் கொண்டு எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து எம்பெருமானுக்குத் தொண்டுசெய்யுமிடமாகிய திருவேங்கடமலையே, பாரதயுத்தஸமயத்தில் எதிரிகளான துரியோதநாதிகள் குடல் குழம்பும்படியாக வெண்சங்கை வாயில்மடுத்து ஊதிய பாண்டவ பக்ஷபாதியான கண்ணபிரான் ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதற்கு மிக மிக உரிய இடமென்று உகப்புடனே வாழும் ஊராகுமென்பது இதன்கருத்து.

(3) ஊரும்வரியரவம் ஒண்குறவர் மால்யானை
பேர எறிந்த பெருமணியைக்- காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேல சுரர்
எம்மென்னும் மாலதிடம். (முதற்றிரு 38)

எம்பெருமான் உகந்து வாழ்கையாலே, திருமலையில் வாஸம் செய்யும் பாம்பு குறவர் யானை ஆகிய இவற்றையும் உகந்து வருணிக்கிறார் ஆழ்வார் இதுதன்னில். 'எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேனே' என்று குலசேகரப்பெருமாளும் தாம் பிறக்க ஆசைப்பட்டபிறவிகளன்றோ இப்பாம்பு முதலியவைகள்.

திருவேங்கடமலையில் ஊர்ந்து செல்வதையே தொழிலாகக் கொண்ட பாம்பானது- தினைப்புனத்தில் பட்டிமேய வந்த யானைகள் அவ்விடத்திலிருந்து பேர்ந்துசெல்வதற்காகக் குறவர்கள் அவற்றின் மேல் எறிந்த பெரியரத்னங்களை- 'இவை மேகத்திலே உண்டான மின்னல்கள்' என்று பிரமித்து, மின்னலுண்டான பிறகு இடியுண்டாகுமென்று இடிக்கு அஞ்சிப் புற்றுக்குள்ளே நுழையுமிடமான வேங்கடமலையே- பரமபதத்தில் உள்ள நித்யஸூரிகள் 'இது எமதுமலை, இது எமதுமலை' என்று விரும்புமதான ஸ்தானம்- என்பது இப்பாசுரத்தின் கருத்து.இப்பாட்டில் குறவர்க்கு இட்ட ஒண்மை என்னும் அடைமொழிக்குக் கருத்து-ஒளி. அதாவது யார்க்குமில்லாத தேஜஸ்ஸு. அதுயாதென்னில்- திருமலையை விட்டுக் கீழே யிழிவதைத் தங்கள்குடிக்குப் பழியாக நினைத்திருக்கும் அத்யவஸாயம். முன்பாட்டில் திருவேங்கடமலை மாலுகந்த ஊர் என்கையாலே, அம்மாலின்

அடியார்களான நித்யஸூரிகளும் மேல்விழுந்து வந்து சேருமிடம் திருமலை யென்றார் இப்பாட்டில் என்க.

(4) இடந்தது பூமி எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனைமுன் னஞ்சக்- கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது. (முதற்றிரு 39)

எம்பெருமான் எத்தனையோ இடங்களில் உகந்து வர்த்திக்கின்றானே. அப்படியிருக்க நித்யஸூரிகள் மேல்விழுந்து வந்து சேருமிடம் திருமலையே என்பது எப்படிப்பொருந்தும் என்ற கேள்வியெழ, எம்பெருமான் மிகவும் உகந்து எப்பொழுதும் வாழுமிடமாகையால் நித்யஸூரிகள் வந்து சேருமிடம் இதுவொன்றே என்பது தகுமென்கிறார் இப்பாட்டில்.

வராஹாவதாரகாலத்தில் பூமியை இடந்தெடுத்தான். கிருஷ்ணாவதாரத்தில் குன்றமெடுத்தான். மேலும் கம்ஸனைக் கொன்றான். இவ்வவதாரங்களுக்கு மூலமாகத் திருப்பாற்கடலிலே கிடந்தான். இவை யெல்லாம் ஒவ்வொருகாலங்களிலே யாகும். அப்படியல்லாமல், கடல்போல் ச்ரமஹரமான வடிவுபடைத்த எம்பெருமான் எல்லா அவதாரங்களிலுமுள்ள குணங்களனைத்தும் விளங்கும் படி எப்போதும் ஒக்கத் திருமலையை விரும்பி நிற்கிறான் என்பது இதன் கருத்து. பெரிது= எப்போதும் என்றபடி.

''நாம் பெருமாளை உகந்தோமென்று சோற்றை யகப்புதோம். சோற்றையுகந்தோமென்று நாலும் பத்தும் பட்டினி விடுவுதோம். ஸ்த்ரீகளை உகந்தோமென்று சதுரங்கம் பொருதல் உறங்குதல் செய்வுதோம். ஒன்றிலும் ஸ்நேஹமில்லை'' என்று இப்பாட்டின் வ்யாக்யானத்தில்

பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்துள்ளார். இதன்கருத்து- நாமெல்லோரும் பெருமாளைக் கண்டு மகிழ்வது சற்றுப்போது- சோற்றையுகப்பதே அதிகம். அதையாவது எப்போதும் உகக்கிறோமாவென்றால், அதுவுமில்லை. அதுவுண்ட அஜீர்ணத்தினால் நாலு வேளையோ பத்துவேளையோ பட்டினி கிடப்போம். இங்ஙனமே பெண்களை உகக்கிறோம் சற்றுப்போதே. மற்றபோது அவர்களோடு சதுரங்க மாடுவதும் பிறகு தூங்குவது மாகவுமே காலத்தைக் கழிக்கிறோம். ஒன்றிலும் நமக்குப் பூர்ணமான ஊற்றமில்லை. ஆழ்வார்களோவென்னில் எம்பெரு மானுடைய- பூமியை இடத்தல் குன்றமெடுத்தல் கஞ்சனைக் கடத்தல் பாற்கடலில் பள்ளிகொள்ளுதல் திரு வேங்கடமலையில் உகந்து எப்போதும் நிற்றல் முதலிய சேஷ்டிதங்களில் மட்டுமே பிடிப்பு அதிகமாகி அவற்றையே எப்போதும் அனுபவிக்கிறார்கள். இது ஆழ்வார்கட்கும் நமக்கும் உள்ள வாசி என்பதே யாகும் - என்று தம்முடைய திவ்யார்த்த தீபிகையுரையில் ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ப்ர. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி விளக்கியிருப்பது கண்டு அனுபவிக்கத்தக்கது.

(5) வழிநின்று நின்னைத் தொழுவார், வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர் - பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும், மண்ணளந்த
சீரான் திருவேங் கடம். (முதற்றிரு 76)

'எழுவார்' (முதல்திரு 26) என்ற பாசுரத்தில் மோக்ஷ விரோதியான பாபங்களைப் போக்குதலாகிய திருமலையின் அநிஷ்ட நிவர்த்தகத்வத்தை அருளிச் செய்தவர், இப்பாசுரத்தில் மோக்ஷந்தருதலாகிய

திருமலையின் இஷ்டப்ராபகத்வத்தை அருளிச் செய்கிறார். இவையிரண்டுமிறே மோக்ஷோபாயத்வமாவது. நம்மாழ்வாரும் 'பரன்சென்றுசேர் திருவேங்கடமாமலை ஒன்றுமேதொழ நம் வினை யோயுமே' (திருவாய் 3-3-8) என்றும், 'திருவேங்கடம் நங்கட்குச் சமன்கொள்வீடு தருந்தடங்குன்றமே' (திருவாய் 3-3-7) என்றும் அநிஷ்டநிவர்த்தகத்வமும் இஷ்டப்ராபகத்வமும் திருமலைக்குண்டென்று திருவாய் மலர்ந்தருளினாரிறே.

உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வாசி பாராமல் எல்லார்தலையிலும் திருவடிகளைவைத்து உலகமளந்த எம்பெருமான் அந்த நீர்மையெல்லாம் தோன்றும்படி எழுந்தருளி நிற்குமிடமான திருவேங்கடமலையே, பரமபோக்யனான எம்பெருமானிடத்தில் ருசியும், உபாயபூதனான அப்பெருமானிடத்தில் நம்பிக்கையுமாகிற இவ்விரண்டில் எக்குறையுமில்லாதபடி செய்து பரமபதத்தைக் கொடுக்கும். இங்ஙனம் திருவேங்கடமே தன்னையடைந்தவர்க்கு ச்ரமமேதுமில்லாமல் மோக்ஷந்தருமதாயிருக்க, வேதமோதும் பக்தியாகிற வழியில் நிலைத்து நின்று எம்பெருமானே மண்ணளந்த சீரானே! நின்னை ஆச்ரயிப்பவர்கள் ஸத்யமானவேதத்தில் சொல்லிய படியே அபஹதபாப்மத்வம் முதலிய எட்டுக் குணங்களின் ஆவிர்ப்பாவரூபமான மோக்ஷத்தைப் பெறுவர்கள் என்பதைத் தனிப்படச்சொல்லவும் வேணுமோ. நிச்சயமாக அவர்கள் மோக்ஷத்தை யடைவார்கள் என்பது இப்பாட்டின் கருத்து. வருந்தி உபாஸநம்செய்தால் மோக்ஷந்தருவான் எம்பெருமான். தன்னையடைந்த மாத்திரத்தில் அனைவர்க்கும் திருமலை

மோக்ஷங்கொடுக்குமென்று திருமலையின் ஸுலபமான மோக்ஷோபாயத்வம் கூறப்பட்டது இதனால்.

(6) படையாரும் வாட்கண்ணார் பாரசிநாள்,பைம்பூந்
தொடையலோ டேந்திய தூபம்- இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே, மேலொருநாள்
மான்மாய எய்தான் வரை. (முதற்றிரு 82)

நித்யஸூரிகளும் இவ்வுலகத்திய வேதியருமான ஆண்கள் வந்து ஆச்ரயிக்குமிடமாக மட்டுமேயன்றி, பெண் பிறந்தாரும் வந்தடையத்தக்க இடமுமாகும் இத்திருமலையென்று இதன் நீர்மையை அருளுகிறார் இப்பாட்டில்.

வாள்போன்று ஒளியையுடைய கண்களைப் பெற்ற பெண்கள் பாரசி(துவாதசி)நாளில், அழகாகத்தொடுத்த பூமாலைகளோடு தங்கள் கைகளில் ஏந்திய தூபத்தின் புகையானது நடுநடுவில் நக்ஷத்திரங்கள் மறையும் படிக் கருநிறமேறும் வேங்கடமலையே, முன்பு இராமாவதாரத்தில் மாயமான் மாயும்படி அம்பெய்த சக்ரவர்த்தி திருமகன் பிராட்டி சொன்னதைச் செய்த ஆச்ரிதபாரதந்த்ர்யம் தோன்ற எழுந்தருளி நிற்கும் இடமாகும்- என்பது இதன்பொருள். முன்பு பிராட்டி சொன்னதைச் செய்தவன், இத்திருமலையில், பிராட்டி புருஷகாரமாகத் தன்னைப் பற்றிய - அல்லது திருமலையே ப்ராபகம் என்று பற்றின அடியார்கள் சொன்னதையும் செய்வான் திருவேங்கடமுடையானாகிய இராமபிரானென்று இதனால் ஸூசிப்பித்தபடி.

திருமலையில் திருவேங்கடமுடையான் தோன்றியது புரட்டாசி மாதம் துவாதசியில். அதைக் குறிப்பிட்டருளினார் இப்பாட்டில். அவன் அங்கு

*ஆவிர்ப்பவித்தநக்ஷத்திரம் புரட்டாசியில் ச்ரவணம். அதுதன்னையும் திருமழிசைப்பிரான்,*

> *காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர*
> *ஓணவிழவில் ஒலியதிரப்- பேணி*
> *வருவேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்*
> *திருவேங்கடமதனைச் சென்று. (நான் முகன்திரு 41)*

*என்ற பாட்டில் ஓணவிழவு (=திருவோணத்திருவிழா) என்று அருளியிருத்தல் காண்க. அர்ச்சாவதாரப் பெருமான்களில் திருவேங்கட முடையானுடைய திருவவதாரத் திருநக்ஷத்திர திதிகளையே ஆழ்வார் களருளிய அற்புதம் அநுஸந்திக்கத் தகுந்ததாகும்.*
*திருமலையைப்பற்றிய பத்துப் பாட்டுக்களில் ஆறுபாட்டுக்களையே சிறிது விவரித்தெழுதினேன். விரிப்பின் கட்டுரை பெருகுமென்று வெருவி மற்றநான்கினை விட்டிட்டேன். குற்றங்களைப் பெரியார் பொறுத்தருள்வாராக.*

*பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.*

# 3

# பகவானுடைய பக்த வாத்ஸல்யம்

பகவானாவான்- குற்றமேதுமின்றி நற்குணங்களனைத்தும் தன்னிடம் நிரம்பப்பெற்ற ஸ்ரீமந்நாராயணன். அவனுடைய பக்தனாகிறான் - அப்பெருமானையும் அவன் குணங்களையும் ஆசையுடன் எப்போதும் தியானம் செய்பவன். அந்த பக்தனிடத்தில் அப்பெருமானுக்கு உள்ள வாத்ஸல்யமாவது- பக்தனுடைய குற்றங்களைக் குணமாகக் கொள்ளுகையென்னும்- அன்பின் முதிர்ந்த நிலைமையே. இந்த வாத்ஸல்யத்தைச் சிறிது அனுபவிப்போம்.

ஸ்நிக்தஸ்து வத்ஸல: (ஸ்நேஹமுடையவன் வத்ஸலன்) என்பது அமரகோசம். 'வத்ஸே = புத்ராதௌ ஸ்னேஹபாத்ரே, காம: = அபிலாஷ: அஸ்ய அஸ்தீதி வத்ஸல:' (அன்புக்கு இலக்கான பிள்ளை பெண் பேரன் பேர்த்தி முதலியவர்களிடம் அதிகமான ஆசையுடையவன் வத்ஸலன்) என்று வத்ஸல சப்தத்தை அவ்வமரகோசத்தின் உரை விவரிக்கிறது. 'வத்ஸாம்ஸாப்யாம் காமபலே' என்னும் பாணிநி முனிவரின் ஸூத்ரத்தின்படி - மகன் முதலியவர்களைக் குறிக்கும் 'வத்ஸ' என்ற சொல்லின் மேல், ஆசையுடையவன் என்று பொருள்படுகின்ற லச் என்ற விகுதி சேர்ந்து வத்ஸலன் என்னும் சொல் உண்டாகின்றது. இவற்றிலிருந்து, குழந்தைகளிடம் பெற்றோருக்கு உண்டாகும் அன்பே வாத்ஸல்யம் என்று தோன்றியிருந்தாலும், அவ்வன்பின் முதிர்ந்த நிலைமையே வாத்ஸல்யமென்று கொள்ளல் தகும். குற்றங்களைக் குணமாகக் கொள்ளுகையே அன்பின் முதிர்ந்த நிலைமையாகும்.

*ஸ்ரீபாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரண வ்யாக்யானத்தில் 'ஸம்பந்தவிசேஷாந்விதேஷு ப்ரீதி: ஸ்நேஹ :, யஸ்ய விபாகா: அஸ்தாநபயசங்கித்வம், தோஷாநவபாஸ:, தோஷேஷ்வபி குணபுத்தி: இத்யாதய:'(=அதிகமான தொடர்புடையவர்களிடம் நாம் காட்டும் அன்பே ஸ்நேஹ மெனப்படுகிறது, அதன் பரிபக்குவ நிலைகளாவன - யாரிடத்தில் நாம் அன்பைக் காட்டுகிறோமோ அவர்களுக்கு எவ்வகையான ஆபத்தும் உண்டாவதற்கு இடமில்லாதிருப்பினும், ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுவதும், அவர்களிடம் உள்ள குற்றம் தோன்றாமலிருப்பதும், அக்குற்றங்களைக் குணமாகக் கொள்ளுதலும் முதலியன) என்று ச்ருதப்ரகாசிகாசார்யர் அருளிச்செய்கையாலே, அன்பின் எல்லை நிலமாக இதில் காட்டிய - குற்றங்களைக் குணமாக நினைத்தலையே வாத்ஸல்யமென்று கொண்டனர் நம்முடைய பூர்வாசார்யர்கள். ஸமந்வயாதிகரண ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகையில் 'வாத்ஸல்யம் நாம தோஷேஷ்வபி குணத்வபுத்தி:, யதா மாதுர்வத்ஸே' (= வாத்ஸல்யமென்று பிரசித்தமாகச் சொல்லப்படுவது யாதெனில் - தோஷங்களையும் குணமாகக் கொள்ளுகையேயாம், தாய்க்குக் குழந்தைகளிடமிருக்கும் ஆசையே அது) என்று அவ்வாசிரியரே அருளிச் செய்துள்ளார். அந்தரதிகரண ஸ்ரீபாஷ்ய ச்ருத ப்ரகாசிகையில் 'வாத்ஸல்யம் நாம தோஷா நாதரஹேது: ஸ்னேஹ: யதா மாதுர் வத்ஸே' (= வாத்ஸல்யமென்று எல்லோராலும் கூறப்படுவது யாதெனில் - தோஷங்களை மறைப்பதற்குக் காரணமான ஸ்நேஹமேயாம், தாய்க்குப் பிள்ளையினிடமுள்ள அன்பே அது) என்று பணித்தருளியவரும் அவ்வாசார்ய*

ரேயாவர். தன் மகனைக் குற்றவாளியாக யாரேனும் தன்னிடம் வந்து, குறைகூறினால், 'என் மகன் குற்றமே செய்யவில்லை' என்று அவர்களிடம் மறைப்பதோ மறுப்பதோ தாய் செய்கின்றாளல்லவா? அதற்குக் காரணமாக அவளிடம் அமைந்த ஸ்நேஹமே வாத்ஸல்யமென்று இங்குத்தோன்றினாலும், முதன் முதலில் கூறப்பட்ட - ஸ்நேஹத்தின் முடிந்த முதிர்ச்சியான - தோஷங்களைக் குணமாகக் கொள்ளு தலையே வாத்ஸல்ய குணமாக, மிகவுயர்ந்த அத்தாட்சி நூல்கள் கூறுமவற்றை இனிக் காட்டுவோம். அவை யாவன கடோபநிஷத்திலுள்ளதொரு மந்த்ரமும், ஸ்ரீ பாஞ்சராத்ர வசனமும், ஆழ்வார்களருளிய பாசுரங்களும் ஆகும்.

'அங்குஷ்டமாத்ர: புருஷ: மத்ய ஆத்மனி திஷ்டதி । ஈசாநோ பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே ॥ என்பது கடோபநிஷத்திலுள்ள (4-12) மந்த்ரம். பூதபவ்யஸ்ய ஈசாந: புருஷ: = முக்காலங்களிலுமுள்ள சேதநா சேதனங்களுக்கு ஈச்வரனான புருஷன் (= ஸ்ரீமந் நாராயணன் ) ஆத்மனி மத்யே அங்குஷ்டமாத்ர: திஷ்டதி = தன்னை உபாஸிப்பவனுடைய சரீரத்தில் நடுப்பகுதியில் -ஹ்ருதயத்தில், அவனது கைக்கட்டை விரலின் அளவுடைய திருமேனியைக் கொண்டவனாய் எழுந்தருளியிருக்கிறான். தத: ந விஜுகுப்ஸதே = முற்கூறியபடி முக்காலங்களிலுமுள்ள பொருள் களனைத்துக்கும் ஈச்வரனாகையாலேயே, அதிகமான வாத்ஸல்யத்தினால் உபாஸகதேஹத் துள்ளிருக்கிற ரக்தம் மாம்ஸம் முதலிய தோஷங்களையும் போக்யமாக அனுபவித்து - இன்புறத்தக்க குணமாகக் காண்கிறான் - என்பது உபநிஷத் பாஷ்யகாரராகிய ரங்கராமாநுஜஸ்வாமி

*அருளிய பாஷ்யத்தில் விளங்கும் பொருள். இங்கு நவிஜுகுப்ஸதே என்பதற்கு 'வெறுப்புக்கொள்வ தில்லை' என்றருளிச் செய்வதே போதுமாயிருக்க, 'ந' என்பதற்கு முரண்பாடு என்னும் பொருளைத் திருவுள்ளம் பற்றி, வெறுப்புக்கு முரணான, விருப்பத்தை - விருப்பமிகுதியை (அதாவது குற்றங்களை போக்யமாக எண்ணுகையென்னும் வாத்ஸல்யத்தை ) அடைகின்றான் - என்று மிகமிகச் சுவைபட உரையிட்டருளிய அந்த ரங்கராமாநுஜஸ்வாமி என்னும் பெருந்தகையின் திருவுள்ளம் நினைந்து நினைந்து இன்புறத்தக்க தொன்றாம்.*

*'கடுகந்தேந வித்தாயாம் பூமௌ*
*நவ த்ருணாங்குரம் ।*
*யா நஜிக்ரதி ஸாதேநு:*
*ஸ்வயோநித்வார மார்கத:।*
*ஸத்யோ ஜாதஸ்ய வத்ஸஸ்ய*
*தேஹமாலின்ய ஸம்பதம் ।*
*யதாலிஹதி ஸோல்லாஸம்*
*ததா ஜீவஸ்ய கல்மஷம் ।*
*போக்யம் மமச லக்ஷ்ம்யாச்ச*
*வித்தி பங்கஜ ஸம்பவ ॥'*

*(எனது நாபிக்கமலத்தில் தோன்றிய நான்முகனே ! துர்க்கந்தத்தாலே அசுத்தமாக்கப்பட்ட பூமியில் புத்தம் புதிதாக முளைத்த (தனக்குப் பிரியமான ) புல்லையும் மோந்துகூடப்பாராத (அத்தனைத் தூய்மையுள்ள ) பசுவானது - தனது கடைவழிவாயிலாக அப்போதே பிறந்த தன் கன்றினுடலில் உள்ள அழுக்கின் மிகுதியை எங்ஙனம் மகிழ்ச்சியுடன் நக்கிச் சுவைக்கின்றதோ, அதாவது தன் கன்றின் அழுக்கு பசுவுக்கு எப்படி*

போக்யமாக ஆகிறதோ ) அங்ஙனமே (உன்னைப்போல் என் குழந்தையான ஜீவாத்மாவின் அழுக்கும் (பாபமும் ) எனக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கும் போக்யமாக- அனுபவித்து ரஸிக்கத்தகுந்த குணமாக ஆகிறதென்பதை அறிந்து கொள்) என்னுமிது ஸ்ரீபாஞ்சராத்ராகமத்தைச் சேர்ந்த ப்ரஹ்மஸம்ஹிதையில் பிரமதேவனுக்குத் திருமால் தனது வாத்ஸல்யத்தைப் பற்றித் தெரிவித்த வசனமாகும். இயற்கையாகவே தூய்மைபெற்ற பசு தன் கன்றின் வழும்பை போக்யமாகக் கொள்வது போல், பகவானும் தன் குழந்தையாகிய நம் குற்றங்களைக் குணமாகக் கொள்ளுகிறானென்பதை, அதாவது பகவானது வாத்ஸல்யத்தை இவ்வசனம் நம் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியவைக்கும் அழகு சுவைக்கத்தக்கது.

இனி மயர்வற மதிநலம் அருளப்பெற்ற (= அறியாமை ஐயம் திரிபுணர்ச்சி என்னும் மயர்வானது அடியோடு அழியும்படி நல்ல அறிவை பகவானால் அருளப்பெற்ற) ஆழ்வார்கள் மூவரின் பாசுரங்கள் மூன்றினை முறையே காண்போம்.

பொய்கையாழ்வார் அருளிய முதல் திருவந்தாதியில் நாற்பத்தோராவது பாசுரம்- 'குன்றனைய குற்றம் செய்யினும் குணம் கொள்ளும், இன்று முதலாக என் நெஞ்சே - என்றும் புறனுரையேயாயினும் பொன்னாழிக் கையான், திறனுரையே சிந்தித்திரு' என்பது. இது ஆழ்வார் தமது நெஞ்சுக்கு உபதேசம் செய்வதாக அமைந்துள்ளது. நான் சொல்வதைக் கேட்டு அப்படியே நடக்கும் எனது நெஞ்சே! நீ இன்று தொடங்கி, உள்ளுறச் சொல்லும் வார்த்தையாக அல்லாமல் வெளிக்குச் சொல்லுகிறவார்த்தையாக இருந்தாலும், அழகிய

சக்ராயுதத்தைக் கையிலேந்திய ஸர்வேச்வரனைப் பற்றிய வார்த்தைகளையே எப்போதும் சிந்தித்துக் கொண்டு இரு. அப்படியிருந்தால் மலைபோலே பெருத்து நமது முயற்சியால் அசைக்கமுடியாமலிருக்கும் நம் குற்றங்களை அப்பெருமான் குணமாகக் கொண்டு நம்மைக் காத்தருள்வன். (குற்றங்களைச் செய்து விட்டோமே, நம்மை எங்ஙனே காக்கப்போகிறான் என்று அஞ்சாதே) என்பது இதன் பொருள்.

திருமழிசைப்பிரான் திருவாய்மலர்ந்தருளிய திருச்சந்தவிருத்தத்தில் நூற்றுப் பதினோராம் பாசுரம் - 'வைது நின்னை வல்லவா பழித்தவர்க்கும் மாறில்போர், செய்து நின்ன செற்றத்தீயில் வெந்தவர்க்கும் வந்துன்னை, எய்தலாகுமென்பர் ஆதலால் எம்மாய நாயினேன், செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே!' என்பதாகும். இது எம்பெருமானை விளித்து ஆழ்வார் வேண்டிக் கொள்வதாக அமைந்துள்ளது. 'நான் வியக்கத்தக்க குணங்களையுடையவனே! உலகங்கட்கெல்லாம் தலைவனான பெருமானே! உன்னைத் தமது ஆற்றலுள்ள வரையில் வசைமொழிகளைக் கூறிப்பழித்தவர்களுக்கும், உன்னுடன் ஒப்பற்ற போரைச் செய்து உனது கோபமென்னும் தீயில்விழுந்து வெந்துபோனவர்கட்கும் உன்னை வந்தடையமுடியுமென்று பெரியோர்கள் கூறுவர். ஆகையால் (உன்னைப் பழிப்பதோ எதிரிட்டு போர் புரிவதோ ஏதும் செய்யாதிருப்பினும்) நாய்போல் மிக நீசனான நான்செய்த குற்றங்களை நற்றங்களாக-குணங்களாக் கொண்டு என்னைக் காத்தருளவேணும்' என்பது இதன் பொருள்.

பட்டர்பிரான் பணித்தருளிய பெரியாழ்வார் திருமொழியில் (4-9-2) 'தன்னடியார் திறத்தகத்துத்

தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும், மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்கண் வைத்த, என்னுடைய திருவரங்கற் கன்றியும் மற்றொருவர்க்காளாவாரே' என்றுள்ள பாசுரம் ஸ்ரீரங்கநாதருடைய குணப்பெருமையைச் சொல்லுகிறது. பெரிய பெருமாளாகிய திருவரங்கநாதர் தம்முடைய அடியவர் விஷயத்திலே, குற்றம் சொல்லத்தெரியாத பெரிய பிராட்டியாரும் கூட, குற்றம் சொன்னாளாகில், 'என்னடியார் நீ சொல்லியபடி குற்றம் செய்யவே மாட்டார்கள், அப்படி ஒருவேளை செய்தார்களேயாகில் நன்றே செய்தார்களாவர் (=என்நினைவின்படி அது குற்றமல்ல குணமேயாதலால் நன்மையே புரிந்தவர்களா வார்கள்) என்று அலட்சியமாக விடைகூறுவர். ஆகையால், பக்தியாகிய செல்வமுடைய ஸ்ரீவிபீஷணாழ் வானுக்காக மதிள்சூழ்ந்த இலங்கையிருக்கும் தென்திசையை நோக்கி மலர்ந்த கண்களை வைத்துப் பள்ளிகொண்டருளிய என் ஸ்வாமியான திருவரங்கப் பெருமாளுக்கல்லாமல் வேறொருவர்க்கு எவரேனும் ஆட்படுவரோ? என்பது இப்பாசுரத்தின் பொருள். இதில் 'என்னடியார் அது செய்யார்' என்று அடியவர் செய்தகுற்றத்தை மறுப்பது அல்லது மறைப்பது - முன்பு அந்தரதிகரண ச்ருத ப்ரகாசிகையில் உள்ளதாகக் காட்டப்பட்ட 'வாத்ஸல்யமாவது தோஷங்களை மறைப்பதற்குக் காரணமான ஸ்நேஹமேயாகும்' என்றதனோடு சேரும். 'செய்தாரேல் நன்று செய்தார்' என்பது - முன்பு பலதடவைகள் காட்டப்பட்ட 'வாத்ஸல்யமாவது தோஷங்களைக் குணமாகக் கொள்ளுகையேயாகும்' என்றதனோடு ஒன்று படும்.

குற்றங்களையும் குணமாகக் கொள்ளுதலென்னும் வாத்ஸல்யத்திற்கு இலக்கு விபீஷணாழ்வான். தன்னை வந்தடைவதற்கு முன்புவரையிலும், ராவணனோடு கூடியிருந்தபோது அவன் செய்த அநீதிகளுக்கெல்லாம் உதவியாயிருந்த பெருங்குற்றவாளியாக இருந்தும் அக்குற்றங் களனைத்தையும் குணமாகக் கொண்டல்லவா அவனைச் சேர்த்துக் கொண்டது? விபீடணனிடம் காட்டிய வாத்ஸல்யத்தை நம்மிடமும் காட்டி நம்மை விடாமல் கைக்கொள்ளும் அப்பெருமானுக்கன்றிப் பிறதேவதைகளுக்கு ஆட்படுதல் தகாதென்று - பெரியாழ்வார் நமக்கு உபதேசம் செய்வது உள்குழைந்து அனுபவிக்கத் தக்கது. ஆக இதுகாறும், ஆழ்வார்கள் மூவரின் திருவாக்குகளைக் கொண்டு வாத்ஸல்யத்தை விளக்கமாக அனுபவித்தோம். இனி இந்த வாத்ஸல்யமென்னும் மிக மிக உயர்ந்த குணத்தை ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வார் திருவேங்கட முடையான் விஷயமாகத் திருவாய் மொழியில் அருளிய பாசுரங்கள் இரண்டினைக் கொண்டு அனுபவிப்போம்.

அதுதன்னில் மூன்றாம் பத்தில் மூன்றாவது பதிகம் 'ஒழிவில் காலமெல்லாம்' என்று தொடங்கப்பெறுகிறது. திருவேங்கடமுடையானுக்கே எப்போதும் தொண்டு செய்யவேணுமென்று ஆழ்வார் பாரித்தபாரிப்பைக் கூறுகின்ற இப்பதிகத்தில் 4ம் பாசுரம் - 'ஈசன் வானவர்க்கென்பன் என்றால் அது, தேசமோ திருவேங்கடத்தானுக்கு- நீசனேன் நிறைவொன்றுமிலேன் என் கண், பாசம் வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே' என்பதாகும். குற்றங்கள் நிறைந்த நீசனாயும் குணங்களில் ஒன்றுமில்லாதவனாயும் இருக்கிற என்னிடத்தில் பாசத்தை வைத்து அதனால் பேரொளியைப் பெற்ற

தேஜோமயமான திருமேனியையுடைய திருவேங்கடமுடையானை ' இவன் நித்யஸூரிகளுக்குத் தலைவன்' என்று சொல்லுவேன். அங்ஙனம் சொன்னால் அவனுக்கு ஏற்றமாகுமோ? என்பது இதன் பொருள். இதில் குணமொன்றுமின்றியே குற்றங்கள் நிறைந்த தம்மிடத்தில் திருவேங்கடமுடையான் வைத்த பாசமாக ஆழ்வார் அருளிச் செய்த அன்பாவது குற்றங்களையே குணமாகக் கொள்ளுகையென்னும் வாத்ஸல்யமே என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் 'மண்ணோர் விண்ணோர் வைப்பில்' என்று தொடங்கும் 160ம் சூர்ணிகையில் விரித்துரைத்தருளினர்.

அத்திருவாய்மொழியிலேயே 'உலகமுண்ட பெருவாயா' என்று தொடங்கும் (6-10) பதிகமொன்றில் பத்தாம் பாசுரம் 'அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா, நிகரில் புகழாய் உலக மூன்றுடையாய் என்னை யாள்வானே, நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே, புகலொன்றில்லா வடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே' என்பது. ஆழ்வார் முன்பு ஒழிவில் காலத்தில் திருவேங்கடமுடையானுக்குச் செய்யவேணுமென்று பாரித்த (ஆசைப்பட்ட) கைங்கர்யமாகிய புருஷார்த்தத்திற்கு உபாயமாக-தஞ்சமாக, அப் பெருமானையே பற்றுவதை (சரணாகதி செய்வதை) அறிவிக்கும் பாசுரமாகும் இது. 'உன்னைவிட்டுப் பிரிந்திருக்க வல்லேனல்லேன் நான்' என்று சொல்லிக்கொண்டே 'அலர்மேல் மங்கை நித்யவாஸம் செய்யும் திருமார்பு படைத்தவனே, ஒப்பற்ற புகழுடையவனே, உலக மூன்றுக்கும் தலைவனே, என்னோடும் கலந்து பழகுமவனே, நிகரற்ற அமரர்களும் முனிவர்களும்

விரும்பி வந்து குழுமியிருக்குமிடமான திருவேங்கட மலையில் வாழுமவனே! காப்பாரின்றியே கைம்முதலுமில்லாத உன்னடியவனாகிய நான் உன் திருவடிக்கீழ்ப்பகுதியிலேயே வேறொருபயனில் விருப்பமில்லாமல் புகுந்துவிட்டேன்' - என்பது இப்பாட்டின் பொருள். பிராட்டியை முன்னிட்டுத் திருவேங்கடமுடையானைத் தஞ்சமாகப் பற்றுதலைக் குறிக்கும் இதுதன்னில் பிராட்டியின் பரிந்துரைப்பால் (சிபாரிசு வார்த்தையால்) பெருமானிடம் தலையெடுக்கும் குணங்கள் சிலவற்றைக் குறித்தருளும் போது 'நிகரில்புகழ்' என்ற சொல்லால் வாத்ஸல் யத்தையே- குற்றங்களை நற்றமாகக் கொள்ளுகையாகிய ஒப்பற்ற குணத்தையே திருவுள்ளம் பற்றுகிறார் ஆழ்வார் - என்று முற்காட்டிய சூர்ணிகையிலேயே ஆசார்யஹ்ரு தயகாரர் காட்டியருளியுள்ளார். புகழ் என்றால் புகழப்படும் குணம். அத்தகைய குணங்களில் ஒப்பற்ற குணம் -அதாவது நிகரில் புகழ் - வாத்ஸல்யமே என்பது ஆழ்வார் கருதியது என்கிறார் அவர். ஆக நம்மாழ்வாரும் வாத்ஸல்யத்தை - குற்றங்களை போக்யமாகக் கொள்ளும் தன்மையை அருளிச் செய்தமை சிறிது அனுபவிக்கப்பட்டது.

மாறனடி பணிந்து உய்ந்தவரான பகவத்ராமானுஜ முனிவர் பெருமானும், தாம் அருளிய சரணாகதி கத்யத்தில் பெரிய பெருமாளைத் தஞ்சம் பற்றுமவர் - அப்பெருமானுடைய குணங்களைச் சொல்லும் அடைவில் பல குணங்களினுடைய நடுவில் சேர்த்து - இரண்டுதடவைகள் இவ்வாத்ஸல்யத்தை அனுஸந்தானம் பண்ணியிருந்தும் திருப்தியடையாமல் மூன்றாந் தடவையாகத் தனித்து 'ஆச்ரிதவாத்ஸல்யைகஜலதே'

(அளவிடமுடியாத ஒப்பற்ற கடல் போன்ற-பக்தவாத்ஸல்யமென்னும் குணம் படைத்தவனே) என்று பெருமாளை அழைத்தருளி வாத்ஸல்யத்தை ஒப்பற்ற நற்பண்பாக அனுஸந்தித்துள்ளமை காணத் தகும். இங்கு வ்யாக்யானம் செய்தருளிய ச்ருதப்ரகாசிகாசார்யரும் பெரியவாச்சான்பிள்ளையும் குற்றத்தைக் குணமாகக் கொள்ளுகையே வாத்ஸல்யமென்று வ்யாக்யானம் செய்துள்ளமை நோக்கத்தக்கது.

இதுவரையில் பகவானுடைய பக்தவாத்ஸல்ய மென்னும் பெருங்குணத்தை - வேதம் ஸ்ரீ பாஞ்சராத்ரம் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகள் எம்பெருமானார் ஸ்ரீ ஸூக்தி ஆசார்ய ஹ்ருதய சூர்ணிகை ச்ருதப்ரகாசிகாசார்யரின் திருவாக்குக்கள் ஆகியவற்றைக் கொண்டு ஏதோ தெரிந்தவரையில் விண்ணப்பித்தேன். இன்னும் பிள்ளை லோகாசார்யர் மணவாளமா முனிவர் வேதாந்த தேசிகர் தொடக்கமான பெரியோர்களின் திருவாக்குக்கள் கொள்ளை கொள்ளையாக அவர்களருளிய க்ரந்தங்களில் காணக்கிடக்கின்றன. விரிவிற்கு அஞ்சி இத்துடன் விடைபெறுகிறேன்.

# 4

# திருக்கச்சி நம்பிகள் வைபவம்.

ஸ்ரீ வைகுண்டமுள்ளிட்ட திருமால் திருப்பதிகள் நூற்றெட்டினுள் கோயில் திருமலை பெருமாள் கோவில் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற திருவரங்கம் திருவேங்கடம் திருக்கச்சி ஆகிய இம்மூன்றுமே முக்கியமானவையென்பது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் கருத்து வேறுபாடின்றி இசைந்ததோர் உண்மையாகும். இத்திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதன் திருவேங்கடமுடையான் பேரருளாளப் பெருமாள் என்னும் எம்பெருமான்களாகிய இம்மூவருடையவும் பெருமைகள், அறிவாற்றல்களால் மிக்கு ஆயிரவாய்கள் படைத்த ஆதிசேஷனாலும் முற்றப்பேசித் தலைக்கட்ட முடியாதவையென்றால், அவை நமக்கு நிலமல்லவென்பதைத் தனிப்படச் சொல்லவும் வேண்டுமோ?

தெளிந்த நீரையுடைய காவிரியாறு தனது அலையாகிற கைகளாலே திருவடி வருடும்படி பள்ளிகொண்டு போகம் (ஸுகம்) அநுபவிக்குமிட மாகையாலே போக மண்டபமென்று பிரஸித்தி பெற்ற திருவரங்கமாநகரில் ஸ்ரீரங்கநாதனுக்கு வீணையும் கையுமாய்ப் பண்களைப் பாடி அடிமைசெய்யும் அந்தரங்கவடியரான திருப்பாணாழ்வாரை ப்ராஹ்மணோத்தமரான லோகஸாரங்க மஹாமுனிகள் தமது தோள்களில் இருத்தி எழுந்தருளப் பண்ணிக் கொண்டு சென்று, ஸ்ரீரங்கநாதனிடம் சேர்த்தாரென்பதும், நித்யஸூரிகள் தம்முள் உயர்ந்தவரான ஸேனை முதலியாருடன் வந்து பரமபதத்தில் பூத்த மலர்களைக் கொண்டு அர்ச்சித்த

மலர்கள் மணம் கமழுமிடமாகையாலே புஷ்ப மண்டபமென்று புகழப்பெற்ற திருவேங்கடமலையில் திருவேங்கட முடையானுக்கு பணிப்பூவும் (மண்ணுல் செய்யப்பட்ட பூவும் )கையுமாய்த் திருவுள்ளமுகக்கத் தொண்டு செய்த குயவரான குறும்பறுத்த நம்பியை (குரவை நம்பியை ) தொண்டைமான் சக்கரவர்த்தி யென்னும் பேரரசன் வணங்கி வழிபட்டானென்பதும்,

வேகவதியாற்றின் வடகரையில் புண்ய கோடி விமானத்தின் கீழமர்ந்து வரதனென்று பெற்ற பெயருக்கேற்ப, கேட்பார் கேட்கும் பொருள்களை யெல்லாம் வாரி வழங்கும் வள்ளலாய் எம்பெருமான் தனக்கென்று ஒன்றின்றி த்யாகம் செய்யுமிடமாகையாலே த்யாக(தான) மண்டபமென்று குலாவப்பெற்ற பெருமாள் கோவிலில் பெருந்தேவி மணவாளனான பேரருளாளனுக்குத் திருவாலவட்டமும் கையுமாய் அத்தாணிச் சேவகம் புரிந்த திருக்கச்சி நம்பியை, பரமவைதிகசிகாமணியாய் ஸ்ரீவைஷ்ணவ விசிஷ் டாத்வைத மதத்தை மிகவும் ச்ரமப்பட்டு வளர்த்தருளிய பகவத்ராமாநுஜ முனிவர் தம்முடைய ஆசார்யராக மதித்தும், அவர் அமுது செய்த அடிசிலை ப்ரஸாதமாக உட்கொள்ள ஆசைப்பட்டும், அவருடைய நியமனப்படியே பேரருளாளனுக்குத் திருமஞ்சனதீர்த்தம் கொண்டு ஸமர்ப்பித்தும் அவருடைய பேரன்புக்குப் பாத்திரமாக இருந்தாரென்பதும் குருபரம்பராப்ரபாவம் ஆசார்ய ஹ்ருதயம் முதலிய பழைய நூல்களில் பிரசித்தமாக விளங்குகிறது.

போக மண்டபம் புஷ்ப மண்டபம், த்யாக மண்டபம் என்ற திருநாமங்களைச் சற்றே ஆராய்ந்தால், குளிர்ந்த இடத்தில் தான் மட்டும் போகமனுபவிக்கும்

ஸ்ரீரங்கநாதனை விட, புஷ்பத்தின் அப்ராக்ருதமான மணத்தைத் தான் அநுபவித்து தன்னிடம் வரும் அடியார்களையும் அநுபவிப்பிக்கும் திருவேங்கட முடையான் உயர்ந்தவன் என்பதும், தனக்கென்னும்படி ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல் - அதாவது தான் எதையும் அநுபவியாமல் தன்னுடைய ஸர்வஸ்வத்தையும் 'மண்கொள் ஞாலத்துயிர்க்கெல்லாம் அருள் செய்யும் வானவரீசன்' என்று நம்மாழ்வார் புகழும்படி த்யாகசீலனான பேரருளாளப்பெருமாள் திருமலையப் பனைக் காட்டிலும் உயர்ந்தவரென்பதும் விளங்காமற் போகாது. ஆகையால் கோயில் திருமலை பெருமாள் கோவில் என்ற முறை ''உத்தரோத்தரம் உத்கர்ஷ:'' முன்னையதைவிட பின்னையது சிறந்தது என்ற நியாயத்தைப் பற்றி எழுந்தது என்றும் கூறலாம்.

ஸ்ரீரங்கநாதன் தனது அந்தரங்க பக்தரான திருப்பாணாழ்வாரோடு பேசியதாகவும், திருவேங்கட முடையான் குறும்பறுத்த நம்பியுடன் வார்த்தையாடியதாகவும் பூர்வர்கள் க்ரந்தங்களில் யாரும் எழுதியிருக்கக் காண்கிறிலோம். அந்த பக்தர்களுக்குத் தகுதியில்லையா, அவ்வெம்பெருமான்களுக்குத் தான் அவர்களோ்டு பேசவிருப்பமில்லையா நமக்கேதும் தெரியாது. ஆனால் பேரருளாளப் பெருமாளோ வெனில் தாம் ஏகாந்தமாக இருக்கும் சமயங்களில் எல்லாம் திருக்கச்சி நம்பிகளின் திருவாலவட்டக் கைங்கர்யத்தை விரும்பி ஏற்றுக் கொண்டு அவர் தம்மோடு அளவளாவி மகிழ்ந்திருந்தாரென்னும் விஷயம் பல நூல்களில் பலரும் அறியும்படிக்கிடக்கிறது. என்னே பேரருளாளனது பக்த பக்ஷபாதம்! என்னேதான் திருக்கச்சி நம்பிகளின் தன்னலமற்ற தொண்டு!

இங்ஙனம் பேரருளாளப்பெருமாள் விழித்திருக்கும் போதுகளில் அவருக்குத் திருவாலவட்டம் வீசிக் காயிகமான கைங்கர்யம் செய்தும், திருக்கண்வளரும் போது அவரை த்யானித்து மாநஸிகமான தொண்டு புரிந்தும் போந்ததோடு நில்லாமல், இத்திருக்கச்சி நம்பிகள் நாம் அனைவரும் அநுஸந்தித்து நற்கதியடையும் படி 'தேவராஜாஷ்டகம்' என்னும் பெயர் கொண்டுள்ளதாய் எட்டுவடமொழிச் செய்யுள்களைத் தன்னகத்தே பெற்றதோர் சிறிய துதிநூலைப் பேரருளாளன் விஷயமாக இயற்றி வாசிகமான அடிமையும் செய்தருளினார்.

இனி பேரருளாளனைப் பற்றியும் அவர் தமக்கு அந்தரங்க பக்தரான திருக்கச்சிநம்பிகளைப் பற்றியும் சிறிது அநுபவிப்போம்.

## பேரருளாளப் பெருமாள்:

இவர் எழுந்தருளியிருக்கும் ஊர் - 'நகரீஷு காஞ்சீ' (நகரங்களில் காஞ்சீபுரம் உயர்ந்தது) என்னும்படியான கச்சி நகர். இடம் அத்திகிரி என்னும் மலை. இவருக்கு வரதராஜப்பெருமாள் என்று மற்றொரு பெயரும் உண்டு. தாயார் பெருந்தேவித் தாயார். புண்யகோடி விமானம், அனந்தஸரஸ்ஸு என்னும் புஷ்கரிணி, வேகவதி என்னும் நதி - மற்றும் பல புண்ய தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன. நாரதருக்கும் திருவனந்தாழ்வானுக்கும் கஜேந்த்ராழ்வானுக்கும் சதுர்முகப்ரஹ்மாவுக்கும் இப்பெருமாள் ப்ரத்யக்ஷமாகக் காட்சியளித்தவர். காஞ்சீ என்னும் வடமொழிச் சொல் - 'திருமால் பிரமனால் பூஜிக்கப்பட்ட தலம்' என்ற பொருளைத் தரும். அச்சொல்லே தமிழ்மொழியில் கச்சி என்று சிதைந்து வழங்கப்படுகிறது.

நெடுநாட்கள் தவம் செய்தும் மனத்தூய்மை பெறாத பிரமதேவன் ஆகாயவாணி கூறியபடியே பூலோகத்தில் புண்ணிய தலங்களெல்லாவற்றுள்ளும் உத்தமமாய் ஒன்று ஆயிரமாகப் பயன் தருவதுமாம் ஸத்யவ்ரத க்ஷேத்ரம் என்னும் பெயருடைய இக்காஞ்சீ மாநகரையடைந்து அங்கு அநந்தஸரஸ்ஸின் கரையிலுள்ள ஹஸ்திகிரியை உத்தரவேதியாகக் கொண்டு யாக சாலையை அமைத்து அசுவமேத யாகம் செய்து அதனால் ஸ்ரீமந்நாராயணனை ஆராதிக்க, அந்த யாகாக்நியிலிருந்து எழுந்த புண்ய கோடி விமானத்தில் தேவராஜனான திருமால் தோன்றினான் என்றும், அந்த வரதராஜ ஸ்வாமியைப் பின்பு கஜேந்திராழ்வான் பூசித்து முதலையினாலாகிய துயர் தீர்ந்து மேன்மை பெற்றானென்றும், தெய்வத்தச்சரில் ஒருவனான மயனென்பான் பிரமதேவனது கட்டளையால் அங்கு எம்பெருமானுக்குக் கோயில் கட்டினானென்றும் புராணங்கள் கூறுகின்றன. இந்திரனது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவம் செய்து மலை வடிவு கொண்டு அப்பெருமானை தரித்தலால் அம்மலைக்கு ஹஸ்திகிரியென்று பெயருண்டாயிற்று. ஹஸ்தியென்றால் யானை, கிரியென்றால் மலை. கஜேந்த்ராழ்வான் பெருமானைப் பூசித்து பேறு பெற்ற மலை யாதலால் இப்பெயர் நிகழ்ந்ததென்றும் கூறுவர். ஹஸ்திகிரியே தமிழில் - அத்திகிரியென்று சிதைந்து வழங்கப்பெறுகிறது. இந்நகரில் மற்றும் திருவெஃகா திருவட்டபுயகரம் திருப்பவளவண்ணம் திருப்பரமேச்சுர விண்ணகரம் திருநீரகம் திருவூரகம் நிலாத்திங்கள் துண்டம் முதலிய பல திருமாலின் கோயில்கள் இருப்பதால் இக்கச்சிமாநகர் ' பெருமாள் கோவில்' என்றே பெரியோர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள பேரருளாளனை பூதத்தாழ்வார், நம்மாழ்வார் கலியன் ஆகிய ஆழ்வார்களால் பாடப்பெற்றவராகப் பெரியோர் அருளிச் செய்வர்.

ஆழ்வார்களில் பொய்கை யாழ்வாரும், ஆசார்யர்களில் வேதாந்த தேசிகரும் ப்ரதிவாதி பயங்கரமண்ணாவும் இவ்வூரில் அவதாரம் செய்தருளினர்.

திருக்கச்சி நம்பிகளுக்கும் ஸ்ரீராமாநுஜ முனிவர்க்கும் இப்பேரருளாளப் பெருமாளே ஆராத்யதேவதையாவார்.

## திருக்கச்சிநம்பிகள்

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று புகழப்பட்ட தொண்டை நாட்டில் பூவிருந்தவல்லி யென்னும் நகரில், கமலை, வீரராகவர் என்னும் தம்பதிகளுக்குப் புத்திரராக, மாசி மிருக சீரிஷ நன்னாளில் திருவவதரித்தவர் இத்திருக்கச்சி நம்பிகள். சேனை முதலியாரே இந்நம்பியாக அவதரித்தாரென்று கூறுவர் பெரியோர். திருமழிசைப் பிரானுடைய திருவருளால் அவதரித்த இவருக்கு 'பார்க்கவப்ரியர்' என்ற திருநாமமே தாய் தந்தையரால் சாத்தப்பட்டது. திருமழிசைப் பிரானுடைய நியமனத்தாலே இவர் தேவப்பெரு மாளுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்ய , அதனால் உகந்த அப்பெருமாள் 'திருக்கச்சி நம்பி' யென்று பிரீதியோடு அழைத்ததாகவும் அதுமுதற்கொண்டு அத் திருநாமமே இவருக்கு வழங்கி வருவதாகவும் சிலர் சொல்லுகின்றனர்.

தம் தந்தையார் பிரித்துக் கொடுத்த பொருளைப் பாகவதர்களுக்கே அள்ளி வழங்கிவிட்டு ஏழையாகி, பெருமாளுக்கு நித்ய கைங்கர்யம் செய்யும் காலத்தை எதிர் பார்த்திருந்தார்.

புருஷகாரம் செய்து யாதவ ப்ரகாசரை ஆச்ரயிக்கச் செய்தவரும் இம்மஹாபுருஷரே.

தேவப் பெருமாளோடு பேசும் பாக்யம் பெற்ற இவரிடம் வந்து ஸ்ரீராமாநுஜர் தமக்குள்ள ஸந்தேகங்களைப் பேரருளாளரிடம் விண்ணப்பித்து, இவற்றிற்கு விடையென்ன என்பதைக் கேட்டு அடியேனுக்கு அருளிச் செய்ய வேணுமென்று வேண்டிக்கொள்ள, அதன்படியே பெருமாளிடம் விண்ணப்பித்து அவரிடமிருந்து ஆறு வார்த்தைகளைப் பெற்று வந்து ராமாநுஜரிடம் கூறி அவரது ஸந்தேகங்களைத் தீர்த்தவரும் இம்மஹானுபாவரே.

ஸ்ரீராமாநுஜருடைய ஸந்தேகங்கள் 1. எந்த தேவதை பரம்பொருள்? 2. நம்முடைய மதத்தில் பரமனும், ஜீவனும் ஒன்றா அல்லது வேறு வேறா? 3. மோக்ஷத்தையடைவதற்கு வழி பக்தியா ப்ரபத்தியா? 4 இவ்வுடலைவிடும் ஸமயத்தில் ஜீவன் பரமனை நினைத்தல் அவசியமா, நினையாவிட்டாலும் மோக்ஷமுண்டாகுமா? 5. இந்தவுடல் நீங்கியவுடன் மோக்ஷமுண்டாகுமா? அல்லது பல பிறவிகள் பிறக்க வேண்டுமா? 6. யாரை அடியேன் ஆசார்யராகப் பற்றுவது? இவையே சந்தேகங்கள்.

இவற்றிற்குப் பேரருளாளன் நம்பிகள் வாயிலாக அருளிச் செய்த விடைகள் ஆறு.

1. 'அஹமேவ பரம் தத்வம் ' - ஸ்ரீமந் நாராயணனாகிய நாமே பரம்பொருள். சிவனுமல்லன் பிரமனுமல்லன்.
2. 'தர்சனம் பேத ஏவச' - நமது மதத்தில் பரமனும் ஜீவனும் வேறு வேறு பொருள்கள், ஒன்றன்று.
3. 'உபாயேஷு ப்ரபத்தி: ஸ்யாத்' - மோக்ஷத்தை

யடைவதற்கு வழி ப்ரபத்தியே. பக்தி முதலியவையல்ல.

4. 'அந்திமஸ்ம்ருதி வர்ஜனம் ' - ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இவ்வுடலை விடும் சமயத்தில் பரமனை நினைத்தே தீர வேண்டிய அவசியமில்லை. நினைக்காவிட்டாலும் மோக்ஷமுண்டாகும்.
5. ''தேஹாவஸானே முக்தி: ஸ்யாத் '' - ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இவ்வுடல் கழிந்தவுடனே முக்தி பெறுவர். பல பிறப்புக்கள் பிறக்க வேண்டாம்.
6. ''பூர்ணாசார்யஸமாச்ரய:'' - ஆளவந்தார் சிஷ்யரான பெரிய நம்பிகளை ஆச்ரயிக்க வேண்டும்.

என்பனவே அவ்விடைகள்.

இராமாநுசர் திருக்கச்சி நம்பி திருவடிகளை ஆச்ரயிக்க விரும்பினர். வர்ணாச்ரமாசாரங்களுக்கு முரண்பட்ட தென்று கருதிய நம்பிகள் அதை மறுத்து விட்டார்.

நம்பி அமுது செய்த சேஷமாவது கிடைக்குமோ என்று நினைத்து நம்பியைத் தம் திருமாளிகையில் அமுது செய்யுமாறு வேண்டினார் இராமாநுசர். தம்மையழைக்க இராமாநுசர் வெளியே எழுந்தருளிய வேளையில் நம்பி அவரது திருமாளிகைக்குச் சென்று அமுது செய்து வெளியேறி விட்டார். தெய்வச் செயலாக இங்ஙனம் நடந்தமையால் இராமாநுசரது விருப்பம் நிறைவேறாமல் போயிற்று. இதனால் நம்பிகளின் அஹங்காரமற்ற உண்மையான ஸ்ரீவைஷ்ணவத்வம் வெளிப்படுகிறது.

பேரருளாளப் பெருமாள், தமக்கு ஸந்நிதியில் ஸமர்ப்பித்த ப்ரஸாதங்களை நம்பி மாத்திரம் இருந்து அவர்தம் கையால் அமுது செய்விக்க நியமித்து அப்படியே

திருவத்திகிரியில் எழுந்தருளியிருக்கும் தேவப் பெருமாள் இவரது கனவில் தோன்றி, காஞ்சிக்கு வந்து தமக்கு நிச்சலும் அடிமை செய்யுமாறு நியமித்தார். அந்நியமனத்தைச் சிரமேற்கொண்டு காஞ்சியை அடைந்து பேரருளாளரை ஸேவித்து அநுபவித்துத் தம்மை அடிமைகொள்ளும்படி ப்ரார்த்தித்தார். வேள்வித்தீயில் உதித்த தமது வெப்பம் தீருமாறு தமக்குத் திருவாலவட்டத் திருப்பணி செய்யுமாறு அருளாளர் அருளிச் செய்தார். நம்பிகளும் அதை விருப்புடன் ஏற்றுக் கொண்டு திருவாலவட்டம் வீசும் பணியை நாடோறும் புரிந்து பெருமாளைக் களிப்புக் கடலில் ஆழ்த்தினார்.

அதன்பின்பு பெருமாள் நியமனத்தின்படியே ஸ்ரீரங்கம் சென்று பெரியநம்பிகள் புருஷகாரமாக ஆளவந்தார் திருவடிகளைப் பற்றிப் பஞ்சஸம்ஸ்காரம் பெற்றார். அப்போது ஆளவந்தார் இவர்க்குப் பேரருளாள தாஸர் என்ற தாஸ்ய நாமத்தை அருளினார். சில நாட்கள் அங்கேயேயிருந்து ஆசார்யாச்ரயணத்திற்குப் புருஷகாரம் செய்தருளிய பெரிய நம்பிகளுக்கு, அவர் திருமாளிகையில் பசு மேய்க்கும் கைங்கர்யத்தையும் செய்து பாகவதாபிமானம் பெற்றார். பின்பு இவர் திருவரங்கத்தில் எம்பெருமானுக்கு ஆல வட்டம் வீச விரும்பி அப்பெருமானை வேண்ட, உபய காவேரியின் நடுவில் வண்டினமுரலும் சோலை சூழ்ந்த இடத்தில் பள்ளி கொண்டிருக்கும் தமக்கு ஆலவட்ட கைங்கர்யம் தேவையில்லை என்று அருளி, திருமலை சென்று, அப்பனுக்கு அத்திருப்பணியைச் செய்யும்படி நியமித்தான் அழகிய மணவாளன். அதுகேட்டுத் திருமலைக்குச் சென்று திருவேங்கடமுடையானைக் கண்டு களித்து திருவாலவட்டத் தொண்டினை

ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ள, குளிரருவி வேங்கடத்திலுறையும் நமக்கு அது வேண்டாம், அத்தியூரில் பிரமதேவனின் தவப்பயனாக யாக குண்டத்திலிருந்து தோன்றிய தேவப்பெருமாளுக்கு அது தேவையாயிருக்கும். ஆகையால் அங்கே சென்று அவருக்கு அத்தொண்டினைச் செய்யுமென்று திருவருள் புரிந்தான் திருமலையப்பன். அதன் படியே காஞ்சிக்கு வந்து பெருந்தேவி மணவாளனுக்கே நிரந்தரமாகத் திருவாலவட்டத் தொண்டு புரிந்து வந்தார். அப்பேரருளாளன் இவரது குற்றமற்ற கைங்கர்யத்திற்கு உவந்து இவரோடு ஸதாஸர்வகாலமும் அளவளாவி மகிழ்ந்திருந்தார்.

அது சமயம் ஒருநாள் ஆளவந்தார் காஞ்சிக் கெழுந்தருளிப் பேரருளாளரை ஸேவித்துவிட்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளா நிற்க, இத்திருக்கச்சி நம்பிகள் -யாதவ ப்ரகாசனுடன் வித்யாப்யாஸம் செய்து கொண்டிருந்த ராமாநுஜரைக் காட்டி, இவரை நம் தர்சன ப்ரவர்த்தகராகும்படி அருள்புரிய வேண்டுமென்று ப்ரார்த்தித்துப் புருஷகாரம் செய்ய, ஆளவந்தாரும் அதற்காகப் பேரருளாளரை ப்ரபத்தி செய்தருளினார். இவரது புருஷகாரமே ஸ்ரீராமாநுஜரை தர்சன ப்ரவர்த்தகராக ஆக்கிற்று.

யாதவ ப்ரகாசரை விட்டு விலகியிருக்கும் போது எம்பெருமானாருக்கு- தேவப் பெருமாளுக்குச் சாலை கிணற்றிலிருந்து திருமஞ்சன தீர்த்தம் கொண்டு ஸமர்ப்பிக்கும்படி நியமித்தவரும் இந்நம்பிகளே.

அந்த யாதவ ப்ரகாசர் தம்முடைய தாயும் பேரருளாளரும் நியமிக்க, ராமாநுஜரை ஆச்ரயிக்க விரும்பியபோது, அவ்விராமாநுச முனிவரிடம்

புருஷகாரம் செய்து யாதவ ப்ரகாசரை ஆச்ரயிக்கச் செய்தவரும் இம்மஹாபுருஷரே.

தேவப் பெருமாளோடு பேசும் பாக்யம் பெற்ற இவரிடம் வந்து ஸ்ரீராமாநுஜர் தமக்குள்ள ஸந்தேகங்களைப் பேரருளாளரிடம் விண்ணப்பித்து, இவற்றிற்கு விடையென்ன என்பதைக் கேட்டு அடியேனுக்கு அருளிச் செய்ய வேணுமென்று வேண்டிக்கொள்ள, அதன்படியே பெருமாளிடம் விண்ணப்பித்து அவரிடமிருந்து ஆறு வார்த்தைகளைப் பெற்று வந்து ராமாநுஜரிடம் கூறி அவரது ஸந்தேகங்களைத் தீர்த்தவரும் இம்மஹானுபாவரே.

ஸ்ரீராமாநுஜருடைய ஸந்தேகங்கள் 1. எந்த தேவதை பரம்பொருள்? 2. நம்முடைய மதத்தில் பரமனும், ஜீவனும் ஒன்றா அல்லது வேறு வேறா? 3. மோக்ஷத்தையடைவதற்கு வழி பக்தியா ப்ரபத்தியா? 4 இவ்வுடலைவிடும் ஸமயத்தில் ஜீவன் பரமனை நினைத்தல் அவசியமா, நினையாவிட்டாலும் மோக்ஷமுண்டாகுமா? 5. இந்தவுடல் நீங்கியவுடன் மோக்ஷமுண்டாகுமா? அல்லது பல பிறவிகள் பிறக்க வேண்டுமா? 6. யாரை அடியேன் ஆசார்யராகப் பற்றுவது? இவையே சந்தேகங்கள்.

இவற்றிற்குப் பேரருளாளன் நம்பிகள் வாயிலாக அருளிச் செய்த விடைகள் ஆறு.

1. 'அஹமேவ பரம் தத்வம் ' - ஸ்ரீமந் நாராயணனாகிய நாமே பரம்பொருள். சிவனுமல்லன் பிரமனுமல்லன்.
2. 'தர்சனம் பேத ஏவச' - நமது மதத்தில் பரமனும் ஜீவனும் வேறு வேறு பொருள்கள், ஒன்றன்று.
3. 'உபாயேஷு ப்ரபத்தி: ஸ்யாத்' - மோக்ஷத்தை

யடைவதற்கு வழி ப்ரபத்தியே. பக்தி முதலியவையல்ல.

4. 'அந்திமஸ்ம்ருதி வர்ஜனம் ' - ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இவ்வுடலை விடும் சமயத்தில் பரமனை நினைத்தே தீர வேண்டிய அவசியமில்லை. நினைக்காவிட்டாலும் மோக்ஷமுண்டாகும்.
5. ''தேஹாவஸானே முக்தி: ஸ்யாத் '' - ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இவ்வுடல் கழிந்தவுடனே முக்தி பெறுவர். பல பிறப்புக்கள் பிறக்க வேண்டாம்.
6. ''பூர்ணாசார்யஸமாச்ரய:'' - ஆளவந்தார் சிஷ்யரான பெரிய நம்பிகளை ஆச்ரயிக்க வேண்டும்.

என்பனவே அவ்விடைகள்.

இராமானுசர் திருக்கச்சி நம்பி திருவடிகளை ஆச்ரயிக்க விரும்பினர். வர்ணாச்ரமாசாரங்களுக்கு முரண்பட்டதென்று கருதிய நம்பிகள் அதை மறுத்து விட்டார்.

நம்பி அமுது செய்த சேஷமாவது கிடைக்குமோ என்று நினைத்து நம்பியைத் தம் திருமாளிகையில் அமுது செய்யுமாறு வேண்டினார் இராமானுசர். தம்மையழைக்க இராமானுசர் வெளியே எழுந்தருளிய வேளையில் நம்பி அவரது திருமாளிகைக்குச் சென்று அமுது செய்து வெளியேறி விட்டார். தெய்வச் செயலாக இங்ஙனம் நடந்தமையால் இராமானுசரது விருப்பம் நிறைவேறாமல் போயிற்று. இதனால் நம்பிகளின் அஹங்காரமற்ற உண்மையான ஸ்ரீவைஷ்ணவத்வம் வெளிப்படுகிறது.

பேரருளாளப் பெருமாள், தமக்கு ஸந்நிதியில் ஸமர்ப்பித்த ப்ரஸாதங்களை நம்பி மாத்திரம் இருந்து அவர்தம் கையால் அமுது செய்விக்க நியமித்து அப்படியே

அமுது செய்தருளினாராம். தம்மிடம் மட்டும் பற்று வைத்த விதுரர் கையால் உண்டவரும் ருஷிகளுக்குப் பணிவிடை செய்த சபரியின் கையினால் புசித்தவருமான பெருமாள், ஆளவந்தார் சிஷ்யராய்ப் பெரியநம்பிகளின் அபிமானம் பெற்ற திருக்கச்சி நம்பிகளின் திருக்கையால் அமுது செய்தலைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

ஒருநாள் நம்பிகள் திருவாலவட்டம் வீசிவிட்டு இரவு தம் மடத்துக்கு எழுந்தருளப்புக, இருட்டாயிருந்தவாறே பேரருளாளனே நம்பிகளின் வேலையாளுருவத்தில் வந்து பந்தம் பிடித்துப் போய் மடம் சேர்த்தருளினாராம்.

நம்பிகளின் திருவவதார ஸ்தலமான பூவிருந்த வல்லியில் கோயில் திருமலை பெருமாள் கோவில் எம்பெருமான்கள் மூவரும் தாமே எழுந்தருளி நம்பிக்கு ஸாக்ஷாத்காரம் தந்து அவரோடு அர்ச்சை வடிவில் இப்போதும் வாழ்ந்து வருகின்றனர். நம்பிகளின் வைபவம் வாசாமகோசரம். விரிவுக்கஞ்சி இவ்வளவோடு நிறுத்தினோம்.

இங்ஙனம் திருக்கச்சி நம்பிகள் பேரருளாளப் பெருமானுக்குத் திருவாலவட்டத் திருத்தொண்டு செய்து தமது 55 வது வயதில் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

திருக்கச்சி நம்பிகள் திருவடிகளே சரணம்.

# 5

# ஸ்தோத்ரமும் ரஹஸ்யமும்

## ஸ்தோத்ரம்

ஸ்தூயதே அநேந இதி ஸ்தோத்ரம் என்று ஸ்தோத்ர சப்தத்திற்கு வ்யுத்பத்தி கூறப்படுகிறது. ஷ்டு ஸ்துதௌ என்னும் தாதுவின்மேல் கரணம் என்ற கருவிப்பொருள்பெற்ற ஷ்ட்ரந் ப்ரத்யயம் சேர்ந்து ஸ்தோத்ரம் என்னும் இச்சொல் உண்டாகின்றது. ஸ்தவ: ஸ்துதி: நுதி: என்பனவும் இதன் பொருளையே குறிக்கும் சொற்களாகும். 'ஸ்தவ: ஸ்தோத்ரம் ஸ்துதிர் நுதி:' என்ற அமரகோசம் காணத் தக்கது.

ஒரு பெரியவனைப் புகழ்வதற்குக் கருவியாக உள்ள சொற்றொடரே ஸ்தோத்ர சப்தத்திற்குப் பொருளாகும். புகழ்தலாவது குணங்களை - நற்பண்புகளைச் சொல்லிக்கொண்டாடுதல். குணி நிஷ்ட குணாபிதான மென்றார்கள் வடமொழியாளர்கள். குணமுள்ள பெரியோர்களிடம் விளங்கி நிற்கிற குணங்களைச் சொல்லுதலே ஸ்தோத்ரமென்றபடி.

உலகில் ஒருவனைத் துதிக்க வேண்டுமானால், அவனிடம் இல்லாமல் வேறொருவனிடமுள்ள குணங்களை அவன்மேல் ஏற்றிச்சொல்லிப் புகழக் காண்கிறோம். அதுவும் ஸ்தோத்ரந்தான். இத்தகைய ஸ்தோத்ரம் பகவானிடத்தில் பொருந்தாது; அவனிடம் இல்லாமல் மற்றொருவனிடம் இருக்கும் குணமென்பது அப்ரசித்தமாகையால், அதை அப்பகவானிடம் ஏற்றிச் சொல்லுதல் இயலாமையால் என்க. இதற்காக, பகவானை ஸ்தோத்ரம் செய்தலாவது அவனுடைய உண்மையான குணங்களில் ஒன்றையும் விடாமல்

ஒவ்வொன்றினையும் பூர்ணமாகக் கூறுதல் ஸ்தோத்ரமென்று சொல்லப் பார்க்கில், அதுவும் அவனிடம் பயன்படாது; அவனுடைய ஒவ்வொரு குணமே நம்மால் சொல்லி முடிக்க வியலாதாகையால் எல்லாக் குணங்களையும் பூர்ணமாகக் கூறுதல் என்பது முடியாமையால் என்க. இவ்விஷயத்தைக் கூரத்தாழ்வான் தாம் பணித்த ஸ்ரீ ஸ்தவத்தில் அருளிச் செய்கிறார் காண்மின்..

''ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவய:? யத்யந்யதீயாந் குணாந் அந்யத்ரத்வஸதோZதிரோப்ய பணிதி:, ஸா தர்ஹி வந்த்யா த்வயி। ஸம்யக் ஸத்யகுணாபிவர்ணநமதோ ப்ரூயு:, கதம் தாத்ருசீ வாக் வாசஸ்பதிநாZபி சக்யரசநா த்வத்ஸத்குணார்ணோநிதௌ ॥'' என்பதே அது.

(கவிகள் ஸ்தோத்ரமென்று எதுதன்னை ப்ரஸித்தமாகச் சொல்லுகிறார்கள்? வேறொருவனிடம் உள்ள குணங்களை அவையில்லாத மற்றொருவனிடம் ஏற்றிச் சொல்லுதலே ஸ்தோத்ரமென்றால் அது, அம்மா ஸ்ரீரங்கநாச்சியாரே, உம்மிடத்தில் பயனற்றதாகும்; உம்மிடமில்லாத குணங்கள் வேறொருவரிடம் இல்லையாதலால். அதற்காக - உள்ள குணங்களெல்லா வற்றையும் பூர்ணமாக வருணித்தலே ஸ்தோத்ரமென்று அவர்கள் கூறுவர்களானால் அத்தகைய ஸ்தோத்ர மென்னும் வாக்கானது - உமது குணக்கடலில், அறிவிலும் பேச்சிலும் மிகவுயர்ந்த தேவ குருவாகிய பிருஹஸ்பதியாலும் எப்படித் தொடுக்க முடியும்? என்பது இதன் பொருள்). இவ்விருவகைப்பட்ட ஸ்தோத்ரங்களும் ஸ்ரீரங்கநாச்சியாரிடம் பயன் படாதென்று பணித்தது பகவானிடத்திலும் பயன்படா தென்பதை உபலக்ஷணமாகக் குறிக்கின்றதென்று கொள்ளல் தகும்.

ஆக, பகவானை ஸ்தோத்ரம் செய்வதென்பது - அவனிடம் உள்ள குணங்களையே நம்மாலியன்ற வரையில் சொல்லிப் புகழ்தலே யாகுமென்று பெரியோர்கள் அருளிச் செய்கிறார்களாகையால் அதுவே ஸ்தோத்ரமென்று கூறுதல் தகும்.

பகவானுடைய குணங்களில் ஆனந்தமென்னும் ஒரு குணத்தைப் பேச முயன்ற வேதம், இது நமது மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாததென்று மீண்டதாம். *''யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ'' தைத் - ஆனந்தவல்லீ. (வேத புருஷனுடைய வாக்குக்கள் - பகவானைப் பூர்ணமாகப் பேசமுடியாமல் அவன்தனது மனஸ்ஸுடன் திரும்பிவிட்டன) என்பது காண்க.*

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் - *''யானுமேத்தி ஏழுலகும் முற்றுமேத்திப் பின்னையும் தானுமேத்திலும் தன்னை யேத்த வேத்த எங்கெய்தும்?'' திருவாய் 4-3-10 (மயர்வற மதிநலமருளப் பெற்ற நானும் ஏத்தி, எழுலங்களிலுமுள்ள சிறியாரும் பெரியாருமாக எல்லாரும் ஏத்தி, இயற்கையாகவே ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்திபடைத்த பகவான்தானும் ஏத்தினாலும் எங்கே முடிவு பெறும்?) என்று தன்னுடைய குணங்களைப் பூர்ணமாகப் புகழ பகவானாலும் முடியாதென்று அருள்வதும் நோக்குக.*

இப்படி பகவான்தன்னாலும் முற்றப் பேசமுடியாத குணங்களைப் பேசுதலாகிய ஸ்தோத்ரத்தில் நாம் ஏன் இழியவேணுமென்ற கேள்வி எழுவது இயற்கையே. இதற்கு நம்மாழ்வார் முற்காட்டிய பாசுரத்தில் நான்காமடியால் விடையிறுக்கிறார் - 'யானுமெம் பிரானையே ஏத்தினேன் யானுய்வானே'' என்று அவனுடைய தன்மைகளைக் கண்டு பேச வேணுமென்று

ஆசைப்பட்ட நான் - ஏத்தாவிட்டால் பிழைக்க மாட்டேனாகையால் பிழைக்கைக்காகவே ஏத்தினேன்; பூர்ணமாக அளவிட்டுப் பேசுவதற்காக அன்று என்பது இதன் பொருள்.

''ஆம்நாயாநாம் அஸீம்நாமபி ஹரிவிபவே வர்ஷபிந்தோரிவாப்தௌ, ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப: நது கபலநத:, ஸ்தோதுரேவம் ந கிம்மே'' ஸ்ரீ ரங்க - பூர்வ - 19 (எங்ஙனம் தரையில் விழுந்தால் வற்றி உருவம் மாய்ந்துபோகும் மழைத்துளியானது கடலை நிறைப்பதற்காகவல்லாமல் தன்னுருவம் நிறம் பெறுவதற்காகவே கடலில் விழுகின்றதோ, அங்ஙனமே எண்ணிறந்த வேதவாக்குக்களும் மற்றவர்களின் குணங்களைப் பேசினால் 'இது பொய்யுரை' என்று எல்லோராலும் பழிக்கப்பட்டு மாய்ந்துபோவோம் என்றஞ்சி, எம்பெருமானுடைய குணக்கடலில் முழுவதையும் பேசி முடிப்பதற்காகவல்லாமல் தம்முடைய ஸ்வரூபம் நிறம்பெறுவதற்காகவே அக்கடலில் சில துளிகளைப் பேசுகின்றன. இப்படி வேதங்களே தம் ஸ்வரூபம் நிறம் பெறுவதற்காகப் பேசுகின்றனவென்றால், நானும் என்ஸ்வரூபம் நிறம் பெறுவதற்காக - அதாவது பெரிய இடத்தில் ஸம்பந்தம் பெற்றோமென்று ஸந்தோஷப் படுவதற்காக பகவானுடைய குணக்கடலில் சில திவலைகளை ஏன் பேசக்கூடாது?) என்று ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்வதை நோக்கினால் முற்கூறிய கேள்விக்கு விடை கிடைக்கும்.

பகவானைப் பற்றி தேவர்களும் முனிவர்களும் ஸ்தோத்ரம் செய்துள்ளமை வேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் அங்கங்குப் பரக்கக் காணலாகும். பரமாசார்யரான ஆளவந்தார் அருளிய ஸ்தோத்ர ரத்னத்தில் ஒரே

ஒரு ச்லோகத்தை இங்குக் காண்போம். ''வசீ வதாந்ய: குணவாந் ருஜு: சுசி:, ம்ருதுர்தயாளுர் மதுர: ஸ்திர: ஸம:। க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவத:, ஸமஸ்தகல்யாண குணாம்ருதோததி:।। (ஹே நாராயணனே, உன்னை அடைந்த வர்களுக்கு நீ வசப்பட்டிருக்கிறாய்; கேட்டார் கேட்ட படியே மற்றபொருள்களையும் உன்னையும் கூட வழங்கும் பெருங்கொடையாளனாக உள்ளாய்; தாழ்ந் தவர்களோடும் இரண்டறக் கலந்து பழகும் பெரியோனாக இருக்கிறாய்; மனமொழிமெய்களால் ஒருபடிப் பட்டுள்ளாய்; உள்ளும் புறமும் தூய்மை யுடையவனாக உள்ளாய்; உன்னடியார்களின் பிரிவைப் பொறாதவனாக இருக்கிறாய். அவர்களுடைய துன்பத்தைப் பொறுக்க மாட்டாமையாகிற தயையையுடைய வனாகிறாய்; அவரவர்களுக்குத் தக்கபடியே இனியவனாகிறாய்; அடியார்களைக் காக்கும் விஷயத்தில் யாராலும் அசைக்கமுடியாதபடி திண்ணியனாகிறாய்; தேவர் அசுரர் அரக்கர் மனிதர் விலங்கு என்ற வேறுபாடின்றி அனைவரும் வந்தடையும்படி பொதுவானவனா யிருக்கிறாய்; அடைந்தவர்களுடைய காரியத்தையே உன்காரியமாகக் கொண்டிருக்கிறாய்; பக்தர்கள் செய்யும் சிறிய உபகாரத்தையும் பெரிதாகக் கொண்டு அதனை மறவாமலிருக்கிறாய்; இவ்வனைத்துப் பண்புகளும் உனக்கு இயற்கையாக அமைந்துள்ளன. இங்ஙனம் சில குணங்களைச் சொல்லி, சொல்லி முடிக்க முடியாத எல்லா நற்பண்புகளுக்கும் கடல்போலுள்ளாய் பெருமானே) என்னும் இந்த ச்லோகத்தில் ஆளவந்தார் எம்பெரு மானுடைய பல குணங்களையும் பேசித் துதித்துள்ளமை காணத்தக்கது. இங்ஙனமே பிறர் அருளிய நூல்களிலும் காணத்தகும்.

ஸ்தோத்ர க்ரந்தங்களில் பகவானுடைய குணங்களைக் கூறிப் புகழ்தலே யன்றி, துதிப்பவர்கள் தங்களிடமுள்ளனவாகத் தாம் கருதிய குற்றங்களை வெளிப்படையாகப் பகவானிடம் கூறிக்கொள்ளு தலையும் காண்கிறோம். அப்படிக் கூறுவதும் ஸ்தோத்ரத்திற்கு அங்கமென்று நினைக்க வேண்டும். அதற்கும் ஆளவந்தார் அருளிய ஸ்தோத்ரரத்னத்திலேயே உதாரணம் காட்டலாம். ''அமர்யாத: க்ஷுத்ர: சலமதி: அஸூயாப்ரஸவபூ:, க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபர:। ந்ருசம்ஸ: பாபிஷ்ட: கதமஹம் இதோதும்க்க ஜலதே: அபாராதுத்தீர்ணஸ் தவ பரிசரேயம் சரணயோ:॥''

(அடியேன் வேதம் கூறிய தருமாதருமங்களின் வரம்பை மீறினவனாகிறேன்; நீசமான பொருள்களை ஆசைப்பட்டு நீசனாயிருக்கிறேன்; அப்பொருள்களில் ஒன்றிலும் நிலையில்லாத நெஞ்சையுடையவனாக இருக்கிறேன். பிறருடைய குணத்தையும் குற்றமாகக் கொள்ளும் அஸூயைக்குப் பிறப்பிடமாக உள்ளேன்; நன்மைசெய்பவர்களுக்குத் தீமைசெய்யும் நன்றி கெட்டவனாக உள்ளேன்; கர்வமென்னும் கெட்டகுணமுடையேனாக உள்ளேன்; காமத்திற்கு வசப்பட்டிருக்கிறேன்; அதனால் பிறரை வஞ்சிக்கும் தன்மையில் ஊன்றிநிற்கிறேன்; அதனோடு கொலைத்தொழிலும் புரியவல்லேன்; இங்ஙனம் பாபத்திலேயே நிலைத்துநிற்கிற அடியேன் கரைகாண முடியாத இந்த ஸம்ஸாரமென்னும் துன்பக்கடலிலிருந்து கரையேறி உன்னுடைய திருவடிகளில் எங்ஙனம் அடிமை செய்யக் கடவேன்). இந்த ச்லோகத்தில் எம்பெருமானுடைய குணங்களைச் சொல்லிப்புகழும் ஸமயத்தில் ஆளவந்தார் தமக்குள்ளதாகத் தாம் நினைத்த

தோஷங்களையும் கூறிக் கொள்வதனால், தமது குற்றங்களை வெளிப்படையாகப் பகவானிடம் முறையிடுதலும் ஸ்தோத்ரத்திற்கு ஓர் உறுப்பாகுமென்று கொள்ளல் பொருந்துமென்று தோன்றுகிறது. ''அன்றிவ்வுலகமளந்தாயடிபோற்றி'' என்று தொடங்கிக் கண்ணபிரானுடைய குணங்களைத் துதித்துப் பல்லாண்டுபாடிய ஆண்டாள் ''கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்போம், அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து... ''அறியாத பிள்ளைகளோம்'' என்று தங்களுடைய குற்றங்களையும் கண்ணபிரான் ஸந்நிதியில் விண்ணப்பம் செய்ததை இங்கு நினைத்தல் மிகப் பொருந்தும்.

கீழ்க்காட்டிய குற்றங்களை விட மிகப் பெரிய குற்றமொன்றுண்டு. அதாவது சுத்தமான மநஸ்ஸுடன் ஸ்தோத்ரம் செய்யாமல் கபடமான மநஸ்ஸுடன் ஸ்தோத்ரம் செய்வதே அக்குற்றம். அதையும் தம்மிடம் இருப்பதாகக் கூறி, அதுதன்னைப் போக்கவேண்டுமென்று ப்ரார்த்திப்பதும் ஸ்தோத்ரத்திற்கு அங்கமென்று கொள்ள வேண்டும். அதையும் ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் காணலாம். ''அநிச்சந்நப்யேவம் யதி புநரிதீச்சந்நிவ ரஜஸ்தமச் சந்ந: ச்சத்மஸ்துதிவசநபங்கீம ரசயம்। ததாபீத்தம் ரூபம் வசநமவலம்ப்யாபி க்ருபயா த்வமேவைவம்பூதம் தரணீதர மே சிக்ஷய மந: ॥ (உனக்கு அடிமைப்பட்டிருக்கையாகிற செல்வத்திற்குப் புறம்பான தேஹம் ப்ராணன் ஸுகம் ஆத்மா இவற்றையும் மற்றுமுள்ள எதுதன்னையும் பொறுக்கமாட்டேன். அவையெல்லாம் நூறு சுக்கலாகி நசித்துப்போகக் கடவது'' என்று அடியேன் முன் ச்லோகத்தில் ஆசைப்பட்டேனே, அப்படி ஆசைப்பட்டது பொய்.

ஆசைப்படாவிட்டாலும் ஆசையுடையவன்போல், வராஹாவதாரமெடுத்து பூமியை உத்தரித்த பெருமானே! ரஜோகுணத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்ட அடியேன் கபடமான ஸ்தோத்ரம் சொல்லும் ப்ரகாரத்தைச் செய்தேன். அப்படியானாலும் நான் சொன்ன வார்த்தையைப் பற்றாசாகக் கொண்டாவது உன்தயையினால் நீயே - நான் ஸத்யமான ஸ்தோத்ரம் செய்வதற்கு உறுப்பாம்படி என்மனஸ்ஸை ஸத்வகுணமுடையதாகத் திருத்தியருளவேணும்) என்ற ச்லோகத்தில் முன்கூறிய ப்ரார்த்தனை இருப்பது நோக்கத்தக்கது. ஆக இவ்வளவால் பகவானுடைய குணங்களைச் சொல்லுதல் ஸ்தோத்ரமென்பதும், அதற்குத் தம்முடைய குற்றங்களை வெளிப்படுத்துவது அங்கமென்பதும், கபடஸ்தோத்ரம் செய்வதற்கு உறுப்பான ரஜஸ்தமஸ்ஸுக்களைப் போக்கித் தமது மனஸ்ஸை ஸத்வகுணமுடையதாம்படி செய்யவேணு மென்று ப்ரார்த்திப்பதும் ஸ்தோத்ரத்திற்கு அங்க மென்பதும் பெறப்பட்டதாயிற்று.

இனி, நம்மால் துதிக்கத்தக்கவன் பகவானொரு வனேயோ மற்றும் சிலர் உளரோ வென்னில், பகவான் பிராட்டி பாகவதர்கள் ஆசாரியர்கள் ஆகிய இந்நால்வரும் நம்மால் துதிக்கத்தக்கவர்கள் என்னும் விஷயம் தெரிவிக்கப்படுகிறது-ஆளவந்தார் அருளிய சதுச்ச்லோகீ வ்யாக்யாநாரம்பத்தில் வ்யாக்யாதாவாகிய நாயனாராச்சான்பிள்ளையால்,

''மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆசார்ய தேவோ பவ, அதிதிதேவோ பவ (தைத்திரீய உபநி.) என்றுகொண்டு இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமாக உபகாரகராகிறார் - அகில ஜகந்மாதாவான பிராட்டியும்,

*அவ்யய: பிதாவான ஸர்வேச்வரனும், அறியாதன அறிவித்த ஆசார்யனும் அதிதிசப்தவாச்யரான அவனடியாருமென்று இந்நால்வர் பக்கலிலும் உபகாரஸ்ம்ருத்யதிசயத்தாலே உத்தேச்யதா ப்ரதிபத்தி பண்ணி (-ஸ்தோத்ரம் செய்தல் முதலிய ஆராதனைகளுக்கு இலக்கானவர்களென்று நினைத்து) உஜ்ஜீவிக்கக் கடவனென்று வேதாந்தங்களிலே வ்யாக்யாதமாக விதிக்கையாலே விசேஷஜ்ஞரெல்லாம் விரும்பி அனுஷ்டிக்க வேண்டும்படியிறே விசேஷார்த் தங்களான இவ்வர்த்தங்கள்தான் இருப்பது... இப்படிப்பட்ட உபகாரங்களை அனுஸந்தித்து - 'சீதையென்பதோர் தெய்வம்' (பெரிய திருமொழி 10-2-5), 'திருமங்கை நின்றருளும் தெய்வம்' (இரண்டாம் திருவ 57), 'தேவு மற்றறியேன்' (கண்ணிநுண் - 2) 'குலதெய்வம்' (பெரியதிருமொழி 2-6-4) என்று இந்நால்வர் பக்கலிலும் தேவதாப்ரதிபத்தியைப் பண்ணாநின்றார்களிறே''* என்றுள்ள அவருடைய ஸ்ரீ ஸூக்திகளினால், முற்கூறிய நால்வரும் நம்மால் துதித்துக் கௌரவிக்கத் தக்கவர்களென்பது புலனாகும்.

இந்நால்வரும் நமக்குப் பண்ணும் உபகார விசேஷங்கள் பிள்ளைலோகாசார்யர் அருளிய நவரத்ன மாலை என்னும் ரஹஸ்யக்ரந்தத்தில் காணத்தக்கன.

பிராட்டி - நாம் செய்த எல்லாக் குற்றங்களையும் ஈச்வரன் பொறுக்கும்படி செய்து, அவனுடைய தயை வாத்ஸல்யம் முதலிய குணங்களைக் கிளப்பி நமக்குப் புருஷகார பூதையாய் (நம்மைப் பற்றி ஈச்வரனிடம் பரிந்துபேசுமவளாய்) தாயாய் தலைவியாய் ப்ராப்யையுமாய் (=நாம் செய்யும் தொண்டினை ஏற்றுக் கொள்ளுமவளாய்) இருப்பாள்.

ஈச்வரன் ஸ்ருஷ்டிகாலத்தில் சரீரத்தையும் இந்த்ரியங்களையும் தந்து, அந்தர்யாமியாய் நம்முள் நின்று நமது ப்ராணனை ரக்ஷித்து, தன்னிடம் த்வேஷமில்லாமையையும் விருப்பத்தையும், ஸத்புருஷர்களோடு சேருதல் முதலிய ஆத்ம குணங்களையும் பிறப்பித்து, ஸதாசார்யனோடே சேர்த்து நம்முடைய தவறுகள் அனைத்தையும் பொறுத்து ஸம்ஸாரஸம்பந்தத்தையும் (-இனிப் பிறத்தலையும்) கழித்து, அர்ச்சிராதிமார்க்கத்தையும் பரமபதத்தையும் தன்குணங்களின் அனுபவத்தையும், தந்து இவ்வாத்மா உள்ளவரையில் பரமபதத்தில் நித்யகைங்கர்யங்களை ஏற்றுக் கொள்ளும் ஸ்வாமியாய் இருப்பான்.

ஆசார்யன் தன்கடாக்ஷத்தாலே நம்மைத் திருத்தி ஸர்வேச்வரன் கைக்கொள்ளுகைக்கு யோக்யனாம்படி பண்ணி அவன்திருவடிகளிலே சேர்த்து அறியாதன அறிவித்து ஸ்வாமியாய் என்றுமொக்க அடிமை கொள்ளும் மஹோபகாரகனாக இருப்பான்.

அவனடியார்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் - பகவத் ஜ்ஞாநத்துக்கும் இதரவிஷயவைராக்யத்துக்கும் பகவத்பக்திக்கும் அபிவ்ருத்தியை உண்டுபண்ணுமவராய் சேஷிகளாய் (=தலைவர்களாய்) உசாத்துணையாய் (=நற்போதுபோக்குக்குத் துணைவர்களாய்) ப்ராப்யத் துக்கு (=நாம் பற்றத்தக்க விஷயத்துக்கு) எல்லைநிலமாய் இருப்பர்கள்.

இங்ஙனம் தெரிவிக்கும் நவரத்னமாலையென்னும் நூற்பகுதியிலிருந்து - இப்படி உபகாரகர்களாகிய பிராட்டி ஸர்வேச்வரன் ஆசார்யன் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆகிய இந்நால்வரும் நம்மால் துதிக்கத்தக்கவர்களென்பது போதரும்.

ஆகையால்தான் பிராட்டியைப்பற்றி - சதுச்ச்லோகீ, ஸ்ரீஸ்தவம் ஸ்ரீகுணரத்னகோசம், ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி கோதாஸ்துதி முதலிய ஸ்தோத்ரக்ரந்தங்களும், ஸர்வேச்வரனைப் பற்றி - ஸ்தோத்ரரத்னம் கத்யத்ரயம் பஞ்சஸ்தவியில் முதல் நான்கு ஸ்தவங்கள் ஸ்ரீரங்க ராஜஸ்தவங்கள் அபீதிஸ்தவம் தயாசதகம் வரதராஜபஞ்சாசத் முதலிய ஸ்தோத்ரக்ரந்தங்களும், ஆசார்யனைப்பற்றி பராங்குசாஷ்டகம் யதிராஜஸப்ததி யதிராஜவிம்சதி தொடக்கமான ஸ்தோத்ரக்ரந்தங்களும், அவனடியார்களாகிய ஸ்ரீவைஷ்ணவர்களைப்பற்றி ஸுதர்சன சதகம் ஸுதர்சனாஷ்டகம் த்வாதசாயுதஸ் தோத்ரம் கருடதண்டகம் முதலான ஸ்தோத்ர க்ரந்தங்களும் ஆசார்யர்களால் அருளிச் செய்யப்பட்டு அவற்றின் மூலம் முற்கூறிய நால்வரும் துதிக்கப்பட்டுள்ளனர் என்று நாமறியலாகும்.

இந்த ஸ்தோத்ரக்ரந்தங்களில் பெரும்பாலும் பத்யரூபமானவையே. சில கத்யரூபங்களும் உள்ளன.

இந்த ஸ்தோத்ரங்களை - எந்த விதமான பலனையும் விரும்பாமல், நாம் வாய்படைத்ததற்கு அவனைத் துதிப்பதே நாம் அவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்று நினைத்து அனுஸந்திப்பது மிக உத்தமமானது. ஆயினும் ஸ்தோத்ரம் அனுஸந்தித்தால் உண்டாகும் பலன்களையும் அவற்றை இயற்றியவர்களே கூறிவைத்துள்ளனர். மஹாபாரதத்திலுள்ளதாய் ஸகல ஜகத்ப்ரஸித்தமான விஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரத்தின் இறுதியில் அதனை அனுஸந்திப்பவர்களுக்குப் பல விதமான பலன்களை வேதவியாசபகவான் பணித்துள்ளார். ''இதீதம் கீர்த்தநீயஸ்ய கேசவஸ்ய மஹாத்மந:, நாம்நாம் ஸஹஸ்ரம் திவ்யாநாம்

அசேஷேண ப்ரகீர்த்திதம்' என்று தொடங்கி, 'நக்ரோதோ நசமாத்ஸர்யம் நலோபோ நாசுபா மதி:, பவந்தி க்ருதபுண்யாநாம் பக்தாநாம் புருஷோத்தமே'' என்பதீறான ச்லோகங்களினால்.

''துதிக்கத்தக்க கேசவனுடையதாய் என்னால் கூறப்பட்ட இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தை எந்த மனிதன் காதால் கேட்கிறானோ வாயால் சொல்லுகிறானோ அவன் இஹபரலோகங்களில் எக்கெடுதியையும் அடையமாட்டான். ப்ராஹ்மணன் வேதாந்த ஜ்ஞானத்தைப் பெறுவான். அரசன் வெற்றியையும் வணிகர் செல்வச் செழிப்பையும் வேளாளர் ஸுகத்தையும் பெறுவர். தருமம் பொருள் காமம் பிள்ளைப்பேறு இவற்றை வேண்டுமவர்கள் அவற்றைப் பெறுவர். எப்போதும் பக்தியோடு பகவானிடத்தில் மனம் செலுத்தித் தூயனாய் வாஸுதேவனுடைய ஸஹஸ்ரநாமங்களை எவன் சொல்லுகிறானோ அவன் உலகில் பரந்த புகழையும் தம் ஜ்ஞாதிகளுக்குள் உயர்த்தியையும் அழியாத செல்வத்தையும் இறுதியில் மோக்ஷத்தையும் அடையப் பெறுவன். எதிலும் அச்சம் கொள்ளான். வீர்யம் தேஜஸ் இவற்றையும் பெறுவன். நோயற்றவனாய் காந்தியுடையவனாய் தேஹவலிமையும் உடலில் அழகையும் பெறுவான். நோய்வாய்ப்பட்டவன் நோயினின்றும் விடுபடக்கடவன். சிறைப்பட்டவன் அதிலிருந்து விடுபடுவான். அஞ்சினவன் அவ்வச்சம் நீங்கப் பெறுவன். ஆபத்தில் சிக்கியவன் அதிலிருந்து மீட்சியடைவான். தீராத கஷ்டங்களையும் விரைவில் கடந்து செல்வான். வாஸுதேவனான பகவானைத் தஞ்சமடைந்து அவனையே உயர்ந்த பயனாகக்

கொண்டவன் எல்லாப் பாபங்களினின்றும் விடுபட்டுத் தூய்மைபெற்று நித்யமான பரப்ரஹ்மமென்கிற அப்பெருமானையே பரமபதம் சென்று அடையக் கடவன். வாஸுதேவபக்தர்களுக்கு அமங்களம் என்பது எப்போதும் உண்டாகாது. பிறப்பு இறப்பு மூப்பு நோய் இவற்றால் உண்டாகும் அச்சம் அவர்களுக்கு உண்டாகாது. ச்ரத்தையுடனும் பக்தியுடனும் இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பவன் - ஸுகம் பொறுமை செல்வம் தைரியம் மறவாமை புகழ் ஆகியவற்றோடு சேரப்பெறுவன். புண்யம் செய்ததனால் வாஸு தேவனிடம் பக்தி உண்டாகப் பெற்றவன் - கோபம் பொறாமை உலோபம் (பற்றுள்ளம்) கெட்ட எண்ணம் இவை தன்னிடம் உண்டாகப்பெறான்'' என்பதே வியாஸபகவான் கூறும் பயன்களாகும்.

ஆக - ஸ்தோத்ரசப்தத்திற்கு வ்யுத்பத்தியும், அச்சொல்லுக்குப் பொருள் இன்னதென்பதும், அதற்கு அங்கங்களும், துதிக்கத்தக்கவர் இன்னாரென்பதும், அந்த ஸ்தோத்ரத்திற்குப் பயன்கள் இன்னின்னவை என்பதும் இதுகாறும் கண்டோம். மற்றும் உள்ள ஸ்தோத்ரநூல்களில் இவைகள் அத்தனையும் காணத்தக்கன. விரிப்பின் பெருகுமென்று விட்டோமித்தனை.

## ரஹஸ்யம்

ரஹஸி பவம் ரஹஸ்யம் என்பது ரஹஸ்ய சப்தத்தின் வ்யுத்பத்தியாகும். ரஹஸ் என்னும் சப்தத்தின் மேல், உண்டாகின்றது என்ற பொருளில் யத் ப்ரத்யயம் ஏறி, ரஹஸ்யம் என்ற சப்தம் உருவாகிறது. ''விவிக்த விஜந ச்சந்ந நிச்சலாகாஸ் ததா ரஹ:'' என்ற அமரகோசத்தின்படி மனிதஸஞ்சாரமின்றி நிச்சப்தமான இடமே ரஹ:

எனப்படுகிறது. அவ்விடத்தில் உண்டான சொல்லும் அதன் பொருளும் ரஹஸ்யங்களாகும்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மூலமந்த்ரம் என்னும் அஷ்டாக்ஷரத்திருமந்த்ரமும் அதன் விவரணரூபமான த்வயமந்த்ரமும் அதுதன்னையும் விளக்குகிற சரமச்லோகமும் ஆகியவை மூன்றும் ரஹஸ்யத்ரயம் என்று குலாவப்படுகின்றன. இவற்றின் விசேஷார்த்தங்கள் ரஹஸ்யார்த்தங்களெனப்படுகின்றன.

இவற்றுள் திருமந்த்ரம் பதரிகாச்ரமத்தில் ஸ்ரீமந்நாராயணனால் தன்னுடைய அவதாரமான நரனுக்குத் தனிமையில் உபதேசிக்கப்பட்டது. த்வயமந்த்ரம் விஷ்ணுலோகத்தில் ஸ்ரீமந்நாராயணனால் தனது தர்மபத்நியாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்குத் தனிமையில் உபதேசிக்கப்பட்டது. சரமச்லோகம் ஸ்ரீமந்நாராயணா வதாரமான ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவினால் மஹாபாரதயுத்தம் தொடங்கும் போது அர்ஜுநனுக்குத் தனிமையில் உபதேசிக்கப்பட்டது.

''ஓம் நமோ நாராயணாய'' என்ற திருமந்த்ரம் எட்டெழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஸகலஜகத்காரணமாய் ஸர்வரக்ஷகனான நாராயணனுக்கே உரியதொண்டுசெய்யுந்தன்மையுள்ள நான் எனக்குரியவனன்றிக்கே (-என்பயனுக்கு நானே உபாயமாக இருப்பவனன்றிக்கே) நாராயணனையே உபாயமாக உடையேனாகவேணும். ஸர்வசேஷியான நாராயணனுடைய உகப்புக்காகவே எல்லாவடிமைகளும் செய்யப்பெறுவேனாக வேணும் - என்பது அதன் கருத்தாகும்.

''ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:'' என்று இரண்டு பகுதிகளாக

அமைந்துள்ளதனால் த்வயமென்று பெயர் பெற்ற இம்மந்திரம் இருபத்தைந்தெழுத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. ஸ்ரீ மஹாலக்ஷ்மியை விட்டுப் பிரியாத ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடியிணையை என்னுடைய மோக்ஷத்திற்கு உபாயமாகப் பற்றுகிறேன். அப்பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கு உகப்பாகப் பரமபத்தில் எல்லாவடிமைகளையும் செய்யக்கடவேன், என்னுடைய உகப்புக்காக அல்ல - என்பது த்வயத்தின் கருத்தாகும்.

''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:'' என்பது சரமச்லோகம். இது அநுஷ்டுப்பு என்ற யாப்பில் அமைந்துள்ளதனால் முப்பத்திரண்டெழுத்துக்களோடு கூடியதாய்த் திகழ்கின்றது. கருமயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் முதலிய மோக்ஷோபாயங்களை - 'இவை எனக்கு மோக்ஷோபாய' மென்று எண்ணி அநுஷ்டியாமல்விட்டுவிட்டு என்னை ஒருவனையே மோக்ஷோபாயமாகப் பற்றக் கடவாய். இங்ஙனம் என்னைப்பற்றிய உன்னை - என்னையடைவதற்குத் தடையாக நீசெய்துள்ள எல்லாப்பாவங்களிலிருந்தும் உன்னை விடுவித்து உனக்கு மோக்ஷமளிக்கிறேன். நீ வருந்தாதே - என்பது இச்சரமச்லோகத்தின் கருத்து. சரமமான - இதுக்கு மேலான உபாயம் வேறொன்றில்லையென்னும் படி உயர்ந்து கடைசியான உபாயத்தை - எம்பெருமானையே மோக்ஷோபாயமாகப் பற்றுதலாகிய ப்ரபத்தியை உபதேசிக்கும் ச்லோகமாகையாலே இதற்குச் சரமச்லோகமென்று திருநாம முண்டாயிற்றென்கிறார்கள் பெரியோர்.

பகவான் இந்த ச்லோகத்தினால் சரமோபாயத்தை விதிப்பதனாலே - அதாவது 'செய்' என்று கட்டளை யிடுகையாலே இதனை 'விதிரஹஸ்யம்' - என்றும், விதித்தபடியே, பகவானையே மோக்ஷோபாயமாக அநுஸந்திப்பதாகிய - ப்ரபத்தியை அனுஷ்டிக்கையாலே த்வயத்தை அனுஸந்தானரஹஸ்யமென்றும், திருவஷ்டாக்ஷரமென்னும் மூலமந்த்ரத்தை மந்த்ரரஹஸ்யமென்றும் பூர்வாசார்யர்கள் பெயரிட்டு அழைத்தருளினார்.

திருமாலுக்கே உரிய தொண்டனாயிருப்பதும் அவனையே மோக்ஷோபாயமாகப் பற்றுவதும் அவனுடைய உகப்புக்காகவே தொண்டு செய்வதுமாகிய இம்மூன்றும் ஜீவாத்மாவின் ஸ்வரூபமாகையாலே அதாவது தனிப்பட்ட தன்மைகளாகையாலே இம்மூன்று தனித்தன்மைகளின் அறிவானது, முறையே திருமந்திரத்தின்கண் அமைந்துள்ள ஓம் நம : நாராயணாய என்ற மூன்று சொற்களாலும் உண்டாகின்றது. ஒருவனுக்குத் தாய்வயிற்றிலிருந்து பிறக்கும் சாதாரணமான பிறவியைப் பெரியோர்கள் பிறவியாகக் கருதாமல், திருமந்த்ரத்தின் மூலமாக ஆசார்யனாலே உண்டாக்கப்படுகின்ற இந்த ஸ்வரூபஜ்ஞானத்தையே உயர்ந்த பிறவியாகக் கருதுகிறார்கள். இப்படிப்பட்ட ஸ்வரூபஜ்ஞானத்தைப் பெற்றவன் அதற்குத் தக்கபடியே எம்பெருமான் திருவடிகளை, மோக்ஷோபாயமாகப் பற்றுகிறானாகையாலே - 'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே' என்கிற த்வயபூர்வகண்டத்தின் பொருளான அப்பற்றுதலை - திருமந்திரத்தில் பிறவியைப் பெற்ற ஜீவாத்மாவினுடைய வளர்ச்சியாகக் கருதுகிறார்கள். உடலின் வளர்ச்சியை அன்று. இங்ஙனம்

ப்ரபத்தியாகிய வளர்ச்சியைப் பெற்றவனுக்கு அப்பிரபத்தியின் பலனாகிய கைங்கர்யத்தின்கண் ஊற்றத்தை - இந்த ஜீவாத்மா 'ஸ்ரீமதே நாராயணாய நம:' என்ற த்வயத்தின் உத்தரகண்டத்தினால் வெளியிடுகிறானாகையாலே இத்தகைய கைங்கர்ய நிஷ்டையை இவனுக்கு மிகமிக முக்கியமாகக் கருதுகிறார்கள். சப்தாதிவிஷயங்களில் உண்டாகும் ஊற்றத்தை அன்று. அதனால்தான் துறவறம் பூண்ட நஞ்சீயரைக்கண்ட அனந்தாழ்வான் - 'திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிஷ்டராவீர்' என்று வாழ்த்தினாராம். முறையே தவறாமல் அனுஷ்டிக்க முடியாத துறவறத்தினால் உமக்கு மோக்ஷம் கிடைப்பதரிது. உம்முடைய ஆசார்யராகிய பட்டருபதேசித்தபடியே - திருமந்த்ரத்தினால் பிறப்பை யடைந்து த்வயபூர்வகண்டத்தினால் வளர்ச்சியைப் பெற்று அதன் உத்தரகண்டத்தினால் கைங்கரியத்தின்கண் ஊற்றத்தை உண்டாக்கிக் கொண்டிரும். பட்டர்திருவருளாலே மோக்ஷப்ராப்திக்கு ஒரு குறைவு மில்லை யென்று அனந்தாழ்வான் நஞ்சீயருக்குக் கூறிய வாக்யத்தின் கருத்துக் கொள்ளத்தக்கது. நிற்க.

த்வயபூர்வவாக்யத்தைச் சொல்லி பகவானைத் தஞ்சமடையவேண்டுதலால், அங்ஙனம் எம்பெருமானை உபாயமாகக்கொள்ளும்போது, மற்றமோக்ஷோ பாயங்களாகிய கரும ஞான பக்தியோகங்களை விட்டேதீர வேண்டுமென்னும் அர்த்தத்தை 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ' என்ற முன்னிரண்டடிகளாலும், த்வயத்தின் உத்தரவாக்யத்தைச் சொல்லி ப்ரபத்தியின் பலனாகிய பரமபதகைங்கர்யத்தை ப்ரார்த்திக்க வேண்டியிருத்தலால் அக்கைங்கர்யம் இந்த

ஜீவாத்மா செய்த பாபங்களனைத்தும் தொலைந் தாலல்லது கிடைக்கமாட்டாமையால் அப்பாவங்களின் நாசத்தைத் தானுண்டுபண்ணுவதாக 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்ற பின்னிரண்டடிகளாலும் கண்ணபிரான் முறையே ஜீவாத்மா செய்யத்தக்க அம்சத்தையும், தான் செய்யத்தக்க அம்சத்தையும் சரமச்லோகத்தின் மூலம் வெளியிட்டருளினானாயிற்று.

இம்மந்த்ரங்களைச் சொல்லும்போது எப்படிச் சொல்லவேண்டுமென்பதைப் பிள்ளைலோகாசாரியர் தமது முமுக்ஷுப்படி என்னும் நூலில் 'திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அனுஸந்திக்க வேணு' மென்று அருளுகிறார். திருமந்த்ரத்துக்குள்ள பெருமைக்குத் தக்கபடியாக ஆசையுடனும், பிறர்காதில் விழாமல் ரஹஸ்யமாகவும் அனுஸந்திக்கவேணுமென்பது இதன் கருத்து. திருமந்தரத்திற்குக் கூறியது மற்ற ரஹஸ்யங்கள் இரண்டுக்கும் ஒக்கும்.

''எம்பெருமானும் (வயலாலிமணவாளனும்) மூல மந்த்ரமான பெரியதிருமந்த்ரத்தைத் திருமங்கை யாழ்வாருடைய வலத்திருச்செவியிலே உபதேசித்தருள'' (குருபரம்ப.. புத்தூர் வெளியீடு 78 பக்கம்) என்றும்,

''பெரிய நம்பியும் ஆளவந்தார் திருவடிகளை ஸ்மரித்துக் கொண்டு மந்த்ரரத்னமான த்வயத்தை இளையாழ்வாருடைய (இராமானுசருடைய) வலத்திருச் செவியிலே உபதேசித்தருளி'' என்றும், (170ம் பக்கம்)

''திருக்கோட்டியூர் நம்பி இவர் (எம்பெருமானார்) திருக்கையைப் பிடித்துக்கொண்டு போய் ஏகாந்தஸ்தலத்திலே மேல்தளத்திலே ஏறி

எழுந்தருளியிருந்து படிக்கதவை விழவிட்டு, ஒருவர்க்கும் சொல்லாதபடித் தம் திருவடிகளைத் தொடுவித்துச் சூளுறவு கொண்டு, பரமரஹஸ்யமான சரமச்லோகத்தை அருளிச் செய்து'' (195 196 பக்கம்) என்றும் காண்கையாலே இம்மூன்றினுடையவும் ரஹஸ்யத்வம் (அசலறியாதபடி உபதேசிக்கப்படுதல்) ஸ்பஷ்டம்.

மந்த்ரங்களை அனுஸந்திக்கும்போது அவற்றில் ப்ரேமமுடையவனாய்க் கொண்டு அனுஸந்தித்தால் மட்டும் போதாது. மந்த்ரப்ரதிபாத்யனான எம்பெருமான்பக்கலிலும் மந்த்ரோபதேசம் செய்தருளிய ஆசார்யன்திறத்திலும் கூட ப்ரேமத்தோடு கூடி அனுஸந்திக்கவேணும். அப்படியானால்தான் அம்மந்த்ரம் பலனைத் தரும். ''மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது'' (முமுக்ஷுப்படி - 4) என்று பிள்ளை லோகாசார்யர் அருளியது இங்கு நினைக்கத்தக்கது. 'மந்தாரம் த்ராயதே இதி மந்த்ர:' என்ற வ்யுத்பத்தியின்படி - தன்னை அனுஸந்தித்தவர்களை - தடைகளைப்போக்கி விரும்பிய பலனையளித்துக் காக்குந்தன்மையையுடையது மந்த்ரமாகும்.

இந்த ரஹஸ்யத்ரயத்தின் பொருளை விளக்குவதனால்தான் ஸ்ரீவசனபூஷணம் ஆசார்யஹ்ருதயம் முதலான க்ரந்தங்களுக்கும் ரஹஸ்யமென்னும் திருநாமமுண்டாயிற்றென்பர் பெரியோர்.

ஆக ரஹஸ்ய சப்தத்திற்கு வ்யத்பத்தியும், அதன் பொருளும், ரஹஸ்யங்கள் இன்னின்னவையென்பதும் அவற்றின் சுருக்கமான கருத்துக்களும், அவற்றை உபதேசித்தவர்கள் இச்சிஷ்யர்களின் வலத்திருக்

காதில்மட்டும் விழும்படி அசலறியாதபடி உபதேசித் தார்களென்பதும், அவற்றை அனுஸந்திக்கும்போது மந்த்ரங்கள் மந்த்ரப்ரதிபாத்யதேவதை மந்த்ரோப தேஷ்டாவான ஆசார்யர்கள் ஆகிய இம்மூவரிடத்திலும் ப்ரீதியை வைத்து அனுஸந்திக்க வேணுமென்பதும் இதுவரையிலும் கண்டோம்.

# 6

# அஷ்டச்லோகீ ஸாரம்

ஸகலவேத ஸாரதமமாகிய நாராயணாநுவாகத்தின் ஸாரமான விஷ்ணுகாயத்ரியில் முதலில் ஓதப்படுகிற திருமந்த்ரமும், அதன் விவரணமாகிய த்வயமும், அது தன்னையும் விவரிக்கும் சரமச்லோகமு மென்கிற ரஹஸ்யத்ரயத்தின் வ்யாக்யானமாக ஸ்ரீ பராசரபட்டர் அருளிச் செய்த அஷ்டச்லோகியில் ஸாரமல்லாத விஷயம் ஒன்றுமில்லையாகிலும் அதில் அடியேனுக்கு ருசித்ததொரு ஸாரத்தைமட்டும் இங்கு விண்ணப்பிக்க எண்ணுகிறேன். அதாவது விரோதிநிவ்ருத்தி என்பதே.

திருமந்த்ரத்தில் ஸ்வரூபவிரோதி உபாயவிரோதி ப்ராப்யவிரோதி இவற்றின் நிவ்ருத்திகளும், த்வயத்தில் ப்ராப்யவிரோதி நிவ்ருத்தியும் சரமச்லோகத்தில் ப்ராப்திவிரோதி நிவ்ருத்தியும் கூறப்பட்டுள்ளன. ஆக இந்நான்கு விரோதிகளையும் அவற்றின் நிவ்ருத்திகளையும் அஷ்டச்லோகியில் அருளியுள்ள ப்ரகாரத்தை அனுபவிப்போம்.

மந்த்ரப்ரஹ்மணி மத்யமேந நமஸா பும்ஸ: ஸ்வரூபம் கதி :,
கம்யம் சிக்ஷிதம் ஈக்ஷிதேந புரத: பச்சாதபி ஸ்தாநத: ।
ஸ்வாதந்த்ர்யம் நிஜரக்ஷணம் ஸமுசிதா வ்ருத்திச்ச நாந்யோசிதா,
தஸ்யைவேதி ஹரே: விவிச்ய கதிதம் ஸ்வஸ்யாபி நார்ஹம் தத : ॥

என்னும் இரண்டாவது ச்லோகத்தில் முதலில் கூறிய மூன்று விரோதிகளின் நிவ்ருத்திகள் கூறப்பட்டுள்ளன. மந்த்ரச்ரேஷ்டமான திருமந்த்ரத்தில் நடுவிலுள்ள நம : பதமானது - முன்புள்ள ஓம் என்பதனோடும், பின்புள்ள

நாராயணாய என்பதனோடும், தன்னிடத்திலேயே ஆவ்ருத்தி செய்யப்பட்ட தன்னோடும் அந்வயித்து, முறையே ஜீவாத்மாவின் ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தம் இம்மூன்றினையும் திருந்திய நிலையில் அறிவிக்கிறது. இப்படியறிவித்ததனால் -ஜீவாத்மாவுக்கு ஸ்வாதந்த்ர்யமும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியும் தன்னுகப்புக்காக பகவானுக்குச் செய்யும் கைங்கர்யமும் இல்லை, மூன்றும் அவனுக்கேயுள்ளன. ஆதலால் அவனுக்கு வசப்பட்டிருக்கையும் தனது ரக்ஷணத்திற்கு அவனது க்ருபையினாலாகிய முயற்சியையே எதிர்பார்த்திருக்கையும் அவனுகப்புக்காகவே அவனுக்குத் தொண்டு செய்கையுமே ஜீவாத்மாவுக்கு உள்ளன என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டதாயிற்று என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இதனைச் சற்று விவரிப்போம்.

1. ஸ்வரூப விரோதி நிவ்ருத்தி-நம : என்பதனை ஓம் என்பதனோடு கூட்டினால் - ஓம்நம: என்றாகும். இதன் பொருள் ஓம் - (ம் ஆய ஏவ-) ம : ந = மகாரத்தின் பொருளாகிய ஜீவாத்மா அகாரத்தின் பொருளாகிய விஷ்ணுவுக்கே தொண்டனாந்தன்மையுடையவன். தனக்கு உ.ரியவன் அல்லன் (=ஸ்வதந்த்ரன் அல்லன்) என்று ஜீவாத்மாவின் ஸ்வாதந்த்ர்யம் தவிர்க்கப்படுகிறது. பரமாத்மாவுக்கே சேஷமாயிருத்தலாகிய - ஜீவாத்மாவின் ஸ்வரூபபாரதந்த்ர்யத்திற்கு, தனக்கு சேஷமாயிருத்தலென்கிற ஸ்வாதந்த்ர்யம் விரோதி (பகை) யாகையால் இது நம : என்பதனால் கழிக்கப்பட்டது.

2. உபாயவிரோதி நிவ்ருத்தி-நம : என்பதனை ஆவ்ருத்தி (=இன்னொருதடவை உச்சாரணம்) செய்து கொண்டால் நம : நம : என்றாகும். இதன்கண்

முதலிலுள்ள நம : என்பது முழுச் சொல்லாய், சரணம் (=உபாயம் - தன்னைத்தானே காத்துக் கொள்ளும் முயற்சி) என்ற பொருளைக் காட்டுகிறது. இரண்டாவது-ந என்றும் ம : என்றும் பிரியுமது. ஆக, நம: = ஜீவாத்மாவின் ரக்ஷணத்திற்கு உபாயமான முயற்சியானது, ம : ந = ஜீவாத்மாவினுடையதன்று. பரமாத்மாவினுடையதே யாகும் என்று, ஜீவாத்மாவின் முயற்சிக்கு, அவனுடைய ரக்ஷணத்தைக் குறித்து உபாயத்வம் தவிர்க்கப்படுகிறது. பரமாத்மாவின் க்ருபையினாலாகிய முயற்சியே ஜீவாத்மாவின் ரக்ஷணத்திற்கு உபாயம் என்று நினைக்கவேண்டிய ஜீவாத்மாவின் உபாய பாரதந்த்ர்யத்திற்கு - தனது முயற்சி ரக்ஷணோபாயமென்று நினைக்கும் நினைவு விரோதியாகையால், அது ஆவ்ருத்தி செய்யப்பட்ட நம : என்ற முழுச் சொல்லோடு கூடிய - ந- ம : என்று பிரியும் நம : என்ற பதத்தினால் கழிக்கப்பட்டது.

(3) ப்ராப்யவிரோதி நிவ்ருத்தி - நம: என்பதனை நாராயணாய என்பதனோடு கூட்டினால் ஏற்படுகிறது. இதில் ஆய என்கிற சதுர்த்தீ விபக்தி - முன்பு ப்ரணவத்தில் மறைந்து கிடக்கிற சதுர்த்தியால் சொல்லப்பட்ட சேஷத்வத்தை உறுதிப்படுத்தும் கைங்கர்யத்தைக் குறிக்குமாயினும் அது, மிகமிகவுயர்ந்த பரம் பொருளாகிய எம்பெருமானிடம் ப்ரார்த்தித்தே பெற வேண்டியிருப்பதனால் கைங்கர்யப்ரார்த்தனையைக் காட்டுகிறதென்று கொள்ள வேண்டும். ஆக - நாராயணாய -ஸர்வ சேஷியான ஸ்ரீமந்நாராயணனுடைய உகப்புக்காகவே கைங்கர்யம் செய்யக்கடவேன். ம:ந = என்னுடைய உகப்புக்காக அன்று என்று - கைங்கர்யத்தில் ஸ்வார்த்தத்வம் (=தனது உகப்பைப் பயனாகக் கொண்டமை) கழிக்கப்படுகிறது. ' நாம் கைங்கர்யம்

செய்வது பரமாத்மாவின் உகப்புக்காகவே' என்று நினைக்கவேண்டிய ஜீவாத்மாவின் புருஷார்த்த பாரதந்த்ர்யத்திற்கு, 'நமது உகப்புக்காகக் கைங்கர்யம்' என்று நினைப்பது விரோதியாகையால் அது - நாராயணாய என்பதனோடு பொருந்திய நம: பதத்தினால் கழிக்கப்பட்டது. இவற்றுக்குள்ளே இறுதியில் குறிக்கப்பட்ட ப்ராப்யமான பரார்த்தகைங்கர்யத்துக்கு விரோதியான ஸ்வார்த்த கைங்கர்யத்தின் நிவ்ருத்தியை அதாவது த்வயத்தின் உத்தர கண்டத்தின் முடிவிலுள்ள நம: பதத்தின் பொருளை, பட்டர் த்வயத்தின் பத்துப் பொருள்களை யருளிச் செய்யும் 'நேத்ருத்வம்' என்று தொடங்கும் ஐந்தாவது ச்லோகத்தில் 'ப்ரபலதர விரோதிப்ரஹாணம்' என்ற தொடரால் குறிப்பிட்டருளினர். ப்ரபலதர விரோதியாவது மிகவும் பலமுள்ள விரோதி. அதாவது கைங்கர்யம் தன்னுகப்புக்காக என்ற எண்ணம், ப்ரஹாணமாவது அவ்வெண்ணம் நீங்கப்பெறுகை. அது நம: பதத்தினால் உண்டாகுமென்றபடி. இத்தகைய விரோதிகளை நம்மாலே நீக்கிக் கொள்ள முடியாது. எம்பெருமானை ப்ரார்த்தித்தே நீக்கிக் கொள்ள வேணும். திருமந்த்ரத்திலும் த்வயத்திலுமுள்ள நம : பதங்கள் விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையைக் காட்டுகின்றன. பிள்ளைலோகாசார்யர் திருமந்த்ரத்தில் மூன்று பதங்களின் அர்த்தாநுவாதம் செய்தருளும்போது ''எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்குரியனன்றிக்கே ஒழியவேணும். ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்'' என்று அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது. இது தன்னில் 'வேணும்' என்பது ப்ரார்த்தனையைக் குறிக்கிறது.

எம்பெருமானுக்கே - என்ற ஏகாரம் - ப்ரணவத்தில் அந்ய சேஷத்வத்தைத் தவிர்க்கிற உகாரத்தின் விவரணம். எனக்குரியனன்றிக்கேயொழிதலாவது - ஸ்வரூபஸ்வா தந்த்ர்யமும் உபாயஸ்வாதந்த்ர்யமும் புருஷார்த்தஸ்வா தந்த்ர்யமுமாகிய முற்கூறிய விரோதிகளையுடை யனன்றிக்கேயிருத்தல். இவற்றுள் மூன்றாவது விரோதியின் நிவ்ருத்தியை - அதாவது நம : பதார்த்தத்தை 'ஸர்வசேஷியான நாராயணனுக்கே' என்று ஏகாரத்தினால் ஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளமைகாண்க. ஆக திருமந்த்ரத்தில் விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனை - வேணும், வேணும் என்ற சொற்களால் காட்டப்பட்டதாயிற்று. திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கும் முதல் நான்கு ச்லோகங்களில் முற்காட்டிய மூன்று விரோதிகளின் நிவ்ருத்தி ப்ரார்த்தனையை ஸ்பஷ்டமாகக் காட்டிற்றிலரேயாகிலும், ப்ராப்ய விரோதி நிவ்ருத்திப்ரார்த்தனையை மட்டும், த்வயத்தின் வாக்யார்த்தத்தை அருளிச் செய்யும் 'ஈசாநாம் தயிதாம்' என்ற ச்லோகத்தில் 'ச்ரியாஸஹிதாய ஆத்மேச்வராய, நிர்மம : அசேஷம் தாஸ்யம் கர்த்தும் அர்த்தயே' (=பிராட்டியோடு கூடியவனாய் எல்லா ஜீவாத் மாக்களுக்கும் சேஷியான ஸ்ரீமந்நாராயணனுக்கு மமகாரமில்லாதவனாய் அடிமைகளனைத்தையும் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்) என்று காட்டியருளினார். இதில் 'தாஸ்யம் கர்த்தும் அர்த்தயே' என்பது கைங்கர்யப்ரார்த்தனை. 'நிர்மம : தாஸ்யம் கர்த்தும் அர்த்தயே' என்பது விரோதிநிவ்ருத்தி ப்ரார்த்தனை. நிர்மம : என்பதற்கு, 'கைங்கர்யம் எனது உகப்புக்காக ஆகிறதென்கிற மமகாரமில்லாதவனாய்' என்று பொருள். இது தன்னை 'தாஸ்யம் கர்த்தும்

அர்த்தயே' என்பதனோடு கூட்டினால் விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையாமாறு காண்க. இதுவரையில் முதலிரண்டு ரஹஸ்யங்களில் முதல் மூன்று விரோதிநிவ்ருத்திகளைக் கண்டோம். இனி நான்காவதான ப்ராப்திவிரோதி நிவ்ருத்தியைச் சரமச்லோகத்தில் காண்போம்.

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி
மாசுச: ॥

என்பது சரமச்லோகம். ''என்னுடைய ப்ராப்திக்குக் (=மோக்ஷத்திற்குக்) காரணமாக நான் முன்பு கூறிய கருமயோகாதி தருமங்களெல்லாவற்றையும் (மோக்ஷத்திற்கு உபாயமென்று நினைத்து அநுஷ்டியாமல்) அறவே விட்டு, என்னொருவனையே மோக்ஷோபாயமாக உறுதியுடன் நினைக்கக்கடவாய். இங்ஙனம் நினைத்த உன்னை - என்னுடைய ப்ராப்திக்கு விரோதிகளான எல்லாப்பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாகச் செய்கிறேன்'' - என்பது இதன் கருத்து.

மத்ப்ராப்த்யர்த்தயா மயோக்தமகிலம் ஸந்த்யஜ்ய
தர்மம் புந :
மாமேகம் மதவாப்தயே சரணமித்யார்த்தோऽவஸாயம்
குரு ।
த்வாமேவம்வ்யவஸாயயுக்தம் அகிலஜ்ஞாநாதி
பூர்ணோஹ்ய ஹம்,
மத்ப்ராப்தி ப்ரதிபந்தகைர்விரஹிதம் குர்யாம் சுசம்
மாக்ருதா : ॥

என்னுமிந்த ஏழாம்ச்லோகம், முற்காட்டிய கீதா சரமச்லோகத்தின் வ்யாக்யானமாக அமைந்துள்ளது. 'என்னையடைவதற்கு உபாயமாக, இதற்கு முன்பு நான் கூறிய தருமமனைத்தையும் பற்றறும்படி விட்டுவிட்டு,

அத்தருமங்களைவிட விலக்ஷண தருமமான என்னொருவனையே என்ப்ராப்திக்கு உபாயமென்று, உறுதியாக எண்ணக்கடவாய். இப்படிப்பட்ட எண்ணத்தோடு கூடிய உன்னை, அறிவு ஆற்றல் முதலிய எல்லாக் குணங்களும் நிறையப்பெற்ற நான் என் ப்ராப்திக்குத் (மோக்ஷத்திற்குத்) தடையாகிய பாபங்களேதுமில்லாதவனாக ஆக்குகிறேன். முற்கூறிய தருமங்களைச் செய்ய முடியவில்லையே என்று வருந்தியிருந்த நீ இனி வருத்தம் கொள்ளாதே' என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இரண்டுச்லோகங்களிலும் முறையே ப்ராப்தி விரோதியென்பது - பாப சப்தத்தாலும் ப்ராப்திப்ரதிபந்தக சப்தத்தாலும் குறிக்கப்பட்டது. அதன் நிவ்ருத்தி - மோக்ஷயிஷ்யாமி என்பதனாலும், விரஹிதம் குர்யாம் என்றதனாலும் கூறப்பட்டது. இங்கு சரணாகதியாவது - 'நீயே எனக்கு மோக்ஷோபாயமாக ஆகவேணும்' என்னும் ப்ரார்த்தநாகர்ப்பமான (வேண்டுகோளையுட் கொண்ட) உபாயாத்யவஸாய மாகையாலும், சரணமாவது - ப்ராப்தி விரோதிநிவ்ருத் திக்கும் ப்ராப்திக்கும் உபாயமாகையாலும், நீ என்னையே சரணமாகப் பற்று' என்றதனால், எம்பெருமான் - 'கண்ணா எனக்கிஷ்டமான மோக்ஷப்ராப்தியையும் அதற்கு விரோதியான பாபங்களின் நிவ்ருத்தியையும் நீயே செய்யவேண்டுமென்று என்னை வேண்டிக்கொள்ளக் கடவாய்' என்று - இஷ்டப்ராப்தி ப்ரார்த்தனையோடு விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையையும் விதித்தானென்று கொள்ள வேணும். ஆக இங்கும் ப்ராப்தி விரோதி ப்ரார்த்தனை (அஸ்பஷ்டமாக) உள்ளமை காண்க. இந்த விதியின் அநுஷ்டான ரூபமான த்வயபூர்வகண்டத்தில் உள்ள 'சரணம் ப்ரபத்யே' என்ற விடத்திலும் முற்கூறிய

இருவகையான ப்ரார்த்தனையும் உள்ளமை ஊகித்தறியத்தக்கது. நம்மாலே போக்கிக்கொள்ள முடியாத விரோதிபாபங்களை - அவனை ப்ரார்த்தித்தேயன்றோ போக்கிக் கொள்ள வேண்டுவது.

இங்கு-பாபமென்றும் ப்ராப்திப்ரதிபந்தகமென்றும் கூறப்பட்டவை - அறியாமை, புண்ணியபாபங்களென்னும் நல்வினை தீவினைகள், இவற்றை அறிந்தே செய்வதற்குறுப்பான ருசி, அறியாமல் செய்வதற்குக் காரணமான வாஸனை, சரீரஸம்பந்தமாகிய இவைகளே. ஸ்வர்க்கம் செல்வதற்குக் காரணமான புண்யம் மோக்ஷத்திற்குத் தடையாகையால் அதுவும் மோக்ஷாதிகாரிக்குப் பாபமேயாகுமென்க.

இவற்றில் புண்யபாபரூபமாகிய கருமம் - பூர்வாகம் உத்தராகம் என்று இருவகைப்படும். அர்த்தபஞ்சகஜ்ஞாநமேற்படுவதற்கு முன்பு செய்தது பூர்வாகம். பின்பு செய்தது உத்தராகம். (அகம் = பாபம்). பூர்வாகமும்-ஸஞ்சிதம் ப்ராரப்தமென்று இரண்டாகும். முன்பு செய்த பாபம் சுகதுக்கங்களாகிய பயனைத்தருவதற்கு - மற்றொரு வலிய பாபத்தினால் தடையுண்டாகுமானால் அது ஸஞ்சிதபாபமெனப்படும். ஸஞ்சிதம் = செலவில்லாமையால் (=பயன்தராமையினால்) சேர்த்துவைக்கப்பட்ட பாபமென்றபடி. அத்தகைய தடையேதுமில்லாமையினால் பயனைத்தர ஆரம்பித்த பாபம் ப்ராரப்தமெனப்படும். ப்ராரப்தமும் - அப்யுபகதம் அநப்யுபகதம் என்றிருவகைப்படும். இப்போதுள்ள சரீரத்தைக்கொண்டு அனுபவிக்கவேண்டியதாக பகவானால் அநுமதிக்கப்பட்ட பாபம் அப்யுபகதமாகும். அப்படியல்லாதது (=மேல்வரும் சரீரத்தைக் கொண்டு அநுபவிக்கத் தக்கது) அநப்யுபகதமாகும். உத்தராகமும்-

ப்ராமாதிகம் புத்திபூர்வகம் என்றிருவகைப்படும். அஜாக்ரத்தையினால் தானே நேரிடுவது ப்ராமாதிகம். தெரிந்தே செய்வது புத்தி பூர்வகம். இனி இவற்றை எம்பெருமான் போக்கும் வகையைக் காண்போம்.

மோக்ஷாதிகாரிகள் - உபாஸகர் (=பக்திநிஷ்டர்) ப்ரபத்தி நிஷ்டர் என்ற இருதிறத்தராவர். ப்ரபத்திநிஷ்டரும் - ஆர்த்த ப்ரபந்நர் த்ருப்தப்ரபந்தர் என்று இருவகைப்படுவர். (ஆர்த்தன்- வருந்துமவன், த்ருப்தன் - மகிழுமவன்) இவ்வுலகிலிருப்பானது நெருப்பிலிருப்புப் போல் வருத்தத்தையுண்டாக்க அதனால் ப்ரபத்திசெய்து அந்தக் கணத்திலேயே மோக்ஷம் பெற விரையுமவன் ஆர்த்தப்ரபந்நன். ப்ரபத்தி செய்துவிட்டு, மோக்ஷம் கிடைப்பது உறுதியாகையால் கிடைத்தபோது கிடைக்கட்டுமென்று நினைத்து இவ்வுடல் அழியும் வரையில் துன்பங்களை ஒரு பொருளாக மதியாமல் மகிழ்ச்சியோடு இருப்பவன் த்ருப்தப்ரபந்நன்.

இவ்விருவரில் ஆர்த்த ப்ரபந்நனுக்கு - எம்பெருமான் ஸஞ்சிதமென்றும் ப்ராரப்தமென்றும் முற்கூறிய பூர்வாகம் (முன்செய்த பாபம்) அனைத்தையும் போக்கி உடனே மோக்ஷமளிக்கிறான். உடனே மோக்ஷமடைவதனால் இவனுக்கு உத்தராகம் (=பின் செய்யும் பாபம்) உண்டாக அவகாசம் இல்லை.

த்ருப்தப்ரபந்நனுக்கு - அப்யுபகதப்ராரப்தமும் ப்ராயச்சித்தம் செய்யப்படாத - புத்திபூர்வகமான உத்தராகமும் அனுபவித்தே தீர்க்க வேண்டியிருப்பதனால், ஸஞ்சிதம் அநப்யுபகதப்ராரப்தம் ஆகியவற்றை எம்பெருமான் நீக்கி, இவ்வுடல் அழிந்த வுடனே மோக்ஷத்தை அருளுகிறான். ப்ராமாதிகமான உத்தராகம் இவனுக்குப் பயன்தராது.

பக்தி நிஷ்டனுக்கு - இருவகைப்பட்ட ப்ராரப்தங்களும், ப்ராயச்சித்தம் செய்யப்படாத புத்தி பூர்வகமான பூர்வாகமும் உத்தராகமும் அனுபவித்தே தீர்க்க வேண்டியவையாகும். ஸஞ்சிதத்தை மட்டும் எம்பெருமான் அழியச் செய்கிறான். ப்ராமாதிகமான உத்தராகம் இவனுக்கு ஒட்டாது (=பயன்தராது).

இவ்வாறு விரோதிகள் (=நமது நன்மைக்குத் தடையாக உள்ளவைகள்) ஸ்வரூபவிரோதி உபாய விரோதி ப்ராப்யவிரோதி ப்ராப்திவிரோதி என்று நான்கென்பதும், அவற்றின் நிவ்ருத்திகள் ஏற்படுகிற வகையும், இந்த நிவ்ருத்திகளை - எம்பெருமான் ஸந்நிதியில் ப்ரார்த்தித்தே பெற வேண்டியுள்ளமையும் பற்றி, ஸர்வஜ்ஞரான ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா அருளிச்செய்த அஷ்டச்லோகீ வ்யாக்யானத்தை ஸேவித்து, அடியேனுக்குத் தெரிந்த வரையில் விண்ணப்பித்துள்ளேன். இதில் அடியேனுடைய அறியாமையினால் நேர்ந்த பிழைகளை, கலை யறக்கற்ற மாந்தர்களான மகான்கள் தம்முடைய இன்னருளால் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டுகிறேன்.

# 7

# ஸ்ரீ ராமாயணம் - த்வயவிவரணம்

பெரிய திருமலைநம்பிகள் திருமலையிலிருந்து தினந் தோறும் இறங்கியருளித் திருமலையடிவாரத்தில் எம்பெருமானாருக்கு ஸ்ரீராமாயணத்தைக் காலக்ஷேப ரீதியில் விவரித்தருளிச்செய்தாரென்பது குருபரம்பரா க்ரந்தாதிகளில் மிகவும் பிரசித்தமாக உள்ளது. அங்ஙனம் ஒரு வருஷகாலம் காலக்ஷேபம் நடை பெற்று முடிந்த பின்பு, நம்பிகள் ஸ்ரீராமாயணத்தை த்வயமந்த்ரத்தின் விவரணரூபமாக எம்பெருமானாருக்கு அருளிச் செய்த வகையை, பிள்ளைலோகார்ய ஜீயர்ஸ்வாமி பணித்த 'ராமாநுஜார்ய திவ்யசரிதை' என்னும் க்ரந்தத்தை அனுஸரித்து, சுருக்கமாக விண்ணப்பிக்கின்றேன்,

ஸ்ரீராமாயணத்தில் பாலகாண்டம் முதலாக ஸுந்தரகாண்டமீறாகவுள்ள ஐந்து காண்டங்களினால் த்வயத்தின் 'ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே' என்ற முற்கூறும், மேலுள்ள யுத்தகாண்டம் உத்தரகாண்டம் ஆகிய இரண்டினால் 'ஸ்ரீமதே நாராயணாய நம:' என்ற பிற்கூறும் விவரிக்கப்படும் விதத்தை அந்நூலில் உள்ளபடியே அநுபவிப்போம்.

## பாலகாண்டம்-ஸ்ரீமத் பத விவரணம்

'இராமபிரான் சிறந்த அறிவுள்ளவன், நீதியுடையவன், நல்ல பேச்சாளி, ஸ்ரீமான், பகைவரை அழிப்பவன், பருத்த திருமார்பும் நீண்டு பரந்த திருக்கண்களுமுடையவன், திருமேனியழகுடையவன், நல்ல ராஜலக்ஷணங் கொண்டவன்' (1-9) என்றவிடத்தில் 'ஸ்ரீமான்' என்று த்வயபூர்வகண்டத்தில் முதலிலுள்ள ஸ்ரீமத்பதம் அனுவதிக்கப்பட்டு, 'எனது பெண்ணை இவ்வழகிய

ஸீதை உமக்குக் கூடவிருந்து நீர் செய்யும் - தஞ்சமடைந் தோர்களைக் காத்தல் என்ற தருமத்தை அனுஷ்டிப்பவள். இவளை ஏற்றுக் கொள்ளும். இவளது கையை உமது கையால் பிடித்துக் கொள்ளும்' (73- 26) என்று ஜநகர் இராமனிடம் கூறும் வார்த்தையில்' உனக்குக் கூடவேயிருந்து என்பதனாலும், ' ராஜருஷியாகிய தசர தனது புதல்வனான அழகிய அவ்விராமபிரான் மிகவுயர்ந்த அரசகுமாரியும் மிக அழகியவளும் கணவனிடம் மிக்க காதலுள்ளவளுமான அந்த ஸீதையோடு பிரிக்க முடியாதபடி ஒன்றாகக் கலந்தவனாய்க்கொண்டு, தேவர்தலைவனான விஷ்ணு திருமகளோடு சேர்ந்து விளங்கியது போல் மிகவும் விளங்கினான்' (77-36) என்ற விடத்தில் ஒன்றாய்க் கலந்தவனாய்க் கொண்டு, என்பதனாலும் அந்த ஸ்ரீமத்பதத்தின் பொருளான ச்ரிய: பதித்வம் = திருமகள் கேள்வனாந் தன்மை இராமபிரானிடம் கூறப்பட்டது. ஆக, பால காண்டத்தினால் ஸ்ரீமத்பதம் விவரிக்கப் பட்டதாயிற்று.

## அயோத்தியாகாண்டம்-நாராயணபத விவரணம்

'புரோகிதரான வசிஷ்டமுனிவர் பட்டாபிஷேகத்திற்கு முன்பாகச் செய்ய வேண்டிய சடங்குகளைத் செய்வித்துச் சென்றபின்பு இராமபிரான் நீராடி மனத்தையடக்கித் தடங்கண்ணியான தன் மனைவி சீதையுடன் நாராயணனை வழிபட்டான் (6-1) என்றும், 'தயரதன் மகனான இராமபிரான் நாராயணப் பெருமானைத் தியானம் செய்துகொண்டே விஷ்ணு எழுந்தருளி யிருக்கும் அழகிய கோவிலில் (ப்ரணவாகாரமான ஸ்ரீரங்க விமானத்தில்) தர்ப்பப்புற் பாயில்

படுத்துறங்கினான்'(6-3) என்று முள்ள விடங்களில் ஸ்ரீமத்பதத்திற்கு அடுத்த நாராயணபதம் அனுவதிக் கப்பட்டு 'கொழுத்த இராவணனை அழிக்க வேண்டுமென்று தேவர்களால் வேண்டப்பட்ட விஷ்ணுவன்றோ மனிதவுலகில் அந்த இராமனாக அவதரித்தவர்'. (1-7) என்ற விடத்தில் விஷ்ணுவே இராமனென்று கூறப்பட்டதனால் விஷ்ணுவைக் குறிக்கும் முற்கூறிய நாராயணபதம் இராமபிரானையும் குறித்ததாயிற்று.

'தசரதமன்னவன் முற்கூறிய நற்குணங்கள் நிறையப்பெற்றவனும் பழுதுபடாத பராக்கிரமமுடைய வனும் நீதி நூலில் கூறிய பொருத்தல் பிரித்தல் முதலான ஆறுகுணங்களோடு கூடியவனும் தன் மைந்தருள் மூத்தவனும் தனக்குப் பிரியமானவனுமாகிய இராமனை இளவரசனாக்க விரும்பினான்' (ஸங்க்ஷேபம் -19) என்றும், 'எல்லாமக்களுக்கும் இனியவையும் தமப்பனுக்குப் போலவே எல்லோர்க்கும் பிரீதியை உண்டு பண்ணுமவையுமான குணங்களினால் இராமன் கிரணங்களினால் சூரியன் போன்று விளங்கினான்' (1-33) என்றும், 'வெவ்வேறு தேசத்திலிருந்து வந்த அவ்வரசர்கள் பண்டிதரும் பாமரருமான மற்ற மக்களுடன் கூடி ஓ அரசனே! உன்னுடைய மகனான இராமனிடம் பல நற்குணங்கள் உள்ளன என்று பேரறிவாளனான தசரதனிடம் கூறினர்' (2-26) என்றும், 'கொடுமையின்மை தயை நூலறிவு நன்னடத்தை புலனடக்கம் மனவடக்கம் என்னும் இவ்வாறு குணங்களும் புருஷர்களில் தலைவனான இராமனை விளங்கச் செய்கின்றன' (33-12) என்றுமுள்ள இந்நான்கிடங்களில் நாராயணபதத்தின் பொருளாகிய - எண்ணற்ற நற்குணங்களுடைமை

இராமபிரானிடம் கூறப்பட்டன. நாராயண பதமானது பொதுவாக - ஆத்மஸ்வரூபம் நற்குணங்கள் ஐச்வர்யம் ஆகிய இவற்றையெல்லாம் குறிக்கவல்லதே யாயினும் சந்தர்ப்பத்தை யொட்டி இங்கு குணங்களை மட்டும் குறிக்கின்றதென்று கொள்ளத்தக்கது.

இனி, பிராட்டியினுடைய புருஷகாரத்தின் (நமக்காக எம்பெருமானிடம் பரிந்து பேசுதலின்) பலத்தினால் எம்பெருமானுடைய ஸ்வாதந்தர்யம் (பாபிகளை ஏற்றுக்கொள்ளமாட்டேனென்று கூறுதற்குக் காரணமான சுதந்திரத் தன்மை) தலைசாய்ந்தபின்பு தலையெடுக்குமவையாய் நாராயண பதத்திற்குப் பொருளாய் இங்கு அவச்யமாகத் தேவைப்படுகின்ற குணங்களைக் காண்போம். அவைதாம் ஆச்ரயணஸௌகர்யாபாதகங்களென்றும் ஆச்ரிதகார்யாபாதகங்களென்றும் இருவகைப் படும். எம்பெருமானைத் தஞ்சம்புகுதல் எளியகாரியந்தான் என்பதைத் தெரிவிக்கும் குணங்கள் முதல்வகையிலும், தஞ்சம்புகுந்தவரின் காரியத்தை நிறைவேற்றித்தரும் குணங்கள் இரண்டாம் வகையிலும் சேரும். முதல் வகையைச் சேர்ந்த வாத்ஸல்யம் ஸ்வாமித்வம் ஸௌசீல்யம் ஸௌலப்யம் என்னும் இந்நான்கினையும் முதலில் அனுபவிப்போம்.

வாத்ஸல்யமாவது - குற்றத்தையும் நற்றமாகக் கொள்ளுதலேயாகும். இதற்குத் தமிழில் பாசமென்று பெயர். 'அவ்விராமன் பொய்பேசாதவன், பண்டிதன், அறிவு ஒழுக்கம் வயது முதலியவற்றால் பெரியோர்களைப் பூஜிப்பவன், குடிமக்களின் அன்புக்கிலக்கானவன், குடிமக்களிடம் பாசம் வைப்பவன்' (1-14) என்ற விடத்தில் வாத்ஸல்யமென்னும் பாசம் இராமபிரானிடம் உள்ளதாகக் கூறப்பட்டது.

ஸ்வாமித்வமாவது - மூவுலகுக்கும் தலைவனாயிருக்குந்தன்மை. 'எந்தத்தலைவனான இராமனால் மூவுலகும் உயர்ந்த தலைவனைப்பெற்றதாக ஆகுமோ, லக்ஷ்மணனுக்கு அண்ணனான அவ்விராமன் உலகிற்குத் தக்க தலைவன், எல்லையில்லாத ஒளிபடைத்தவன்' (2-13) என்ற விடத்தில் இராமபிரானுக்கு ஸ்வாமித்வம் கூறப்பட்டது.

ஸௌசீல்யமாவது - மிகப்பெரியவன் மிகத் தாழ்ந்தவர்களோடு பேதமில்லாமல் கலந்து பழகும் தன்மையாகும். 'இராமன் கங்கை கடந்து காட்டிற்குள்ளே புகுந்தானென்று சுமந்திரன் சொல்லக் கேட்ட அயோத்திமக்கள் - தானம் யாகம் கல்யாணம் முதலியவை நடைபெறுமிடங்களிலும் பெரிய கோஷ்டிகளிலும், நடுவில் தானும் அங்குள்ளவர்களில் ஒருவனாக வீற்றிருக்கும் தருமசீலனான இராமபிரானை இனிநாம் எப்போதும் காணவே மாட்டோமா - என்று கூறினர்' (57-13) என்ற விடத்தில் தன்மேன்மை பாராமல் மற்ற எல்லோரோடும் கலந்து பழகும் பான்மையாகிய ஸௌசீல்யம் இராமபிரானிடம் கூறப்பட்டது.

ஸௌலப்யமாவது - கண்ணுக்கு இலக்காகாத அருமையை விட்டு அதற்கு எதிரிடையான கண்ணுக்கு இலக்காகும் தன்மையாகும். 'குபேரன் போல் எல்லையில்லாத செல்வமுடையவனும் பகவானைத் தியானித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவனும் அதற்குத் தக்கவாறு கைகூப்புதல் முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்டவனுமான இராமபிரானைத் தேர்ப்பாகனான சுமந்திரன் மேல்விரியோடு கூடிய பொற்கட்டிலில் கண்டான்' (16-8) என்ற விடத்தில் தாழ்ந்தோர்

கண்களுக்கும் தென்படுதலாகிய ஸௌலப்யம் இராமபிரானிடத்தில் கூறப்பட்டது.

ஆக பகவானைத் தஞ்சம்புகுதல் நமக்கு எளிதென்பதைத் தெரிவிக்கும் நான்கு குணங்களுள்ளமை கூறப்பட்டு முடிந்தது. இவற்றுள் குற்றத்தைக் குணமாகக் கருதுதலாகிய வாத்ஸல்யம் - தஞ்சம்புகுமவர் தம் குற்றங்களைக் கண்டு எம்பெருமானைத் தஞ்சம் புகுவதற்கு அஞ்சிப் பின்வாங்காமைக்கு உறுப்பாகும். எல்லார்க்கும் தலைவனாயிருத்தல் என்ற ஸ்வாமித்வம் 'நமக்கு அவனோடு ஏதாவது உறவிருந்தாலல்லவா நாம் அவனைத் தஞ்சம் புகுதல் தகுந்திருப்பது? என்று நினையாமல், நாம் தஞ்சம் புகுந்தால் நம்காரியம் செய்வான் எம்பெருமான்' என்று நிச்சயிப்பதற்கு உறுப்பாகும். அவன் மிகப் பெரிய ஸ்வாமியாயிற்றே, மிகத்தாழ்ந்த நமக்குக் காரியம் செய்வானோ என்று நினைத்து அகலாமைக்கு உறுப்பாகும் - அவனுடைய - தாழ்ந்தாரோடும் பேதமின்றிக் கலந்து பழகுந் தன்மையாகிய ஸௌசீல்யம். எம்பெருமான் கண்ணுக்குத் தென்பட்டாலன்றோ அவனை நாம் தஞ்சமடைய முடியும்? அவன் நம் கண்ணுக்கிலக்காகாதவனன்றோ? என்று நினையாமைக்கு உறுப்பாகும் - கண்ணுக்கிலக்காகு தலாகிய ஸௌலப்யம். இனி, தஞ்சம் புகுந்தவர்களின் காரியத்தை (பகையைப்போக்கி விருப்பத்தை நிறைவேற்றுதலாகிய பயனை) உண்டுபண்ணும் - ஜ்ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என்ற ஆறுகுணங்களைக் காண்போம்.

ஜ்ஞானமாவது எல்லாவற்றையும் அறியும் அறிவு. 'இராமன் - தெய்வம் குரு இவர்கள் திறத்தில் அசைவில்லாத பக்தியுடையவன், நிலைபெற்ற தத்துவ

ஞானம் படைத்தவன், தீயோரைக் கைக் கொள்ளாதவன், கொடூரமாகப் பேசாதவன், சோம்பலும் கவனக் குறைவுமில்லாதவன், பிறர்குற்றமும் தன்குற்றமு மறியுமவன், வேதங்களும் அவற்றின் அங்கங்களுமாகிய சாஸ்திரங்களை அறிந்தவன், நன்றியறிவுள்ளவன், மக்களிடம் இவர் நல்லவர் இவர் தீயவரென்னும் வாசியறியவல்ல பண்டிதன்' (1-24,25) என்ற விடத்தில் இராமபிரானுடைய பலவகைப்பட்ட உயர்ந்த அறிவு கூறப்பட்டது.

சக்தியாவது - ஆத்மாவிலுள்ள ஆற்றல். 'தனக்குத் துன்பம் நேரிடுமாயினும் இராமன் உண்மையே பேசுபவன், உயர்ந்த வில்லையுடையவன், புலனடக்கங் கொண்டவன், புன்சிரிப்புடன் பேசுபவன், பெரியோர்களை வழிபடுமவன் ஆபத்திலும் தரும நெறியில் செல்லுமவன்' (2-43) என்ற விடத்தில் கூறப்பட்ட எல்லாச் சொற்களாலும் இராமபிரானுடைய ஆத்மசக்தி கூறப்பட்டது.

பலமாவது உடலிலும் உள்ளத்திலுமுள்ள வலிமையாகும். 'பெரிய தோள்களையுடையவனும் உயர்ந்த மனவலிமையுள்ளவனும் ரகு குலத்திலுதித்த வீரனுமாகிய இராமபிரானை, வெண்குடையால் மறைக்கப்பட்ட திருமுகமுடையவனாய்ப் பெரிய யானையின் மீது உட்கார்ந்து. பட்டாபிஷேகமான பின்பு பவனிவரக் காண ஆசைப்படுகின்றோம்' (2-22) என்று பல அரசர்களும் குடிமக்களும் கூடித் தசரதனிடம் தம்விருப்பத்தை வெளியிட்டவிடத்தில் இராமபிரானுடைய தோள்வலிமையும் மனவலிமையும் கூறப்பட்டன.

ஐச்வர்யமாவது எல்லாமக்களையும் தன் வசத்தில் அடக்கியாளும் திறமை. 'எத்தகைய மனிதர்க்கும் துன்பங்கள் உண்டாகும்போது அவர்களைக் காட்டிலும் மிகவும் துன்பமடைபவன் இராமபிரான். அவர்களுக்குப் பிள்ளை பிறத்தல் முதலிய உத்ஸவங்களினால் இன்பமுண்டாம் போது அவர்களுடைய தகப்பன்மார் போல் மிகவும் இன்பமடைகிறான்' (2-42) என்ற விடத்தில் இராமனுடைய ஐச்வர்யம் கூறப்பட்டது. மக்களை அடக்கியாளுந் திறமையாகிய ஐச்வர்யமானது-மக்களின் சுகதுக்கங்களைத் தன் சுகதுக்கங்களாகக் கருதுமுள்ளங் கொண்ட அரசனுக்கே உரியதொன்றா கையால் இங்குக் காரணங்கூறும் வாயிலாக அதன் காரியமான ஐச்வர்யம் குறிக்கப்பட்டதென்று கொள்ளத் தகும்.

வீர்யமாவது- தான் எவ்வித வேறுபாடுமடையாமல் பிறரை வேறுபாடடையும்படி செய்தலாகும். 'அழகியபுருவமும் பரந்து சிவந்தகண்களுங் கொண்ட இராமன் தான் ஸாக்ஷாத் விஷ்ணுபகவான் போன்று சௌர்ய வீர்ய பராக்ரமங்களால் எல்லோர்க்கும் இன்பமூட்டுகிறான்' (2-44) என்பதனால் இராமனுக்கு வீர்யமுடைமை கூறப்பட்டு, 'சந்திரனைவிட அழகிய முகமுடையவனும் மிகவும் இன்பமூட்டும் காட்சியுடையவனும் திருமேனியழகு கொடைத்தன்மை சிறியவர்களுடனும் பேதமில்லாமல் பழகுந்தன்மை ஆகியவற்றால் பெண்களையேயன்றி ஆண்களையும் கண்ணும் மனமும் கவருமவனான இராமனைத் தன்னெதிரில்வரக் காண்கின்ற தசரதமன்னவன் எத்தனை நேரங் கண்டுகொண்டேயிருந்தும் திருப்தியடைய வில்லை' (3-28) என்ற விடத்தில் தான் எத்தகைய வேறுபாடும் அடையாமலிருந்து தன்னைக் கண்டவரின்

கண்களையும் உள்ளங்களையும் வேறுபடுத்தலாகிய முற்கூறிய வீர்யமுடைமை இராமனிடம் விவரித்துக் கூறப்பட்டது.

தேஜஸ்ஸாவது- பகைவரைப் பரிபவிக்கும் ஸாமர்த்தியம். 'நல்ல விஷயங்களைப் பலரிடம் பலதடவைகள் கேட்டறிந்த பெரியோர்களான அந்தணர்களை வழிபடுமவன் இராமபிரான். அதனால் இவனுக்கு வள்ளன்மையால் வந்த புகழும் பராக்ரமத்தினாலுண்டான புகழும் பகைவரைப் பரிபவிக்கும் ஸாமர்த்தியமும் ஒப்பற்றதாக வளர்ந்து வருகிறது' (2-33) என்ற விடத்தில் இராமனிடம் தேஜஸ்ஸு உள்ளமை சொல்லப்பட்டது. ஜ்ஞானம் முதலாக தேஜஸ்ஸு முடிவாகக் கூறப்பட்ட ஆறு குணங்களும் தஞ்சம் புகுந்தவர்களின் காரியத்தை = பகையைப் போக்கிப் பயனைத் தருதலென்னும் பயனை உண்டாக்குதற்கு, தஞ்சமடையப் பட்டவரிடம் இருக்கவேண்டியவையாகும். ஆக அயோத்தியா காண்டத்தினால் நாராயணபதம் விவரிக்கப் பட்டதாயிற்று.

## ஆரண்யகாண்டம் - 'சரணௌ' என்றதன் விவரணம்

'சீதையைப் பிரிந்த இராமன் வருந்தியழா நிற்க, பின்பு லக்ஷ்மணன் ஒரு முகூர்த்தகாலம் இராமனைத் தேற்றி அவனுடைய சரணங்களைப் (திருவடிகளைப்) பிடித்துக் கொண்டு மேலும் விண்ணப்பித்தான்' (66-21) என்ற விடத்திலும், 'யோகத்தில் சித்தியடைந்த சபரியானவள் தனது இருப்பிடம் தேடி வந்த ராமலக்ஷ்மணர்களைக் கண்டு உடனே எழுந்து கைகூப்பி, இராமபிரா னுடையவும் புத்திசாலியான லக்ஷ்மணனுடையவும்

திருவடிகளை வருடினாள்' (74-6) என்ற விடத்திலும், த்வயத்தில் 'ஸ்ரீமந்நாராயணசரணௌ' என்றதன்கண் உள்ள சரண சப்தார்த்தமான திருவடிகள் கூறப்பட்டன.

'தருமாநுஷ்டானம் செய்பவர்களும் இராமபிரானே ரக்ஷகனென்ற உறுதி பூண்டவர்களுமான அந்த தண்டகாரணியத்தில் வசிக்கும் மகரிஷிகள் உதிக்கின்ற சந்திரனைப்போல் இருக்கும் இராமனையும் ஸீதையையும் லக்ஷ்மணனையும் கண்டு மங்களாசாஸனம் செய்து கொண்டே அவர்களை எதிர்கொண்டழைத்தனர்' (1-11) என்றும், 'இராமபிரானுடைய திருமேனியுறுப் புக்கள் ஒன்றுக்கொன்று பொருந்தியிருக்கும் ஸௌந் தர்யத்தையும் திருமேனிகாந்தியாகிய லாவண்யத்தையும் மென்மையையும் பொருத்தமான தவவேடத்தையும் வனவாசிகளான ரிஷிகள் வியப்படைந்த மனமுடை யவர்களாய்க் கண்டனர்' (1-12) என்றும் இராமனது திவ்யமங்களத்திருமேனி கூறப்பட்டது. திருமேனியிருந் தாலன்றி முற்கூறிய திருவடிகளுள்ளமை பொருந் தாமையால், கண்ணுக்கிலக்காதலென்னும் ஸௌல ப்யத்தை விளக்கும் திருமேனியும் காட்டப்பட்டதென்று கொள்க.

'வர்ணாச்ரமதருமங்களைக் காப்பவரும் இந்த முனிவர்களுக்குச் சரணமடையத்தக்கவரும் மிக்க புகழுடையவருமான நீர் தேவதைபோல் பூஜிக்கத்தக்கவர், அரசனென்று கௌரவிக்கத்தக்கவர், துஷ்டர்களைத் தண்டிப்பவர், பகவானுடைய அவதாரமாகையால் மிகப்பெரியவருமாவீர்' (1-17) என்றும், 'ஆகையால் சரணமடையத்தக்க உம்மை எங்களை ரக்ஷிப்பதற்காக வந்து கிட்டினோம். இராமபிரானே! அரக்கரால் துன்புறுத்தப்பட்ட எங்களை

*ரக்ஷிக்கக் கடவீர்' (6-19) என்றும் சரணமாகப் பற்றத்தக்க தன்மை இராமனிடம் கூறப்பட்டது. ஆக ஆரண்ய காண்டத்தினால் எல்லாவுலகோரும் சரணமாகப் பற்றத்தக்க பகவானுடைய திருவடியிணை குறிக்கப் பட்டதாயிற்று.*

## கிஷ்கிந்தாகாண்டம் - 'சரணம்' என்றதன் விவரணம்

*'தருமத்தில் நிலை நின்ற மனமுடையவனும் எல்லாவுலகோர்க்கும் தஞ்சமடையத்தக்கவனும் முன்பு அனைவர்க்கும் சரணமாக (தஞ்சமாக) இருந்தவனுமான அத்தகைய எனது அண்ணன் இராமன் இப்போது சுக்கிரீவனைத் தஞ்சமாக அடைந்தான்' (4-21) என்று லக்ஷ்மணன் அனுமானிடம் கூறிய வார்த்தையிலும், 'மகாபாக்யசாலியாய்க் ககுத்ஸ்தகுலத்திலுதித்த இராமனே, வாலியிடம் அஞ்சி நோவுபட்ட எனக்கு அபயமளிக்கக் கடவீர். நான் சோகத்தினால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர்க்கு நீரே கதி' (5-24) என்ற சுக்கிரீவனது வார்த்தையிலும், 'இராமன் நல்லவர் ஒதுங்கும் நிழல்மரமானவன், ஆபத்தடைந்தவர்களுக்கு உயர்ந்த கதி, துன்புற்றவர்க்கு அடையத்தக்கவன், புகழுக்கு ஒரே கொள்கலமானவன்' (15-19) என்று தாரை வாலியிடம் கூறிய வார்த்தையிலும் இராமன் தஞ்சமென்று பொருள்படும் சரணம் கதி என்ற சொற்களால் குறிக்கப்பட்டான்.*

*'தடந்தோளனே! மறைந்த செல்வமும் புகழும் நிலைநின்ற வானரராஜ்யமும் உனது திருவருளால் மீண்டும் என்னால் பெறப்பட்டன'(38-25) என்ற சுக்கிரீவனது பேச்சில் பகையைத் (வாலியை) தீர்த்து விருப்பத்தை நிறைவேற்றிய தன்மை இராமபிரானிடம்*

கூறப்பட்டது. இதுவன்றோ சரணம் கதி என்று முற்கூறிய சொற்களின் விளக்கம், ஆக, கிஷ்கிந்தாகாண்டத்தினால் சரணமென்னும் சொல் விவரிக்கப்பட்டதாயிற்று.

## ஸுந்தரகாண்டம் - 'ப்ரபத்யே' என்றதன் விவரணம்

ப்ரபத்யே என்பதற்கு - மனத்தினால் பற்றுகிறேனென்பது பொருள், 'இராமனுடையவும் புத்திசாலியான லக்ஷ்மணனுடையவும்- அடைந்தாரைக் காப்பதன்கண் உள்ள உறுதியான எண்ணத்தையே எதிர்பார்ப்பவளான சீதை மழைக்காலத்திலும் கலங்காத கங்கை போல் சிறிதும் கலங்காமலிருக்கிறாள்' (16-4) என்றும், 'இந்த சீதை இராமனைப் பிரிந்த துன்பமிகுதியினால் அருகிலுள்ள அரக்கிகளையும் பூவும் பழமும் நிறைந்த மரங்களையும் பார்ப்பதில்லை. இராமனிடமே நிலைபெற்ற மனமுடையவளாய் அவனையே இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருக்கிறாள்' (16-25) என்றுமுள்ள அனுமன்வார்த்தைகளால், இராமனையே தஞ்சமென்று மனத்தினால் பற்றுதலாகிய ப்ரபத்தி சீதையிடம் உள்ளதாகக் கூறப்பட்டது.

'புருஷோத்தமனே! காக்கையின் மேலும் பிரஹ்மாஸ்திரம் தொடுத்து, அடைந்தவரைக் காப்பதில் மிக்க ஊக்கத்தை வெளிப்படுத்திய நீர் என்னிடம் தயைபுரியவேண்டுகிறேன். பிறர்துன்பம் பொறாமை என்ற தயையே உயர்ந்த தருமமென்று உம்மிடமிருந்தே உபதேசமாகக் கேட்டிருக்கிறேனே. அதனைக் காரியத்தில் காட்ட வேண்டுகிறேன்' (38-40) என்றும், 'பகைவரைத் தபிக்கச் செய்யுமவர்களும் மிக்க ஆற்றல் படைத்தவர்களுமாக இருந்தும், ராமலக்ஷ்மணர்கள் என்னைக் கடாக்ஷிக்க வில்லையே. இதற்குக்

காரணம்-ஏதோ வொரு பெரிய பாவம் என்னிடமே இருக்கிறது. இதற்கு ஐயமேயில்லை' (38-48) என்றும், பிறரது படைகளை அழிக்கவல்ல காகுத்தர், இலங்கையை அம்புகளால் நிரப்பி அழித்து என்னை அழைத்துச் செல்வரானால் அதுவே அவருக்குத் தக்க பெருமையாகும்' (39-30) என்றும், 'இராமனுடைய உத்தரவு இல்லாமையாலும் பதிவிரதாதருமத்தைப் பரிபாலிக்க வேண்டுதலாலும், சாம்பலாக்கத்தக்க பத்துத் தலையனே! எனது கற்பென்னும் தீயினால் உன்னைச் சாம்பலாக்காமலிருக்கிறேன்'(22-20) என்றும், 'அனுமானே! புகழ்படைத்த இராமபிரான் நான் உயிரோடிருக்கும்போதே எங்ஙனம் இராவணனை யழித்து என்னைக் கொண்டாடுவரோ அங்ஙனம் நீ அவரிடம் விண்ணப்பிக்கவேணும், வாயினால் புண்யத்தைத் தேடிக்கொள்' (39-10) என்றுமுள்ள இவ்விடங்களில், முற்கூறிய - மனத்தினால் பற்றும் பற்றான ப்ரபத்தியானது - இராமனே காக்க வேண்டு மென்ற பிரார்த்தனையை = மனதிலுள்ள விருப்பத்தை உள்ளடக்கியுள்ளமை கூறப்பட்டது.

'அனுமானே பரந்த மனம்படைத்த கோசலைத் தேவி தனக்காகவல்லாமல் உலகங்களைக் காப்பதற்காகவே எந்த இராமபிரானை ஈன்றனளோ அப்பெருமானை- அந்த உலகத்தில் ஒருத்தியான என்னைக் காத்தற்பொருட்டு க்ஷேமம் விசாரிக்கக் கடவாய். நான் அவரை வணங்கியதாகச் சொல்லி நீ அவரை வணங்கக் கடவாய்' (38-56) என்று முற்கூறிய மாநஸிகமான விருப்பத்தை வாயினால் தெரிவித்தமையும், 'ஆசையுள்ள நான் ஆண்புலியான அவ்விராமனைத் துன்பத்தால் இளைத்த எனது அவயவங்களால் தொட்டு அனுபவிப்பேனாம்படி

நீ தயை செய்ய வேண்டும் = அனுமானே அவரிடம் சொல்லிக் காரியத்தை நிறைவேற்றவேண்டும்' (40-3) என்று முற்கூறிய விருப்பத்தைச் சரீரத்தால் (இளைத்த உடம்பைக் கொண்டு) தெரிவித்தமையும் காண்க. ப்ரார்த்தனை (=வேண்டுகோள்-விருப்பம்.) மானஸிக மாகவேயன்றி வாசிகமாகவும் காயிகமாகவும் வேண்டுமல்லவா? இல்லையேல் அதிகார பூர்த்தி இல்லையன்றோ? ஆக ஸுந்தரகாண்டத்தினால் 'ப்ரபத்யே என்றதன் பொருளாகிய -மனத்தினால் பகவானே தஞ்சமென்று பற்றும் பற்று மூன்றுவிதமான பிரார்த்தனையை உள்ளடக்கிய நம்பிக்கையால் வளர்ந்தமை சொல்லப்பட்டது.

இதுவரையில், ஸ்ரீராமாயணத்திலுள்ள ஐந்து காண்டங்களில் த்வயமந்த்ரத்தின் பூர்வகண்டத்தைச் சேர்ந்த- ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே' என்ற ஐந்து பதங்களும் விவரிக்கப்பட்டன. இனி 'ஸ்ரீமதே நாராயணாய நம', என்ற உத்தரகண்டத்திலுள்ள பதங்கள் மேலுள்ள இரண்டு காண்டங்களில் விவரிக்கப்படு மாற்றைக் காண்போம்.

## யுத்தகாண்டம்- ஸ்ரீமதே நாராயணாய என்பதன் விவரணம்

'இராமபிரான் -நீண்டு திரண்ட தோள்களும் பரந்த திருமார்பும் கொண்டவன், ஸ்ரீமான், சூரன், சிறந்த வில்லாளி, பொருத்தமான உறுப்புக்களின் அழகோடு கூடியவன், தருமசிந்தனை யுள்ளவனென்று உலகில் பிரசித்திபெற்றவன்' என்று ஸ்ரீமத்பதம் அனுவதிக்கப் பட்டு, 'மகாபலசாலியாய் ஸுகமாக இருக்கத்தக்க இராமபிரான் தனக்குத் தெரிந்த ஸீதையின் கற்பைப்பற்றிச்

சொல்லி, மகாபலிஷ்டர்களான ப்ரஹ்மாதி தேவர்கள் தான் செய்த வீரசரிதத்தைக் கூறிப் புகழா நிற்க, தன்மனத்துக்கு இனிய ஸீதையுடன் சேர்ந்து ஸுகத்தை அனுபவித்தான்' (121-23) என்பதனால் தொண்டர் களுக்குத் தொண்டினை அருளுவதற்காக இராமபிரானும் சீதைப் பிராட்டியும் சேர்ந்த சேர்த்தி கூறப்பட்டது. இச்சேர்த்தி முன்பு அனுவதிக்கப்பட்ட ஸ்ரீமத்பதத்தின் விவரணமாகும். பிராட்டியும் பெருமாளும் சேர்ந்திருக்கும் போது செய்யும் கைங்கர்யமே சுவையைத் தருமாகையால் அவர்களின் இடைவிடாத சேர்த்தி அவசியமாகக் கூறப்பட வேண்டியதே என்க.

'கணவனையே தெய்வமாகக் கருதுமவளும் மிகவழகிய திருமுகமுடையவளுமான ஸீதாதேவி (ராவணவதமான பிறகு) வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் கணவனது தெளிந்தழகிய திருமுகத்தைக் கண்டாள்' (117-35) என்றும், 'பின்பு ஸீதை மனவருத்தத்தைப் போக்குவதும் வெகுநாட்களாகக் காணப்படாததும் அப்போது தோன்றிய பூர்ணசந்திரன்போல் அழகியதுமான தன்கணவனது திருமுகத்தைக் கண்டு, அப்போது மறுவற்ற சந்திரன் போல் அழகிய திருமுகத்தையுடைய வளானாள்' (117-36) என்றும் இராமபிரானது உயர்வற உயர்ந்த அழகு கூறப்பட்டது. பெருமானது அழகை அனுபவித்து அதனால் உண்டாகும் பிரீதியே கைங்கர்யம் செய்யும்படி தூண்டுமாகையால், அனுபவத்திற்கு இலக்கான அழகு இங்குக் கூறப்பட்டது.

'தேவரீர் ஸ்ரீமானான நாராயணப் பெருமாள், சக்ராயுதந்தரித்தவர், எங்கும் பரந்தவர், ஒருகொம்புடைய வராகாவதாரமெடுத்தவர், முன்பிருந்த மதுகைடபர்கள்

இனி வரப்போகும் சிசுபாலாதிகள் ஆகிய பகைவரை வெல்லுமவர்' (120- 13) என்றும், 'ஸீதை மகாலக்ஷ்மி, தேவரீர் விஷ்ணு, இனி க்ருஷ்ணாவதாரம் செய்து மக்களைக் காக்கப் போகிறீர், இப்போது இராவணனை அழிப்பதற்காக மனிதவுடலில் புகுந்துள்ளீர்' (120-27) என்றுமுள்ள பிரமன் வார்த்தையில், த்வயத்தின் உத்தரகண்டத்திலுள்ள நாராயணபதம் இராமனிடத்தில் ப்ரயோகிக்கப்பட்டது. அழகிய திருமேனியுடைமை நாராயணபதத்தின் பொருளாகையால் திருமேனியழகை முன்பு கூறிப் பின்பு நாராயணபதம் குறிக்கப்பட்டது.

'ஸீதையை அலக்ஷியம் செய்யாதீர் என்று உலகங்காக்கும் பிரம்மாதி தேவர்களால் வேண்டப்பட்ட மூவுலகுக்கும் ஸ்வாமியாய் தார்மிகர்களில் உயர்ந்த இராமன் அத்தேவர்பெருமக்களைக் குறித்துக் கூறினன்' (120-9) என்றதனால் எல்லோருக்கும் ஸ்வாமியாக - தலைவனாக இருத்தல் கூறப்பட்டது. எல்லோர்க்கும் தலைவனென்பது நாராயண பதத்தின் பொருள்களில் ஒன்றாகும். மேலே 'ஆய' என்ற நான்காம் வேற்றுமையினால் சொல்லப்படுகின்ற கைங்கர்யம் தலைவனானவனுக்கே செய்ய வேண்டியிருப்பதனால் இங்கு நாராயண பதத்திற்கு ஸர்வஸ்வாமி என்ற பொருளைக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.

'மேடுபள்ளங்களாக உள்ள இடங்களைச் சரிசமமாக்குங்கள். இந்த நந்திக்ராமத்திலிருந்து அயோத்திவரையில் பூமிமுழுதும் பனிபோல் குளிர்ந்த நீரால் நனையுங்கள்' என்று பரதன் கூறியபடி சத்ருக்நன் வேலையாட்களுக்கு உத்தரவிட்டான்' (130-6) என்றும், இராமன் காட்டிலிருந்து திரும்பிய பின்பு பெரியவரும் நன்முயற்சியுடையவருமான வசிஷ்ட முனிவர்

*அந்தணர்களுடன் சேர்ந்து ரத்நமயமான பீடத்தில் இராமபிரானை ஸீதாதேவியோடு எழுந்தருளப் பண்ணினர்'(131- 59) என்றும், 'வசிஷ்டர் வாமதேவர் முதலான முனிவர்கள் ஆண்புலியான இராமபிரானுக்கு, தெளிந்து மணங்கமழும் மந்திர நீரைச் சேர்த்து அபிஷேகம் செய்தனர்' (131-61) என்றும், 'சத்ருக்நன் வெண்மைகலந்த மஞ்சள் நிறமுள்ள குடையை அவ்விராமபிரானுக்குப் பிடித்தான். வெளுத்தசாமரத்தை ஸுக்ரீவன் வீசினான்' (131-68) என்றுமுள்ள இடங்களில், முறையே நிலத்தைச் செப்பனிட்டு நீர் தெளித்தல், பீடத்தில் இராமனை எழுந்தருளச் செய்தல், திருமஞ்சனம் செய்தல், குடைபிடித்தல், சாமரம் வீசுதல் ஆகிய தொண்டுகள் கூறப்பட்டன. இத்தொண்டு நாராயணபதத்தின் மேல் உள்ள 'ஆய' என்னும் சதுர்த்தீ விபக்தியின் (நான்காம் வேற்றுமையின்) பொருளாகும். ஆக யுத்தகாண்டத்தினால் 'ஸ்ரீமதே நாராயணாய' என்றதன் விவரணம் செய்யப்பட்டதாயிற்று.*

## உத்தரகாண்டம் -'நம:' என்றதன் விவரணம்

*நம: என்பதற்கு 'எனக்காக அன்று; எம்பெருமானுக்காகவே' என்று பொருள். இதற்கு முன்பு 'ஆய' என்பதனால் கூறப்பட்ட பகவத் கைங்கர்யம் பகவானுடைய உகப்புக்காகவே செய்யப்படுகிறது; என்னுடைய உகப்புக்காகச் செய்யப்படவில்லை என்பது நம: பதத்தின் தேர்ந்த கருத்தாகும்.*

*'மஹாராஜனான இராமபிரானே! உமக்கு அடியேனிடம் அன்பும் அருளும் இருக்குமானால் ஆராய்ச்சி செய்யாமல் அடியேனை விட்டொழித்து விடுவீராக. உம்முடைய பிரதிஜ்ஞையைப் பரிபாலிப்*

பீராக' (106-4) என்று - இராமபிரானுடைய உத்தரவை மீறிய தன்னை, அவன் முதலில் விரும்பியபடி விட்டொழிக்குமாறு கூறி, அவனுடைய விருப்பத்தையே பின்பற்றித் தன்னை மாய்த்துக்கொண்டு, கைங்கர்யம் தனது உகப்புக்காக அன்றென்பதை அனுஷ்டித்துக் காட்டிய லக்ஷ்மணனுடைய அனுஷ்டானத்தாலும், 'ஸௌமித்ராதநயரே, எனது வயிற்றிலுள்ள ரகுகுலஸந்தாநமானது என் கணவரது குலத்தில் ஸம்பந்தத்தை இழக்கலாகாதென்று நினைத்துத்தான் கங்கையின் வெள்ளத்தில் மூழ்கி இப்போதே உயிரை விடாமலிருக்கிறேன்' (48-8) என்று - இராமபிரானைப் பிரிந்த ஸீதாதேவி அப்பெருமான் தனக்குப் பிள்ளைப்பேற்றை விரும்பியிருந்தபடியினால் அவ்விருப்பத்தையே பின்சென்று, இறந்துபட்டால் தனக்கு உண்டாகும் ஸௌகத்தை வேண்டாதே கங்கையில்விழுந்து தன்னை மாய்த்துக் கொள்ளாமலிருப்பதாக லக்ஷ்மணனிடம் தெரிவித்து, அப்படியே அனுஷ்டித்துக் காட்டிய அப்பிராட்டியின் அனுஷ்டானத்தாலும், அடியார்கள் பகவத் கைங்கர்யத்தை தம்முகப்புக்காகச் செய்தல் குற்றமென்பதும் பகவானுடைய உகப்புக்காவே செய்தல் குற்றமாகாதென்பதும் காட்டப்பட்டு அதன் வாயிலாக, 'கைங்கர்யத்தில் குற்றங்கழிந்த நிலைமை' என்னும்- நம: பதத்தின் பொருள் விளக்கப்பட்டதாயிற்று.

ஆக ஸ்ரீராமாயணத்திலுள்ள யுத்தகாண்டம் உத்தரகாண்டம் ஆகிய இரண்டாலும், த்வயமந்தரத்தின் உத்தரகண்டமாகிய ஸ்ரீமதே நாராயணாய நம: என்பது விவரிக்கப்பட்ட தென்க.

இங்ஙனம் பெரியதிருமலைநம்பிகள் ஸ்ரீராமாயணத்தை த்வயமந்த்ரத்தின் விவரணரூபமாக எம்பெரு

*மானார்க்கு அருளிச்செய்த வகையை, பிள்ளைலோகார்ய ஜீயர்ஸ்வாமி அருளிய ராமாநுஜார்யதிவ்யசரிதை என்னும் நூல் கூறியபடி அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டியவரை விண்ணப்பித்திருக்கிறேன்.*

*சக்ரவர்த்தி திருமகனார் திருவடிகளே சரணம்.*
*திருமலைநம்பிகள் திருவடிகளே சரணம்.*
*எம்பெருமானார் திருவடிகளே சரணம்.*

# 8

# திருக்கோட்டியூர் நம்பிகள் இராமானுசருக்கு உபதேசித்தது திருமந்த்ரார்த்தமா? சரமச்லோகார்த்தமா?

பேரருளாளப் பெருமாள் திருக்கச்சிநம்பிகள் மூலமாக நியமித்தருளியபடி இராமானுசர் பெரியநம்பிகள் திருவடிகளில் ஆச்ரயிப்பதற்காகக் கோயிலிலிருந்து புறப்பட்டு வழியில் மதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமாளைச் சேவிப்பதற்காக எழுந்தருள, இராமானுசரை தர்சனநிர்வாஹத்திற்காகக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதற்குக் கோயிலிலிருந்து புறப்பட்டு வருகிற பெரிய நம்பிகள் அங்கே எழுந்தருளியிருக்கக் கண்டு தெண்டன் ஸமர்ப்பித்து அடியேனுக்கு இப்போதே தேவரீர் ஹிதோபதேசம் செய்து ரக்ஷித்தருள வேணுமென்று விண்ணப்பிக்க, பெரியநம்பிகள் அங்குள்ள திருமகிழமரத்தினடியில் இராமானுசருக்குத் திருவிலச்சினை ப்ரஸாதித்து, ஆளவந்தார் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு குருபரம்பரை முன்னாக மந்த்ரரத்னமான த்வயத்தை உபதேசித்தருளினர் என்றும்,

பின்பு திருவரங்கப் பெருமாளரையர் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளிப் பேரருளாளப் பெருமாளை - ஆழ்வார்களருளிய திவ்யஸூக்திகளை இயலும் இசையுமாக நாடகத்துடனே பாடி உகப்பித்து இராமானுசரைக் கேட்டுப்பெற்றுக் கோயிலுக்கு அழைத்துச்சென்ற பிறகு ஒருகால் இராமானுசர்

பெரியநம்பிகள் திருமாளிகைக்கு எழுந்தருளி அவர் திருவடிகளில் தெண்டனிட்டு, 'ஆளவந்தார் ஸ்ரீ பாதத்தில் ஸேவியாத இழவுதீரத் தேவரீர் திருவடிகளில் ஆச்ரயிக்கப் பெற்றேன். தேவரீர் திருவுள்ளத்திலுண்டான அர்த்தவிசேஷங்களை அடியேனுக்கு அருளிச்செய்ய வேணும்' என்று விண்ணப்பிக்க, பெரிய நம்பிகள் அப்படியே ஆகிறது என்று மந்த்ரரத்னமான த்வயத்தின் அர்த்தத்தைப் பூர்ணமாக அருளிச்செய்து 'இன்னமும் சில அர்த்தவிசேஷங்கள் உண்டு. அவற்றை ஆளவந்தாருடைய அபிமானத்திற்கு இலக்கான திருகோட்டியூர்நம்பி திருவடிகளிலே சென்று கேளும்' என்று அருளிச் செய்தார் என்றும்,

அதற்குப்பின்பு இராமானுசர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளித் திருக்கோட்டியூர் நம்பிகள் ஸ்ரீபாதத்திலே சென்று ஸாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணி தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களையெல்லாம் அருளிச்செய்ய வேணும் என்றுவிண்ணப்பிக்க, நம்பிகள் இவருடைய மனவுறுதியை அறிய வேணுமென்று 'ஆருக்கு என்சொல்லுகேன்'? என்று முகங்கொடாமல் எழுந்தருளியிருக்கக் கண்டு மீண்டும் கோயிலுக்கு எழுந்தருளினார். பின்பு ஒருகால் திருநாள்ஸேவிப் பதற்காகக் கோயிலுக்கு எழுந்தருளின திருக்கோட்டியூர் நம்பிகளைப் பெரிய பெருமாள் 'நம்மிராமானுசனுக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசியும்' என்று அர்ச்சகர் மூலமாக அருளிச்செய்ய, நம்பிகள் இராமானுசரை 'ஊரேற வாரும்' என்று கூறித் தம்மூர்க்கு எழுந்தருள, அதன்படியே திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளின இராமானுசரை நம்பிகள் 'இற்றைக்குப் போய் வாரும்'

என்று அருளிச் செய்ய, உடையவர் மீண்டும் கோயிலுக்கே எழுந்தருளினார் என்றும்,

இப்படிப் பதினெட்டுத் தடவைகள் எழுந்தருளி உடையவர் ஸேவித்துநின்ற வளவிலும் நம்பிகள் இவருடைய திடமான எண்ணத்தைப் பரீக்ஷை செய்வதற்காக ஒன்றுமே அருளிச்செய்யாமலிருக்க, உடையவர் பெரியவருத்தத்துடன் கோயிலுக்கே எழுந்தருளினார் என்றும்,

பின்பு ஒருகால் திருக்கோட்டியூர் நம்பிகள் சிஷ்யரான ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் கோயிலுக்கே வந்து நம்பெருமாளை ஸேவித்துவிட்டு உடையவரைத் தண்டனிட்டு நிற்க, அவரிடம் உடையவர் தமது துக்கமெல்லாம் தோன்றும்படி-பூந்துழாய் முடியார்க்குத் தகவல்ல, பொன்னாழிக்கையாருக்குத் தகவல்ல என்று- நம்பிகள் தமக்கு உபபேசியாமலிருப்பது தகுதியன்று என்பதனை விண்ணப்பிக்க, அவர் சென்று நம்பிகளிடம் இதனைத் தெரிவிக்க, நம்பிகளும் 'இத்தனை மனவருத்தம் உண்டாவதே!' என்று உகந்தருளி 'தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவரே வருவது' என்று அருளிச்செய்து அவரையே கோயிலுக்குஅனுப்பியருள, அவர் சென்று உடையவரிடம் இதை அறிவிக்க, உடையவர் மிகவும் உகந்து ஆழ்வானையும் ஆண்டானையும் கூட்டிக்கொண்டு விரைந்து சென்று திருக்கோட்டியூரில் நம்பிகள் திருவடிகளில் தண்டன்ஸமர்ப்பித்து, ஆண்டானைத் தண்டாகவும் ஆழ்வானை ஜலபவித்ரமாகவும் தாம் எண்ணியுள்ளதனை விண்ணப்பித்து நிற்க, நம்பிகள் 'ஆகில் இவ்வர்த்தத்தை இவ்விருவருக்குத் தவிர மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்' என்று நியமித்துப் பரமக்ருபையாலே

நலந்தரும் சொல்லான பெரிய திருமந்த்ரத்தின் அர்த்தத்தை உபதேசித்தருளினார் என்றும்,

பின்பு அவ்வர்த்தத்தை அதன் மற்றைநாள் அவ்வூரிலெம்பெருமானாகிய தெற்காழ்வார் திரு வோலக்கத்தில் அனேகம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அருளிச் செய்த உடையவரை 'என் நியமனத்தை மீறிய உமக்குப் பலமேது' என்று கேட்க, 'நரகமே' என்று அவர் பதிலளிக்க, 'தெரிந்திருந்தும் சொல்லுவானேன்'? என்று நம்பிகள் வினவ, உடையவர் 'அடியேன் ஒருவனே யன்றோ நரகம் புகுவது? தேவரீர்திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு அடியேன் சொல்லுகையாலே இவ்வாத்மவர்க்கங்கள் அனைத்தும் உஜ்ஜீவிக்குமென்று சொன்னேன்' என்று விண்ணப்பிக்க, 'தம்மை அழியமாறியும் பிறர்நன்மையையே விரும்பும் இந்நற்பண்பு நமக்குக் கூடிற்றில்லையே' என்று உகந்து எம்பெருமானாரே வாரும்' என்று உடையவரை எடுத்தணைத்துக்கொண்டு 'அவரோ நீர்' (எம்பெருமான் தானேயோ நீர்) என்று அருளிச்செய்தார் என்றும்,

பின்பு அவ்வுகப்பின் மிகுதியாலே 'வாரீர் எம்பெருமானாரே, இன்னும் ஒரு சரமரஹஸ்யார்த்த விசேஷம் சொல்லுவதாக இருக்கிறோம். இப்போது போய் ஏகாந்தமாக நீர் ஒருவரே வாரும்' என்று அருளிச் செய்தனுப்ப, பின்பு எம்பெருமானார் ஒருவராகவே திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளித் தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, நம்பிகள் இவரை ஏகாந்தமாக மேல்தளத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று கதவைத் தாளிட்டு 'ஒருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்' என்று நியமித்துப் பரமரஹஸ்யமான சரமச்லோகத்தையும் அத்தால் சொல்லப்படுகிற - கர்ம ஜ்ஞாநாதிகளான பிற

உபாயங்களை விட்டுப் பற்ற வேண்டிய ஸித்தோபாயமான எம்பெருமானுக்கு உண்டான தனிச் சிறப்பினையும் அருளிச் செய்தார் என்றும் பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவ க்ரந்தத்தில் காண்கிறது.

இந்நூலின் படி - பெரியநம்பிகள் த்வயார்த்தத்தை உடையவருக்கு அருளிச் செய்தாரென்பதும், திருக்கோட்டியூர் நம்பிகள் திருமந்த்ரார்த்தத்தையும் சரமச்லோகார்த்தத்தையும் அவருக்கு அருளிச் செய்தாரென்பதும் அறியப்படுகிறது - ஆகையால் இக்கட்டுரையின் தலைப்பாய் அமைந்த கேள்விக்கு விடையிறுக்கப்பட்டதென்க. ஆகிலும் இக்கேள்வி, திருக்கோட்டியூர் நம்பிகள் உடையவரைப் பதினெட்டுப் பரியாயம் நடக்கவைத்துத் துவளப் பண்ணியது திருமந்த்ரார்த்தத்தை உபதேசிப்பதற்காகவா அல்லது சரமச்லோகார்த்தத்தை உபதேசிப்பதற்காகவா? என்ற கேள்வி யையும், அவர் - திருமந்த்ரார்த்தத்தை உடையவர் வெளியிட்டதற்கு உகந்து எம்பெருமானாரென்று கொண்டாடினாரா அல்லது சரமச்லோகார்த்தத்தை வெளியிட்டதற்கு உகந்து அங்ஙனம் கொண்டினாரா? என்ற கேள்வியையும் தனக்குள்ளே அடக்கிவைத் திருக்கிறதென்று கருதி அவற்றிற்கும் விடைகளை இனி விண்ணப்பிக்கிறேன்.

கீழ்க்கண்ட குருபரம்பராப்ரபாவக்ரந்தத்தில் நம்பிகள் உடையவருக்குப் பத்தொன்பதாம் தடவையில் திருமந்த்ரார்த்தோபதேசம் செய்ததாகக் காண்பதனால் திருமந்த்ரத்தின் பொருளை உபதேசிப்பதற்காகவே அவர் உடையவரைப் பதினெட்டுத் தடவை நடக்கவைத் தாரென்று மேலெழ நோக்கில் தோன்றும். ஆழ்ந்து

நோக்கினால் சரமச்லோகத்தின் பொருளை உபதேசிப்பதற்காகவே என்பது போதரும்.

'குஹ்யாநாம் குஹ்யம் உத்தமம்... மூலமந்த்ர: ஸநாதந:' (நாரதீய அஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யை) என்கிறபடி ரஹஸ்யங்களில் உத்தமமாகச் சொல்லப்பட்ட திருமந்த்ரத்தின் அர்த்தத்தை விட 'ஸர்வகுஹ்யதமம்' (கீதை 18-64) என்றபடி எல்லா ரஹஸ்யங்களிலும் உத்தமமாகப் புகழப்பட்ட சரமச்லோகத்தின் பொருள் உயர்ந்ததாகையால் நம்பிகள் உடையவரைத் தனித்து வரும்படி நியமிக்க நினைத்துத்தான் 'தண்டும் பவித்ரமுமாகத் தாமொருவரே வருவது' என்று சொல்லியனுப்பினார். உடையவரோ வெனில் ஆழ்வானிடத்திலும் ஆண்டானிடத்திலும் தமக்குள்ள அன்பின் மிகுதியினால் அவர்களையும் அழைத்துச் சென்று ஆண்டானைத் திரிதண்டமாகவும் ஆழ்வானை ஜலபவித்ரமாகவும் நம்பிகள் ஸந்நிதியில் விண்ணப்பித்தார். நம்பிகளும் அதற்கு ஒன்றும் வாய்திறவாமல், ஸர்வகுஹ்யதமமல்லாத திருமந்த்ரத்தின் பொருளை உபதேசித்துவிட்டு ஸர்வகுஹ்யதமமான சரமச்லோகத்தின் பொருளை உபதேசியாமல், தனித்து வாராததனால் தமக்குண்டான அத்ருப்தியைக் காரியத்தின் மூலமாகக் காட்டிவிட்டு, சரமச்லோகார்த்தத்தை உபதேசிப்பதற்காக, இங்ஙனம் இருவரையும் அழைத்து வாராமல் தனியேவரும்படிநியமித்து, பின்பு அதன்படியே வந்தருளிய உடையவருக்கு ஸர்வகுஹ்யதமமான சரமச்லோகத்தின் பொருளை உபதேசித்தருளினார். ஆகவே திருக்கோட்டியூர் நம்பிகளின் திருவுள்ளத்தைக் கொண்டு ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தை ஆழ்ந்து நோக்கினால்

பதினெட்டுத் தடவைகள் உடையவரை நம்பிகள் நடத்தியது சரமச்லோகார்த்தத்தை உபதேசிப்பதற்காகவே என்று தோன்றக் குறையில்லை.

அதனால்தான், விசதவாக்சிகாமணிகளான - பொய் யிலாத மணவாளமாமுனிகள் முமுக்ஷுப்படி சரமச் லோகப்ரகரண - அவதாரிகையில் 'இதின் அர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டுப் பரியாயம் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று; நம்பிதாமும் இதினர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரியில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்ய -ஆதர பரீக்ஷார்த்தமாக (இவரைப்) பலகால் நடந்து துவளப்பண்ணிச் சூளுறவு கொண்டு மாஸோபவாஸம் கொண்டு அருமைப் படுத்தி அருளிச் செய்தருளிற்று' என்று அருளிச் செய்தாரென்று கொள்ள வேணும்.

இவ்விடத்திற்கு - அரும்பதவுரை அருளிய எம்பாவையங்கார்ஸ்வாமி "பதினெட்டுப் பரியாயம் திருக்கோட்டியூர் நம்பி (உடையவரை) நடத்தினது பதினெட்டாமத்யாயத்தின் அர்த்தம் ப்ரஸாதிக்கைக்காக என்று கருத்து. ஆகையாலே 'இதினர்த்தம் கேட்கைக்காக விறே எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று என்று அருளிச் செய்தது" என்று விவரணம் செய்தருளியிருப்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

பல சொல்லி என்னே பயன்? மாமுனிகளுக்கும் கௌரவ்யரான நாயனாராச்சான்பிள்ளை தாமருளிச் செய்த சரமோபாய நிர்ணயத்தில் "திருக்கோட்டியூரிலே உடையவர் எழுந்தருளி நம்பிபக்கலிலே சரமச்லோகம் கேட்கிறபோது தஞ்சமான (அதன்) அர்த்த

விசேஷமெல்லாம் அருளிச் செய்து - தேவரீரைப் பலகாலும் துவளப் பண்ணினத்தை நெஞ்சிலே கொள்ளாதே கிடீர். அர்த்தத்தின் சீர்மையை வெளியிடவேண்டிச் செய்தோமித்தனை'' என்றருளிச் செய்ததொன்றே, சரமச்லோகார்த்தத்தை அருளிச் செய்வதற்காகத்தான் நம்பிகள் உடையவரைப் பதினெட்டுத் தடவைகள் நடத்தினார் என்பதற்குத் தக்க சான்றாகும்.

மேலும், மணக்கால் நம்பிகள் ஆளவந்தார்க்குப் பலநாட்கள் நடந்து பச்சையிட்டு வசீகரித்துக் கீதையின் செம்மைப்பொருள் தெரியும்படி அருளிச் செய்து, மெய்ம்மைப் பெருவார்த்தையான சரமச்லோகத்தின் அர்த்தத்தை உபதேசித்தருளினாரென்பது குருபரம் பராப்ரபாவத்தில் காண்கையாலும், அத்தகைய சரமச்லோகார்த்தத்தை ஆளவந்தார் தம்மபிமானாந்தர் பூதரான திருக்கோட்டியூர் நம்பிக்கு மிகவுயர்ந்ததென்று நினைத்து உபதேசித்துவிட்டு, அதனை உடையவருக்கு உபதேசிக்கும்படி நியமித்தாரென்பது சுத்தஸத்வம் தொட்டையாசார்யஸ்வாமியின் அரும்பதவுரையால் அறியப்படுதலாலும், சரமச்லோகார்த்தமே ஸர்வகுஹ்ய தமமாகையாலே அதன் பெருமையை வெளியிடு வதற்காகவே உடையவரைப் பதினெட்டுத்தடவைகள் நடத்தியிருக்கலாமென்று தோன்றுகிறது. ஆக இக்கட்டுரையின் தலைப்பான கேள்விக்குள்ளே பொதிந்துள்ள கேள்விகள் இரண்டனுள் முதலாவதற்கு விடையளிக்கப் பட்டதாயிற்று. இனி இரண்டாவதனைப் பற்றிச் சிறிது காண்போம்.

முற்காட்டிய குருபரம்பராப்ரபாவத்தில், உடையவர் திருமந்த்ரார்த்தத்தை அனைவர்க்கும் வெளியிட்ட பரம

கருணையைப் பாராட்டித் திருக்கோட்டியூர் நம்பிகள் அவருக்கு எம்பெருமானாரென்று திருநாமம் சாத்தினாரென்று காண்கிறது.

இதற்கு நேர்முரணாக, முமுக்ஷுப்படி சரமச்லோக ப்ரகரணத்தின் அவதாரிகையில் 'அதிகாரி தௌர்லப் யத்தாலும் (அதிகாரிகள் கிடையாமையாலும்) அர்த்த கௌரவத்தாலும் (இதன் பொருளுக்குள்ள பெருமை யாலும்) இத்தை வெளியிடாதே மறைத்துக் கொண்டு போந்தார்கள் எம்பெருமானார்க்கு முன்புள்ளார். ஸம்ஸாரிகள் துர்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மையைப் பாராதே (ஸம்ஸாரிகளின்) அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்' என்று மணவாளமாமுனிகள் அருளியதற்கு விவரணம் அருளிச்செய்யும் சுத்தஸத்த்வம் தொட்டையாசார்ய ஸ்வாமி 'எம்பெருமானார் வெளியிட்டருளினார்' என்றருளிச் செய்யாமல் 'வெளியிட்டருளினார் எம்பெருமானார்' என்றருளிச் செய்தது, இச்ச்லோகார்த் தத்தை வெளியிட்டருளின வனந்தரம் திருக்கோட்டியூர் நம்பி இவருடைய பரஸம்ருத்திக்கு (பிறரது உய்வை நோக்கும் கருணைக்கு) உகந்து எம்பெருமானாரென்று திருநாமம் சாத்துகையாலே - என்று மணவாளமா முனிகளின் திருவுள்ளக்கருத்தை யறிந்து அருளிச் செய்திருப்பதனால், சரமச்லோகார்த்தத்தை வெளிப் படுத்திய பரமகருணையைப் பாராட்டித் திருக்கோட்டியூர் நம்பிகள் உடையவருக்கு எம்பெருமானாரென்று திருநாமம் சாத்தியதாகக் காண்கிறது. இங்ஙனம் இரண்டு கிரந்தங்களுக்கும் உள்ள முரண்பாட்டினைப் பரிஹரிக்கும் உபாயமென்னவெனில்,

சரித்திரநூலாகிய குருபரம்பராப்ரபாவத்தைக் காட்டிலும் ரஹஸ்யக்ரந்தவ்யாக்யான வரும்பதங்களுக்கு அதிகமான ப்ராமாண்யத்தை இசைவதென்கிற உபாயத்தைக் கொண்டுதான் பரிஹரிக்கவேண்டுமென்று தோன்றுகிறது. சரித்திரநூல்களில் அதிகபாட பேதங்கள் இடைச்செருகல்கள் நேருவது இயற்கையாகையாலும், இக்குருபரம்பராப்ரபாவத்தில் ஆசார்யஹ்ருதய வாக்யங்களும் வாதிகேஸரிஜீயர்ஸ்வாமியின் காரிகையும் வேதாந்ததேசிகனின் ச்லோகமொன்றும் காண்பதனால் இது பின்பழகிய பெருமாள் ஜீயருடையதா? அவர்சிஷ்யருடையதா என்று ஸந்தேஹம்கொள்ள இடமுள்ளமையை ஸ்ரீ.உ.வே. புத்தூர் வக்கீல் ஸ்வாமி இந்நூற்பதிப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ள படியினாலும் இந்நூலில் இவ்விஷயத்தில் சிறிது அஸ்வாரஸ்யம் பிறபட்டவர்களான ஏடெழுதுவோரால் நேர்ந்திருக்கலாமென்று கொள்ளக்குறையில்லை. பிள்ளைலோகாசார்யர் அருளிய ரஹஸ்யக்ரந்தங்கள் அவற்றிக்குப் பொய்யிலாத மாமுனிகள் இட்டருளிய வ்யாக்யானங்கள் அவற்றிற்கு மகான்கள் சேர்த்தருளிய அரும்பதங்கள் ஆகியவை அந்தந்த ரஹஸ்யங்களின் அர்த்தங்களையும் பெருமைகளையும் பூர்வர்கள் அருளிச் செய்தபடி விளக்குவதற்கென்றே அவதரித்துள்ள படியினாலும் சரமச்லோகப்ரகரணாவதாரிகையில் மணவாளமாமுனிகள் அருளிச்செய்ததற்கு அவர் திருவுள்ளமறிந்த தொட்டையாசார்யஸ்வாமி விவரண மருளிச் செய்ததை முன்னே காட்டியுள்ளபடியினாலும் அதற்கேற்ப ரஹஸ்யக்ரந்தங்களுக்குச் சரித்ர க்ரந்தங்களைவிட ப்ராமாண்யத்தை இசையவேணும். ரஹஸ்யக்ரந்தங்களோடு முரண்படாத இடங்களில்

சரித்திர நூல்களுக்கு ப்ராமாண்யத்தை இசையவேணும், ஆக ரஹஸ்யவ்யாக்யான - அரும்பதங்கள் கருதிய படியே- சரமச்லோகார்த்தத்தை வெளிப்படுத்திய கருணையை மிகவும் பாராட்டி நம்பிகள் உடையவரை எம்பெருமானாரென்று கொண்டாடினாரென்று கொள்வதே முறையென்று தோன்றுகையால் முற்காட்டிய இரண்டு கேள்விகளுக்குள் இரண்டாமதற்கும் விடை விண்ணப்பித்ததாயிற்று.

ஏவஞ்ச, திருக்கோட்டியூர் நம்பிகள் இராமானுசருக்குத் திருமந்த்ரார்த்தம் சரமச்லோகார்த்தம் ஆகிய இரண்டினையும் உபதேசித்தாரென்பதும், சரமச் லோகத்தை உபதேசிப்பதற்காக அதற்குள்ள உயர்ந்த அருமையை வெளிப்படுத்துவதற்கென்றே அவர் இவரைப் பதினெட்டுப் பரியாயங்கள் நடக்கவைத்துத் துவளப் பண்ணினாரென்பதும், ஸர்வகுஹ்யதமமான சரமச்லோகார்த்தத்தைத் தம்மையழிய மாறியும் பிறருடைய உஜ்ஜீவனமொன்றையே கருதும் இவரது பரமகருணையைக் கண்டு வியந்தே அவர் இவருக்கு எம்பெருமானாரென்று திருநாமம் சாத்தினாரென்பதும் தேறிற்று.

வேறுவழியில்லாமையால், அல்லது வேறுவழி தோன்றாமையால் குருபரம்பராப்ரபாவ க்ரந்தத்திற்கு சிறிது அஸ்வாரஸ்யம் சொல்ல நேர்ந்துவிட்டதற்குப் பெரியோர்கள் அடியேனை க்ஷமித்தருள வேண்டுமென்று வணங்கி வேண்டிக்கொண்டு விடைபெறுகிறேன்.

# 9

# உயிர்நிலை
## (அர்த்த பஞ்சகம்)

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தில் - அடையத்தக்க இறையின் நிலை, அவ்விறையை அடையும் உயிரின் நிலை, உயிர் இறையை அடைதற்கு உரிய நெறி, அடைந்து பெறப்படும் பயன், அடைய வொட்டாமல் தடை செய்யும் பகை ஆகிய இவ்வைந்தும் அர்த்த பஞ்சகம் எனப்படுகின்றன. இறை - திருமால் ; உயிர் - ஜீவாத்மா; நெறி- உயிர் தஞ்சமாகப் பற்றும் அத்திருமால் ; பயன் - உயிர் உடல் நீத்துப் பரமபதமடைந்து அத்திருமாலைக் கண்டு களிப்பதும் அக்களிப்புக்குப் போக்குவீடாகத் தொண்டு செய்வதும் ஆகும் ; பகையாவன - யான் என தென்னும் செருக்கும், அதனால் மதிகெட்டுச் செய்யும் பொல்லா வொழுக்கங்களும், அவற்றால் மேன்மேலும் இடையறாமல் தொடரும் பூதவுடல்களும் ஆம். இப்போது உயிரென்னும் ஜீவாத்மாவின் நிலையை - இயற்கைத் தன்மையைச் சிறிது காண்போம்.

உடல் பொறிகள் மனம் பிராணன் அறிவு ஆகிய இவற்றைவிட வேறுபட்டிருக்கையும், அறிவே வடிவாகையும், இன்பவுருவாகையும், அழிவில்லாமையும், அணுவாகையும், அறிவுடைமையும், திருமாலால் உட்புகுந்து அடக்கியாளப்படுகையும், தாங்கப்படுகையும், அத்திருமாலுக்கே அடிமையாகையும் பிறவும் ஜீவாத்மாவின் நிலைகளென்று, எல்லாமறிந்த பிள்ளை லோகாசாரியர் தாம் பணித்த தத்துவத் திரயம் என்னும் நூலில் அருளிச் செய்துள்ளார். இவற்றை முறையே ஈண்டு மூதலிப்போம்.

ஜீவாத்மா 'நான் ' என்று தோற்றுகையாலும், உடல் பொறி மனம் முதலியவை என்னுடைய உடல் எனது பொறி எனது மனம் என்று- 'நான்' எனப்படும் ஆத்மாவைவிட வேறாகத் தோற்றுகையாலும். 'இது உடல், இதுகண்' என்று தோற்றுவதன்றி 'நான்' என்று தோற்றாமையாலும், விழிப்பு நிலையில் 'நான் பருத்தேன்' 'நான் இளைத்தேன்' என்று சில சமயங்களில் பருப்புக்கும் இளைப்புக்கும் இலக்கான உடலே 'நான்' என்று தோற்றினாலும், சுழுத்தி (ஸுஷுப்தி) என்னும் அயர்ந்து தூங்கும் நிலையில் அப்படி உடல் தோற்றாமையாலும், அந்த சுழுத்தி நிலையிலும் ஆத்மா 'நான்' என்று தோற்றுகையாலும், எல்லா நிலைகளிலும் உடல் முதலியவற்றைவிட வேறுபட்டவனாய்க் கொண்டு ஆத்மா உளன் என்று கொள்ளவேணும். ''உறங்குவதற்கு முன்பு இவற்றையெல்லாமறிந்திருந்த நான் உறங்கும் போது என்னுடம்பையுங்கூட அறிந்திலேன்'' என்று விழித்த பின்பு நினைக்கையாலே, உறங்கும் போது அறியப்படாத உடல் முதலியவற்றைவிட வேறுபட்டு, அந்நிலையில் தனக்குத்தான் தோற்றியிருந்த ஆத்மாவின் உண்மை புலனாகும்.

பொறிகளில்-கண்ணையோ செவியையோ ஆத்மாவாக இசைந்தால் நடுவில் கண்ணையோ காதையோ இழந்த ஒருவன் ''முன்பெல்லாம் எல்லாவற்றையும் கண்டு கொண்டிருந்த நான் இப்போது எதையும் காண்கின்றிலேன் '', ''எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த நான் இப்போது ஒன்றையும் கேட்கின்றிலேன்'' என்கிறானல்லவா? அது பொருந்தாது- கண் அல்லது செவி இப்போது இல்லாமையால். ஆகையால் கண் செவி முதலியவற்றைவிட வேறுபட்ட

ஒரு ஆத்மா - கண் செவிகள் உள்ள காலத்திலும் இல்லாத காலத்திலும் உளனென்பது தோன்றுகிறது.

மனமும் ஆத்மாவன்று - எண்ணுவதற்குக் கருவியாகத் தோற்றுகிற மனது சிற்சில சமயங்களில் எந்த எண்ணத்தையும் உண்டுபண்ணாமல் மூடமாய் நிற்கையால்.

பிராணனும் (மூச்சுக்காற்றும்) ஆத்மாவல்ல; மூர்ச்சையாய் விழுந்த நிலையில் அப்பிராணன் தோற்றாமையால்.

அறிவும் ஆத்மாவாகமாட்டாது; பானை துணி முதலியவற்றைக் காணும்போதோ தொடும்போதோ ''பானையை இப்போது அறிகிறேன்'' ''துணியை இப்போது அறிகிறேன்'' என்று தோன்றுகிற அறிவு அவற்றைக் காணாத - அல்லது தொடாத போது தோற்றாமையால்.

இங்ஙனமல்லாமல் - ''நான் கண்ணும் செவியும் முன்பு விளங்கியிருந்தேன், இப்போது குருடனும் செவிடனும் ஆனேன்'', ''முன்பு என்மனம் விளக்கமாக இருந்தது. இப்போது ஒன்றும் தெரிகிறதில்லை,'' ''நான் அப்போது மூர்ச்சையடைந்து மூச்சின்றிக் கிடந்தேன், இப்போது மூச்சு விடுகிறேன்'', ''எனக்கு அப்போது அறிவு உண்டாகியிருந்தது. இப்போது அறிவு அழிந்தது என்று-பொறிகளும் மனமும் பிராணவாயுவும் அறிவுமாகிய இவை தோற்றினபோதோடு தோற்றாத போதோடு வாசியற்று ஆத்மா எப்போதும் 'நான்', 'என்' என்று தோற்றுகையால் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டவன் ஜீவாத்மா என்பது தேறிற்றாகிறது.

இந்த யுக்திகளாலன்றியே '' பஞ்சவிம்ச : ஆத்மா பவதி'' (யஜுரஷ்டகம் 1-2-17) என்ற வேத வாக்கியத்தாலும் ஆத்மா, உடல் முதலியவற்றைவிட

வேறுபட்டவனாக அறியப்படுகிறான். நிலம் நீர் தீ வளி வானம், மூக்கு நாக்கு கண் த்வக்கு காது, வாய் கை கால் குதம் பெண்குறி அல்லது ஆண்குறி, நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை, மனம், அஹங்காரம், மஹாந், பிரகிருதி ஆகிய இருபத்து நான்கு தத்துவங்களைவிட வேறுபட்டு இருபத்தைந்தாம் தத்துவம் (பொருள்) ஆவான் ஜீவாத்மா - என்பது இவ்வாக்கியத்தின் கருத்து.

ஜீவாத்மா அறிவே வடிவானவன். தனக்குத் தானே தோன்றுமவன் என்றபடி. பானை முதலிய சடப் பொருள்கள் ஆத்மாவில் உள்ள அறிவாகிய பண்பிற்கு இலக்காகி அவ்வறிவின் வாயிலாக ஆத்மாவிற்குத் தோற்றும். அவ்வறிவுகளும் ஆத்மாவுக்குத் தாமே தோற்றும். ஆத்மாவோ வென்னில் - (தன்னிடம் உள்ள அறிவிற் கிலக்காய்த் தோற்றுதலேயன்றி) தனக்குத் தானே 'நான், நான்' என்று தோற்றும். ''ஹ்ருதி அந்தர் ஜ்யோதி: புருஷ:'' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் (6-3-7) ஹ்ருதயத்தின் கண் உள்ளே ஞானவடிவமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான் புருஷன் (ஜீவாத்மா) என்று கூறுகிறது.

ஆத்மா இன்பவுருவானவன். இன்பமென்பதும் ஆனந்த மென்பதும் சுகமென்பதும் ஒன்றேயாம். இதுதன்னை அனுகூலமென்பர் வடநூலார். இயற்கை யாகவே விரும்பப்படும் சுகமே அனுகூலமெனப்படும். மற்றொரு பொருளை அனுபவிப்பதனால் உண்டாகும் மற்றொரு சுகத்தை தான் உடையவனாக, '' கண்டு சுகமடைந்தேன் நான்,'' ''உண்டு இன்பமெய்தினேன் யான்'' என்று தோன்றுதலேயன்றி, தனக்குத் தானே சுகமாகத் தோற்றுகிறான் ஆத்மா என்க. இதனை எங்கே காணலாம் என்றால், அயர்ந்து தூங்கி விழித்தவன்

'சுகமாகத் தூங்கினேன்' என்ற விடத்தில் காணலாம். அயர்ந்து தூங்கும் நிலையில், காணப்படும் பொருள் களோ உண்ணப்படும் பொருள்களோ, காண்பதோ உண்பதோ ஏதுமில்லாமையால் அதனால் உண்டாகும் வேறுசுகமன்றி, ஆத்மாவின் இன்பவுருவமே 'சுகமாக' என்பதற்கு இலக்காக வேண்டுகையால் என்க. 'சுகமாகப் பாடினேன்' என்ற விடத்தில் பாடுங்காலத்தில் உண்டாகும் சுகம் குறிக்கப்படுவதுபோல், ''சுகமாகத் தூங்கினேன்'' என்ற விடத்திலும் தூங்கும் காலத்தில் உள்ள ஆத்மாவாகிற சுகமே குறிக்கப்படுகின்றது. ''ஆர்த்ரம் ஜ்வலதி'' என்ற தைத்திரீயோபநிஷத்தும் (நாரா-48) ஆத்மா சில்லென்று (= சுகவடிவாக) விளங்குகிறான் என்று அறிவிக்கிறது.

ஆத்மா அழிவில்லாதவன். 'ஒருவன் பிறந்தான்' 'ஒருவன் இறந்தான்' என்பதற்கு - '(நித்தியனான) ஆத்மா உடலெடுத்தான்' 'அவன் உடல் விட்டான்' என்பதே பொருளாகும். ''ந ஜாயதே, ம்ரியதே வா விபச்சித்'' என்னும் கடோபநிஷத்து (1-2-18) பேரறிவுடைய ஜீவாத்மா பிறப்பதில்லை இறப்பதுமில்லை - என்று குறிப்பிடுகிறது.

ஆத்மா அணுவாகிறான்; இருதயத்திலிருந்து வெளிப்படுவதையும், வேறிடத்துக்குப் போவதையும், அங்கிருந்து திரும்பி வருவதையும் வேதம் கூறுவதனாலென்க. ''ஹ்ருதி ஹ்யேவ அயம் ஆத்மா'' (ப்ருஹதாரண்ய கோப நிஷத்து 6-4-2) என்றும், ''தேந ப்ரத்யோதேந ஏஷ ஆத்மா நிஷ்க்ராமதி'' (ப்ருஹதாரண்யகோபநிஷத்து 6-4-2) என்றும், ''யே வை கே ச அஸ்மாத் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸமேவ தே கச்சந்தி'' (ப்ருஹதாரண்யகோ பநிஷத்து 6-4-6) என்றும்,

''தஸ்மாத் லோகாத் புநரேதி அஸ்மை லோகாய கர்மணே'' (ப்ருஹதாரண்ய கோபநிஷத்து 6-4-6) என்றும் கூறுவது காண்க. ''இவ்வாத்மா இருதயத்திலேயே அல்லவா இருக்கிறான்'', ''பகவான் காட்டும் அவ்வொளியினால் (வழிதெரிந்து) இந்த ஆத்மா (இருதயத்திலிருந்து) வெளிப்படுகிறான்'', ''யார் இவ்வுலகிலிருந்து புறப்படுகிறார்களோ, அவர்கள் அனைவரும் சந்திர மண்டலத்தைக் குறித்தே போகிறார்கள்'', ''(இதற்கு முன்பு தான் ஈட்டிய நல்வினைகளின் பயனை அனுபவித்துவிட்டு) அந்த லோகத்திலிருந்து மறுபடியும் நல்வினைகளைச் செய்வதற்கு இவ்வுலகிற்குத் திரும்பிவருகிறான் ஜீவாத்மா'' என்பது முற்காட்டிய உபநிஷத்துக்களின் கருத்து. ஆகையால் கண்ணுக்குப் புலப்படாத ஆத்மா- புறப்படுவது போவது வருவது ஆகியவை உபநிஷத்துக்களின் மூலமாக அறியப்படுகின்றமை கொண்டு - அணுவடிவானவன் என்று தேறியது.

'ஏஷோணுராத்மா சேதஸா வேதிதவ்ய:'' என்ற முண்டகோபநிஷத்தும் (3-1-9) இந்த அணுவான ஜீவாத்மா மனதினால் அறியத்தக்கவன் என்று பகர்கிறது.

ஆத்மா அறிவுடையவன். இதற்கு முன்பு ஆத்மாவின் வடிவம் அறிவு என்றோம். இப்போது அவனிடத்தில் மற்ற பொருள்களைப் பற்றிய- 'இது பானை''இது துணி' என்று அறியும் அறிவும் உண்டு என்கிறோம். ''ஏஷ ஹி போத்தா விஜ்ஞானாத்மா புருஷ:'' என்னும் ப்ரச்நோபநிஷத்து (4-9) இந்த ஜீவாத்மா அறிவுடையவனும் அறிவுவடிவானவனுமன்றோ - என்று ஓதுகின்றது. அறிவுடையவன் என்றதனால், அறிந்த நல்ல பொருளை விரும்புமவனும் அதையடையச்

செயல்படுமவனும் அடைந்து அனுபவிப்பவனு மாகிறான் ஜீவாத்மா என்பது சொல்லாமலே விளங்கும்.

ஆத்மா திருமாலால் உட்புகுந்து அடக்கியாளப் படுபவன். ''ய : ஆத்மாநம் அந்தர : யமயதி'' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்து (5-7-22) எந்தத் திருமால் ஜீவாத்மாவை உட்புகுந்து நியமிக்கிறானோ = (இதைச் செய் இதைச் செய்யாதே என்று அறிவித்து) அடக்கியாள்கிறானோ என்று உணர்த்துகிறது.

ஆத்மா திருமாலால் தாங்கப்படுபவன். ''ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே.. ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத :'' என்ற ப்ருஹதாரண்ய கோபநிஷத்து (5-8-7) இந்த அழிவற்ற திருமாலின் கட்டளையாலே சூரியன் சந்திரன் முதலிய எல்லாப் பொருள்களும் ஒன்றோடொன்று குழம்பாமலும் கீழே விழாமலும் தாங்கப்படுகின்றன என்று போதிக்கின்றது.

ஆத்மா திருமாலுக்கு அடிமையானவன் '' யஸ்யாஸ்மி ந தமந்தரேமி'' என்ற யஜுர்வேதாஷ்டகம் (3-7) எந்தத் திருமாலுக்கு நான் அடியவனாகிறேனோ அவரைவிட்டு வேறொருவரிடம் செல்லமாட்டேன் என்று உபதேசிக்கிறது. இங்ஙனம் முறையே கூறப்பட்ட ஒன்பது உயிரியல்புகளில் திருமாலுக்கு அடிமையாகை என்பது மிக முக்கிய இயல்பாகக் கருதுவர் பெரியோர்.

இன்னும்-கண் முதலிய பொறிகளால் அறியப் படாமை, அறிவற்ற பொருள்களைப் போன்றதாக நினைக்கப்படாமை, இளைப்பது பருப்பது போன்ற மாறுபாடில்லாமை முதலிய சில இயல்புகளும் ஆத்மாவுக்கு கூறப்பட்டுள்ளன. விரிப்பின்பெருகும்.

ஸ்ரீவைஷ்ணவமதத்தில் மிக உயர்ந்ததாக கருதப் படுகின்ற ''ஓம் நமோ நாராயணாய '' என்னும்

அஷ்டாக்ஷரமஹாமந்திரம் - ஓம் என்ற முதற்சொல்லால், எல்லா எழுத்துக்கும் அகரம்போல் எல்லாவுலகிற்கும் காரணனாய் அவற்றைக் காக்கும் திருமாலுக்கன்றி மற்றொருவருக்கும் ஜீவாத்மா அடியவனாகமாட்டான் என்றும், நம: என்ற இரண்டாம் சொல்லால், ஜீவாத்மா தன் விருப்பம் நிறைவேற அத்திருமாலையன்றி வேறொருவரையும் தஞ்சமாகப் பற்றமாட்டான் என்றும், நாராயணாய என்ற மூன்றாம் சொல்லால், நாராயணனென்னும் பெயருடைய அத்திருமாலின் உகப்புக்காகவன்றி பிறருகப்புக்காகவோ தன்னுகப் புக்காகவோ ஜீவாத்மா அத்திருமாலுக்குத் தொண்டு செய்யான் என்றும் இத்தகைய மூன்றியல்புகளை ஜீவாத்மாவுக்குக் கூறுகின்றது. மேலும் திருமாலோடு சேர்ந்தால் இன்புறுகையும் அவரைப்பிரிந்தால் துன்புறுகையும், தன்னுடைய பிறப்பு செயல் முதலிய எல்லாம் அத்திருமாலுக்கே வசப்பட்டிருக்கையுமாகிய இவ்வியல்புகள் மூன்றும் ஜீவாத்மாவினுடையவையாக அம்மந்திரமே குறிப்பிடுவதாக கொள்ளுவர்.

மேலும் அத்திருமாலைவிட்டுப் பிரியாத திருமகளுக்கும், அத்திருமாலைத் தம் மனத்துக்குள்ளே எப்போதும் தியானிக்கும் தொண்டர்களுக்கும் இந்த ஜீவாத்மா அடிமையானவன் என்னும் இவ்வியல்பும் அம்மந்திரத்திலிருந்தே கிடைக்கின்றதென்றும் இசைவர்.

முதன் முதலில் குறிப்பிடப்பட்ட இறைநிலை உயிர்நிலை நெறி பயன் தடை ஆகிய அர்த்த பஞ்சகத்தை விவரிக்கின்ற- நம்மாழ்வாருடைய திருவாய் மொழியானது- 'ஏறாளுமிறையோனும்' (4-8) என்னும் பதிகத்தால் திருமாலுக்கு அடிமையாகையே ஆத்மாவின் இயல்பென்றும், 'கண்கள் சிவந்து' (8-8) என்ற பதிகத்தால்

அறிவும் ஆனந்தமும் வடிவமாகக் கொண்டு உடல் முதலியவற்றைவிட வேறாய்த் திருமாலை விட்டுப் பிரியாத தன்மையுடைமை ஆத்மாவின் இயல்பென்றும், 'கருமாணிக்கமலை' (8-9) என்ற பதிகத்தால் திருமாலுக்கன்றி வேறொருவருக்கும் அடிமையாக இல்லாதிருத்தல் ஆத்மாவின் இயல்பென்றும், 'பயிலுஞ்சுடரொளி' (3-7) என்ற பதிகத்தால் திருமாலின் தொண்டருக்கடிமையாயிருக்கை ஆத்மாவின் இயல் பென்றும் குறிக்கின்றமை அதன் உரைகளில் காணத்தக்கன. ஆக உயிர்நிலையென்பது இயன்ற வரையில் காட்டப்பட்டதாயிற்று.

# 10

# ஆதிசேஷனுடைய அவதாரங்கள்

'அஜாயமாநோ பஹுதா விஜாயதே' (புருஷ ஸூக்தம்) 'ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:' (யஜுரஷ்டகம் 3-6-3) என்றும், 'பிறப்பில் பல் பிறவிப்பெருமான்' (திருவாய் மொழி 2-9-5) என்றும் 'பல பிறப்பாய் ஒளிவரும் முழுநலம்' (திருவாய்மொழி 1-3-2) என்றும் வேத புருஷனும் வேதம் தமிழ் செய்த மாறனும் அருளிய படியே பரம புருஷனான ஸ்ரீமந்நாராயணன், புண்ய பாபங்களான கருமங் காரணமாகப் பிறக்கும் நம்மைப் போல் பிறவாமல் 'உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்' (திருவிருத்தம் -1) என்கிறபடியே உயிர்களைக் காக்க வேண்டுமென்று எண்ணித் தன்னுடைய க்ருபை காரணமாகப் பலபடியாகப் பிறப்பதையும், பிறக்கப் பிறக்கப் பாபங்களை ஈட்டி ஒளியிழக்கும் நம்மைப் போலல்லாமல் பிறந்து பிறந்து நம்மோடு புரையறக் கலந்து பழகித் தனது எளிமை பாசம் தயை முதலிய குணங்களைப் பயன்படுத்தி அவற்றால் ஒளிமல்கப் பெறுவதையும் கண்டான் ஆதிசேஷன்.

'நிவாஸ சய்யாஸந பாதுகாம்சுகோபதாந வர்ஷாதப வாரணாதிபி:, சரீரபேதைஸ் தவ சேஷதாம் கதைர் யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:' (ஸ்தோத்ர ரத்னம்-40) என்றபடியே உறைவிடம் படுக்கை ஆஸநபீடம் பாதுகை பீதகவாடை தலையணை குடை என்பவை முதலாக அவ்வச்சமயங்களுக்குத் தக்கபடித் திருமாலுக்குச் செய்யும் அடிமைகளுக்கு உரிய பல வடிவங்களைக் கொள்ளுகையாலே சேஷன் (அடியவன்) என்றே எல்லாராலும் அழைக்கப்படுகின்ற அவ்வாதிசேஷன்

தானும் எம்பெருமானைப் போலவே அடிக்கடி பிறந்து தனது அடிமைக் குறுப்பான நற்குணங்களினால் ஒளிமல்கப் பெற வேணுமென்று நினைத்து, லக்ஷ்மணன் பலராமன் இராமாநுசர் அனந்தாழ்வான் மணவாள மாமுனிகள் என்ற பெயர் கொண்டு முறையே அவதரித்து, எம்பெருமானுடைய இராம க்ருஷ்ணாவதாரங்களிலும் கோயில் திருமலை முதலிய திவ்ய தேசங்களில் விளங்கும் அர்ச்சாவதாரங்களிலும் ஈடுபட்டுத் தொண்டு செய்து, பகவான் ஆசார்யன் ஆகிய இவர்கள் திறத்தில் பக்தி பாரதந்த்ர்யம் (வசப்பட்டிருக்கை) முதலிய- தொண்டிற்கு உரிய குணங்களினால் ஒளி மல்கப் பெற்றான் என்பது பூர்வக்ரந்தங்களில் பிரசித்தமாய் உள்ளது. அதைச் சிறிது அனுபவிப்போம்.

திருமால் திரேதாயுகத்தில் இராமபிரானாகத் திருவவதரித்தபோது ஆதிசேஷன் இலக்குமணனாக அவதரித்துக் குழந்தைப் பருவமே தொடங்கி மிக்க அன்புடன் பவனவாஸத்திலும் வனவாஸாத்திலும் வாசியேதுமின்றி இராமனுக்குச் செய்ய வேண்டிய அடிமைப் பணியில் ஊன்றியிருந்து ஒளி மிகப் பெற்றானென்னும் விஷயம் ஸ்ரீராமாயணத்தில் பிரசித்தமானதே. ஸீதாதேவி இரண்டு தடவைகள் இராமபிரானைப் பிரிந்த போதும் இலக்குவன் பிரியாதிருந்து அடிமை செய்தது குறிக்கொள்ளத் தக்கது.

அப்பெருமான் துவாபரயுகத்தில் கண்ணபிரானாக அவதாரம் செய்தபோது பலராமனாகப் பிறந்தான் ஆதிசேஷன். காளியனின் கருவத்தை.அடக்கிய ஒரே ஒரு சமயம் தவிர மற்ற எல்லாச் சமயங்களிலும் கண்ணபிரானை விட்டுப் பிரியாமல் கூடவேயிருந்து அவனைக் காத்துத் தொண்டு செய்தான் பலராமன்.

காளியனுச்சியில் நட்டம் பாய்ந்த சமயத்தில் கண்ணபிரான் பலராமனை விட்டுத் தனியே சென்றதாக ஸ்ரீவிஷ்ணுபுராணம் தெரிவிக்கின்றது. இது 'ஏகதாது விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ' (விஷ்ணு புராணம் 5-7) (ஒருகால் பலராமனை விட்டுக் கண்ணன் ப்ருந்தாவனம் சென்றான்) என்று தொடங்கிக் காளியனை அடக்கிக் கடலுக்கு ஓட்டிய கதை கூறப்பட்டுள்ளதனால் தெரிகிறது. மேலும் கண்ணனிடம் ஊடல் கொண்ட கோபிகளுக்குக் கண்ணன் கூறிய தூது மொழிகளைச் சொல்லி அவர்களுடைய ஊடலைத் தீர்த்துக் கண்ணனிடம் அவர்களுக்கு அன்பை வளர்த்தா னென்பதும் விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளது. 'ஸந்தேசைஸ் ஸாமமதுரை: ப்ரேமகர்ப்பை ரகர்விதை:, ராமேணாச்வாஸிதா கோப்ய: க்ருஷ்ண ஸ்யாதிமநோஹரை:. (விஷ்ணு புராணம் 5-24-20) தேற்றுகிற நல்வார்த்தையாகையாலே இனியவையும் காதலைத் தம்முள் அடக்கிக் கொண்டவையும் கருவத்தோடல்லாமல் பணிவோடு கூறப்பட்டவையும் கேட்டவர் மனத்தை வசீகரிக்குமவையுமாய்க் கண்ணன் சொல்லியனுப்பிய தூது மொழிகளைச் சொல்லிப் பலராமனால் ஆய்ச்சியர் தேற்றப்பட்டுக் கண்ண பிரானிடம் அன்பு பெருகப் பெற்றார்கள்-என்றது காண்க. இங்ஙனமே பலராமன் கண்ணனுக்கு உதவி புரிந்தமை பல விடங்களிலும் காணத்தக்கது. தம்பியாகப் பிறந்து அண்ணனுக்கு அடிமை செய்த லக்ஷ்மணனைவிட அண்ணனாய் அவதரித்துத் தம்பிக்குத் தொண்டு புரிந்த பலராமன் ஒளி மிக்கவனன்றோ?

அந்த ஆதிசேஷனே கலியுகத்தில் பகவத் ராமாநுசராகத் திருவவதாரம் செய்து 'தென்னரங்கர் செல்வமுற்றும்

திருத்தி வைத்தான் வாழியே' (உடையவர் வாழித் திருநாமம்) என்றபடியே திருவரங்கநாதனுடைய ஸமஸ்தமான ஐச்வர்யத்தையும் ஒழுங்குபடுத்தியும், திருவேங்கடமுடையானுடைய திருக்கரங்களில் சங்கு சக்கரங்களை ஸமர்ப்பித்து அப்பெருமானுக்குப் புராணங்களில் விளங்கும் விஷ்ணுவின் தன்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டியும், யதுகிரியில் (திருநாரா யணபுரத்தில்) திருநாராயணப் பெருமாளென்னும் மூலவரைப் புற்றிலிருந்து கண்டெடுத்து, அரசனரண் மனையிலிருந்து உத்ஸவமூர்த்தியான செல்வப் பிள்ளையைத் தமது மகிமையினால் எழுந்தருளச் செய்து வந்து மூலவரோடு பிரதிஷ்டை கண்டருளும்படி செய்வித்தும், அத்திகிரியில் (ஸ்ரீ காஞ்சீபுரத்தில்) பேரருளாளப் பெருமாளுக்குத் தாமே சாலக்கிணற்றி லிருந்து திருமஞ்சனம் கொண்டுவந்து ஸமர்ப்பித்ததோடு அப்பெருமானையே தனக்கு ஆராதிக்கத்தக்க தேவதையாக அறுதியிட்டுத் திருவாராதனம் செய்தும், இன்னும் இங்ஙனமே பல அர்ச்சாவதாரமூர்த்திகளுக்குத் தொண்டுசெய்தும் போந்தமை ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் முதலிய நூல்களில் விசதம். விபவமான ராமக்ருஷ்ணவதாரங்களில் கூடப் பிறந்து அடிமை செய்த லக்ஷ்மண பலராமர்களைக் காட்டிலும், விபவாவதாரத்தை விடப் பெருமை பெற்ற அர்ச்சாவதாரங்களில் அடிமை புரிந்த இராமாநுச முனிவரின் பெருமையொளி பரந்ததல்லவா?

இராமாநுசராக அவதரித்த மாத்திரத்தால் திருப்தியடையாத அவ்வாதிசேஷன் அவரது சிஷ்யனாகத் திருமலையனந்தாழ்வானென்ற பெயருடன் அவதரித்துத் தனது ஆசார்யராகிய இராமாநுச முனிவரின்

திருவாணையின்படித் திருவேங்கடமலைக்குச் சென்று ஏரி, குளம், தோட்டம் இவற்றைத் தாமே உண்டாக்கி, ஸ்ரீமாலாகாரரையும் பெரியாழ்வாரையும் ஸ்ரீதொண்டரடிப் பொடிகளையும் பின்சென்று, திருவேங்கடமுடையானுக்குத் தோட்டத்தில் மலரும் புஷ்பங்களை மாலையாகக்கட்டி ஸமர்ப்பித்து தொண்டு பூண்டு வாழ்கின்ற நாட்களில், ஒருநாள் மாலைதொடுக்கும் தருணத்தில் திருவேங்கடமுடையான் தன்னிடம் வந்து போகும்படி ஒரு பக்தர் மூலமாக உத்தரவிட்டனுப்ப, அனந்தாழ்வான் அதை மதியாமல் இராமாநுசராணையையே முக்கியமாகக் கருதித் திருமாலை சமைப்பதிலேயே ஊன்றியிருந்தாரென்பது குருபரம் பராப்ரபாவம் முதலிய க்ரந்தங்களில் பேசப்பட்டுள்ளது. பகவத்கைங்கர்யங்களைப் பாங்காகச் செய்து வந்த போதிலும் திருக்கோட்டியூர் நம்பிகளின் (தமது ஆசார்யரின்) ஆணையை மீறி ஆசையுடையோர்க் கெல்லாம் சரமச்லோகத்தின் அர்த்தத்தை உபதேசித்த இராமாநுசமுனிவரைக் காட்டிலும், தமது ஆசார்யராகிய அவ்விராமாநுச முனிவரின் ஆணையைக் கடவாமல் பகவத்கைங்கர்யம் செய்த திருமலையனந்தாழ்வான் ஒளிமல்கப் பெற்றவரன்றோ?

இங்ஙனம் நான்கு தடவைகள் அவதரித்துப் படைத்த ஒளி போதாதென்று நினைத்த ஆதிசேஷன் எல்லையான பேரொளி படைப்பதற்காகக் கடைசியில் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்தான். கடல் போல் அளவிடற்கரிய ஜ்ஞான பக்தி வைராக்யங்களுக்குக் கொள்கலமானவர் என்றும் எம்பெருமானார் திருவடிகளில் பேரன்பு பூண்டவர் என்றும் குலாவத்தக்கபடித் தமது ஆசார்யரான திருவாய்மொழிப்

பிள்ளையின் திருவருளுக்கு இலக்காகிய அம்மணவாள மாமுனிகள் திருவரங்கத்தில் தம்மைத் தஞ்சமடைந்தவர்களுக்குத் தத்துவத்தை உபதேசித்தும், ஸ்ரீரங்கநாதனுக்குக் கைங்கர்யம் செய்தும், ''திருவாய் மொழி முதலிய தமிழ் வேதங்களைக் கொண்டே நீர் போதுபோக்கிக் கொண்டும் அவற்றையே பிரசாரம் செய்து கொண்டும் இருக்க வேண்டும்'' என்ற தம்மாசாரியரின் உத்தரவை எள்ளளவும் நழுவாமல் பரிபாலனம் செய்தும் காலத்தை மிக மிக மதுரமாகக் கழித்துவருங்காலத்தில், ஒருநாள் ஸ்ரீரங்கநாதன் தம்மை ஆசாரியராக வரித்து 'நாளை முதலாகத் திருவாய் மொழியை ஈடுமுப்பத்தாறாயிரப்படி என்னும் பேருரையுடன் நம் கருட மண்டபத்தில் ப்ரவசனம் செய்யும்' என்று அர்ச்சகர் வாயிலாக நியமித்தனுப்ப, 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' (திருவாய்மொழி 2-9-4) என்று ஆழ்வார் அருளிய நமச்சப்தார்த்தம் திருவாய்மொழிப்பிள்ளையின் இன்னருளினால் நெஞ்சில் ஊறியிருக்கப் பெற்ற மணவாளமாமுனிகள் 'ஸர்வஜ்ஞனான ஸ்ரீரங்கநாதன் சிஷ்யனாம், அல்பஜ்ஞரான நாம் ஆசார்யனாம், இது மிக அழகிது, அடியேனால் முடியாது' என்று அவ்வாணையை அலக்ஷ்யம் செய்யாமல், 'போக தசையில் ஈச்வரன் அழிக்கும்போது நோக்க வேணுமென்று அழியா தொழிகை' (முமுக்ஷுப் 92) என்னும் பிள்ளை லோகாசார்யரின் ஸ்ரீஸூக்தியின் படி, ஸ்வதந்த்ரனான அழகிய மணவாளன் தன்னைச் சேஷனாக்கி (சிஷ்யனாக்கி)யும் நம்மைச் சேஷியாக்கி (ஆசார்யனாக்கி)யும் நம்மை அனுபவிக்க எண்ணி நமது சேஷத்வத்தை அழிக்கும் இத்தருணத்தில், நம்முடைய

சேஷத்வத்தை நாம் காப்பாற்றிக்கொள்ள வேணுமென்று கருதி அவனுடைய அனுபவத்தை அழித்தால் அது நம்முடைய பகவத்பாரதந்த்ர்யம் (பகவானுடைய திருவுள்ளத்தையே பின்பற்றுகை) என்னும் ஸ்வரூபத்துக்குச் சேராததாகும், ஆகையால் அப்படிச் செய்யக்கூடாதென்று அறுதியிட்டு, அரங்கனின் அந்தரங்கத்தையே பின்சென்று தம்முடைய ஸ்வரூபத்துக்குத் தக்கபடியே அவனாணையை இசைந்து 'இப்புவியில் அரங்கேசற்கு ஈடளித்தான் வாழியே' என்று அனைவரும் தம்மை வாழ்த்தும்படித் தாம் ஆசார்யராயிருந்து அழகிய மணவாளனுக்கு ஈட்டுரையுடன் திருவாய்மொழிப் பொருளை உபதேசித்து, தம்முடைய பகவத் பாரந்த்ர்யத்துக்கு உகந்த அப்பெருமானால் சிஷ்யக்ருத்யமாக ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்னும் தனியன் அருளித் துதிக்கப்பெற்றார் என்பது, யதீந்த்ரப்ரவணப்ரபாவம் முதலிய பல நூல்களில் பரக்கப் பேசப்பட்டுள்ளது. ஸ்ரீராமாநுசர் தம்மாசார்யரான திருக்கோட்டியூர் நம்பிகளின் ஆணையையும் திருமலையனந்தாழ்வான் திருவேங்கடமுடையானுத் தரவையும் மீறினார்கள் என்கின்ற உண்மைக் குற்றமோ அல்லது போலிக்குற்றமோ அவ்விருவரிடமும் கூற இடமிருக்கின்றது. ஸ்ரீரங்கநாதனுடையவும் திருவாய் மொழிப் பிள்ளையினுடையவும் நியமனத்தைச் சிறிதும் கடந்து செல்லாமல் நிறைவேற்றிய மணவாள மாமுனிகள் முற்கூறிய இராமாநுசர் திருமலையனந்தாழ்வான் ஆகிய இருவரையும் விஞ்சிய பெருமைபெற்றுப் பேரொளி படைத்தார் என்பது சொல்லவும் வேண்டுமா?

இங்ஙனம் ஆதிசேஷாவதாரங்களாகிய முற்கூறிய ஐவரில் மணவாள மாமுனிகள் முன்னைய நால்வரினும்

மேம்பட்ட எல்லையான பெருமை படைத்தவராகையால் பெரிய ஜீயர் என்று பொருத்தமான பெயருடன் விளங்கினார். எம்பெருமான் எல்லையில்லாப் பிறவிகள் பிறந்தும் ஒளிமல்கப் பெற்றானோ இல்லையோ, அவனோடு போட்டியிட்ட ஆதிசேஷன் மட்டும் ஐந்து பிறவிகளிலேயே, இனிப் பிறக்க வேண்டியிராதபடி மிக மிக ஒளி நிரம்பப் பெற்றானென்பது இதுகாறும் கண்டோம். இனி இவ்வைவரும் ஆதிசேஷனின் அவதாரமென்பதில் அத்தாட்சிகளைக் காண்போம்.

'ஸாக்ஷாதனந்தஸ் ஸ கிரி: ஸர்வதாஸேவதே ஹரிம், லக்ஷ்மணுக்ருதிமாஸ்தாய த்ரேதாயாமப்யஸேவத' (நாரதீயபுராணம்- யாதவகிரி மாஹாத்ம்யம் 11-78) திருவனந்தாழ்வான் தானே யாதவகிரியின் உருவமெடுத்து எப்போதும் ஹரியைத் தாங்கி அடிமை புரிகிறான். திரேதாயுகத்தில் அவனே லக்ஷ்மணனுருவாகி (இராமபிரானுக்கு) அடிமை புரிந்தான் என்றுள்ளதனால் ஆதிசேஷாவதாரம் லக்ஷ்மணன் என்பது அறியலாகும்.

'தேவக்யா ஜடரே கர்ப்பம் சேஷாக்க்யம் தாம மாமகம், தத் ஸந்நிக்ருஷ்ய ரோஹிண்யா உதரே ஸந்நிவேசய' (ஸ்ரீ பாகவதம் 10-2-8) என்னுடைய தேஜஸ்ஸாய் ஆதிசேஷன் என்று பெயர் பெற்றதாய்த் தேவகியின் வயிற்றிலிருக்கும் கர்ப்பத்தை எடுத்துச் சென்று ரோஹிணியின் வயிற்றில் சேர்த்துவிடு - என்று கண்ணனாய்ப் பிறக்கவிருக்கும் திருமால் யோகமாயைக்குக் கட்டளையிட்டதனால் ரோஹிணியின் புதல்வனான பலராமன் ஆதிசேஷாவதாரமென்பது தெளியப்படும்.

'பௌஜங்கம் வபுரபஹாய சேஷபோகீ யத்ரூபம் த்ரிபுவநநந்திதம் சகார' (திவ்யஸூரி சரிதம் 17-7) ஆதிசேஷன் (மூவுலகும் நடுங்கும்) பாம்பினுடலை

விட்டுவிட்டு மூவுலகும் உகக்கும் இராமாநுசரின் உருவத்தை மேற்கொண்டான் என்று இராமாநுச முனிவரின் சிஷ்யராகிய கருட வாகன பண்டிதர் பணித்த திலிருந்து ஸ்ரீராமாநுசர் சேஷாவதாரமென்பது புலப்படும்.

அனந்தாழ்வான் திருமலையில் நந்தவனத்தில் பூப்பறிக்கும் போது அவரைக் கையில் அரவு தீண்ட, அவ்விஷத்தைத் தீர்க்க முயலாமல், மறுபடியும் நீராடிப் புஷ்பம் பறிப்பதிலேயே நோக்காயிருக்க, திருவேங்கட முடையான் 'விஷம் தீர்க்க வேண்டாவென்று நீர் நினைத்திருப்பது ஏன்' என்று அவரைக் கேட்க, 'கடியுண்ட பாம்பு வலிதாகில் ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடித் திருவேங்கடமுடையானாகிய தேவரீரை ஸேவிக்கிறேன், கடித்த பாம்பு வலிதாகில் விரஜாநதியில் நீராடிப் பரமபத நாதனை ஸேவிக்கிறேன்' என்று தம் உறுதியைக் கூறும்போது அனந்தாழ்வான் தம்மை கடியுண்ட பாம்பு' என்று குறித்திருப்பது ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தினால் அறியப்படுவதனால் திருமலை யனந்தாழ்வான் சேஷாவதாரமென்பது வெளிப்படை.

மணவாள மாமுனிகள் ஆதிசேஷாவதாரமென்பது, ஸ்ரீரங்கநாதன் உத்தமநம்பியைப் பார்த்துக் கனவில், 'நம்பீ, இந்த அனந்தனென்னும் அணி விளங்கும் உயர் வெள்ளையணையான திருவனந்தாழ்வான் கண்டீர் ஜீயராக ( மணவாள மாமுனியாக) வந்தவதரித்தார்' என்று அருளிச் செய்ததாக யதீந்த்ர ப்ரவண ப்ரபாவத்தில் உள்ளதனால் அறுதியிடத்தகும். இவ்வைவரும் ஆதிசேஷாவதாரமென்பதற்குப் பல நூல்களில் பல அத்தாட்சிகள் உள்ளன . விரிவிற்கஞ்சி விடை பெறுகிறேன்.

திருவனந்தாழ்வான் திருவடிகளே சரணம்.

# 11

# வால்மீகியின் வாழ்த்துக்கள்

வால்மீகி முனிவர் வடமொழியில் தாம் பணித்த இராமாயண மகாகாவியத்தில் இராமபிரானைப் பல பாத்திரங்கள் வாழ்த்தியதாகக் கூறியுள்ளார். அவர்களாவார் - தசரத சக்கரவர்த்தி ஜநகராஜன் சீதைப்பிராட்டி விச்வாமித்திரமுனிவர் தண்டகாரணியத்தில் வசிக்கும் முனிவர்கள் அனுமான் சுக்கிரீவன் சடாயு அயோத்திவாழ் மக்கள் கோசலையார் என்னுமிவர்கள். ஒருவர் மற்றொருவரை வாழ்த்துவதாவது - 'நீ பல நன்மைகள் உண்டாகப் பெற்று நீடூழிவாழ்க' என்று வேண்டுதலே யாகும். இதையே ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் 'மங்களா சாஸனம்' என்ற வடசொல்லால் வழங்குவர். மங்களம்- நன்மை, ஆசாஸனம் - வேண்டுதல்; விரும்புதல் என்றபடி. இவ்விருப்பம் மனதில் நில்லாமல் சொல்வாயிலாக வெளிப்பட்டபோது, பல்லாண்டு பாடுதல் என்னும் பெயரைப் பெறுகின்றது. இது செயலாலும் வெளிப்படும்.

அறிவாற்றல்களால் குறைந்த சிறியோரை அவற்றால் நிறைந்த பெரியோரன்றோ வாழ்த்தத்தகுதி பெற்றவர். தசரதர் முதலாக முற்கூறிய அனைவருமே இராமபிரானைவிட அறிவாலும் ஆற்றலாலும் சிறியவரன்றோ, மேலும் இராமபிரான் திருமாலின் அவதாரமென்று போற்றப்பட்டவன். உண்மையில் எல்லாரினும் மேம்பட்டவனல்லவா? அத்தகைய பிரானை மற்றவர் வாழ்த்துவதென்பது அவ்வளவு தகுதி பெற்றதாகத் தோன்றவில்லையே என்ற கேள்வி இங்கே எழுகின்றது. இதற்குப் பிள்ளையுலகாசிரியர்

சீர்வசனபூடணமென்னும் நூலில் "ஜ்ஞாந தசையில் ரக்ஷ்ய ரக்ஷகபாவம் தன்கப்பிலே கிடக்கும்; பிரேம தசையில் தட்டுமாறிக் கிடக்கும்; அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் அவனைக் கடகாகக் கொண்டு தன்னை நோக்கும். ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்தால் தன்னைக் கடகாகக் கொண்டு அவனை நோக்கும்" என்று தக்க விடை அருளியிருக்கிறார். நமக்கு உடலென்றும் ஆத்மாவென்றும் இரண்டு பொருள்கள் உள்ளனவன்றோ. அதுபோலப் பரமனுக்கும் திருமேனியென்றும் பரமாத்மாவென்றும் இரண்டு பொருள்கள் உள்ளன. திருமேனியில் மென்மை அழகு முதலிய குணங்களும் பரமாத்மஸ்வரூபத்தில் பேரறிவு பேராற்றல் முதலிய குணங்களும் பொருந்தியுள்ளன. திருமேனியைக் காணாமல் அவனது ஸ்வரூபமும் அதன் குணங்களும் அறியப் படும் நிலை ஜ்ஞாநதசை எனப்படும். அப்போது அவனுடைய பேரறிவு பேராற்றல் முத்லிய குணங்கள் நினைவிலுள்ளபடியால், நாம் ரக்ஷ்யர்கள்= காக்கப் படுமவர்கள், அவனே ரக்ஷகன் = நம்மைக் காப்பவன் என்றெண்ணிய நாம் அவனிடம் வரம் வேண்டி நம்மைக் காத்துக் கொள்ளுகிறோம். ஆகையால் ரக்ஷ்யத்வமும் = காக்கப்படும் தன்மையும், ரக்ஷகத்வமும் = காக்கும் தன்மையும் முறையே நம்மிடத்திலும் பரமனிடத்திலும் உள்ளன. பரமனது திருமேனியைக் கண்டபோதோ எனில், அதன்கண் உள்ள மென்மை அழகு முதலிய குணங்களில் கண்களையும் மனத்தையும் பறிகொடுத்து மயங்கிய நமக்கு ஆசை அதிகமாக உண்டாகிறது. இது ப்ரேமதசை எனப்படும். அப்போது அவனுடைய பேரறிவு பேராற்றல் இவற்றை மறந்து, இவ்வளவு அழகு படைத்த இத்திருமேனிக்கு என்ன தீங்கு வருமோ

என்றஞ்சி அவனைக் காக்க நினைத்து நீ நீடூழி வாழவேணுமென்று நாம் அவனுக்குப் பல்லாண்டு பாடுகிறோம். ஆகையால் இப்போது முன்பு போலல்லாமல், ரக்ஷ்யத்வம் = காக்கப்படும் தன்மை அவனிடத்திலும், ரக்ஷகத்வம் = காக்கும்தன்மை நம்மிடமுமாக மாறாடி நிற்கின்றன என்பது பிள்ளையுலகாசிரியரின் கருத்து. ஆக, பரமன் நம்மைத் தனது திருமேனியழகினால் மயக்கித் தன்னை வாழ்த்தும்படி செய்கிறானாகையால் அவனைவிடச் சிறியவரான நாம் அவனழகுக்குத் தோற்று அப்பெருமானை வாழ்த்துவது மிகமிகத் தகுதிபெற்றதே யென்று விடை அளிக்கப்பட்டதாயிற்று.

மேலும், எம்பெருமான் தன்னை எல்லோரும் பல்லாண்டு பாடவேண்டுமென்று கருதியே நம்மைப் படைக்கிறானென்று நம்மாழ்வார் ''வாழ்த்துவார் பலராக - நான்முகனை உலகெல்லாம் படை என்று முதல் படைத்தாய்'' (உலகோர் பலர் உன்னை வாழ்த்துமவராக ஆவதற்காக, பிரமனை முதலில் படைத்து, அவனைக் கொண்டு உலகினைப் படைத்தாய்) என்று அருளியுள்ளதனால், சிறியோராகிய நாம் பெரியோனாகிய பரமாத்மனைப் பல்லாண்டு பாடுவது சாலப் பொருந்துமென்பது திடப் படுமாறு காணலாகும்.

இனி வால்மீகி ராமாயணத்தில் இராமபிரானைப் பலர் வாழ்த்தியுள்ளதனைச் சீர்வசனபூடணத்தைத் துணைக் கொண்டே சிறிது காண்போம்.

## (1) தசரத சக்கரவர்த்தி

இராமபிரான் சீதையைத் திருமணம் புணர்ந்து அயோத்திக்குத் திரும்பும்போது பரசுராமன் வந்து தோற்ற,

தயரதன் - தாடகை சுபாகு முதலியவர்களைக் கொன்றும் சிவ தனுசை ஒடித்தும் இராமபிரான் காட்டிய பேராற்றலை அறிந்திருந்தும், அவனது அழகொன்றையுமே பார்த்துமயங்கி அவ்வாற்றலை அடியோடு மறந்து அவனுக்குத் தீங்கு நேரிடுமென்று அஞ்சிப் பரசுராமனை அணுகி, 'முனிவரே, க்ஷத்திரியர்களைப் பலமுறை கொன்று கோபந் தணிந்தவராய் ப்ராஹ்மணன் (ப்ரஹ்மருஷி) என்று பெரும்புகழ் படைத்துள்ள நீர் சிறுபிள்ளைகளான என்மைந்தர்களுக்கு அபயமளிக்க வேண்டும்' என்று சரணமடைந்து, அதை மதியாமல் அம்முனிவன் இராமன்மேல் செல்லக் கண்டு உயிரற்றவன் போல் இருந்து, பரசுராமன் இராம பிரானிடம் தோற்று மீண்டானென்று கேட்ட பின்பு மிக மகிழ்ந்து தன்னையும் மைந்தரையும் மறுபிறவி எடுத்ததாக எண்ணினான் - என்று (ரா-பால. 75, 76, 77) கூறப்பட்டிருப்பதனால் தயரத மன்னவன் இராமனுக்கு மங்களா சாஸனம் செய்தது அவன் பரசுராமனைச் சரணமடைந்ததும் பின்பு மகிழ்ந்ததும் கொண்டு ஊகிக்கத் தக்கது.

## (2) ஜநகராஜன்

சிவதனுசை ஒடித்த பேராற்றலுடைய இராம பிரானுக்கு யாராலும் எந்தத் தீங்கும் நேராதென்று அறிந்துவைத்த ஜனகமகாராஜன் - சீதையைப் பாணி க்ரஹணம் செய்து கொடுக்கும்போது - ஆற்றலை மறக்கச் செய்யும் அவனது அழகையே கண்டு - ''தே பத்ரம்'' - திருமேனியழகும் சீதையின் சேர்த்தியழகும் சேரப்பெற்ற உனக்கு நன்மை உண்டாக வேணுமென்று (ரா-பால-73-26) வாழ்த்தினான்.

## (3) சீதைப்பிராட்டி

தாடகையின் வதத்தைக் கேட்டும் வில்லை முறித்தது பரசுராமனை வென்றது ஆகியவற்றைக் கண்டும் இராம பிரானது ஆற்றலை எல்லோரையும் விட நன்றாக அறிந்திருந்த சீதை - பட்டாபிஷேகத்திற்காகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு தசரதனுடைய அரண்மனைக்குப் புறப்பட்ட இராமனைக் கண்டு அவனழகில் தோற்று ஆற்றலை மறந்து, இவ்வழகுக்கு என்ன கேடு வருமோ என்றஞ்சி, ("ஆத்வாரம் அநுவவ்ராஜ மங்களாநி அபிதத்யுஷீ") மங்களங்களை வேண்டிக்கொண்டே இராமபிரானை வாசற்படிவரை பின்தொடர்ந்தாள். (ரா.அயோ - 16-21).

## (4) விச்வாமித்திரமுனிவர்

தம்முடன் இராமபிரானை அனுப்பஇசையாத தசரதனிடம் - அரசே, இவனை உன் மைந்தனென்று சாதாரணமாக நீ நினைத்திருக்கிறாய். நானோவென்றால் பழுதற்ற பராக்கிரமமுடைய பரமாத்மாவாக இவனை அறிவேன் என்று இராமபிரானைப் பற்றி உண்மை உணர்ந்து உரைத்த விச்வாமித்திர முனிவர் தமது யாகத்தைக் காக்க இராம லக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு வரும்போது, தாடகை பேரிரைச்சலோடு தமதருகில் வருவது கண்டு அவர்களின் பெருமையை மறந்து இராகவர்களுக்கு நன்மை உண்டாகுக, வெற்றி உண்டாகுக என்று வாழ்த்தினார். (ரா.பால - 26-14)

## (5) தண்டகாரணிய முனிவர்கள்

தாங்கள் செய்யும் வேள்விகளால் பூஜிக்கப் பெற்று அவற்றுக்குண்டாம் பயனை அளிக்கும் பரமாத்மா என்று

இராமனைக் கருதி, தங்களுக்கு நேர்ந்த தீங்குகள் தீரப் பெற்று க்ஷேமமுண்டாவதற்காக அவனைச் சரண மடைந்த - தண்டகாரணியத்தில் வசிக்கும் முனிவர்கள் - உதிக்கும் சந்திரனைப்போல் மிக அழகிய இராம பிரானைக் கண்டவுடன் அவ்வழகுக்குத் தீங்கு வந்து விடுமோ என்றஞ்சி அவனுக்கு மங்களாசாஸனம் செய்து கொண்டே அவனை எதிர்கொண்டழைத்தனர். (ரா. ஆர. 1-11)

## (6) அநுமான்

முதன்முதலாகக் கண்டபோதே இராமபிரானது தோள் வலிமையைக் கண்ணுற்று, இவரே நம்மைக் காப்பவர் என்று நிச்சயம் செய்த அனுமான் அவற்றின் அழகிலே கண்களைச் செலுத்தி வலிமையை மறந்து, பெருமானே, ஆபரணங்களுக்கு அழகைத் தரும் இத்தோள்களின் அழகுக்கு த்ருஷ்டிதோஷம் தட்டாதபடி தோள்வளை முதலிய ஆபரணங்களை அணிந்து இத்தோள்களின் அழகை ஏன் மறைக்கவில்லை என்று கேட்டு, பின்பு எல்லாக் காலத்திலும் கூடவே இருந்து அப்பெருமானைக் காத்தருளினார். அவர் இப்படிச் செய்தது இராமனுக்கு நன்மைகளை வேண்டியதனாலன்றோ? (ரா.கிஷ். 3-15).

## (7) சுக்கிரீவன்

வாலியை வதை செய்த இராம பிரானது சக்தியை நன்றாக அறிந்திருந்த சுக்கிரீவன் அவனது அழகினைக் கண்டு கலங்கி, விபீஷணன் வந்து இராமனைச் சரணமடைந்த போது - அவன் தருமமே வடிவெடுத்தவன் என்று முன்பு அநுமன் சொல்லியதைக் கேட்டிருந்தும், 'இவன் இராவணன் தம்பியான அரக்கன்,

இராமபிரானைக் கொல்ல வந்திருக்கிறான், இவனைச் சித்திரவதை செய்யவேண்டு' மென்று பிடிவாதம் செய்தான். பின்பு இராமனால் வெகு பிரயாசப்பட்டு விபீஷணன் நல்லவன் என்று நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டிய நிலையில் இருந்தானென்பது (ரா-யுத்-17,18 ஸர்க்கங்களினால்) அறியப்படுகின்றது. இங்ஙனம் சுக்கிரீவன் செய்தது அவன் இராமனுக்கு மங்களங்களை விரும்பியதனாலன்றோ?

## (8) ஜடாயு

சீதையைக் காக்க வேணுமென்று கருதி இராவணனோடு போர் புரிந்து அவனால் இறகும் காலும் வெட்டுண்டு குற்றுயிராகக் கிடக்கிற ஜடாயுவானவர் - தம்மை இராமன் வந்து கண்ட போது - அப்பெருமான் ஒருவனாகவே பதினாலாயிரவரக்கரைக் கொன்ற தனிவீரன் என்பதனை அறிந்துவைத்தும் நடந்த செய்தியை - ''பெருங்காட்டில் ஓஷதியைத் தேடுமாப் போலே யாரைத் தேடுகின்றாயோ அத்தேவியும் என்னுடைய பிராணனும் இராவணனால் அபஹரிக்கப் பட்டன'' என்று சொல்லும்போது, அப்பிரானை ''ஆயுஷ்மந்'' என்று விளித்தாரென்பது (ரா - ஆர - 57 -15) அறியப் படுகின்றது. நீ நீண்ட ஆயுளோடு இன்பமாக இருக்கக் கடவாய் என்று வாழ்த்துதலே ''ஆயுஷ்மந்'' என்று விளித்ததன் கருத்தாகும். சீதையின் பிரிவினால் வந்த தளர்த்தியையும் அரக்கருடன் நேர்ந்த பெரும்பகைமையையுமே கண்டு, ஆற்றலை மறந்ததனால், 'இவனுக்கு என்வருகிறதோ' என்றஞ்சி அவனுக்கு வாழ்த்துக் கூறினார் ஜடாயு என்க.

## (9) அயோத்திவாழ் மக்கள்

''நாடுகள் நகரங்கள் எல்லாவிடங்களிலும் வசிக்கும் மக்களனைவரும், உலகமறிந்த நற்குண நற்செய்கைகள் படைத்த இராமனுக்கு உடல் வலிமையும் ஆரோக்யமும் ஐச்வர்யமும் உண்டாக வேண்டுமென்று வேண்டுகின்றனர். தங்களது கருத்தை வெளியிடாமல் மறைக்கும் ஆழமான மனம் படைத்த பெண்களும் கிழவிகள் யுவதிகள் என்ற வாசியில்லாமல் எல்லா வேளைகளிலும், தம்மைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி இராமபிரானுக்கு எல்லா நன்மைகளும் உண்டாக வேண்டுமென்று வேண்டிக்கொண்டே கண்ட கண்ட தேவதைகளின் கால்களிலும் தலை குனிந்து வணங்குகிறார்கள்'' என்று (ரா-அயோ-2-53) குறிப்பிடப் பட்டுள்ளமையினால் அயோத்தியிலும் மற்ற இடங்களிலும் வாழும் மக்கள் இராமபிரானை வாழ்த்தியது அறியப் படுகின்றது.

## (10) கௌஸல்யை

பல நீதிகளை எடுத்துக் கூறிக் கௌஸல்யைக்கு இசைவைப் பிறப்பித்து விடைபெற்றுக் கொண்டு வனம் செல்லும் இராமபிரானை, அவ்வம்மையார்தன் மனதைத் தேற்றிக் கொண்டு - விருத்திராசுரனைக் கொல்லும்போது இந்திரனுக்கும், மூன்றடியால் உலகங்களை அளக்கும் போது திரிவிக்கிரமபகவானுக்கும் எம்மங்களங்கள் உண்டாயினவோ, அமிர்தம் கொண்டு வரப் புறப்படும் போது கருடனுக்கு அவன் தாயான வினதையும், கடல் கடைந்து அம்ருத முண்டாகும்போது இந்திரனுக்கு அவன் தாயான அதிதியும் எம்மங்களங்களை வேண்டினார் களோ, அம்மங்களங்களெல்லாம் உனக்கு உண்டாகுக என்று வாழ்த்தினாள். (ரா-அயோ-25-32, 33, 34, 35).

இதுவரை வால்மீகியின் வாழ்த்துக்கள் என்ற தலைப்பில் - வால்மீகி வருணித்துள்ள - இராம பிரானுக்குத் தசரத சக்கரவர்த்தி முதலியவர் செய்த மங்களா சாஸனங்களைக் கண்டோம். இனி அம்முனிவர் பெருமான் தாமே செய்த மங்களா சாஸனத்தைச் சிறிது காண்போம்.

நாரத முனிவர் -தமது ஆசிரமத்திற்கு வந்து இராமாயணத்தைச் சுருக்கமாக உபதேசித்துவிட்டுச் சென்றபின், வால்மீகி முனிவர் பகலில் செய்ய வேண்டிய அனுட்டானத்திற்காகத் தமஸாநதிக்குச் சென்றார். அதன் துறையினருகில் இரண்டு அன்றிற் பறவைகள் ஆணும் பெண்ணுமாய் ஒன்றோடொன்று கலந்து களித்துக் கலகலவென்று ஒலித்துக் கொண்டிருத்தலைக் கண்ணுற்ற வேடனொருவன் இரக்கம் சிறிதுமின்றி அவற்றுள் ஆண் பறவையை அம்பெய்து வீழ்த்தினன். இரத்தம் சொட்டச் சொட்ட அது நிலத்தில் விழுந்து புரண்டு துன்பப்படுவதைக் கண்ட பெண்பறவை பிரிவாற்ற மாட்டாமல் ஏங்கிக் கூவியழுதது. அது கண்டு மிகவும் மனம் தளர்ந்து சோகமடைந்த வால்மீகி முனிவர் திருவாக்கிலிருந்து, ''மா நிஷாத ப்ரதிஷ்டாந்த்வமகம: சாச்வதீ : ஸமா :, யத் க்ரௌஞ்சமிதுநாத் ஏகம் அவதீ : காமமோஹிதம்,'' என்னும் ச்லோகமொன்று முதன் முதலாகத் திடீரென்று வெளிவந்தது. இதன் பொருள் - திருவற்ற வேடனே, நீ அன்றிலின் இரட்டையை அணுகி அதனுள் (நியாயமான) காமத்தினால் மயக்கமடை விக்கப்பட்ட ஆண் பறவையைக் கொன்றுவிட்டனை யாகையால், இனி வரும் பலவாண்டு காலங்களில் ஒரு போதும் பெருமையுடன் நிலைபெற்றிருத்தலை அடையாதிருக்கக் கடவாய் (=அப்பறவையைப் போல்

நீயும் இறக்கக் கடவாய்) என்பது ஆகும். (நிஷாத = வேடனே). பறவைகளைக் கொல்வது வேடனுக்குச் சாதி தருமமாகையால் பாபமல்லவாயினும், ஒன்றோடொன்று புணர்ந்து இன்புற்றிருக்கும்போது கொல்லுதல் பாபச்செயலே என்க. இச்செய்யுள் வாயிலாக வால்மீகி வேடனுக்குச் சாபங்கொடுத்தாரென்பது வெளிப்படை.

ஆனாலும், இராமாயணத்திற்கு வடமொழியிலேயே விரிவுரை எழுதிய கோவிந்தராஜர் - "நான்முகனுடைய திருவருளால் வால்மீகியின் வாக்கிலிருந்து முதன் முதலாகத் தோன்றிய இந்த ச்லோகம் வெறும் சாபமாயிருக்கத் தக்கதல்ல, கடவுள் வாழ்த்தாக(வும்) இருக்கத் தக்கதென்று முன்புள்ள ஆசாரியர்கள் வருணிக்கின்றனர்" என்று தொடங்கி, இது கடவுள் வாழ்த்தாவதனை விளக்கி, இறுதியில் "இங்ஙனம் இந்த ச்லோகத்தினால் இஷ்ட தேவதையை த்யானித்(து வாழ்த்து)தல் என்னும் மங்களம் செய்யப்பட்டது" என்றெழுதி முடிக்கின்றார். அதையொட்டி இது கடவுள் வாழ்த்து என்பதனைச் சிறிது விளக்குவோம்.

(ஹே) மாநிஷாத, யத் (த்வம்) க்ரௌஞ்ச மிதுநாத் காமமோஹிதம் ஏகம் அவதீ : (தத்) த்வம் சாச்வதீ : ஸமா : ப்ரதிஷ்டாம் அகம: என்பது அந்வயம். "திருமகளுக்கு இடமான (திருமார்வையுடைய)வனே (=ஸ்ரீநிவாஸனான திருமாலின் அவதாரமான இராமபிரானே) எதனால் (நீ) மந்தோதரி இராவணன் என்னும் இராக்கதரின் இரட்டையை அணுகிச் சென்று, அதனுள் (சீதையின் திறத்தில் அநியாயமான) காமங்கொண்டதனால் மோஹமடைவிக்கப்பட்ட ஆணான இராவணனைக் கொன்றனையோ அதனால் நீ இனி வருங்காலமெல்லாம் (ஒரு கணமும் ஓயாமல்) பெருமையுடன் நிலைபெற்று

இருக்கக் கடவாய்'' என்பது அதன் பொருள். தன் பேடையினிடத்தில் குற்றமற்ற காதல் கொண்டு கலந்த ஆணன்றிலைக்கொன்ற வேடனைச் சபித்து, மந்தோதரி முதலாம் தன் மனைவிகளிருக்கச் செய்தேயும் அயலான் மனைவியான சீதையின் திறத்தில் தகாத காம வெறி கொண்டு கலக்க வெண்ணிய இராவணனைக் கொன்று உலகத்தைக் காத்த இராமபிரானை இதன .ல் வாழ்த்தினார் வால்மீகி. இது வால்மீகி முனிவர் தாமே இராமபிரானை வாழ்த்திய வாழ்த்தாகும். அவர்தாம் இராமபக்த ராகையால் தாம் வழிபடும் கடவுளுக்கு மங்களத்தை விரும்புதல் பொருந்துவதே யன்றோ?

மேலும் இந்தச் செய்யுளால் வால்மீகி, தாமியற்றவிருக்கும் காவியத்திற்குக் கதாநாயகனான இராமபிரானால் வழிபடப் பெற்ற ஸ்ரீ ரங்க நாதனையும், அப்பெருமான் அவதாரம் செய்வதற்காகத் (=பிள்ளைப் பேற்றிற்காகத்) தயரதனால் வழிபடப் பெற்ற திருவேங்கடமுடையானையும்வாழ்த்தியிருக்கிறாரென்பது இனிக்காட்டப்படும்.

இராமபிரான் வழிபடும் கடவுள் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள். இச்செய்தி - ''லப்த்வா குலதநம் ராஜா லங்காம் ப்ராயாத் விபீஷண:'' = இக்ஷ்வாகுகுலத்திற்குச் செல்வமான ஸ்ரீ ரங்கநாதப்பெருமானை - இலங்கைக்கு அரசனான விபீஷணன் - (பட்டாபிஷேக சமயத்தில் இராமபிரான் பரிசாக அளிக்க) பெற்று இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றான் (ரா -யுத்த 131-85) என்றும், இராமபிரான் தன் அவதாரகாரியத்தை நிறைவேற்றித் தன்னுடைச் சோதிக்குச் (சோதிமயமான தன்னுடையதான வைகுண்டலோகத்திற்குச்) செல்லும்போது - ''ஆராதய ஜகந்நாதம் இஷ்வாகு குலதைவதம், ஆராதநீயம் அநிசம்

ஸர்வைர்தேவை: ஸவாஸவை:'' விபீஷண, உலகத்திற்கு நாதனாய் இக்ஷ்வாகு வம்சத்திற்கு தேவதையான (முன்பு நான் உனக்குப் பரிசாக அளித்த) ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களாலும் ஆராதிக்கத் தக்கவர். அவரை எப்போதும் நீ ஆராதித்துக் கொண்டிருக்கக்கடவாய் (ரா-உத்தர-108-31) என்று உத்தர விட்டானென்றும் காண்பதனால் இஷ்வாகுகுலத்துக்குத் தேவதையான ஸ்ரீ ரங்கநாதன் இராமபிரானுக்கும் வழிபடுங்கடவுளாயிருக்கத் தடையில்லை யாகையால் - நம்பத்தக்கதேயாகும். மேலும் (ரா-அயோ -6-1-4) ''இராமபிரான் தயரத மகாராஜரின் உத்தரவின்படி பட்டாபிஷேகம் செய்து கொள்ள இசைந்து அதற்குப் பூர்வாங்கமாக உபவாஸமிருந்து - தன்மனைவியாம் சீதையுடன் (தமது அரண்மனைக்கோயிலில் எழுந்தருளியிருக்கிற) ஸ்ரீரங்கநாதனை த்யானம் செய்தான். அப்பெருமானது நாமத்தைச் சொல்லி அக்நியில் நெய்யை ஹோமம் செய்தான். மௌனத் துடனும் மனத்தூய்மையுடனும் அக்கோயிலிலேயே தருப்பைப் படுக்கையில் சீதையுடன் துயிலமர்ந்தான்'' என்று கூறப்பட்டிருப்பதனால் இக்கருத்து வலிமை பெறுகிறது. இப்படி ஸ்ரீரங்கநாதனைத் தியானம் செய்ததாகச் சொல்லிய இந்த சருக்கத்திற்கு அடுத்த சருக்கத்திலேயே, மந்தரை வந்து கைகேயிக்குக் கலகம் செய்ய முயன்றதைப் பற்றிச் சொல்லியிருப்பது கொண்டு - இராமபிரான் அப்போது பட்டம் கட்டிக்கொள்வது அவன் வழிபடும் தெய்வத்திற்கு இஷ்டமன்று என்பதும் - வனம் சென்று இராவணனைக் கொல்வதே இஷ்டமென்பதும் நன்றாக அறியலாகும். நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் மற்றொன்று நினைப்பது

பிரசித்தமன்றோ? இராமபிரானை மனிதனாகவே வால்மீகி பெரும்பாலும் வருணித்திருப்பதனால் - மனிதனான தனது தன்மைக்குத் தக்கவாறு பட்டம் கட்டிக்கொள்ள இசைந்தானென்றும், அவன் வழிபடுந் தெய்வம் மற்றொன்று நினைத்துப் பட்டாபிஷேகத்தை நிறுத்தி இராவணவதத்தை நடத்தி வைத்ததென்றும் ஊகிக்க இடமிருக்கிறது. ஆக ஸ்ரீரங்கநாதனான திருமாலே இராமபிரானாக அவதரித்ததனாலாவது, அவ்விராம பிரானைக்கொண்டு இராவணனைக் கொன்றவன் முற்கூறியவாறு ஸ்ரீரங்கநாதரென்று கொள்வதனாலாவது - ''மாநிஷாத'' என்ற ச்லோகம் ஸ்ரீ ரங்கநாதனுக்கு வால்மீகி வாழ்த்திய வாழ்த்தாகக் கூறுவது பொருந்துமாறு அறிக. ஸ்ரீரங்கனாதன் முதலில் ஸத்யலோகத்தில் நான்முகக் கடவுளால் பூசிக்கப்பெற்றுப் பின்பு அக்கடவுள் இக்ஷ்வாகுவுக்கு அளிக்க, அவ்வரசன் தொடக்கமாக அக்குலத்தில் இராமபிரானிறுதியாக ஆராதிக்கப் பெற்றுக் கடைசியில் அப்பெருமானால் விபீஷணாழ்வானுக்குப் பரிசாக அருளப்பெற்று அவ்விபீஷணாழ்வானால் இப்போது ஸ்ரீரங்கம் என்று வழங்கப்படுகின்ற ஊரில் ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்டு ஸேவை ஸாதித்துக் கொண்டிருக்கிறானென்ற சரித்திரவுண்மை இங்குக் கவனிக்கத் தக்கது.ரங்கம் என்பது அப்பெருமான் எழுந்தருளியுள்ள விமானத்திற்குப் பெயர். திருப்பாற் கடல் இரவிமண்டலம் யோகியரது உள்ளம் இவற்றைக் காட்டிலும் திருமால் திருவுள்ளத்தில் உகப்பையடைந்து உறையுமிடம் என்றும் பொருள் பட்டு அச்சொல் அவ்விமானத்துக்காரணப்பெயர் என்றும், அவ்விமானத் திற்கு இடமாயிருத்தல் பற்றி அவ்வூரை (ஸ்ரீரங்கத்தை) அச்சொல் இலக்கணையால் (ஆகுபெயர்த் தன்மையால்)

குறிக்கின்றது என்றும் பெரியோர் கூறுவதும் இச்சமயத்தில் நினைக்கத்தக்கது.

இனித் தயரதன் வழிபட்ட தெய்வம் திருவேங்கடமுடையான் என்பது - வராஹபுராணம் முதற்பகுதி 43-49 அத்யாயங்களைச்யொட்டிச் சிறிது காட்டப்படும். இந்திரன் முதலிய தேவர்கள் இராவணனால் படும் துன்பங்களைத் தவிர்த்துக் கொள்ள நினைத்துத் திருப்பாற்கடல் சென்று திருமாலைத் துதிக்க, அங்கு ஒரு பக்தர் ஆகாயத்தில் தோன்றி 'திருமால் இப்போது பூவுலகின்கண் ஒரு மலையில் வசிக்கிறார். அங்குச் சென்று முறையிடுங்கள்' என்று கூறிமறைய, அங்கிருந்து திரும்புகிற தேவர்கள் வழியில் நாரத முனிவரைக் கண்டு வணங்கி நடந்ததைச் சொல்ல, "நான் திருமாலை வணங்க விரும்பி வைகுந்தம் சென்றேன். அங்கு ஒருவர் வந்து பூமியில் எங்கேயோ ஒரு மலையில் திருமால் வாசம் செய்வதாகச் சொல்லக்கேட்டு அம்மலை எங்குள்ளதென்று தெரிந்துகொள்வதற்காகப் பிரமதேவனைக் காண ஸத்யலோகம் செல்லுகிறேன்" என்று நாரதர் கூற, அவரோடு சென்ற தேவர்கள் ஸத்யலோகத்தில் நான்முகக்கடவுளைக் கண்டு வணங்கி இராவணனால் தமக்கு உண்டாகுந் துன்பங்களைக் கூறி, திருமால் இப்போது இருக்கும் இடத்தை எங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்று வேண்டினர். அப்பிரமன் ஞானக்கண்ணால் கண்டு, "மனிதனைத் தவிர மற்றவர்களால் தனக்கு மரணம் நேரக்கூடாதபடி வரம்பெற்ற இராவணனது வதம் திருமாலாலல்லது ஏனையோரால் இயலுங் காரியமன்று, அப்பெருமான் இப்போது பூமியில் திருவேங்கடமலையில் நித்யவாசம் செய்கிறார். அவரைச் சரணமடையலாம், நானும்

வருகிறேன். தசரதமஹாராஜன் புத்திர ஸந்தானம் பெறவேண்டி அம்மலையில் தவம் செய்கிறான். அவனுக்குத் திருமால் காட்சியளிக்கப்போகிறார்'' என்று கூற, எல்லாரும் புறப்பட்டு வந்து திருவேங்கடமலையில் தங்குகின்றனர். இதற்குள் வசிஷ்டமுனிவரின் உத்தரவின்படி அவருடன் கூடத் தயரதமன்னவன் திருமலைக்கு வந்து ஸ்வாமிபுஷ்கரிணியில் நீராடி அஷ்டாக்ஷரஜபம் செய்துகொண்டு த்யானத்தில் இருக்கும்போது, திடீரென்று பேரொளி ஒன்று தோன்றி, அதன் நடுவில் ஒரு கோவிலில் விமானத்தில் சங்கு சக்கரங்களைத் தம் கரங்களில் ஏந்திக் கொண்டு மலர்மகள் மண்மகள் ஆகிய தேவிகளுடன் கூட ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸேவை ஸாதிக்க அவரைக் கண்டு பிரமதேவன் இந்திராதி தேவர்கள் தசரதன் ஆகிய அனைவரும் தொழுது துதித்துத் தத்தம் குறைகளை முறையிட்டனர். அதுகேட்ட ஸ்ரீ நிவாஸப்பெருமாள் பிரமன் இந்திரன் முதலியோரிடம் ''நீங்கள் இனிச் சிறிதும் சிந்தையில்லாமல் இருக்கக் கடவீர்கள், சீக்கிரமே இராவணனை அவனுடைய உற்றாருறவினரோடு வதம் செய்து விடுகிறேன். இது ஸத்யம்'' என்று வாக்குறுதி கொடுத்து விட்டு, தசரத மன்னவனைக் கண்டு, ''அரசே நீ துதி செய்ததற்கு நான் மிக மகிழ்ந்தேன். உனக்கு என்னைப் போல் எல்லையில்லாத பராக்கிரமமுடைய நால்வர் நற்புத்திரர்கள் உண்டாகுமாறு வரம்தந்தேன். மகிழ்ச்சி யோடு திரும்பி ஊர் சேர்ந்து புத்திர காமேஷ்டியாகம் செய்வாயாக'' என்று அருளிச்செய்ய, அனைவரும் தம்தம் உறைவிடம் சென்று சேர்ந்தனர் என்ற இது முற்கூறிய வராஹபுராணத்திலுள்ள செய்தி. இதனால்

இராமபிரானது அவதாரத்திற்காகத் தயரதன் வழிபட்ட கடவுள் திருவேங்கட முடையானாதல் அறியலாகும்.

மேலும் அதே புராணத்தில் 41, 42 அத்யாயங்களில், இராமபிரான் இராவணனை வதம் செய்வதற்காக இலக்குமணன் சுக்கிரீவன் அநுமான் அங்கதன் முதலியவர்களோடும் சேனைகளோடும் பம்பைக் கரையிலிருந்து புறப்பட்டு வழியடைவிலே திருவேங்கட மலை வந்து சேர்ந்து அங்கு வசிக்கும் அஞ்சனாதேவியால் (ஆஞ்சனேயரின் தாயாரால்) பூசிக்கப் பெற்று இரண்டொருநாள் அங்குத் தங்கியிருந்து எல்லோருடனும் ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி அங்குள்ள பலர்க்குப் பல தானங்களைச் செய்தான் என்றும், பின்பு புறப்பட்டுச் சென்று இலங்கை சேர்ந்து இராவணனை வதம் செய்தது ஸ்வாமி புஷ்கரிணியில் ஸ்நானம் செய்ததன் பயனென்றும் கூறப்பட்டிருத்தலை நோக்குவார்க்கு ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடுதல் மூலமாக இராமபிரானுக்கு இராவண ஸம்ஹாரத்துக்கு வேண்டிய சக்தியை அளித்தவனும் திருவேங்கடமுடையான்தான் என்றும் கூற இடமுண்டு.

ஆக இவ்வராஹ புராணத்தின்படி இராமாவ தாரத்திற்காகத் தயரத மன்னவனுக்கு வரமளித்த திருவேங்கடமுடையான் வால்மீகிமுனிவரால் வாழ்த்தப் படுவது பொருத்தமுடையதே என்பது விளக்கப்பெற்ற தாயிற்று. இந்தச்லோகத்தில் உள்ள 'மாநிஷாத' என்ற சொல்லின் பொருளான அலர்மேல்மங்கையுறை மார்பன் (=ஸ்ரீ நிவாஸன்) என்பது திருவேங்கடவனுக்கே சிறப்புப் பெயராக உள்ளதனாலும், இந்திராதியரைக் குறித்து - சீக்கிரத்திலேயே இராவணனை நான் வதம் செய்துவிடுகிறேன் என்று கூறிய திருவேங்கடவனிடம்

இந்த ச்லோகத்தின் இரண்டாம் பகுதியும் பொருந்தத் தடையில்லையாகையாலும், வால்மீகி முனிவர் திருவேங்கடமுடையானை - ''ஸ்ரீநிவாஸா இராவணனைக் கொன்று உலகத்தைக் காத்ததனால் நீ பல்லாண்டு பல்லாண்டாக வாழக்கடவாய்'' என்று வாழ்த்தினார் என்பது ச்லோகத்தின் கருத்தைக் கொண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு வால்மீகி வருணித்த வாழ்த்துக்களும் அவர் தாமே வாழ்த்திய வாழ்த்துக்களும் என்சிற்றறிவிற்கு எட்டியவரை நூல்களின் உதவியைக் கொண்டே எழுதப்பட்டன. குற்றம் நீக்கி, குணமிருந்தால் கொண்டு அடியேனைக் கடைக்கணிக்க வேணுமென்று கற்றவரை வேண்டிக்கொள்கிறேன்.

# 12

# ஜீவாத்மாவின் ஆகாரத்ரயம்

அநந்யார்ஹ சேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்ய போக்யத்வம் ஆகிய இம்மூன்றும் ஜீவாத்மாவின் ஆகாரத்ரயங்களாகும். ஜீவாத்மாவின் இந்த ஆகாரத்ரயத்தையும் எம்பெருமான் ஸ்தலத்ரயத்தில் நிற்றல் இருத்தல் கிடத்தல் செய்து ஆழ்வாருக்குக் காட்டியருளினான். அதைச் சற்று விவரமாக இக்கட்டுரையில் காண்போம்.

அநந்யார்ஹசேஷத்வத்தைத் திருவூரகத்தில் எம் பெருமான் உலகளந்த திருக்கோலத்தில் நின்றபடியே ஸேவை ஸாதித்துக் கொண்டே காட்டுகிறான். உலகளந்த அபதானத்தின் மூலமாக பகவான் உலக முழுவதும் தனக்கே சேஷமென்று காட்டுவதாகவன்றோ பெரியோர்கள் அருளிச் செய்து போருவது.

'' அன்று பாரளந்த பாதபோதை' (திருச் - 66) என்ற விடத்தில், ''அன்று பூமி மஹாபலியாலே அபஹ்ருதமாய் அத்தாலே தன்னுடைய சேஷித்வமும் சேதநருடைய சேஷத்வமும் அழிந்து (மறைந்து) கிடந்தவன்று. பாரளந்த பாத போதை - குணகுண நிரூபணம் பண்ணுதே பூமி முதலான ஸகல லோகங்களிலுமுண்டான ஸகல சேதனர் தலையிலும் வைத்து முறையை (= ஸகலபதார்த் தங்களுக்கும் தானொருவனே சேஷியென்ற உறவு முறையை) உணர்த்தின ஸர்வஸுலபமான திருவடிகளை'' என்றும்,

'ஒண்மிதியில்' (திருநெடு -5) என்றவிடத்தில், ''சேஷசேஷித்வ ஸம்பந்தமிறே நாராயண சப்தார்த் தமாகிறது ..... 'காண்மின்களுலகீரென்று கண் முகப்பே

நிமிர்ந்த' என்று ஸர்வலோகமும் இவ்வர்த்தத்தைக் கண்ணாலே காணலாம்படியிறே திருவுலகளந் தருளினது.... யஜ்ஞவாடத்தே சென்ற படியையும் அர்த்தித்த படியையும் சொல்லாதே எல்லார் தலை களிலும் திருவடிகளை வைத்த இவ்வம்சத்தைச் சொல்லு கையாலே சேஷ சேஷித்வ ஸம்பந்தத்தை அநுபவிக்கிறா ரென்று தோற்றுகிறதிறே'' என்றும் வ்யாக்யான சக்ரவர்த்தி அருளிச் செய்கையாலே இவ்விஷயம் அறியலாகும். ஆக - இம்மூவுலகும் இந்திரனுக்கும் சேஷமன்று, பருந்து இறாஞ்சினாற் போலே அவனிடமிருந்து பறித்துக் கொண்ட மஹாபலிக்கும் சேஷமன்று, என்னொரு வனுக்கே சேஷமென்று - ஊரகத்தில் உலகளந்த வடிவாலே காட்டினானென்றதாயிற்று.

அநந்யசரணத்வத்தைத் திருப்பாடகத்தில் எம் பெருமான் பாண்டவதூதனாய்ச் சேவை தருவதன் மூல மாகக் காட்டுகிறான். தூதுபோனவனுடைய பெருமை யாக ஆசார்யர்கள் அருளிச் செய்வது - உலகிற்குத் தானே சரணம் - உபாயம் என்பதைக் காட்டுவதையேயன்றோ?

'மஹாபாரத்தால் தூதுபோனவனேற்றம் சொல்லு கிறது' என்றும், 'அறியாத அர்த்தங்களை அடைய அறிவித்து ஆசார்யக்ருத்யத்தையும் புருஷகார க்ருத்யத் தையும் உபாயக்ருத்யத்தையும் தானே ஏறிட்டுக் கொள்ளு கையாலே மஹாபாரதத்தில் உபாய வைபவம் சொல்லிற்றாயிற்று' என்றும் ஸ்ரீவசன பூஷணத்தில் (5,14) பிள்ளைலோகாசார்யரும், ''நாமே இவனுக்கு உபாயமாய் (= சரணமாய்) அநிஷ்டநிவ்ருத்த்யாதிகளைப் பண்ணக் கடவோமென்று தானே ஏன்று கொண்டு 'மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்கையாலே'' என்று உபாயக்ருத்

யத்தை விவரித்தருளுகையில் மணவாள மாமுனிகளும் அருளியிருப்பது கொண்டு இதுதன்னை அறியலாம்.

பார்த்தஸாரதியான நிலையிலன்றோ கண்ணபிரான் சரமச்லோகத்தின் மூலமாகத் தானே உபாயமென்று காட்டியது. இச்செயலைத் தூதுபோனவனுடைய ஏற்றமாகக் காட்டியருளியது எங்ஙனே பொருந்தும் என்னில், தூதுபோனவனும் தேரூர்ந்தானும் ஒரேவ்யக்தி யாகையாலும், தூதுபோன நிலையிலும் துர்யோதநாதி களுக்குச் சில நீதிகளை யுபதேசித்து ஆசார்யக்ருத் யத்தையும், பாண்டவர்களுக்காக அவர்களிடத்தில் பத்தூர் கொடு, ஒரூராவது கொடு என்று பரிந்துபேசிப் புருஷகாரக்ருத்யத்தையும், 'அரவுநீள் கொடியோனவையு ளாசனத்தை அஞ்சிடாதேயிட அதற்குப் பெரியமாமேனி யண்ட மூடுருவப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன்' (பெரிய திரு-9-1-8) என்னும்படி விச்வரூபமெடுத்து, 'நீ ஒன்றுங்கொடாவிட்டால், பாண்டவர்களஞ்சாமல் நானே அபயமளித்து, அவர்களுக்கு உபாயமாக இருந்து உதவி செய்வேன்' என்று கூறி உபாயக்ருத்யத்தையும் ஏறிட்டுக் கொண்டிருக்கலாமாகையாலும் பொருந்துமென்க. அது எப்படியேனுமாயிடுக. இப்போதும் பாடகத்தில் எம் பெருமான் இடத்திருக்கையாலே திருவடியை காட்டி 'எல்லா தர்மங்களையும் விட்டு என்னையே உபாயமாகப் பற்று' என்றும், வலத்திருக்கையாலே அபயமளித்து 'நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன் வருந்தாதே' என்றும் கூறுவான் போல் ஸேவை ஸாதித்து அதன் மூலமாக உலகுக்குத் தானே சரணம் என்பதைக் காட்டுகிறானென்று கொள்ளலாமாகையால், தூதுபோன நிலையில் அநந்ய சரணத்வத்தைக் காட்டினானென்பது மிகப் பொருந்தும்.

அநந்ய போக்யத்வத்தைத் திருவெஃகாவில் எம்பெருமான் சயனித்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருந்து காட்டுகிறான். மகிழ்ச்சியோடு அனுபவிக்கத்தக்க பேரழகிலே கிடந்த நிலையிலன்றோ பகவானுடைய போக்யத்வம் விஞ்சியிருப்பது.

'வெஃகணைக் கிடந்தது' (திருச் - 63) என்ற விடத்தில் - 'ருசி பிறந்தவன்று கிடையழகைக் கண்டு ஆதரிக்கிறார் களென்று திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளி' என்றும்,

''வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே' (திருநெடு- 13) என்ற விடத்தில், ஒரு ராஜகுமாரன் வந்து கிடக்கிறானென்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணலாம் படியாயிற்றுத் திருவெஃகாவில் நாயனார் கண்வளர்ந்தருளும்படி என்றும்,

பாம்பணைப் பள்ளி கொண்ட மாயனார்'' (திருமாலை -20) என்ற விடத்தில் 'கண்வளர்ந்தருளும் போதையழகு ஆச்சர்யமா யாய்த்து இருப்பது.... நிற்றல் இருத்தல் செய்தாராகில் அகலலாம் கிடீர். ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்' என்றும் 'ஆனையிற் கிடந்த கிடக்கை கண்டிடப் பெற்றிலேனந்தோ' என்றும் சொல்லக் கடவதிறே'' என்றும்,

''பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் (திருப் - 2) என்றவிடத்தில் ''இருந்தருளினபோதையிலும் சாய்ந்தரு ளினபோது காணும் அங்கப்ரத்யங்கங்களில் புக்கு அனுபவிக்கலாவது'' என்றும்

'ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்' (திருவாய் 5-8-1) என்னுமிடத்தில் ''அழகு சமைந்த ஒப்பனை நிறம் பெறும்படி கண்வளர்ந்தருளினாய் ..... கிடந்த கிடைக்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படியிருக்கை'' என்றும்

பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்கையாலே கிடையழகு பரமபோக்யமென்பது அறியலாகும்.

இதுகாறும் எம்பெருமான் திருமழிசைப் பிரானுக்கு ஊரகத்தில் நின்று அநந்யார்ஹசேஷத்வத்தையும் பாடகத்தில் இருந்து அநந்ய சரணத்வத்தையும் வெஃகாவில் கிடந்து அநந்ய போக்யத்வத்தையும் காட்டியருளினபடியைக் கண்டோம். ஆக ஆகாரத்ரயம் எனப்படுகின்ற இம்மூன்றுதருமங்களை ஜீவாத்ம ஸ்வரூபமாக, ஆசார்யனுடைய திருமந்திரோபதேசத்தின் மூலமறியப்பெறுதலே கைங்கர்ய நிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ச்ரேஷ்ட ஜன்மமென்பது விளங்கிற்றாயிற்று.

# 13

# நம்மாழ்வார் பாடலில் இறை

தலைமை, நடுவுநிலைமை, முதன்மை என்னும் பண்புகளையும், தங்குதல் என்னும் தொழிலையும் கூறும் இறை என்ற சொல் ஆகுபெயராய் நின்று தலைவனும், நடுவு நிற்பவனும், முதல்வனும் எங்கும் எப்பொழுதும் தங்கி இருப்பவனுமாகிய இறைவனை - கடவுளைக் குறிக்கின்றது. அப்படிப்பட்ட இறைவன் நம்மாழ் வாருடைய பாடல்களில் திருமால் என்று அறியக்கிடக் கின்றமை சிறிதே விளக்கப் படுகின்றது.

## தலைவன்

தலைமையை உடைய கடவுளர் பலர். அவராவார்- பிரமன், சிவபெருமான் , இந்திரன் முதலியோர். இவர்கள் சிலநாள் இருந்து அதிகாரம் செலுத்திப் பின்பு மறைந்து விடுவராகையால் ஆக்கரான (அநித்யரான ) தேவர்கள் எனப்படுவர். இப்படியல்லாமல் வைகுந்தத்தில் திருமகள் நாதனுக்குத் தொண்டு புரிந்து கொண்டிருக்கும் ஆதிசேஷன் கருடன் சேனை முதலியார் தொடக்கமான தேவர்கள் எப்போதும் அழிவின்றியிருப்பராகையால் நித்யசூரிகள் எனப்படுவர். இவ்விருதிறத்தார்க்கும் திருமாலே தலைவர் என்பது ''பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே'' (திருவாய் 4-10-3) என்றும், ''அசைவில் அமரர் தலைவர் தலைவா'' (திருவாய் 5-8-9) என்றும் இவ்வாறு பல இடங்களிலும் அறியக்கிடக்கின்றது. அசைவில்லாத - அழிவில்லாத அமரர் ஆதிசேடன் கருடன் முதலியோர், அவர்களுக்குத் தலைவர் சேனை முதலியார், அவர்களுக்கும் தலைவர் திருமால் என்றவாறு. ''உயர்வற உயர் நலம் உடையவன்''

(திருவாய் 1-1-1) என்று - அத்திருமால் மற்ற எல்லோருடைய குணங்களின் உயர்வும் அறும் படியாக மேன்மேல் உயர்ந்து கொண்டே செல்கிற அறிவு ஆனந்தம் அன்பு முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றவர் என்றும், ''உடன்மர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர் மடமகள் என்றிவர் மூவர்'' (திருவாய் 1-9-4) என்றும் '' தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்'' (திருவாய் 8-1-1) என்றும், பகவானையும் அவன் குணங்களையும் அனுபவிப்பதற்கு வைகுந்தத்தில் தேவிமார்களும், தேவனும் தேவிகளுமான சேர்த்தியில் ஏவிய பணிகளைச் செய்யும் அமரர்களான நித்யசூரிகளும் உண்டென்றும் ஆழ்வார் குறித்தருளுகிறார். இவை எல்லாவற்றையும்விட, ''உளன் சுடர்மிகு சுருதியுள்'' (திருவாய் 1-1-7) என்றும் விளங்கும் வேதத்தின் பொருளாய் உள்ளான் திருமால் என்று முக்கியமான பெருமையைக் கூறுகிறார்.

## முதல்வன்

நம்மையும் நம்மைவிட உயர்ந்த பிரமன் முதலிய தேவர்களையும் படைத்தவர் திருமால் என்பது ''ஒன்றுந்தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லாவன்று நான்முகன் தன்னொடு தேவர் உலகோடு உயிர் படைத்தான் ... திருக்குருகூரதனுள் நின்ற ஆதிப்பிரான்'' (திருவாய் 4-10-1) என்றிவை முதலிய பாடல்களால் அறியலாகும். உலகில் உண்டாகும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முதற்காரணம் துணைக் காரணம் கருத்தா என்ற இம்மூன்று காரணங்களும் திருமாலே என்று '' தான் ஒருருவே தனிவித்தாய் '' (திருவாய் 1-5-4) என்ற இத்தொடரால் பெறப்படுகிறது.

தானே வித்தாய்-முதற்காரணமாய், தானே ஒருருவாய்-துணைக்காரணமாய், தானே தனியாய்- கருத்தாவாய் உள்ளான் வைகுந்தன் என்பது அதன் கருத்து. உலகில் மண் முதலிய முதற்காரணம் குடம் முதலிய காரியத்தை உண்டாக்கும் போது மண்ணின் உருண்டை வடிவம் சிதைந்து விடுவது போல், திருமால் உலகத்தை உண்டாக்கும்போது முதற்காரணமாகிய அவருடைய உருவிற்குச் சிதைவு ஏதும் ஏற்படுவது இல்லை என்பதை '' நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலிற் சிதையாமே (திருவாய் 1-5-2) என்றதனால் அறிகிறோம்.

## நடுவு நிலையுடையவன்

ஒரு பக்கம் சார்தல் என்னும் குற்றம் (பட்சபாதம்) அற்றவன் என்றபடி. 'ஈடும் எடுப்பும் இல் ஈசன்'(திருவாய் 1-6-3) என்றதனால் ஒருவன் பிறவி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் தாழ்ந்தவனென்று அவனை விட்டிடு தலும், ஒருவன் அவற்றால் உயர்ந்தவனென்று அவனைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளுதலுமாகிய குற்றமின்றி எல்லோரும் தன்னை அடைந்து உய்யும்படி நடுவுநிலை யுடையவர் திருமால் என்பது புலனாகும்.

## எங்கும் தங்கியிருப்பவன்

''திடவிசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை படர்பொருள் முழுவதும் ஆய் (ஆக்கி) அவை யவைதொறும், உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்து உளன்'' (திருவாய் 1-1-7) என்றும், ''எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணன்'' (திருவாய் 3-2-7) என்றும் இங்ஙனே உள்ள பல பாடல்களினால் திருமால் தங்கியிராத இடம் ஒன்றும் இல்லையென்றும், '' அளவுடை ஐம்புலன்கள்

அறியாவகையால் அருவாகி நிற்கும்.... கண்ணனை'' (திருவாய் 3-10-10) என்பதனால் அப்படி எங்கும் எப்போதும் தங்கியிருக்கும் திருமால் யாருடைய புலன்களுக்கும் இலக்காவதில்லையென்றும் நாம் அறிய இயலும். இங்ஙனம் எல்லார்க்குள்ளும் தங்கியிருப்பது அவரவர்களுடைய புண்ய பாபங்களுக்குத் தக்கவாறு அவரவர்களை நல்ல காரியங்களிலும் கெட்ட காரியங்களிலும் தூண்டுவதற்காகவே என்பது 'மறுகலில் ஈசனை' (திருவாய் 4-1-10) ''ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த '' (திருவாய் 4-3-2) என்றிவை முதலியவற்றில், தூண்டு மவன் என்னும் பொருள்பட ''ஈசன்'' என்ற சொல்லை ஆண்டதனால் போதரும். ''வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல...... ஆற்றல்மிக்கு ஆளும் அம்மான்'' (திருவாய் 4-5-1) என்று ஈசன் என்ற சொல்லின் பொருளை வெளிப்படையாகவும் அருளியுள்ளமை காணலாம்.

திருமால் எல்லோர்க்கும் தலைவர் என்பதை, ''தீர்த்தனுலகளந்த சேவடிமேல் பூந்தாமம் சேர்த்தி அவையே சிவன்முடிமேல் தான்கண்டு பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை'' (திருவாய் 2-8-6) என்று அர்ச்சுனன் தெளிவு கொண்டும், ''கண்டும் தெளிந்தும் கற்றார் கண்ணற்கு ஆளன்றி ஆவரோ வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள், இண்டைச் சடைமுடி ஈசன் உடன் கொண்டு உசா(வ)ச் செல்லக் கொண்டங்குத் தன்னொடுங் கொண்டு உடன் சென்றது உணர்ந்துமே'' (திருவாய் 7-5-7) என்று சிவபெருமான் மார்கண்டேயனுக்கு ஆயுளை, திருமாலி டத்து அழைத்துச் சென்று அருளும்படி செய்தது கொண்டும் விளக்குகிறார் நம்மாழ்வார்.

*திருமால் பிற தேவதைகளைத் தோற்றுவித்தார் என்பதனை, "கள்வா எம்மையும் ஏழுலகும், நின்னுள்ளே தோற்றிய இறைவ! என்று, வெள்ளேறன் நான்முகன் இந்திரன் வானவர், புள்ளூர்தி கழல் பணிந்து ஏத்துவரே" (திருவாய் 2-2-10) என்று சிவபெருமான் முதலியோரின் வார்த்தையைக் கொண்டு மூதலிக்கிறார்.*

*திருமால் நடுவுநிலையுள்ளவர் என்பதை "மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய்த் தொழுங்காதற் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே!" (திருவாய் 3-1-9) என்று, ஒரு விலங்கென்று விட்டிடாமல் கஜேந்திராழ்வானுக்கு அருள் செய்ததைக் கூறித் தெளிவிக்கிறார்.*

*திருமால் எங்கும் தங்கியிருக்கிறார் என்ற உண்மையை "எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து, இங்கில்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப, அங்கு அப்பொழுதே அவன் வீயத்தோன்றிய, என் சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே" (திருவாய் 2-8-9) என்று நரசிங்காவதார கதையைக் கொண்டு நிரூபிக்கிறார்.*

*"காக்கும் இயல்வினன் கண்ண பெருமான்" (திருவாய் 2-8-9) என்று திருமால் தன்னுருவோடு நின்று காப்பதையே இயல்வாகவுடையவர் என்றும், "புரமொரு மூன்றெரித்து அமரர்க்கும் அறிவியந்து அரனயனென உலகழித்து அமைத்துளன்" (திருவாய் 1-1-8) என்று அரனுக்கு உள்ளே உயிராயிருந்து திரிபுரமெரித்தல் உலகழித்தல் ஆகிய இவற்றையும், அயனுக்கு உள்ளே உயிராயிருந்து அமரர்க்கு அறிவூட்டுதல் உலகைப் படைத்தல் ஆகிய இவற்றையும் செய்வர் என்றும் ஆழ்வார் அருளுகிறார்.*

## திருமாலின் ஐந்து நிலைகள்

''விண்மீதிருப்பாய் மலைமேல்நிற்பாய் கடற்சேர்ப்பாய் மண்மீதுழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்'' (திருவாய் 6-9-5) என்று திருமாலின் ஐந்து நிலைகள் ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்டுள்ளன. பரமபதம் எனப்படும் விண்ணின் மீது நித்ய சூரிகளால் தொழப்படும் நிலை, திருப்பாற்கடலில் பிரமன் முதலிய தேவர்கட்குக் காட்சி தருவதற்காக அரவணையில் சயனித்திருக்கும் நிலை, அங்ஙனம் காட்சி தந்த பிறகு அவர்களுடைய பகைவரைப் போக்குவதற்கும் நல்லோரைக் காப்பதற்கும் இவற்றின் வாயிலாக அறநெறியைப் நிலைநிறுத்துவதற்குமாக இம்மண்மீது இராமபிரானாகவும் கண்ணபிரானாகவும் இங்ஙனே பலவாராகத்தோன்றித் திரிந்து வருந்தும் நிலை, இப்படியல்லாமல் எல்லார்க்குள்ளும் உயிராய் மறைந்துறைந்து அவர்களைத் தூண்டும் நிலை, அவதரித்த காலத்தில் பிறந்து அப்பெருமானை நேரே கண்டு மகிழ முடியாமல் பின்பு பிறந்த நாமும் கண்டுவணங்கி ஏத்திப் பயன் பெறுமாறு திருமலை ஸ்ரீரங்கம் திருக்கச்சி முதலிய இடங்களில், சிலை உலோகம் முதலியவற்றாலான அழகிய திருமேனிகளில் எழுந்தருளியுள்ள நிலை ஆகிய இவ்வைந்துமே முற்கூறிய பாட்டில் இடம் பெற்ற நிலைகளாகும்.

நம்மாழ்வாருடைய பாடல்கள் இவ்வைந்து நிலைகளையும் அங்கங்கே தெரியப்படுத்தவனவாயினும் திருமலை திருவரங்கம் திருக்கச்சி முதலிய திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள அர்ச்சாவதார நிலைகளிலேயே அவற்றுக்கு முழு நோக்கு என்று ஆசார்ய ஹிருதயம் என்ற நூல் கூறும். அவற்றுள்ளும் - ''ஒழிவில் காலமெல்லாம்

உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் தெழிகுரலருவித் திருவேங்கடத் தெழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே'' (திருவாய் 3-3-1) என்று திருவேங்கடத்தெம்பெருமானுக்கே அடிமை செய்யப் பாரித்ததையும், அவ்வடிமை என்னும் பெரும்பயனைப் பெறவேண்டி, ''திருவேங்கடத்தானே, புகலொன்றில்லா அடியேன் உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே'' (திருவாய் 6-10-10) என்று அவன் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றியதையும் நோக்கினால் திருவேங்கடத்தில் உள்ள அர்ச்சா மூர்த்தியிலேயே நம்மாழ்வாருக்கு ஈடுபாடு அதிகமென்று தோன்றுகிறது.

திருவாய்மொழி தவிர ஏனைய திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி என்ற இம்மூன்று பிரபந்தங்களிலும் - ''ஞானப்பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லது'' என்றும், ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது ஒருமா தெய்வம் மற்றுடையமோயாமே'' என்றும் ''தொல்லைமா வெந்நரகில் சேராமல் காப்பதற்கு (ஈன்துழாய் மாயனை யன்றி) இல்லை காண் மற்றோரிறை'' என்றும் அருளியுள் ளதனால் ஆழ்வார் மிக மிக மதித்த இறைவன் திருமாலே யென்பது தோன்றும். ஆகச்சுருக்கமாக ''நம்மாழ்வார் பாடலில் இறை'' என்பது பற்றி என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் எழுதியுள்ளேன். குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருள வேண்டுகிறேன்.

14

# பகவத் விஷயம்

பகவத் விஷயமென்பது - ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்னும் நான்கு திவ்யப்ரபந்தங்களில் ப்ரதானமான திருவாய்மொழிக்கும் அதன் வ்யாக்யானங்களுக்கும் தொன்று தொட்டு வழங்கி வரும் திருநாமமாகும். பகவானாவான்- அகிலஹேயப்ரத்யநீகனாய் கல்யாண குணைகதானனான ஸ்ரீமந்நாராயணன். விஷயமென்பது அறியப்படும் பொருள். ஆக பஹு¯வ்ரீஹிஸமாஸம் (அன்மொழித் தொகை) கொண்ட பகவத் விஷய மென்னும் இச்சொல் ஸ்ரீமந்நாராயணனை விஷயமாக = தன்னாலறியப் படும் பொருளாகக் கொண்ட நூலைக் குறிக்கின்றது என்றதாயிற்று.

இங்ஙனமாயின், வேதங்களும் மற்றுமுள்ள இதிஹாஸ புராணங்களும் ஸ்ரீமந்நாராயணனை விஷயமாகக் கொண்டுள்ளதனால் அவைதாமும் பகவத் விஷய சப்தத்தினால் குறிக்கப்படவேண்டி வருமே என்றால், வராது. பகவாநேவ விஷய:- பகவத் விஷய: என்று அவதாரணத்தைச் (ஏவகாரத்தைச்) சேர்த்துச் சொல்லும் வ்யுத்பத்தியின் மூலமாக, பகவானையே விஷயமாகக் கொண்ட நூலே பகவத் விஷயமென்று கருதுவதனால் என்க. இதனால் வேதங்களில் பகவானேயன்றி யாகதாந ஹோமாதிகளும் இதிஹாஸங்களில் கங்கா காங்கேய ஸம்பவாதிகளும், புராணங்களில் மந்வந்தரங்கள் அரசர் சரித்திரங்கள் முதலியவைகளுமாகிய வேறு விஷயங்களும் வருணிக்கப்படுதலால் அவற்றில்

பகவானை மட்டுமே விஷயமாகக் கொண்டுள்ளமை யென்பது பொருந்தாமையினால் அவையெல்லாம் பகவத் விஷய சப்தத்திற்குப் பொருளாக மாட்டாமை காண்க.

அப்பக்ஷ: வாயுபக்ஷ: என்ற சொற்கள் முறையே நீரையே உணவாகக் கொள்ளுமவனையும் காற்றையே உணவாகக் கொள்ளுமவனையும் குறிக்குமா போலே, பகவத் விஷயம் என்ற சொல்லும் பகவானையே விஷயமாகக் கொண்ட நூலைக் குறிக்கின்றதென்று கொள்ளத்தகும். இப்படி ஏவகாரத்தைச் சேர்த்து பகவாநேவ விஷய: பகவத் விஷய: என்று வ்யுத்பத்தி சொல்லி வேத இதிஹாஸ புராணங்களில் பகவத் விஷய சப்தம் செல்லாதென்று அவற்றைக் கழித்தாலும், மற்றையாழ் வார்கள் அருளிய திருப்பல்லாண்டு முதலான இருபது ப்ரபந்தங்களுக்கும், நம்மாழ்வார்தாமே அருளிச் செய்த திருவிருத்தம் தொடக்கமான மூன்று ப்ரபந்தங்களுக்கும் பகவானையே விஷயமாகக் கொண்டமை மறுக்க முடியாதாகையால் அவற்றையும் பகவத் விஷய சப்தம் குறிக்க வேண்டி வரும் என்ற கேள்வி கழிக்க முடியாதபடி எழுமே எனின்: எழாது- பகவானையே விஷயமாகக் கொண்டமை என்னும் காரணத்தினால் பகவத் விஷய சப்தத்தைத் திருவாய் மொழிக்கும் அதன் வ்யாக்யானங்களுக்கும் யௌகிகமாக (காரணப் பெயராக) மட்டும் கருதாமல் ரூடமாகவும் (இடுகுறிப் பெயராகவும் ) கருதுவதனால் என்க. இப்போது அந்த சப்தம் யோகரூடம் (காரணவிடு குறிப்பெயர் ) ஆகும். ஆக திருவாய்மொழிக்கும் அதன் வ்யாக்யானங்களுக்கும் பெயராகத் தொன்று தொட்டு பகவத் விஷய சப்தம் வழங்கப்பட்டு வருவதனால், அது இடுகுறிப் பெயராந்தன்மையையும் பகவானையே

விஷயமாகக் கொண்டமையினால் காரணப் பெயராந்தன்மையையும் ஏற்று ஸவ்யாக்யானமான திருவாய்மொழியையே குறிக்குமென்றும், மற்ற இருபத்து மூன்று ப்ரபந்தங்களுக்கும் தத்வ்யாக்யானங் களுக்கும் பகவத் விஷய சப்தம் தொன்று தொட்டுப் பெயராக வழங்கப்பட்டு வராமையினால் அது அவ்வனைத்துக்கும் இடுகுறிப் பெயராந்தன்மையைப் பெறாமை காரணமாக அவ்வனைத்தையும் குறிக்கா தென்றும் இசைதல் தகும். 'யோகாத் ரூடி: பலீயஸீ'= காரணப் பெயராதலை விட இடுகுறிப்பெயராதல் வலிமையுடையது என்றொரு ந்யாயமிருப்பதனால் வலிமை குறைந்த காரணப் பெயராந்தன்மையை மட்டும் கொண்டு பகவத் விஷய சப்தத்தை- மற்ற இருபத்து மூன்று ப்ரபந்தங்கட்கும் அவற்றின் வ்யாக்யானங்களுக்கும் பெயராக்குதல் பொருந்தாது.

தாமரை மலருக்கே பெயராகிய பங்கஜமென்னும் சொல்லை, 'பங்காத் ஜாயதே இதி பங்கஜம்' (=சேற்றிலிருந்து உண்டாகிறது) என்ற வ்யுத்பத்தியின் மூலம் அம்மலருக்குக் காரணப் பெயராக மட்டும் கொண்டால், அது அதற்கேயன்றி, சேற்றில் முளைப்பதனால் அல்லி, குவளை முதலியவற்றிற்கும் பெயராக வேண்டிவரும். அச்சொல் தாமரை மலருக்கே பெயராகத் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருவதன் மூலம் அதுதன்னை அதற்கு இடுகுறிப் பெயராகவும் கொள்ளுவதனால், அல்லி குவளை முதலிய மலர்கள் பங்கஜமென்ற சொல்லால் தொன்று தொட்டு வழங்கப்படாததனால் அச்சொல் அம்மலர்களுக்குப் பெயராகாது- என்று வடநூலார் கூறுவர்கள். அதன்படி இந்த பகவத் விஷய சப்தமும் பங்கஜ சப்தம் போலே

யோக ரூடமென்று கொள்ளுதலால், பகவத் விஷயமென்ற சொல் ஸவ்யாக்யானமான திருவாய் மொழியை மட்டும் குறிப்பதில் வருத்தமேதுமில்லை. இதுகாறும் கூறிய 'பகவாநேவ விஷய: யஸ்யஸ:-என்ற வ்யுத்பத்தியும் அதன் விவரணமும், கீர்த்தி மூர்த்தி ந்யாய வேதாந்த மஹாவித்வான் திருநாராயணபுரம் அக்காரக்கனி தி.அ. ஸம்பத் குமாராசார்யர் ஸ்வாமி அருளிச் செய்யக் கேட்டவை.

இனி இச்சொல்லுக்குக் கீழ்க்காட்டிய வ்யுத்புத்தியே யல்லாமல் மற்றும் சில வ்யுத்புத்திகளும் கூற இயலும்: 'விசிநஷ்டி இதி- விஷய:- பகவத: விஷய:- பகவத் விஷய:' என்பது ஒரு வ்யுத்புத்தி. 'வி' என்னும் உபஸர்க்கத்தை முன்னே கொண்ட 'சிஷ்ல் விசேஷணே' என்ற தாதுவிலிருந்து உண்டானது விஷய: என்னும் சொல். விசேஷணமாவது வேறுபாட்டினை அறிவிப்பதன் மூலம் சிறப்பித்தல். ஆக பகவத் விஷயம் என்ற சொல்லுக்கு, பகவானை மிகவும் சிறப்பிக்கின்ற நூல் -அதாவது ஸகல குணவிபூதிகளோடு கூடியவனாகக் கூறிச் சிறப்பிக்கின்ற நூல் என்று தேர்ந்த கருத்து.

விசேஷேண ஸிநோதி- பத்நாதி- ஸ்வஸ்மிந் ப்ரீதிம் உத்பாதயதி இதி- விஷய:-பகவத: விஷய: பகவத் விஷய: என்பது மற்றொரு வ்யுத்புத்தி. 'வி' என்ற உபஸர்க்கத்தை முதலில் பெற்ற 'ஷிஞ்- பந்தநே' என்னும் தாதுவிலிருந்து தோன்றியது இந்த விஷய சப்தம். பந்தனமாவது பிணித்தலாய், தன்னிடத்தில் அதிகமான ப்ரீதியை உண்டு பண்ணுதல், ஆக, பகவத் விஷய: என்னும் சொல்லிற்கு, பகவானுக்கு தன்னிடம் அதிக ப்ரீதியை உண்டாக்கும் நூல் என்பது முடிந்த கருத்து.

இவ்விரண்டு வ்யுத்புத்திகளின் மூலமாக அறியப்படும் பொருள்களை 'நண்ணா வசுரர்' பாசுரத்தில் பொருந்தக் காணலாம்.

நண்ணாவசுரர் நலிவெய்த நல்ல
வமரர் பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணும் நன்முனிவர்
இன்பம் தலைச்சிறப்ப,
பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த்
தன்னைத்தான் பாடி
தென்னாவென்னுமென்னம்மான்
திருமாலிருஞ் சோலையானே.

(திருவாய் மொழி 10-7-5)

திருமாலிருஞ்சோலையானாகிய என் ஸ்வாமி- பகைவர்களான ஆஸுர ப்ரக்ருதிகள் துன்பப்படும் படியாகவும், பக்தர்களான தைவப்ரக்ருதிகள் ஸுகப்படும்படியாகவும், வேதாதிகளால் பகவானுக்குக் கூறப்பட்ட குண விபூதிகள் போதா- அதாவது வேதம் முதலிய நூல்கள் பகவானுடைய எல்லாக் குணங்களையும் விபூதிகளையும் உள்ளபடியே பூர்ணமாகக் கூறவில்லை. பூர்ணமான குண விபூதிகளைக் கூறுகின்ற க்ரந்தமொன்று பகவானுக்கு அமையவேணுமென்று யாரும் எண்ணாதவற்றை பகவானுக்கு எண்ணுகின்ற நன்முனிவர் மிகமிக ஆனந்தப்படும்படியாகவும் பண்நிறைந்த இனியகவிகளான பாடல்களை என்னைக் கொண்டு தன்னைத் தானே பாடுவித்துத் தானும் மகிழ்ந்து அதன் பரிவாஹமாக அப்பாட்டுக்களைத் தென்னாதென்னா என்று ஆலாபனத்தோடு பாடுகிறான்- என்பது இதன் கருத்து.

*இதிலிருந்து- திருவாய்மொழி எம்பெருமானுடைய குண விபூதிகளை உள்ளபடியே ஒன்று விடாமல் அறிவித்து மற்றவர்களைவிட அவனுக்கேயுள்ள வாசியைத் தோற்றுவித்துச் சிறப்பிக்கின்றதென்று விளங்குவதனால் 'விசிநஷ்டீதி விஷய: , பகவத: விஷய:- பகவத் விஷய:' என்ற வ்யுத்புத்தியோடு கூடிய பகவத் விஷய சப்தம் திருவாய்மொழிக்குப் பொருந்து மாற்றையும், எம்பெருமான் ஆழ்வார்க்கு அந்தர்யாமியாயிருந்து திருவாய்மொழியை அவரைக் கொண்டு பாடுவித்து அப்பாசுரங்களைத் தானும் மிகமிகச் சுவைத்து அதற்குப் போக்குவீடாக அவற்றைக் தென்னாதெனா வென்று ஆலாபனத்துடன் பாடுகின்றா னென்று கூறப்படுவது கொண்டு, திருவாய்மொழி எம்பெருமானுக்குத் தன்னிடம் அதிகமான ப்ரீதியை உண்டு பண்ணுகின்றமை தோன்றுவதனால் 'விசேஷேண ஸிநோதி இதி விஷய:, பகவத: விஷய:- பகவத் விஷய:' என்னும் வ்யுத்புத்தியைக் கொண்ட பகவத் விஷய சப்தம் அதற்குப் பொருந்துமாற்றையும் எளிதாக அறியலாம். திருவாய் மொழிக்குப் பொருந்தும் இச்சொல் அதன் விவரணமான வ்யாக்யானங்களுக்கும் பொருந்து மென்பதைத் தனிப்படச் சொல்ல வேண்டியதில்லை.*

*மேலும் 'பகவான் விஷய: யஸ்ய ஸ: பகவத்விஷய:' என்று ஏவகாரத்தைச் சேர்க்காமல் ஒரு வ்யுத்புத்தியைக் கொண்டு இரண்டு பொருள்கள் கூறலாம். 1. இதிலுள்ள பகவான் என்ற சொல்- பகவத் சப்தத்தோடு சேர்ந்த- 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்ற ஸ்ரீமத் த்வாதசாக்ஷரீ மந்த்ராராத்யனாகிய அழகிய மணவாளனை இலக்கணையால் குறிக்கின்றதாகக் கொண்டு, அழகிய மணவாளனை ப்ரதிபாத்ய வஸ்துவாக உடைய நூல்*

திருவாய்மொழி என்னலாம். இதற்கு, ''வான் திகழுஞ்சோலை மதிளரங்கர் வண்புகழ் மேலான்ற தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாயிராமானுசன்' என்று பட்டர் அருளிய திருவாய்மொழித் தனியன் சான்றாகும். ௨. முற்கூறியபடியே வ்யுத்பத்தியும் பகவத் சப்தத்திற்கு அழகிய மணவாளனென்னும் பொருளும் கொண்டு பகவானை- அழகிய மணவாளனை விஷயமாக தேசமாக- மணவாள மாமுனிகள் உபதேசம் சென்று சேருமிடமாக, அதாவது சிஷ்யனாகக் கொண்ட நூல்- ஸவ்யாக்யானமான திருவாய்மொழி என்றும் கூறலாம். விஷய சப்தம் உபதேச பாத்ரமான சிஷ்யனைக் குறிக்கும் என்பது 'திருமந்த்ரத்தை நரன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான், த்வயத்தைப் பிராட்டி விஷயமாக ப்ரகாசிப்பித்தான், சரமச்லோகத்தை அர்ஜுனன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான்' என்று முமுக்ஷுப்படி வ்யாக்யானத்தின் அவதாரிகையில் மாமுனிகள் அருளியது கொண்டு அறியலாகும். விஷயமாக என்பதற்கு உபதேசத்திற்கு இலக்கான சிஷ்யனாகக் கொண்டு என்பது பொருள்.

ஆக இந்நான்கு வ்யுத்புத்திகளின் வாயிலாக ஸவ்யாக்யானமான திருவாய்மொழி (1) பகவானை மட்டுமே அறியப்படும் பொருளாகக் கொண்டமை யாலும், (2) பூர்ணமாக பகவத்குணவிபூதிகளை ப்ரதிபாதித்து பகவானை மிகவும் சிறப்பிக்கின்றமை யாலும் (3) பகவானுக்குத் தன்னிடத்தில் அதிக ப்ரீதியை உண்டு பண்ணுகின்றமையாலும் (4) அழகிய மணவாளனை அறியப்படும் பொருளாகக் கொண்டமை யாலும் (5) அழகிய மணவாளனை உபதேச விஷயமான சிஷ்யனாகக் கொண்டு மணவாள மாமுனிகளால்

காலக்ஷேபம் ஸாதிக்கப்பட்டமையாலும் பகவத் விஷய சப்தத்தினால் குறிக்கப்படுகின்றமை சாலப் பொருந்து மென்று கூறியதாயிற்று.

# 15

# ஞானப்பிரான் - (திருக்கடன்மல்லை)

*ஸ்வோத்ஸங்க துங்கமணிபீட நிவேசதந்யாம்*
*ஆச்லிஷ்யகாடமவநீம் கமநீயஹாஸாம்,*
*நித்யம் ததுந்நத பயோதர சும்பநோத்க :*
*கச்சித் விபாதி ஹ்ருதயே கிடிஸார்வபௌம :*

(தனது மடியாகிய உயர்ந்த ரத்நபீடத்தில் இருக்கச் செய்ததனால் பாக்கியம் பெற்றவளும், அழகிய சிரிப்புடையவளுமாகிய பூமிதேவியை இறுகத்தழுவிக் கொண்டு, எப்போதும் அவளுடைய பணைத்த திருமுலைத்தடத்தை முத்தமிடுவதில் ஆவலுள்ளவரான ஒரு வராஹப் பெருமாள் இருதயத்தில் பிரகாசிக்கிறார்.)

பிரமதேவன் நாரதமுனிவருக்கு உபதேசித்ததாக, பிரம்மாண்ட புராணத்தில் உள்ள மல்லாபுரக்ஷேத்ர மாஹாத்மியம் எட்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. அதில், மல்லாபுரத்தில் அர்ச்சையாக எழுந்தருளியுள்ள வராஹப்பெருமாளைப் பற்றிய வரலாறு வருமாறு :

மல்லாபுரத்தில் அரசாட்சி செலுத்திவந்த ஹரிசேகர சக்ரவர்த்தி அண்மையிலுள்ள திருவிடவெந்தைக்குத் தினமும் சென்று பூவராஹரூபியான நித்யகல்யாணப் பெருமாளைக் காலையில் ஸேவித்துவிட்டு மல்லாபுரத்தில் தனது அரண்மனை சேர்ந்து தினந்தோறும் நாலாயிரமந்தணர்களை ஆராதித்து உணவளித்து அதன் சேஷத்தை தானும் உண்டுகொண்டு வந்தான். இந்த விரதத்தில், அரசனுடைய மிக்க பக்தியையும் பாகவதாராதன விசேஷத்தையும் கண்டு மகிழ்ச்சியடைந்த

திருவிடவெந்தை பூவராஹப்பெருமான் தன்னை விரும்பித் தொழுவார்க்கு மெய்யனாகையாலே, ஒரு நாள் பூமிப்பிராட்டியாரைச் சிறுபெண்ணாக்கித் தனது வலது கையில் பிடித்துக்கொண்டும் மற்றொருகையால் தடியை ஊன்றிக்கொண்டும் மிகவும் முதியவரான பிராமண ரூபத்தில் தள்ளாடிக் கொண்டு ஹரிசேகரமஹாராஜனது அரண்மனைக்கு எழுந்தருளினான். அவரை எதிர்கொண் டழைத்த அரசன் அவரை க்ஷேமம் விசாரித்துத் தன்வீட்டிலேயே உணவருந்தும்படி வேண்டிக்கொண்டு, திருவிடவெந்தைக்கு வராஹப் பெருமானைச் சேவிப்ப தற்காகச் செல்ல முயல, முதியவரான பெருமான் 'மஹாராஜனே! நான் மிகக் கிழவன், வெகுதூரம் நடந்து வந்திருக்கிறேன்: பசிக்கிறது: இந்தச் சிறு பெண்ணும் பசியால் அடிக்கடி மூர்ச்சை அடைகிறாள்: உன்னால் எவ்வளவு சீக்கிரம் உணவளிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அளித்தால் எங்களுயிர் நிற்கும்' என்று சொல்ல, அரசன் 'ஸ்வாமி! எனது விரதத்தின்படி திருவிட வெந்தைக்குச் சென்று பூவராஹப் பெருமானைச் சேவித்து வரும் வரையில் ஏற்படும் தாமதத்தைக் கருணையுடன் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன்' என்று வேண்ட, அதைச் செவியேற்ற பெருமாள் 'மஹாராஜனே! இப்பெண் மிகச் சிறியவள், நானும் தள்ளாத கிழவன்; வெகுதூரம் நடந்தே வந்திருக்கிறோம்; சற்று நேரம் சென்றால் எங்களது பிராணன் நில்லாதென்று முன்பே சொன்னேனல்லவா?' என்று கூற, தரும ஸூக்ஷ்மமறிந்து பாகவத ஆராதனத்தின் பெருமையும் நன்கு அறிந்தவனான அரசன் அப்பிராமணக் கிழவரைத் தன்குலதெய்வமான பூவராஹப் பெருமாளாகவே நினைத்து மாநஸிகமாக ஆராதநத்தைச் செய்து,

அந்தக்கிழவரை அப்போதே அக்கன்னிகையுடன் ஆஸநத்தில் வீற்றிருக்கச் செய்து அறுசுவையுடன் கூடிய திவ்யமான அன்னத்தைப் பரிமாறி, கண்களை மூடிக்கொண்டு ''அமுதுசெய்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்து விட்டு, பின்பு தெண்டனிட்டு எழுந்திருந்து பார்த்தான். அந்தக் கிழவரைத் தன்குலதெய்வமான வராஹப்பெருமாளாகவும் அச்சிறுபெண்ணை அவர் தமது வலது மடியில் இருத்திக் கொண்டிருக்கின்ற பூமிப்பிராட்டியாகவும் கண்ட அந்த ஹரிசேகர மஹாராஜன் முகம்மலரப்பெற்று ஆனந்தக்கடலில் மூழ்கி, ''என்ன பாக்கியம் பெற்றோம் நாம்! மஹா யோகிகளுடைய கண்ணுக்கும் புலப்படாது, நித்ய முக்தர்களுக்கு மட்டும் ஸேவைஸாதிக்கும் ஸர்வேச்வரன், அற்பனான அடியேனிருக்குமிடம் தேடிவந்து அடியேனைக் கொண்டு திருவாராதனம் கொண்டருளும் படியான ஸௌலப்யகுணத்தை வெளியிட்டுக் கொண்டு நிற்கிறான். இவன் நம்குலதெய்வமான பூவராஹப் பெருமானேயாவான்'' என்று நினைத்து ஸந்தோஷாதிசயத்தாலே அடிக்கடி தெண்டன்ஸமர்ப்பித்து, தன்பந்து வர்க்கத்துடன் சேர்ந்து ஸ்தோத்ரம் செய்யலானான். அங்கு ததீயாராதனத்துக்காக வந்த அந்தணர்கள் அனைவரும் பெருமாள் அமுது செய்ததனால் தாங்களும் பூர்ணமாக உண்டவர்கள் போல் திருப்தியடைந்து ஆச்சரியமடைந்தனர். ஆக, திருவிடவெந்தையென்னும் வராஹக்ஷேத்திரத்தில், இடது மடியில் பூமிப்பிராட்டியோடு எழுந்தருளியிருக்கும் நித்ய கல்யாணப் பெருமாளாகிய பூவராஹப் பெருமாளே, திருக்கடல் மல்லையில் சிறு பெண்வடிவமுடைய பூமிப் பிராட்டியை வலது திருக்கையில் ஏந்திக்கொண்டு

பூவராஹப் பெருமாளாக ஸேவை ஸாதிக்குமவர் என்றதாயிற்று.

## வராஹாவதாரம்

*(1) ஹிரண்யகசிபுவின் உடன் பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னும் கொடிய அசுரன் தன் வலிமையால் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது, தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹாவராஹ ரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக்கண்டு பொருது கோட்டினாற் குத்திக் கொன்று, பாதாள லோகத்திற் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற்குத்தி எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்பது வராஹாவதார வரலாறு.*

*(2) இப்பொழுது நடக்கிற ச்வேதவராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மயுகத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில், ஸ்ரீமந் நாராயணன் ஏகார்ணவமாகிய பிரளயஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை மேலேயெடுக்க நினைத்து, மஹாவராஹ ரூபியாகக் கோட்டு நுனியால் பூமியை எடுத்து வந்தனன் என்பதும் வராஹாவதார வரலாறுதான்.*

*(இவ்விருகுறிப்புகளும் - ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ப்ர. அண்ணங்கராசார்யஸ்வாமி எழுதிவெளியிட்டருளிய 'திவ்யப்ரபந்த பகவத் கதாம்ருதம்' என்னும் நூலின்கண் உள்ளன.)*

## வராஹ சரம ச்லோகம்

*''ஸ்திதே மநஸிஸு¬ஸ்வஸ்தே சரீரேஸதி யோ நர:*
*தாதுஸாம்யேஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மாமஜம்*
*ததஸ்தம் ம்ரியமாணந்து காஷ்டபாஷாணஸந்நிபம்*
*அஹம்ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்.''*

பதவுரை : யோநர : - எந்த மனிதன், மநஸி ஸ்திதே ஸதி மனம் அசையாமல் நிலைத்திருக்கும்போது, சரீரே ஸுஸ்வஸ்தே ஸதி - உடல் நோய் ஏதுமின்றியிருக்கும் போது, தாது ஸாம்யே ஸ்திதே ஸதி - வாதம் பித்தம் ச்லேஷ்மம் என்ற தாதுக்கள் மூன்றும் ஒரேயளவாக இருக்கும்போது, விச்வரூபம் - சித் அசித் (உயிர், சடப்பொருள்) ஆகிய எல்லாவற்றையும் தனக்கு உடலாகக்கொண்டவனும், அஜம் ச - பிறப்பு இல்லாதவனுமாகிய, மாம் - என்னை, ஸ்மர்த்தா (ஒரு தடவை) நினைக்கிறானோ, தத : - அங்ஙனம் நினைத்த பிறகு, ம்ரியமாணம் - மரணமடையா நிற்பவனாய், (அது காரணமாக) காஷ்டபாஷாண ஸந்நிபம் - மரம் கல் என்றிவற்றோடு ஒத்து (என்னை, நினைக்க முடியாத நிலையில்) இருக்கிற, தம் மத்பக்தம் - அந்த எனது பக்தனை, அஹம் ஸ்மராமி - நான் நினைக்கிறேன், (தத: - உடனே) பரமாம் கதிம் - மேலெல்லையான பயனை, தம் நயாமி - அவனை அடைவிக்கிறேன்.

இவ்விரண்டு ச்லோகங்களும் வராஹ புராணத்தில் பூமிப்பிராட்டியாரைக் குறித்து வராஹப் பெருமாள் அருளிச்செய்தவை என்பர் பெரியோர். திருவாய்மொழி 'மாலைநண்ணி' (9-10) ஈட்டின் ப்ரமாணத்திரட்டில் 'ஸ்ரீ வராஹபுராணே ஸ்ரீ பூமிம் ப்ரதி ஸ்ரீவராஹ:' என்றுள்ளமை காணத்தக்கது. பூமியை எடுத்துப் பழையபடியே நிலைநிறுத்திய பின்பு, 'ஆத்மாக்கள் மோக்ஷமடைவதற்கு எளிய உபாயம் எது?' என்று வினவிய பூமிப் பிராட்டியாருக்கு ஸ்ரீ வராஹப் பெருமாள் விடையாக அருளிச் செய்தவையாம் இவையிரண்டும். இவற்றிற்குப் பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை தனி ச்லோகமாக எடுத்து வ்யாக்யானமருளிச் செய்துள்ளார்.

முற்காட்டிய 'மாலைநண்ணி' ப்ரவேசத்தின் ஈட்டிலும், பெரியதிருமொழி 'கள்வன் கொல்' (3-7) ப்ரவே சத்தின்கண் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்திலும் இவையிரண்டும் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தழுவி இந்த ச்லோகங்களைச் சற்று விரிவாக அனுபவிப்போம். சரமமான (இறுதியான) அனுஷ்டிப் பதற்கு மிகவும் எளியதான மோக்ஷோபாயத்தை வெளியிடுகையாலே இவை சரமச்லோகமெனப் படுகின்றன. ஸ்ரீக்ருஷ்ணசரமச்லோகம் ஸ்ரீராமசரம ச்லோகம் என்பவற்றையும் இங்ஙனே கொள்க.

## அவதாரிகை

இவ்வராஹசரமச்லோகம் இரண்டினுள் முதல் ச்லோகத்தாலே (1) அனுபவிக்கத்தக்க பரமபத நாதனைப் பெறுதற்குத் தப்பாத உபாயமான ஆச்ரயணத்திற்கு (எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றுதற்குத்) தக்க காலத்தையும், (2) ஆச்ரயித்தற்கு உரிய அதிகாரியையும், (3) ஆச்ரயிக்கும் வகையையும், (4) ஆச்ரயிக்கப்படும் எம்பெருமானையும், இரண்டாம் ச்லோகத்தால் இங்ஙனம் ஆச்ரயித்ததற்காக, ஆச்ரயித்த அதிகாரிக்கு ஆச்ரயிக்கப்பட்ட வராஹப்பெருமான் அருள்செய்யும் பயனையும் அப்பெருமான் கூறியருளுகிறான்.

## ஆச்ரயித்தற்குத் தக்க காலம்

'ஸ்திதேமநஸி, ஸுஸ்வஸ்தே சரீரே, தாதுஸாம்யே ஸ்திதே ஸதி' என்னும் பகுதியால் ஆச்ரயித்தற்குரிய காலம் குறிக்கப்படுகிறது. இம்மூன்றினுள் மூன்றாவது இரண்டாவதற்கும், இரண்டாவது முதலதற்கும் காரணமாகின்றது. வாத பித்த ச்லேஷ்ம தாதுக்கள்

(நாடிகள்?) ஏற்றத்தாழ்வின்றி ஸமமாக இருந்தால், உடல் நோயேதுமின்றி நன்றாக இருக்கும். உடம்பு நோயற்றிருக்குமானால் மனம் நீசமான உலகப் பொருள்களில் செல்லாமல் நிலைத்து நிற்கும் என்றபடி. மனஸ்ஸாவது - அநாதி காலமாகப் பாபமே செய்துவந்த பழக்கமாகிய பெருங்காற்றாலே தள்ளப்பட்டு, தனக்கு இருப்பிடமான இதயகுகையில் ஒரு க்ஷணமும் தங்க முடியாமல் கண்ட கண்ட நீசவிஷயத்தில் புகுந்து திரிகின்றதொரு இந்திரியமாகும். அது நிலைநிற்ப தென்பது - அங்ஙனம் திரியாமல் இதயகுகையிலேயே தங்கியிருத்தலாகும். ஆக, 'ஸ்திதே மநஸி' என்றதனால் மனஸ்ஸு நீசவிஷயங்களில் புகுவதிலிருந்து நீங்கினமை சொல்லப்பட்டதாயிற்று.

'ஸுஸ்வஸ்தே சரீரே ஸதி' என்றதனால் மனம் விஷயங்களிலிருந்து ஒய்ந்தமைக்குக் காரணம் கூறப்படுகிறது. சரீரமானது நோய்கள் அடியோடு நீங்கப் பெற்றுத் தன்னியல்பில் நிற்கும்போது - என்பது இதன் பொருள். நோய்களுக்குப் பிறப்பிடமாயன்றோ சரீரம் இருப்பது! அந்நோய்களில் ஒன்று தலை யெடுத்தால் அதனால் உண்டாகும் துன்பங்களை அனுபவித்து அனுபவித்துத் தனது ஆற்றலனைத்தும் இழந்த மனஸ்ஸானது பகவானை நினைப்பதற்கு- தஞ்சமடை வதற்குத் தகுதியுடையதாக மாட்டாதன்றோ? ஆகை யாலே சரீரம் நோயின்றியிருத்தலென்பது மனஸ்ஸு நிலை நிற்பதற்குக் காரணமாதல் அறியத்தக்கது.

'தாதுஸாம்யே ஸ்திதே' என்ற பகுதியினாலே சரீரம் நோய் தீர்ந்திருப்பதற்குக் காரணம் குறிக்கப்படுகிறது. தாதுக்களாவன - வாத பித்த ச்லேஷ்ம நாடிகள். இவை ஸமமாக இருத்தலாவது - ஒன்றற்கொன்று ஏறுதலும்

தாழ்தலுமின்றி, ஒரேயளவாயிருத்தலாகும். தாதுக்களின் ஏற்றத் தாழ்வுகளால் உடலில் நோய்களுண்டாகும். இவை மூன்றும் அளவுக்கு விஞ்சிக் கொந்தளித்தால் மரணமே நேரிடும். ஆகையால் ஏற்றத்தாழ்வோ அளவுவிஞ்சி ஏறுதலாகிய கொந்தளிப்போ இல்லாமல் தமக்குள் ஒத்து ஓரளவாக நின்றபோது வியாதியோ மரணமோ ஏற்படாதபோது சரீரம் நன்றாகத் தன்னியல்பிலே இருக்கும். அதனால் மனஸ்ஸும் இதரவிஷயங்களில் செல்லாமல் இருப்பதன் வாயிலாக, பகவானாகிய நல்ல விஷயத்தை நினைக்கத் (தஞ்சம்பற்றத்)தகுதியைப் பெறும். ஆக, இது வரையில் கூறியவாற்றால், பகவானை நினைப்பதற்குத் தகுந்த தருணம் குறிக்கப்பட்டதாயிற்று.

## ஆச்ரயித்தற்கு உரிய அதிகாரி

'யோ நர:' என்று - பகவானை ஆச்ரயிப்பதற்குரிய ஜீவாத்மா குறிக்கப்படுகிறான். நரன் - மனிதன். இச்சொல் உபலக்ஷணவகையால், பகவானை ஆச்ரயிப்பதற்குரிய தேவர்களையும் காட்டும். உபலக்ஷணமென்பது ஓரினத்தைச் சேர்ந்த பலவற்றுள் ஒன்றைக் கூறி அதனால் பிறவற்றையும் குறித்தலாகும். இதனால் பகவானை ஆச்ரயிப்பதற்கு (நினைப்பதற்கு) மனஸ்ஸினுடைய பாங்கு ஒன்றுமே போதும். சாதி நடத்தைகளின் ஏற்றமோ தாழ்வோ காரணமுமன்று, தடையுமன்று என்றதாயிற்று. மனத்தின் ஆற்றலும் பகவானை நினைக்கவேணுமென்னும் ஆசையும் இருக்குமாயின் யாராயினும் பகவானை ஆச்ரயிக்க அதிகாரியாகலாம் என்றபடி.

## ஆச்ரயிக்கும் வகை

'ஸ்மர்த்தா' என்று - ஆச்ரயிக்கும் வகை சொல்லப்படுகிறது. வாயினால் வேண்டிக் கொள்வது,

உடலால் தரையில் விழுந்து வணங்குவது, மனத்தினால் நினைப்பது என்று ஆச்ரயிக்கும் வகைகள் மூன்றாகும். அவற்றுள்ளே, மனத்தினால் நினைத்தல் என்ற வகை 'ஸ்மர்த்தா' என்பதனால் குறிக்கப்படுகிறது. ஸ்மரணம் - நினைத்தல்.

## ஆச்ரயிக்கப்படும் எம்பெருமான்

இனி 'விச்வரூபம் ச மாமஜம்' என்று - ஜீவாத்மாவால் ஆச்ரயிக்கப்படும் வராகப்பெருமான் கூறப்படுகிறான். 'விச்வரூப:'-சிதசித்பதார்த்தங்கள் அனைத்தையும் தனக்கு ரூபமாக - உடலாகக் கொண்டவன் என்றபடி. ஜீவாத்மா, ஜடப்பொருள் ஆகிய எல்லாவற்றையும் சரீரமாக உடையவனாகில் சரீரமாகிய இவற்றிலுள்ள குற்றங்கள் சரீரியாகிய பகவானிடமும் தொற்றிக்கொள்ளாவோ என்றால், விடை கூறுகிறது 'அஜ:' என்றசொல். அஜ: - பிறப்பு இல்லாதவன். இது மற்ற தன்மைகளையும் உபலக்ஷணவகையால் குறிக்கின்றது. ஆக, பிறத்தல் இருத்தல் நிலைமாறுதல் வளர்தல் தேய்தல் அழிதல் ஆகிய - ஜடப்பொருளின் ஆறுதன்மைகளும், அறிவின்மை இன்பம் துன்பம் முதலிய ஜீவாத்மாவின் தன்மைகளும், இவ்விரண்டையும் சரீரமாகக் கொண்ட பரமாத்மாவினிடம் இல்லையென்பது 'அஜ:' என்பதன் தேர்ந்த கருத்து என்றதாயிற்று.

## எம்பெருமானுடைய உபாயத்வமும் உபேயத்வமும்

'விச்வரூப:', 'அஜ:' என்ற இவ்விரண்டு சொற்களால் எம்பெருமானுடைய மோக்ஷோபாயத்வமும் உபேயத்வமும் கருதப்படுகின்றன. உடலின் நன்மைக்கு உயிர்

உபாயமாக இருப்பது போல, ஜீவாத்மாவாகிய தன்னுடலின் மோக்ஷஸுகத்திற்குக் காரணமாகிய பரமாத்மா மோக்ஷோபாயமாகிறானென்பதும், பிறவி முதலியனவும் அறிவின்மை முதலியனவுமாகிய குற்றங்களையுடைய ஜீவாத்மாவுக்கு உபேயன் - ப்ராப்யன் (அக்குற்றம் தீர்க்கைக்கும் தீர்ந்து அனுபவித்துக் கைங்கர்யம் செய்கைக்குமாக அடையப்படுமவன்) அக்குற்றங்கள் ஏதுமில்லாத பரமாத்மாவாகவே இருக்க வேண்டுமாகையால் பரமாத்மா உபேயனுமாகிறானென்பதும் கருதத்தக்கது. 'விச்வரூபம் ச' என்ற சகாரத்தினால் (உம்மையினால்) ஜீவாத்மாவுக்குச் செய்யத் தக்க நன்மையையும் போக்கவேண்டிய தீமையையும் அறியும் அறிவும், அறிந்தபடியே தீமையைப் போக்கி நன்மையைச் செய்யும் ஆற்றலும் குறிக்கப்படுகிறது. ஸ்ரீ வராஹப்பெருமான் 'மாம்' என்று தன்னைக் காட்டுகிறான். இதனால், யாரும் கண்டு ஆச்ரயிக்க முடியாத பரமபதத்திலுள்ள திருமேனியை இவ்வுலகிலுள்ள பன்றியுருவோடு ஸஜாதீயமாக்கிக் கொண்டு, நாம் ஊனக்கண்ணால் கண்டு பற்றும் படியிருக்கிற ஸௌலப்யமும் (எளிமையும்) மிகத் தாழ்ந்த பன்றியுடலில் மிக்க விருப்பங் காட்டும்படியான ஸௌசீல்யமும் (நீர்மையும்) காட்டப்பட்டதாகக் கொள்க.

## ஆச்ரயித்தவனுக்குப் பரமாத்மா அருளும் பயன்

இனி 'ததஸ் தம்' என்றுதொடங்கும் இரண்டாம் ச்லோகத்தால், தன்னை ஆச்ரயித்த ஜீவாத்மாவுக்கு ஸ்ரீவராஹப்பெருமான் உண்டுபண்ணியருளும் ப்ரயோஜனம் சொல்லப்படுகிறது.

'தத:' -விச்வரூபனாகவும் அஜனாகவும் என்னை ஒரு தடவை நினைத்த பின்பு. இத்தால், ஒரு தடவை இப்படி நினைத்தலாகிய இந்த ப்ரபத்தி, எம்பெருமானை இடைவிடாமல் தொடர்ந்து நினைத்தலாகிய பக்தியோகத்தைக் காட்டிலும் வேறானதென்று காட்டப்படுகிறது. மிகவும் சிரமப்பட்டு எத்தனையோ பிறவிகள் பிறந்து தொடர்ந்து நினைக்கும் உபாயமாகிய பக்தி வேண்டா. ஒரு தடவை நினைத்தலாகிய ப்ரபத்தியே மோக்ஷம் பெறுதற்குப் போதும் என்று காட்டினபடியாம். 'தம்' - முற்கூறியபடி உபாயமாகவும் உபேயமாகவும் என்னை நினைத்த அதிகாரியை. இதற்கு ஸ்மராமி நயாமி என்பவற்றோடு அந்வயம்.

இப்படிப்பட்டவனுக்குப் பயனளிப்பது எப்போது என்றால், 'ம்ரியமாணம்' என்றதனால் அதற்கு விடைகூறப்படுகிறது. அந்த அதிகாரி மரணமடையும் தருணத்தில் பயன்தருகிறேனென்கிறான் பகவான்.

'து' என்றதனால் அவன் மரணமடையும் ஸமயத்திலுள்ள வேறுபாடு சொல்லப்படுகிறது. அவ்வேறுபாடு - 'காஷ்ட பாஷாண ஸந்நிபம்' என்றதனால் தெரிவிக்கப்படுகிறது. அடியோடு அறிவு நடையாடாத கட்டை, கல் ஆகியவற்றோடு மிகவும் ஒத்திருத்தலே அவ்வேறுபாடு என்றவாறு. இறக்கும் தறுவாயில், மரக்கட்டை கல் என்றவற்றோடு ஒத்திருந்தால் அதுவே போதுமானது. என்னை நினைத்தலாகிய அந்திம ஸ்மரணமும் தேவையில்லை. நான் அவனுக்குப் பயன் தருகிறேன் என்கிறான் ஸ்ரீவராஹப்பெருமான்.

சாத்திரங்கள் ஜீவன் மரணஸமயத்தில் எம்பெருமானை நினைத்தால்தான் மோக்ஷமடைய முடியுமென்று கோஷியாநிற்க, அந்திமஸ்மரணம் இல்லாமலேயே

மோக்ஷம் தருவேனென்று எம்பெருமான் கூறுவது அச்சாத்திரங்களோடு முரண்படுமதன்றோ என்றால் - முரண்பாடேதும் இல்லை. பக்தியோகத்திற்கு அந்திமஸ்மரணம் வேணும். ப்ரபத்திக்கு அது வேண்டாம் என்றபடி. அந்திமஸ்மரணமிருந்தே தீரவேண்டு மென்றால் இங்கு அதுவும் உண்டென்கிறான் 'அஹம் ஸ்மராமி மத்பக்தம்' என்றதனால். அவன் என்னை நினைக்க முடியாத மரணஸமயத்தில் அவனுக்குப் பிரதிநிதியாக அவனை நான் நினைக்கிறேன். என் நினைவே அவனுக்குப் பயனளிக்க வல்லதென்கிறான். பயிரின் பயனைப் பெறுவதற்காக உழும் குடியான வனைப் போலே ஜீவனுடைய தொண்டினை ஏற்று மகிழ நினைக்கும் நானே அவனைப் பெறுவதற்காக, அவன்இறக்கும் தறுவாயில் அவனை நான் நினைக்கிறேன் என்றபடி. 'அஹம் ஸ்மராமி' என்ற நிகழ்காலத்தினால், அவன் என்னை நினைத்தவுடன், நான் அவனை நினைக்கத் தொடங்கி, எப்போதும் ஓயாமல் அவனை நினைக்கக்கடவேனென்று காட்டினபடியாம். 'ஸ்மராமி' என்று பகவானுடைய நினைவுத் தொடர்ச்சி கூறியதனால், 'நர: ஸ்மர்த்தா' என்று கூறப்பட்ட ஜீவாத்மாவின் ஸ்மரணம் ஒரே தடவைதான் என்பது பெறப்பட்டது. இப்படி நீரே வலியப்புகுந்து அவனை நினைக்கைக்கு அவனிடமுள்ள சிறப்பு என்னவெனில், 'மத்பக்தம்' என்பதனால் அவனது சிறப்பைக் காட்டுகிறான். அவன் என்னுடைய பக்தன். அவன் என்னிடம் வைத்துள்ள பக்தி ஸ்வயம் ப்ரயோஜனரூபமானது. அந்த பக்திக்கு ப்ரயோஜனமாக அவன் எதையும் என்னிடம் வேண்டுமவனல்லன். மோக்ஷம் எப்படி ஸ்வயம் ப்ரயோஜனமானதோ, அப்படியே அவன் என்னிடம்

செலுத்தும் பக்தியும் ஸ்வயம் ப்ரயோஜனமானதே. ஆக பக்தி அவனுக்கு மோக்ஷோபாயமாகாமல் நானே மோக்ஷோபாயமாகையால், அவன் என்னை நினைக்க முடியாத மரணத்தருணத்தில் நானே அவனை நினைத்து மோக்ஷத்தை அளிக்கிறேன் என்று அருளிச் செய்தானாயிற்று.

எம்பெருமான் தனது பக்தனாகிய ப்ரபந்நாதிகாரியை நினைத்தலாவது என்ன வென்றால் - 'இந்த நமது பக்தன் தன்முயற்சியாகிய கருமயோகம் முதலிய மோக்ஷோ பாயங்களில் கைவையாமல், தன்பொறுப் பனைத்தையும் நம்மிடத்திலேயே ஒப்படைத் திருக்கிறான். அதனால் இவனுக்கு மோக்ஷமளிப்பது நமது பொறுப்பாகும். இவன் இனிமேல் மரண வேதனையனுபவிப்பதோ யமன்முகத்தில் விழிப்பதோ, மீண்டும் கருக்குழியில் விழுவதோ இவற்றில் ஏதுமின்றி, இவன் பரமபதம் சென்று நமக்கு எப்போதும் தொண்டு புரிந்து இன்புறும்படி செய்யக்கடவேன்' என்று ஸங்கல்பம் செய்துகொள்வதேயாகும். இதுவே 'அஹம் ஸ்மராமி' என்பதனால் குறிக்கப்படுகிறது என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிறார்.

இங்ஙனம் தன்பக்தனாகிய ப்ரபந்நன் திறத்தில் ஸங்கல்பம் செய்த எம்பெருமான் அவனுக்கு உண்டாக்கும் ப்ரயோஜனத்தை வெளியிடுகிறான் - 'நயாமி பரமாம் கதிம்' என்றதனால். 'கம்யதே இதி கதி:' என்ற வ்யுத்பத்தியின் வாயிலாக கதி: என்னும் சொல் அடையப்படும் பிரயோஜநத்தைக் காட்டுகிறது. அறமும் பொருளும் இன்பமும் வீடும் (தேஹம் விடுபட்டுத் தன்னைத் தான் அனுபவிக்கும் கைவல்யமும்) சிலர் பெறும் ப்ரயோஜனமாயினும் ப்ரபந்நனுக்கு அவை

ப்ரயோஜனமாக மாட்டாமையாலே அவற்றை நீக்குதற்காக, கதி: என்பதற்கு பரமா என்று ஓர் அடைமொழி கொடுத்திருக்கிறான் பகவான். பரமா கதி: என்பதற்கு, இனி இதற்கு அவ்வருகு உயர்ந்ததொரு ப்ரயோஜனமில்லையென்னும்படியான உயர்ந்தப்ர யோஜனமான பகவத்கைங்கர்யமே பொருளாகத்தக்கது. 'பரமாம் கதிம் நயாமி' மிகவுயர்ந்த ப்ரயோஜனமான பரமபதநாதனுக்குச் செய்யும் கைங்கர்யத்தை என் பக்தன் அடையும்படி நானே செய்கிறேன். ஆளிட்டு அந்திதொழுவது போல், ஆதிவாஹிகர்களின் (பரமபதத் திற்கு அழைத்துச் செல்லும் அதிகாரிகளின்) கையில் இவனைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். இலங்கையில் இருந்தபிராட்டியைப் புஷ்பகவிமானத்தில் இராமபிரான் தானே எடுத்து ஏற்றிக்கொண்டு சென்றாற்போலே, எனது பக்தனை நானே எடுத்து எனது உத்தரீயத்தலைப்பாலே மூடிக்கொண்டு பரமபதம் சென்று கைங்கர்யத்தில் மூளும்படி செய்யக்கடவே னென்கிறான் பரம காருணிகனான ஸ்ரீ வராஹப் பெருமான்.

## ஸ்ரீ வராஹப்பெருமான் கண்ணபிரானையும் இராமபிரானையும் விடக் கருணையுள்ளவர்

கண்ணபிரான் 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்னொருவனையே தஞ்சமென்று அத்யவஸித்திரு (திடமாக எண்ணியிரு) என்று பெறற்கரிய அத்யவஸாயரூபமான ப்ரபத்தியை விதித்தான் (கட்டாயப் படுத்தினான்). எத்தனையோ பிறவி பிறந்து அனுஷ்டிக்கவேண்டிய கருமயோகாதிகளால் பெறத்தக்க மோக்ஷம் ஒரே க்ஷணத்தில் அநுஷ்டிக்கப்படும்

ப்ரபத்தியினால் எப்படிக் கிடைக்கும்? என்று மனம் தளும்பியிருக்குமேயன்றி, இத்தகைய ப்ரபத்திக்கு இரங்கி எம்பெருமான் மோக்ஷம் தந்தே தீருவன் என்னும் திடமான எண்ணம் உண்டாவது கஷ்டம்.

இராமபிரான் 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம்'-தோழனென்ற பாவனையோடு (வெளிவேஷத்தோடு) நானிருக்குமிடம் தேடி வந்தவனை விடமாட்டேன் - என்று தானுள்ள இடத்திற்கு வரும்படி கூறினான். எம்பெருமான் இருக்குமிடத்திற்குச் செல்லுதலென்பது கண்ணபிரான் விதித்த அத்யவஸாயத்தைக்காட்டிலும் எளிமையானது. இதுகாரணமாகவே எம்பெருமானார் - தமக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தந்த இராமபிரான் விக்ரஹத்தை ஸேவித்து 'இந்த மாமேகம் சரணம் வ்ரஜ' என்று தேவையிடாதார் எழுந்தருளினார்' (தேவையிடாதார் - அத்யவஸாய ரூபமான கஷ்டமான காரியத்தைக் கட்டாயப் படுத்தாத இராமபிரான்) என்று அருளிச் செய்தமை (திருவாய்மொழி 3-6-8) ஈட்டில் ஸேவிக்கலாகும். இதனால் ஸ்ரீக்ருஷ்ணனைக் காட்டிலும் சக்ரவர்த்தி திருமகன் கருணையுள்ளவன் என்றதாயிற்று.

ஸ்ரீ வராஹப்பெருமானோவெனில் - ஒருவன் தனது ஆயுட்காலத்தில் உடலும் உள்ளமும் பாங்காகவுள்ளதொரு ஸமயத்தில் என்னை விச்வரூபனாகவும் அஜனாகவும் ஒரு தடவை நினைத்தானாகில், அவனுடைய இறுதிக்காலத்தில் நானே அவனை நினைத்து அவனுக்கு எந்தத் தேவையும் இடாதே பரமபதத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று கைங்கர்யத்தைத் தருவேனென்று அருளிச் செய்தான். அத்யவஸாயத்தையோ தானிருக்குமிடத்திற்கு வருதலையோ விதித்த கண்ணபிரானைப் போலவும்

இராமபிரானைப் போலவும் அல்லாமல், ஒரே தடவை தானிருந்தவிடத்திலேயே இருந்துகொண்டு ஒருவன் தன்னை நினைப்பானாகில் அவனுக்கு மோக்ஷம் தந்தருளுவதாக ப்ரதிஜ்ஞை செய்தருளிய ஸ்ரீ வராஹப் பெருமானை விடப் பரமகாருணிகன் வேறொருவன் உண்டோ?

இதற்குச்சேர - 'கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்' (திருவாய் 9-1-9) என்றும், 'தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே' (திருவாய் 3-6-8) என்றும் கண்ணனையும் இராமனையும் ருசியில்லாமல் சப்பென்று குறித்தருளிய நம்மாழ்வார் திருவிருத்தம் 99ல், 'இருங்கற்பகம் சேர் வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் ஞானப் பிரானை யல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே' (நல்லது - ஹிதம் - மோக்ஷோபாயம்) என்று - ஸ்வர்க்கத்திலுள்ள தேவர்களுக்கும் பரமபதத்திலுள்ள நித்ய முக்தர்களுக்கும் இப்பூமியிலுள்ள மனிதர்களுக்கும் ஞானப்பிரானாகிய ஸ்ரீ வராஹப் பெருமானையே புருஷார்த்தோபாயமாக, இன்சுவைமிக மேளதாளத்துடன அருளிச் செய்துள்ளதை அனுஸந்தித்தல் தகும். ஸ்ரீ வராஹப்பெருமானை ஞானப்பிரான் என்றருளியதும் குறிக்கொள்ளத் தக்கது. 'ஸ்திதேமநஸி' இத்யாதியாலே 'உத்தாரக ஹேதுவான ஜ்ஞாநத்தை உபதேசித்த ஸ்வாமி' என்று ஸ்வாபதேசவ்யாக்யாதாவாகிய அழகிய மணவாளச்சீயரும், 'பேற்றுக் கடியான ஜ்ஞாநம் அவன்கையிலே உண்டென்கை' .. 'பரரக்ஷணமான ஜ்ஞாநமுள்ளது அவனுக்கேயாயிற்று' என்று தத்தம் வ்யாக்யானங்களில் நம்பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் 'ஞானப்பிரான்' என்பதனை

விவரித்தருளினமை காண்க. இவற்றில் ஸ்வாபதேச வுரையின்படி, உத்தாரகஹேதுவான ஜ்ஞானமாவது - விச்வரூபனாகவும் அஜனாகவும் வராஹப் பெருமானை நினைத்தலாகிய ஜ்ஞானம் என்றும், மற்ற இருவரின் வ்யாக்யானத்தின்படி - 'அஹம் ஸ்மராமி' என்று குறிக்கப்பட்ட முற்கூறிய (பகவத்) ஸங்கல்பரூபமான ஜ்ஞானம் என்றும் வாசிகாணத்தக்கது. இங்ஙனம் மற்ற இருவரைவிட வராஹப் பெருமாளுக்குள்ள காருணி கத்வத்தின் சிறப்பைக் கூறியதனால் மற்ற சரமச் லோகங்கள் இரண்டினைக் காட்டிலும் வராஹ சரமச்லோ கத்திற்குள்ள சிறப்பின் மிகுதி அறியவெளிதாகும்.

## வராஹாவதாரத்தின் அளவு

ஸ்ரீ வராஹப் பெருமாளுடைய திருமேனி மிகப்பெரியது. 'நெடுவிசும்பணவும் பன்றியாய் அன்று பாரகம் கீண்ட பாழியான்' (பெரியதிருமொழி 1-1-4) என்ற விடத்தில் 'நெடுவிசும்பணவும்' என்பதற்கு 'ஆகாசாவகாசம் வெளியடையும்படி விம்ம வளர்ந்த' என்றுள்ள - பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானங் கொண்டு ஸ்ரீ வராஹப் பெருமானின் திருமேனிப் பெருமை அறியப்படுகிறது.

த்ரிவிக்கிரமப்பெருமானுடைய திருமேனியைக் காட்டிலும் ஸ்ரீவராஹப் பெருமாளின் திருமேனி மிகப்பெரிது. இது தன்னைப் பொய்கையாழ்வார் அருளிய 'பிரான் உன்பெருமை பிறராரறிவார், உராயுல களந்த நான்று - வராகத்து எயிற்றளவு போதாவாறென்கொலோ எந்தையடிக்கு அளவுபோந் தபடி' (முதல்திரு 84) என்ற பாசுரம் கொண்டு அறிதல் தகும். இப்பாசுரம் எம்பெருமானை விளித்து ஆழ்வார்

அருளிச்செய்வதாக அமைந்துள்ளது. 'எம்பெருமானே! நீ எல்லாரோடும் உராய்ந்துகொண்டு உலகத்தையளந்த காலத்தில் என் ஸ்வாமியான உன்னுடைய திருவடியளவோடு ஒத்துப் பெரியதாயிருந்த பூமியானது, வராஹாவதாரம் செய்த உன்னுடைய கோரப்பல்லின் ஒரு மூலையளவுக்கும் போதாததாக (அத்தனைச் சிறியதாக) இருந்தவகை எங்ஙனே? உன்னுடைய பெருமையை மயர்வற மதிநலமருளப்பெற்ற நான் அறிவேனேயன்றிப் பிறர் ஆர் அறிவார்?' என்பது இதன் பொருள். உலகளந்த பெருமாளின் திருவடியைவிட உலகிடந்த வராகப்பெருமானின் கோரப்பல் பெரிதென்று ஸூசிப்பிக்கிற இப்பாகரத்தின்வாயிலாக ஸ்ரீ வராஹன் திருமேனி திரிவிக்கிரமன் திருமேனியை விட மிகவும் பெரிதென்று கொள்ளத்தகும்.

## எம்பெருமானுடைய ஸர்வஸ்வம்

'இந்த ச்லோகத்வயமும் எம்பெருமானுடைய ஸர்வஸ்வம்' என்று பெரியதிருமொழி 3-7 ப்ரவேசத்தில் பெரியவாச்சான்பிள்ளையும், திருவாய்மொழி 9-9 ப்ரவேசத்தினீட்டில் நம்பிள்ளையும் - வராஹசரம ச்லோகங்கள் இரண்டினையும் எம்பெருமானுடைய பூர்ணமான ஸொத்தென்று கொண்டாடியருளிச் செய்துள்ளமை மிக முக்கியமாகக் கருதத்தக்கது. ச்லோகத்வயம் ஸர்வஸ்வமென்ற ஆசார்யர்களுக்கு ச்லோகார்த்தம் ஸர்வஸ்வம் என்றதில் நோக்கு. ஒருவனுடைய ஸொத்து அவன் இன்புறவாழ்வதற்குக் காரணமாகின்றது. அது போன்று இந்த ச்லோகங்களில் கூறப்படுகின்ற - ஜீவாத்மா பரமாத்மாவை ஸ்மரிக்கும் ஸ்மரணமாகிய ப்ரபத்தியும், அது காரணமாக

ஜீவாத்மாவின் அந்திமகாலத்தில் அவனைப்பற்றிப் பரமாத்மா ஸ்மரிக்கும் ஸங்கல்பமும், அதன் பின்பு பரமாத்மா ஜீவாத்மாவைப் பரமகதிக்கு அழைத்துச் செல்லுதலும் ஆகிய எம்பெருமானுடைய ஸொத்துக்கள் அப்பரமாத்மா பரமபதத்தில் (கைங்கரியத்தைக்கொண்டு) இன்புற வாழ்வதற்குக் காரணமாகின்றன. ஆக இம்மூன்றினையும் அறிவிக்கும் இந்த ச்லோகத்வயத்தை எம்பெருமானுடைய ஸர்வஸ்வம் என்று அருளிச் செய்தார்களாயிற்று.

ஸ்ரீவராஹாவதாரம் என்றைக்கோ தீர்த்தம்ப்ரஸாதித்துவிட்டாலும் (நடைபெற்று முடிவுபெற்றாலும்) அப்பெருமான் அர்ச்சாரூபனாய் எழுந்தருளியிருந்து - தன்ஸர்வஸ்வமான ச்லோகத்வயத்தின் பொருள்களை மெய்ப்பித்துக் கொண்டு திருக்கடல்மல்லையில் ஸேவை ஸாதிக்கிறான் ஆகையால் அவனைச் சென்று சேவித்து 'சாய்கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்' என்கிற படியே, இம்மையில் பகவதனுபவமும், காலக்ரமத்தில் வானவர்நாட்டில் பகவதனுபவமும் பெற்று வாழ்வு பெறுவோமாக.

ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில் கொண்டான்
வானத்திலவர்முறையால்மகிழ்ந்தேத்திவலங்கொள்ள
கானத்தின் கடல்மல்லைத்தலசயனத்துறைகின்ற,
ஞானத்தினொளியுருவை நினைவார் என்நாயகரே.

(பெரிய திருமொழி 2-6-3)

(வராஹவுருக்கொண்டு அவதரித்து (பூமியை எடுத்து அதன் அபிமாநிநியான) பூதேவியின் அழகை அனுபவித்தவனாய், ஸ்வர்க்கத்திலுள்ள தேவர்கள் மகிழ்ச்சியடைந்து முறைப்படியே துதித்து வலம்

வருகைக்குத் தகுதியாக, 'கானத்து மேய்ந்து களித்துவிளையாடி' (பெரியாழ்வார் திரு 2-10-9) என்கிறபடியே கானத்தைத் தன்னிருப்பிடமாகக் கொண்டவனாயிருந்து, இப்போது கடல்மல்லைத் தலசயனம் என்னும் திவ்யதேசத்தில் நித்யவாஸம் செய்யாநின்ற ஜ்ஞானவொளிபொருந்திய திருமேனி யுடைய பெருமானை, 'விச்வரூபம் ச மாமஜம் ஸ்மர்த்தா' என்கிறபடியே நினைப்பவர்கள் அடியேனுக்குத் தலைவர்கள்) என்று திருமங்கை ஆழ்வார் அருளிய பாசுரத்தை இப்போது அனுஸந்தித்தல் தகும்.

# 16

# அருளிச்செயலில் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியின் அரிய பாடங்கள்

ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பெருமாள் கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி பரம க்ருபையுடன் லோகோபகாரார்த்தமாக நாலாயிர திவ்ய ப்ரபந்தம் ஸ்தோத்ரங்கள் ரஹஸ்யக்ரந்தங்கள் முதலியவற்றிற்கு எளிய நடையில் மிகவும் விரிவான வ்யாக்யானங்களை அருளிச் செய்து அவற்றைப் பல தடவைகள் அச்சிட்டும் வெளியிட்டிருக்கிறாரென்பது இதற்குள் யார்க்கும் மறந்திராதென்று நினைக்கிறேன். அவற்றுள் 'திவ்யார்த்த தீபிகை' என்னும் ஸார்த்தக நாமதேயம் பெற்ற திவ்யப்ரபந்தவ்யாக்யானத்தின் கண், அம்மஹான் பூர்வாசார்ய வ்யாக்யானங்களுக்குப் பொருத்தமாகவும் தமிழிலக்கணத்திற்குத் தகுதியாகவும் நூற்றுக்கணக்கான பாடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தக்க சான்றுகளுடன் நிரூபித்திருக்கிறார். இவற்றையெல்லாம் பல பெரிய வித்வான்களுடையவும் பழைய ஓலைச்சுவடிகளுடையவும் ஸம்வாதத்தைப் பெற்ற பிறகே தாம் அச்சிட்டு வெளியிட்டிருப்பதாக அடியேனிடம் பல முறைகள் தெரிவித்திருக்கிறார். அவை தம்முள் ஒரு சிலவற்றை ஸ்தாலீபுலாக ந்யாயத்தில், வித்யார்த்திகளுக்கு மிக உதவியாக இருக்குமென் றெண்ணங்கொண்டு, எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

***(1) பெரியாழ்வார் திருமொழி 4-9-1,2***

பல புத்தகங்களில் இங்கு 'திருமங்கை மலர்க்கண்ணும்', என்றும், 'மலர்க்கண்வைத்த, என்றும்

*ககரவொற்று இரட்டித்த பாடமே காண்கிறது. அனுஸந்தானத்திலும் அப்படியே. இது 'மலர்போன்ற கண் - மலர்க்கண்' என்று உவமைத் தொகையைக் கருதியிருந்தால் பொருந்தும். வ்யாக்யாதாவான விசதவாக் சிகாமணிகள் இவ்விரண்டிடங்களிலும் முறையே பெரிய பிராட்டியாருடைய விகஸிதமான (=மலர்ந்த) 'திருக்கண்களின் நிறத்தையும்' என்றும், 'பெரிய பெருமாள் திருக்கண்கள் ஆச்ரிதரைக் கண்டவாறே மலர்ந்தபடி' என்றும் விவரித்து, மலர்ந்த கண்-மலர்கண் என்ற வினைத்தொகையே விஷ்ணுசித்த விவக்ஷித மென்பதைக் குறிப்பாகக் காட்டியருளியிருக்கிறார். ஆதலால் 'மலர்கண்' என்ற ககரவொற்று இரட்டியாத பாடமே சிறந்தது.*

## *(2) திருமாலை 44*

*'விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கன்றருளையீந்த கண்ணறா உன்னையென்னோ களைகணாக் கருதுமாறே' என்பது நடைமுறையிலுள்ள பாடம். ஒரு புத்தகத்தில் 'கண்ணுறா' என்ற பாடமும் தென்படுகிறது. இவ்விரண்டும் பொருந்தவழியில்லை. 'அவன் உபகரித்த தசையிலே ப்ரீதி தலைமண்டையிட்டுச் சொல்லு கிறவார்த்தை' என்று இவ்விடத்தில் பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானம் ஸேவிக்கலாகிறது, உபகாரம் செய்த ஸமயத்தில், 'கண்ணுள்ளவன்' (=தயையுள்ளவன்) என்று சொல்ல வேண்டியிருக்க, 'தயை யில்லாதவன்' என்று சொல்லுகிறது - ப்ரீதி அதிகமாகி வ்யதிரேக லக்ஷணையினால் சொல்லுகிற வார்த்தை என்பது இதன் பொருள் (ஸங்கீத வித்வான் ஒருத்தர் தன்னாற்றலை யெல்லாம் காட்டிக் கேட்போர்க்கு இன்பம் மிகப்*

பாடாநிற்க, ரஸிகர்பெருமான் ஒருவர் அது கேட்டு மிகவும் ரஸித்து, 'ஸரஸ்வதீகடாக்ஷம் பூர்ணமாகப் பெற்ற பாக்யவானே, எங்களனைவரையும் இப்படி இன்பக்கடலில் அமிழ்த்தி விட்டீரே' என்ற பொருளில் 'அடபாவீ கொன்று விட்டாய்போ' என்று சொல்வது போல் இதைக் கொள்க.) ஆகவே இங்குள்ள கண்ணறா அல்லது கண்ணுறா என்னும் சொல் விபரீதலாக்ஷணிகம் என்று வ்யாக்யாதா குறித்தருளியபடியாயிற்று.

தயையில்லாதவனென்ற இப்பொருளில் (கண் அறா-) தயை நீங்காத என்பதைச் சொல்லும் 'கண்ணறா' என்ற பாடம் பொருந்த வழியில்லை; நேர் முரணாயிருக்கையாலே. இனி தயை தங்காத தயையில்லாத என்னும் பொருளுடைய 'கண்ணுறா' என்ற பாடம் பொருந்த வழியுண்டே எனின்- கேண்மின், எல்லாத் திவ்யதேசங்களிலும் 'விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கன்றருளையீந்த' என்ற மூன்றாமடியில் நிறுத்தாமல், 'தெள்ளியீர் தேவர்க்கெல்லாம் தேவராயுலகங்கொண்ட, ஒள்ளியீர் (திருக்குறு - 9) என்றும் 'கொந்தார்பைம்பொழில் சூழ்குடந்தைக் கிடந்துகந்த, மைந்தா' (பெரிய திருமொழி-8-9-5) என்றுமுள்ள இடங்களில்போல, 'ஆனைக்கன்றருளை யீந்த கண்ணுறா' என்று நான்காமடியிலுள்ள முதற்பதம் ஸேவித்தே நிறுத்துவதனால் 'கண்ணுறா' என்பதனை ஸம்போதனமாகக் கொள்வதே முறையாகும். ஆனால் கொள்ளலாமேயெனில்-கொள்ள அது முடியாது; 'கண்ணுறாத' என்ற பெயரெச்சத்தின் ஈறுகெட்ட சொல்லாதலால். பின்னை எதுஸம்போதனமாயிருக்கத் தகுதி பெற்றுத் தயையில்லாமையைக் குறிக்கும் சொல்? என்றால் 'கண்ணறாய்' என்பதே அச்சொல், நங்கை

என்பது விளியேற்றால் நங்காய் என்றாவதுபோல் கண்ணறை (-தயை யில்லாதவன்) என்பது விளியேற்றால் 'கண்ணறாய்' என்றாகும். ஆக 'ஆனைக்கன்றருளையீந்த கண்ணறாய்' என்று யகரவிறுதியான பாடமே குற்றமற்ற தென்றதாயிற்று.

## (3) பெரியதிருமொழி 2-5-2

'நீண்டவத்தைக் கருமுகிலை' என்ற பாடமே வழங்கி வருவது. இதுவும், நீண்டவத்தக்கருமுகிலை' என்ற பாடமும் வ்யாக்யானத்தில் காணப்படுகின்றன. "நீண்ட அத்தை-அபரிச்சேத்யமான (=அளவிடற்கரிய) அந்த வஸ்துவை. (இப்பாடத்தில் கருமுகிலையென்பது தனிப்பட்ட சொல்). "அன்றிக்கே நீண்டவத்தக் (ஹஸ்தக்) கருமுகிலை' என்றாய் நீண்ட ஹஸ்தத்தையுடைய என்னுதல்'' என்பது வ்யாக்யான ஸ்ரீ ஸூக்தி. முந்தினபாடத்தில் ஒரு வகையாலும் அளவிட முடியாத ஒருபொருளாயுள்ளவனை என்றும், பிந்தின பாடத்தில் யாசகர்கள் இருக்குமிடம்வரையில் நீண்டு செல்லுகிற திருக்கையையுடைய காளமேகத்தை என்றும் பொருள். ஆக இரண்டும் நல்லபாடமே என்றதாயிற்று.

## (4) பெரிய திருமொழி 2-6-2

'நீர்வண்ணன் மார்வத்தில் இருக்கையைமுன் நினைந்தவனூர்' என்பது வழங்கிவருகின்ற பாடம். 'மார்வகத்தில்' என்ற பாடமே வ்யாக்யான ஸம்மதமான பாடமாகும். மார்வும் அகமும் - மார்வகம் என்று உம்மைத்தொகையாகக் கொள்க. அகம் - அருகு. 'கடல்போலேயிருக்கிற குளிர்ந்த வடிவில் இடவருகிலும் திருமார்விலும் (முறையே பார்மங்கையும்

மலர்க்கிழத்தியும்) எழுந்தருளியிருக்கையை அனுஸந்தித்து' என்ற வ்யாக்யான ஸ்ரீ ஸூக்தி காணத்தக்கது. இதில் ஸ்ரீதேவி மார்விலும் பூதேவி அகத்திலும் (இடவருகிலும்) உள்ளமை கூறப்படுதலால் 'நீர்வண்ணன் மார்வகத்தில்' என்பதே நல்ல பாடமென்று தெரிகிறது. இல்லையேல் பூமிதேவிக்கு இருப்பிடம் இல்லாதொழியும்.

## (5) பெரிய திருமொழி 5-8-9

'அங்கொடு நாழிகையேழுடனிருப்ப' என்பது அத்யாபகர்கள் ஸேவிக்கும் பாடம். அங்கு- ஓடு நாழிகை என்பதே வ்யாக்யானம் இசைந்த பாடம். 'வ்யர்த்தமே கழிகிற காலத்திலே' என்பது வ்யாக்யானத்திலே, 'ஓடு நாழிகை' என்றதன்விவரணமாக அமைந்துள்ளது. தொண்டை மன்னவனுக்கு ராஜ்ய பாரத்தோடே கூட, பயனில்லாமல் கழிகிற காலத்திலே திருவேங்கடமுடையான் அவனுக்கு வளங்கொள் மந்திரத்தைப் பொருளுடன் உபதேசித்ததாக இப்பாசுரம் கூறுகிறது. இவ்விடத்தரும்பதவுரையில் 'ஓடு என்றது ஒடு' என்று குறுகிற்று, என்று உள்ளது மறுக்கத்தக்கது. செய்யுள் கெடும்போலிருந்தால்லலவோ குறுக்கல் முதலான விகாரங்கள் கொள்ளுவது- இதற்கு நேர்மாறாக, ஓடு என்பதனை ஒடு என்று குறுக்கினால் தான் செய்யுள் கெடுகின்றது. எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தத்தில் அமைந்துள்ள இப்பதிகத்தில் அடங்கிய பாட்டுக்களின் ஒவ்வோரடியும் எட்டு ஈரசைச் சீர்களைப் பெற்றதென்னுமிடம் காணலாம். இங்ஙனமிருக்க, 'உளங்கொ।ளன்பினோ । டின்னருள் । சுரந்தங் । கொடு। நாழிகை । யேழுட னிருப்ப' என்று குறுக்கல் விகாரம் பெற்ற பாடங்கொண்டால் 'கொடு' என்ற ஐந்தாஞ்சீர்

நிரையசையொன்றேயான ஓரசைச் சீராகிச் செய்யுள் கெடுமாற்றை அறியலாம். ஓரசைச்சீர் வெண்பாவின் இறுதியில் மட்டுமன்றி வேறெங்கும் வாராதென்றார் களன்றோ. ஆக 'உளங்கொ ளன் பினோ டின்னருள் சுரந்தங் கோடு நாழிகை யேழுட னிருப்ப' என்று குறுக்கல் விகாரமடையாத பாடங்கொள்ளுமளவில் 'கோடு' என்பது தேமாவாய் ஈரசைச் சீரானமையால் செய்யுள் கெடாமை புலனாகும். ஆக 'ஓடு நாழிகை' என்பதே வ்யாக்யானத்துக்கும் வ்ருத்தலக்ஷணத்திற்கும் பொருந்தும் பாடமென்று தேறிற்றாகிறது.

## (6) பெரிய திருமொழி 8-2-5

'பெண்மையும் தன்னுடையுண்மை உரைக்கின்றாள்' என்றே அநுஸந்தானத்திலும் எல்லாப் புத்தகங்களிலும் உள்ள பாடம்; இது அடியோடு பொருந்தாது; இதற்குப் பொருளுமில்லை, வ்யாக்யானத்தோடு சேர்த்தியுமில்லை யாகையால். ''பெண்மை - ஸ்த்ரீத்வம்; ஏதேனும் ஓரவஸ்தை பிறந்தாலும் உயிர்த்தோழிக்குங் கூட மறைக்கும்படியிறே இருப்பது. அவளும் இவளுடைய வ்யாபாரங்களைக் கண்டு இவளுக்கு ஓடுகிற தசை இதுவாகாதே என்றறியு மித்தனையிறே; ஆயிருக்க, பெற்ற தாயான எனக்கும் வாய்விடா நின்றாள், இவளுக்கு என்ன பெண்மை' என்கிறாள்! என்னும் வ்யாக்யான ஸ்ரீ ஸூக்திக்குச் சேர 'பெண்மை என்? என்றே பாடம் கொள்ளத் தக்கது. பெண்கள் தங்களுண்மையை வெளியே யார்க்கும் சொல்ல மாட்டார்களே. இவள் தன்தோழிக்கும் மறைக்கத்தக்க தன்னுடைய உண்மை நிலையைத் தாயாகிய என்னிடம் சொல்லுகிறாளே! இது என்ன பெண்மை! என்பது இதன் கருத்து. ஆகையால்

பெண்மையும் என்பது நிரர்த்தகமானது. பெண்மை என்? என்பதே சுத்தபாடம் என்றதாயிற்று.

## (7) பெரிய திருமொழி 8 - 6- 5

'உலகு சூழ்ந்த நெடும் புணரி' என்ற பாடம் வழக்கத்திலுள்ளது. உலகைச் சூழ்ந்த நீண்டகடலால் சூழப்பெற்ற.. இலங்கை என்று இதன் பொருள். இப்பாடம் வ்யாக்யானத்தில் பாடாந்தரமாகக் கருதப்பட்டது. முக்கியமான பாடமோவெனில் 'உவரி சூழ்ந்த நெடும் புணரி' என்பதே. முந்திய பாடத்தில் புணரியாவது கடல் 'இது தன்னில் புணரி-அலை' உவரி-கடல். நெடும் புணரி உவரி சூழ்ந்த சேம மதிள் சூழிலங்கை என்று அந்வயம் கொள்க. 'ஓங்கின திரை (அலை) களையுடைய உவரியான (உப்புநீரான) கடலால் சூழப்பட்டிருப்பதுமாய் ஒருவராலும் ப்ரவேசிக்க அரிதான மதிளையுடைத்தான லங்கை' என்ற வ்யாக்யானம் ஸேவிக்கத்தக்கது. உலகைச் சூழ்ந்துள்ள கடல் லங்கையைச் சூழ்ந்துள்ள தென்று கூறுவதில் விசேஷமொன்றுமில்லாமையால் முந்திய பாடம் சாதாரண பாடமாயிற்று. ஓங்கிய அலைகளையுடைய கடலால் சூழப்பெற்றமை கூறுவது காரணமாக லங்கைக்கு விரோதிகளால் புகமுடியாமை என்னும் அதிசயம் ஸித்திப்பதனால் உவரி சூழ்ந்த என்கிற பாடமே முக்கிய பாடமாயிற்று.

## (8) முதல் திரு 86

'குன்றெடுத்துப் பாயும் பனி மறைத்த பண்பாளா' என்ற பாடமே வழங்கி வருகின்றது. இங்கே 'உடம்பிலே விழப்புக்க மழையை, மலையையெடுத்துப் பரிஹரித்த

நீர்மை' என்ற பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்தின்படி 'மறுத்த' என்றிருக்கவேணும். பரிஹரித்தலாவது தடுத்தல். அது மறைத்தலன்று, மறுத்தலேயாகும். ஆகையால் 'குன்றெடுத்துப் பாயும் பனி மறுத்த பண்பாளா' என்பதே ஸ்வரஸமான பாடம்.

## (9) மூன்றாந் திரு 15

'பணிந்த பணமணிகளாலே அணிந்து' என்று ஸேவித்து வருகிறார்கள். 'கவிந்த பண(ட)த்தின் மணிகளாலே அலங்க்ருதனான திருவனந்தாழ்வான்' என்ற பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் 'அலங்க்ருதனான' என்றிருப்பதற்கேற்ப 'அணிந்த' என்றே ஸேவிக்கவேண்டும். இதன் இறுதியிலுள்ள அகரம் புளிமாவும் கருவிளங்காயுமாய் நிற்பதால் மாச்சீர் முன் நிரைவந்து வெண்டளை பிறழாதாயிற்று. இல்லையேல் 'அணிந்தவங் கனந்தனணை' என்று கருவிளமும் கருவிளங்காயுமாகி, விளச்சீரின்முன் நிரையசை வருதலால் வெண்டளை பிறழும்.

## (10) திருவாசிரியம் 3ம் அடி

'பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய்' என்று புத்தகங்களிலுள்ளபடியே ஸேவையும் நடைபெறுகிறது. இங்கு 'பல நக்ஷத்ராதிகளையும் பூண்டு' என்றுள்ள பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் 'பூண்டு' என்று வினையெச்சமாக விவரித்துள்ளதற்கேற்ப,, மூலத்திலும் 'புனைந்து' என்று வினையெச்சமாகவே இருத்தல் தகும். இப்படியானால், மேலே தார்ஷ்டாந்திகத்தில் அந்வயிக்கிற 'மேதகு பல்கலன் அணிந்து' என்ற விடத்தில் 'அணிந்து என்ற வினையெச்சத்தோடு மிகப்

பொருந்துமென்பதும் காணத்தக்கது. இங்கு மரகதக் குன்றம் த்ருஷ்டாந்தம். தனிப்பெருநாயகன் தார்ஷ்டாந்திகம். ஆகையால் 'புனைந்து' என்பது உயர்ந்த பாடம்.

## (11) பெரிய திருவ 46

'நீங்காத மாகதியாம் வெந்நரகில் சேராமற்காப்பதற்கு நீ கதியா நெஞ்சே நினை' என்று ஸேவிக்கப்படுகிறது. 'நீ கதியாய்' என்பது உண்டு. கதியா(க) என்றாலும் பொருள் ஒன்றே. இங்கு மீட்சியில்லாத ப்ராப்யமாகவும் ஆம், ஸம்ஸாரத்தில் சேராதபடிக்கீடான ப்ராபகமாகவும் ஆம், நெஞ்சே நினை 'என்று இரண்டிடத்திலும் 'ஆகவும்' என்பதனைச் சேர்த்து 'ப்ராப்யமாகவும்' என்றும் 'ப்ராபகமாகவும்' என்றும் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யான மருளியுள்ளபடியால், மூன்றாமடியில் 'மாகதியாம்' என்றது போல நான்காமடியிலும் 'நீ கதியாம்' என்ற பாடம் கொள்ளத்தக்கது. கதியாய் என்றோ கதியா என்றோ கொள்ளல் தகாது.

## (12) பெரிய திருவ 32

'எமக்கென்றும் தாம் செய்யுந் தீவினைக்கே தாழ்வுறுவர் நெஞ்சினார்' என்று புத்தகத்திலுள்ளபடியே ஸேவிக்கப்படுகிறது. இங்கு 'தமக்கென்னவே ஒரு நினைவையுடையராய், என்று காண்கிற பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்திற்கிணங்க 'ம்' இல்லாமல் 'எமக்கென்று' என்றேயிருக்கவேண்டும். எமக்கு என்று = எனக்கு நான் உரியவன் என்று, அதாவது ஸ்வாதந்த்ர்யம் பாராட்டி என்றபடி. இங்கு பாட்டில் 'எமக்கு' என்பது நெஞ்சினார் நினைத்திருந்ததை ஆழ்வார் அனுவதித்த படியாம். அது வ்யாக்யானத்தில் 'தமக்கு' என்று ஆழ்வார்

வார்த்தையாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் 'எமக்கென்று' என்றிருந்தால்தான் 'எமக்கென்று நினைத்து' என்ற பொருளைக் குறிக்கின்ற 'தமக்கென்னவே ஒரு நினைவையுடையராய்' என்ற வ்யாக்யானத்தோடு பொருந்தும்.

## (13) பெரிய திருவ 63

'பின் துரக்கும் காற்றிழிந்த சூல்கொண்டல் பேர்ந்தும் போய்' என்று ஸேவிக்கப் படுகிறது. பின்னே துரக்கிற (துரத்துகிற) காற்றை இழந்த சூல் என்று இங்குள்ள பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்திற்குச் சேர 'இழந்த' என்றே பாடங்கொள்ள வேணும்.

## (14) சிறிய திருமடல் 13ம் கண்ணி

'ஏராரிளமுலையார் என்னையருமெல்லாரும்' என்று ஸேவிப்பதே எங்கும் வழக்கமாக இருக்கிறது. ஐயர் என்றால் பெரியவர் என்று பொருள். 'தாய்மாரும் மற்றுமுள்ளாரும்' என்று பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம் இவ்விடத்தில் அமைந்துள்ளதற்குப் பொருந்துமாறு 'அன்னையரும் எல்லாரும்' என்றே பாடங்கொள்ளுதல்தகும். ஐயரென்று பெரியோரைக் குறிப்பதன் வாயிலாகத் தாய்மாரைச் சொல்லுகிற தென்றல் க்லிஷ்டகல்பநமாகும்.

## (15) திருவாய்மொழி 1-4-7

'என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்றொரு வாய்ச்சொல்' என்றே அனுஸந்திக்கப்பட்டு வருகிறது. 'ஒருவாய் என்றது ஒரு வார்த்தை என்றபடி; சொல் என்றது சொல்லு என்றாய், ஒரு வார்த்தை சொல்லு என்றபடி'

என்ற ஈடுவ்யாக்யானத்தை ஸேவித்தவர்களுக்கு, ச் இல்லாமல் ஒருவாய் சொல் என்றே அனுஸந்திக்க வேணுமென்பது புலனாகும். வாய் - வாயால் சொல்லும் வார்த்தைக்கு ஆகுபெயராகுமிது. சொல் என்பது வினைமுற்று. வார்த்தையைச் சொல்லு என்ற பொருளில், நடுவில் சகரம் மிகாமல் 'வாய் சொல்' என்று இயல்பாகவே நிற்கும். 'நன்னீர்மையினியவர்கண் தங்காதென்றொரு வாய்ச்சொல் (திருவாய் 1-4-4) என்ற விடத்திலோவெனில் -ச் உள்ள பாடமே கொள்ளத் தகும்; வாயால் சொல்லும் சொல் - வாய்ச்சொல் என்று ஸமஸ்த பதமாகையாலும், அது 'நல்குதிரோ' என்பதில் அந்வயிக் கையாலும். இவ்விடத்தில் ஈட்டில் 'வாய்ச்சொல்' என்பதனை 'உக்தி' என்று விவரித்துள்ளமை கவனிக்கத் தக்கது. ஆக 1-4-4ல் வாய்ச்சொல் என்றும், 1-4-7-ல் 'வாய்சொல்' என்றும் ஸேவிப்பது ஈட்டோடிணங்கு வதாகும்.

## (16) திருவாய்மொழி 1- 6- 2

'எதுவேதென் பணியென்னாது' என்று நிறுத்திப் பின்பு 'அதுவேயாட்செய்யுமீடே' என்று ஸேவிக்கப்படுகிறது. புத்தகங்களில் காண்பதும் இங்ஙனமே. ஆனால் இங்கு 'எதுவேது இத்யாதி - முதுவேத முதல்வனுக்கு எது பணி? என்பணி ஏது? என்னாததுவே - என்று தன்னைக் கொண்டு கைவாங்காதொழியுமதுவே ஆட்செய்கைக்கு அதிகார மாவது' என்று ஈட்டுரை அமைந்துள்ளதற்கேற்ப, 'எதுவேதென்பணியென்னாததுவே' என்று நிறுத்திப் பின்பு 'ஆட்செய்யுமீடே' என்று ஸேவிக்கவேண்டும். பிரிப்பதானால் என்னாது என்று பிரிக்காமல் 'என்னாத' என்று பிரித்துப் பிறகு 'அதுவேயாட்செய்யுமீடே'

என்றுஸேவித்தல் நன்று. 'என்னாத - அதுவே' என்பது 'என்னாததுவே' என்றாவது - அகரம் தொக்கதனால். என்னாத அதுவே - என்று கைவாங்காத அந்நிலைமையே. 'என்னாத அதுவே, என்னாததுவே. தொகுத்தல் விகாரம்' இயலில் 'என்னாது' என்று நிறுத்துவது தகுதியற்றதென்க' என்று இங்கு தீபிகையுரை அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

## (17) திருவாய்மொழி 5-8-10

'தீராவினைகள் தீரவென்னையாண்டாய் திருக் குடந்தையூராய்'' என்று யகரவீற்றுப் பாடமே பல தமிழ் தெலுங்கு பகவத்விஷய கோசங்களில் மூலத்திலும் ஸகல வ்யாக்யான ப்ரதீகங்களிலும் காண்கிறது. ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியோவெனில் தீபிகையுரையில் 'திருக் குடந்தையூரா' என்று ஆகாரவிறுதியான பாடத்தை மூலத்திலும் பதவுரையிலும் அச்சிட்டுவிட்டு, விசேடவுரையின் இறுதியில் 'நான்காமடியின் முதற்சொல் ஊரா என்றும் ஊராய் என்றும் இருவகையிலும் பொருந்தும். ஊரன் என்பது விளியுருபேற்றால் ஊரா என்றாகும். ஊரான் என்பது வெளியுருபேற்றால் ஊராய் என்றாகும்' என்றெழுதியிருக்கிறார். ஒருதடவை ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியில் நேரில் 'பகவத்விஷயப் பதிப்புக்களெல்லாம் ஊராய் என்ற பாடத்தையே ஒருமிடறாக ஆதரியாநிற்க, ஸ்ரீ ஸ்வாமி மட்டும் ஊரா என்பதனையே முக்கியமாக ஆதரிப்பதென்கொண்டு? என்று அடியேன் கேட்டேன். அதற்கு அவர் புன்சிரிப்புடன் 'இதுவரையில் நான் உனக்கு இதைச் சொல்லவில்லையா? ஆனால் கேள்' என்று தொடங்கி 'வ்யாக்யான விரோதமேற்பட இடமில்லா மையால்

இரண்டு பாடமும் பொருந்துமென்றுதான் எழுதியிருக்கிறேன். ஆயினும் ஊரா என்ற ஆகாரவீற்றுப் பாடத்தில் நான் பக்ஷபாதம் காட்டினதற்குக் காரணம் - மற்றையடிகளில் 'வாராவருவாய்' 'ஆராவமுதாய்' 'தீராவினைகள்' என்று மூன்றாமெழுத்து வகரமாக விருப்பதனால் அவற்றோடு சேர்ந்து 'ஊராவுனக் காட்பட்டு' என்று வகரவெதுகை விடாமலிருக்குமே என்ற நப்பாசைதான். எதுகையில்லாத பாடத்தைவிட அஃதுள்ள பாடம் உயர்ந்ததன்றோ? நீயே சொல்' என்று விடையருளிச்செய்தார். ஆக இங்கு, ஊரா ஊராய் என்ற இரண்டும் பொருந்துமென்பதும், அவற்றுள் ஊரா என்பது சிறந்த பாடமென்பதும் அறியலாயிற்று.

## (18) இராமாநுச நூற்றந்தாதி 25

'வந்து நீயென்னை உய்த்தபின்' என்ற பாடமே பல மூல புத்தகங்களில் காண்பதும் அத்யாபகர்கள் திருவாக்கில் கேட்பதும் ஆகும். இங்கு 'என்னைத் தேவரீர் தாமே வந்து ப்ராபித்தருளின பின்பு' என்ற மணவாளமாமுனிகளின் வ்யாக்யானமும், 'வந்து நீ... தேவரீர் பரமபதத்தினின்றும் இவ்வளவாக எழுந்தருளி, என்னை - து:காச்ரயமான என்னை, உற்றபின் - பெற்றபின்பு' என்ற பிள்ளை லோகாசர்ய ஜீயர்ஸ்வாமியின் வ்யாக்யானமும் அமைந்திருப்பதற்குத் தகுதியாக 'வந்து நீ என்னை உற்றபின்' என்றே பாடம் கொள்ளல் யுக்தம். உய்த்தல் செலுத்துதல்; உறுதல் - அடைதல். முறையே வ்யாக்யானங்களில் காணும் ப்ராபித்தலும் பெறுதலும்- உறுதலென்னும் அடைதலேயாகுமன்றி உய்த்தலென்னும் செலுத்தலாகாமையால், 'உய்த்தபின்' என்பது தவறான பாடம்.

## (19) இராமானுச நூற்றந்தாதி 95

'மண்ணின் தலத்துதித்து மறைநாலும் வளர்த்தனனே' என்றே எங்கும் பெரும்பான்மையாக ஸேவித்து வருகிறார்கள். பிள்ளைலோகார்ய ஜீயர்ஸ்வாமியும் இப்பாடத்தையே ஆதரித்து உரையிட்டருளினர். ஆயினும் 'ஸர்வோஜ்ஜீவன சாஸ்த்ரமான ருகாதி சதுர்வேதத்தையும் அஸங்குசிதமாக நடத்தியருளினார்' என்று இங்கு விசதவாக்சிகாமணிகளின் வ்யாக்யானம் காண்கையாலே, அதற்குச் சேருமாறு 'உய்மறை நாலும் வளர்த்தனனே' என்று பாடம் கொள்ளுதலே ஏற்கும். உய்மறை - உஜ்ஜீவனமான வேதம். மேலும் 'மண்ணின் தலத்துதித் துய்மறை நாலும் வளர்த்தனனே' என்ற இப்பாடத்தின் கண் 'துய்மறை' என்பது கூவிளச்சீராய் அதுமேல் 'நாலும்' என்ற தேமாவின் முதலிலுள்ள நேரிசையோடு பொருந்தி வெண்டளை பிறழாமலிருப்பதும், துமறை என்ற பாடத்தில் துமறை என்பது புளிமாச்சீராய் அது மேலே நாலு மென்றதன் 'முதலிலுள்ள நேரசையோடு சேராமையால் வெண்டளை பிறழ்தலும் காண்க. மாமுன் நிரையும், விளமுன் நேருமன்றோ (இயற்சீர்) வெண்டளை!

இனி யாப்பிலக்கணங்களுக்குச் சேர ஸ்ரீ ஸ்வாமி திருத்திய பாடங்கள் சிலவற்றைக் காண்போம்.

## (20) உபதேசரத்தினமாலை - 7

'பெற்றிமையோர் என்று முதலாழ்வார்களென்னும் பேரிவர்க்கு' என்ற பாடமே எங்குமுள்ளது. இதில் 'என்னும்' என்ற தேமாவின்முன் 'பேர்' என்ற நேரசை வருதலால் வெண்டளை பிறழும். அதற்காக 'பெயரிவர்க்கு' என்ற பாடங்கொண்டால் முற்கூறிய

தேமாவின் முன் 'பெயர்' என்று நிரையசை வருவதால் அக்குற்றமில்லை.

## (21) உபதேசரத்தினமாலை - 34

'ஏழ்பாரும், உய்யவவர்கள் செய்த வியாக்கியை களுள்ளதெல்லாம்' என்பது வழங்கி வருகின்ற பாடம். இதன் முதற்சீராகிய 'உய்யவவர்கள்' என்றது வெண்பாவில் வரத்தகாத 'கூவிளந்தண்பூ' என்ற நாற்சீராய் விடுகையால் வெண்டளை பிறழும். ஆகையால் 'கள்' என்பதனை நீக்கி 'உய்யவவர்' என்ற பாடம் கொண்டக்கால் 'கூவிளங்காய்' என்ற இந்த மூவசைச்சீரின் மேலே 'செய்த' என்றதன் முதலிலே நேரசை வருதலால் வெண்டளை பிறழாமலிருக்கும். ஆகையால் 'ஏழ்பாரு, முய்யஅவர் செய்த வியாக்கியைக ளுள்ளதெல்லாம்' என்பது நல்ல பாடம்.

## (22) உபதேசரத்தினமாலை 73

'சிந்தைதன்னில் நாளும் சிந்திப்பார்' என்பது வழங்கி வரும் பாடமாகும். இதில் 'நாளும்' என்ற தேமாவின் முன் நிரையசை வரவேண்டியவிடத்தில் 'சிந்திப்பார்' என்ற விடத்தில் முதலில் நேரசை வருதலால் வெண்டளை பிறழ்ந்துவிடுகிறது. ஆதலால் 'தன்னில், என்பதில் உள்ள 'ன்' என்பதைக் குறைத்து 'சிந்தை தனினாளும் (தனில் - நாளும்) சிந்திப்பார்' என்று பாடங்கொள்ளுமளவில் 'தனினாளும்' என்பது புளிமாங்காய்ச்சீராய் அதன்மேல் 'சிந்திப்பார்' என்ற சீரின் முதலில் நேரசை வருதலால் வெண்டளை பிறழாமலிருக்கும். இவ்விடத்தைப் பற்றி ஸ்ரீ காஞ்சீஸ்வாமி ஸ்ரீராமானுஜனில் தனிப்பட 'ஒரேழுத்தினால் நாலெழுத்து வீண்' என்றொரு கட்டுரையே எழுதியுள்ளார். அது தேடிக் காணத்தக்கது.

## (23) திருவாய்மொழி நூற்றந்தாதி - 92

'கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாப்போல்' என்று ஸேவிக்கப்படுகிறது. புத்தகங்களிலும் காண்கிறது. மேலே தடமென்று நிரையசை வருவதனால் இதன் இறுதிச்சீர் மாச்சீராகவே கொள்ள வேண்டும். அப்படிக் கொள்ளுமிடத்து 'னாப்போல்' என்பதைத் தேமாவாகக் கொண்டால், அவ்வடியை 'கெடுமிடர் வைகுந்தத் தைக்கிட்டி னாப்போல்' என்று வெண்டளை பிறழாமல் பிரிக்கலாம், ஆனால் மோனையின்பம் கெடும்; முதற்சீரின் முதலெழுத்தான 'கெ'க்கு- மூன்றாஞ்சீரின் முதலெழுத்தான 'தை' என்பது இனமல்லாமையால். ஆகவே போல் என்பதனை போல என்றாக்கினால் கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாப் போல' என்று பாடமாகும். இதன் கண் 'கெ' என்பதற்கு 'கி' என்பது இன மாகையால் மோனையின்பம் கெடாமலும், 'போல' என்பது தேமாச்சீராகையால் அதன்மேல் 'தட' என்று நிரையசை வந்து வெண்டளை பிறழாமலும் இருக்கும். ஆகையால் 'கிட்டினாப் போல' என்பது ஸ்வரஸமான பாடம்.

இங்ஙனம் உபதேசரத்தினமாலையிலும் திருவாய் மொழி நூற்றந்தாதியிலும் இன்னும் சில விடங்களில் நல்ல பாடத்தை ஸ்ரீ ஸ்வாமியின் வ்யாக்யாநத்தில் காணலாம். விரிவுக்கு அஞ்சி நிற்கின்றேன்.

# 17

# திருப்புட்குழி விஜயராகவப்பெருமாள்

ஸ்ரீராமாயணம் முழுவதும் ஸ்ரீராகவனுடையதான விஜயபரம்பரையைத்தான் கூறுகிறது. விஜயமாவது வெற்றி. பகைவருடன் போர் செய்து அவர்களை வெல்வதுதான் வெற்றி என்று கருத வேண்டா. செய்தற்கரிய செயல்களைச் செய்து முடிப்பதும் வெற்றியேயாகும்.

தாடகைதன் உரத்தைக் கீறியது, மறைமுனிவன் வேள்வி காத்தது, வல்லரக்க (சுபாகு மாரீச) ருயிருண்டது ,சீதைக்காகிச் சினவிடையோன் (சிவன்) சிலையிறுத்தது, மழுவாளேந்தியை (பரசுராமனை) வென்றி கொண்டது, விராதனைக் கொன்றது, சூர்ப்பனகியின் கொடி மூக்கும் காதிரண்டும் விடுத்தது, கரனோடு தூடணன்தன்னுயிரை வாங்கியது, மாயமான் மாயச் செற்றது, சடாயுவை வைகுந்தத்தேற்றியது, கவந்தனைக் கணையொன்றினால் மடித்தது, மராமரமேழெய்தது, வாலிமார்பில் ஒருகணை உருவவோட்டியது, இலங்கையை மாருதியால் சுடுவித்தது, குரைகடலை அடலம்பால் மறுகவெய்தது, முந்நீர் அதர்பட மலையால் அணைசெய்தது, கும்பன் நிகும்பன் இந்திரசித்து கும்பகர்ணன் இவர்களை அழித்தது, இலங்கைமன்னன் முடியொருபதும் தோளிருபதும் போயுதிரச் சிலைவளைத்துச் சரமழைபொழிந்து அவன்தன்னைக் கொன்று வென்றிகொண்டது, செறிதவச்சம்புகன்தன்னைச் சென்று கொன்றது, இலவணன்தன்னைத் தம்பியால்

(சத்ருக்நாழ்வானால்) வானேற்றியது, சராசரங்களை வைகுந்தத்தேற்றியது ஆகிய இவையும் பிறவும் ஸ்ரீராமாயணத்தின் மூலமாக அறியப்படுகின்ற- இராகவனின் வெற்றிமாலை (வரிசை)யே அல்லவா. இவற்றில் சில போர் செய்து பெற்ற வெற்றிகள், மற்றும் சில பிறர் செய்தற்கரிய செயல்களைச் செய்து முடித்த வெற்றிகள் என்பதனைப் பிரித்து அறிதல் தகும்.

வெற்றிக்கு காரணம் பழுதுபடாத வீரம். அதனால் நேர்படுவது வெற்றி. இவற்றில் முதலது திருமங்கையாழ்வாருக்கு எவ்வுள்கிடந்தான் திரு மேனியிலே தொடைகொண்டிருப்பது புலப்பட, அவ்வீரத்தின் பயனான- இலங்கையின் நாசமும் இலங்கைநகரரக்கர் கோமானுடைய பொன்முடிகள் உருள்வதும், அவ்வாழ்வார்தம் திருவாக்கிலிருந்து ‘காசையாடை’ ‘தையலாள்மேல்’ ‘முன்னோர் தூது’ (பெரியதிரு 2-2-1,2,3) என்ற பாசுரங்களாக அவதரிக்க, அது காரணமாக அவ்வெம்பெருமான் வீரராகவப் பெருமாளாக ப்ரசித்திபெற்றான். இத்திருட்புட் குழியிலோவென்னில், அவ்வீரந்தனக்குப் பயனாக உண்டாகும் வெற்றியே இவ்வெம்பெருமான் இருக்கும் இருப்பிலே அவ்வாழ்வார் திருக்கண்களுக்குத் தென்பட்டு, அது ‘மரதகத்தைப் புட்குழியெம் போரேற்றை’ (பெரியதிருமடல் -117) என்ற அடியாக அவரிடமிருந்து தோன்ற, அதனால் இப்பிரான் விஜயராகவப் பெருமாளென்னும் புகழ்படைத்தான். போரேறாவது போர்செய்து வெற்றி பெறுகின்ற காளை போன்றவனென்றபடி.

வால்மீகி ராமாயணத்தில் உள்ள இராமபிரானுடைய பெருமையைப் பற்றிச் சில இடங்களை

அனுபவிப்போம். 'ஜிதக்ரோத: (பால 1-147) கோபத்தைவென்றவன். அதாவது - தண்டிக்கத்தக்கவர் களிடத்தில் மட்டும் கோபத்தை உபயோகப்படுத்துமவன்: 'தேவா : ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே பிப்யதி' கோபமுண்டாகப் பெற்ற இராமபிரானிடத்தில் அனுகூலரான தேவர்களோடு ப்ரதிகூலரான அரக்கர்களோடு வாசியற அனைவரும் அஞ்சுவர்கள்; 'மஹாவீர்ய;'(பால 1-8) யாராலும் சிந்திக்கவும் முடியாத-பலவகைப்பட்ட - வியக்கத்தக்க ஆற்றல்க ளைப் பெற்றவன்; 'சத்ரு நிபர்ஹண:' (பால 1-9) பகைவரை யழிக்கும் சக்தியையுடைவன் ; 'ரிபுநிஷூதந:' (பால 1-12) தன்னையடைந்தவர்களின் விரோதிகளைத் தொலைக்கும் பான்மையன்; 'ஸத்யபராக்ரம:'' (பால 1-19) பொய்யாகாத - பழுதுபடாத பராக்ரமத்தை யுடையவன் ; 'யதா வ்ரஜதி ஸங்க்ராமம் க்ராமார்த்தே நகரஸ்யவா। கத்வா ஸௌமித்ரிஸஹிதோ நாவிஜித்ய நிவர்த்ததே।। (அயோத்யா -2-38) ஒரு கிராமம் அல்லது நகரம் ஆகியவற்றில் உள்ள மக்களின் நலனுக்காக, இராமபிரான் லக்ஷ்மணனோடு கூடிப் போருக்குச் சென்றால் வெற்றியோடல்லது மீளமாட்டான். இவ்விடங்களிலும், பலச்லோகங்களில் இராமபிரா னுடைய வீரமும் வெற்றியும் விளங்குவதைக் காணலாம்.

முற்காட்டிய பல விஜயங்களினுள்ளே ராவண விஜயமே மிகவும் முக்கியமானது. இராமனாகத் திருமால் அவதரித்ததே ராவணவதத்திற்காக என்கிறது ராமாயணம். 'ஸஹிதேவை: உதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:। அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந:।। (அயோத்யா-1-7) பிறவாதவர் என்று பிரசித்திபெற்ற நித்யரான விஷ்ணுவானவர், ராவணனை வதம்செய்வதன்

பொருட்டு ப்ரஹ்மாதி தேவர்களால் ப்ரார்த்திக்கப் பட்டவராய் மனிதர்வாழும் பூவுலகில் இராமனாகப் பிறந்தார் என்றச்லோகம் கவனிக்கத்தக்கது. ராவணவதமே முக்கியமானால், அதற்கு முன்பு நடந்த போர்களும் வெற்றிகளும், ராவணனை வதம் செய்வதற்காக இராமபிரான் அதற்கு முன்பு செய்துகொண்ட அப்பியாஸமென்னத்தகும்.

இப்படிப்பட்ட மிகமிக முக்கியமான ராவணவிஜயம் இத்திருப்புட்குழியென்னும் திவ்யதேசத்திலேதான் ஸ்ரீஜடாயுமஹாராஜரின் ஆசீர்வாதத்தால் திடப்படுத்தப் பட்டது. பெருமாள் மாயமானைக் கொன்று இலக்குவனுடன் திரும்பி ஸீதையைத் தேடிக் கொண்டேவர, அவரைக் கண்ட மஹாராஜர் - 'யாம் ஓஷதிமிவாயுஷ்மந் அந்வேஷஸி மஹாவநே। ஸா தேவீ மமச ப்ராணா : ராவணேநோபயம் ஹ்ருதம்॥' (ஆரண்ய 67-15) இராமபிரானே, நீ நீண்டநாள் வாழ்வாய், இப்பெருங்காட்டில் ஓஷதியைத் (போனவுயிரை மீட்டுத்தரும் பச்சிலையைத்) தேடுவது போல் யாரைத் தேடுகிறாயோ, அப்படிப்பட்ட உன் தேவியான ஸீதையும் எனது ப்ராணன்களுமாகிய இவ்விரண்டும் இராவணனால் அபஹரிக்கப்பட்டன - என்று கூறி, இறுதியில், 'ந சத்வயா வ்யதா கார்யா ஜநகஸ்ய ஸுதாம் ப்ரதி। வைதேஹ்யா ரம்ஸ்யஸே க்ஷிப்ரம் ஹத்வா தம் ராக்ஷஸம் ரணே॥' (ஆரண்ய 68- 14) இராமா, ஜானகியை ராவணன் கொண்டுபோனானென்று நீ வருந்த வேண்டியதில்லை. விரைவிலேயே நீ அவ்வரக்கனைப் போரின்கண் வென்று ஸீதையோடு கூடி மகிழப்போகிறாய் - என்று ஆசீர்வாதம் செய்தருளுகிறார். 'ப்ராணேப்யோபி கரீயஸீ' (ஆரண்ய 10-22) என்று தன்னுடைய ப்ராணன்களைவிட

உயர்ந்தவளாகக் கருதப்பட்ட ஸீதை ராவணனால் கவரப்பட்டாளென்று முதன்முதலில் கூறினால் இராமபிரானுயிர் போய்விடுமென்றஞ்சி, அவை போகாமற்காப்பதற்காக 'ஆயுஷ்மந்' - நீ பல்லாண்டு வாழவேண்டுமென்று முதலில் வாழ்த்திப் பின்பு ராவணன் கவர்ந்ததைத் தெரிவித்து, பின்பு அப்படிப் பலகாலம் வாழ்வதற்குப் பயனாக ராவணவதத்தையும் ஸீதையோடு கூடிக் களிப்பதையும், உண்டாகப் போவதாக ஆசிகூறியிருத்தலை உற்று நோக்கினால், ஜடாயுவின் ஆசீர்வாதத்தினால்தான் ராவணவிஜயம் திடப்படுகிறதென்பதை அறியமுடியும். மனித பாவனையில் இருக்கும் இராமபிரான் திருவுள்ளத்தில் - ராவணவிஜயம் மஹாராஜரின் வாழ்த்தினால்தான் கிடைத்தது என்பது பட்டே தீருமாகையால், அம்மஹாராஜரை ஸம்ஸ்கரித்துத் தர்ப்பணமும் செய்தருளிய திவ்ய தேசத்தில் விளங்குகிற ராகவன் - ராவணனை விஜயம் செய்யும் ஆற்றல் படைத்த விஜயராகவனாக ஆனார் என்பதில் தடையொன்று மில்லை.

'மயா த்வம் ஸமநுஜ்ஞாத: கச்ச லோகாந் அநுத்தமாந் க்ருத்ரராஜ மஹாஸத்த்வ ஸம்ஸ்க்ருத : ச மயா வ்ரஜ॥' (ஆரண்ய 68-30) மஹாபலசாலியான கழுகரசரே, என்னால் தஹனஸம்ஸ்காரம் செய்யப்பட்ட நீர், என்னால் அநுமதிக்கப்பட்டவராய் எல்லையில்லாத உயர்த்தியை யுடைய லோகங்களைச் சென்று கிட்டக்கடவீர் - என்று வால்மீகி ராமாயணத்திலும்,

'மஹாயச :, யாஹிபதம் மம பராத்பரம் ' (வாமன புராணம் - திருப்புட்குழி மாஹாத்ம்யம் 61வது ச்லோகம்) ஸீதையைக் காப்பதற்காக இராவணனுடன் போர் புரிந்து

உயிர்துறந்து பெரும்புகழ் படைத்த பெரியஉடையாரே, நீர் உயர்ந்த பல ஸ்தானங்களைக் காட்டிலும் உயர்ந்ததான என்னுடைய ஸ்தானத்தைச் சென்று சேரக்கடவீர் - என்று வாமன புராணத்திலும், ஜடாயுவுக்கு இராமபிரான் மோக்ஷமளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. தன்னை மனிதனாகவே உலகுக்குக் காட்டிக் கொண்டுள்ள இராமபிரான்- திருமாலொருவனே கொடுக்க வேண்டிய மோக்ஷத்தை ஜடாயுவுக்குக் கொடுத்ததன் மூலமாக -மறைக்க நினைத்த பரத்வத்தை - திருமாற்றன்மையை வெளிப்படுத்திக்கொண்டு விட்டானே? - என்பது கேள்வி. இதற்கு நம்பிள்ளை அருளிச் செய்யும் விடையை இனிக் காண்போம். வால்மீகி ராமாயணத்திலேயே கைகேயியைக் குறித்து தசரதமஹாராஜர் கூறுவதாக ஒருச்லோகம் உள்ளது.

'ஸத்யேந லோகாந் ஜயதி தீநாந் தாநேந ராகவ :। குரூந் சுச்ரூஷயா வீர: தநுஷா யுதி சாத்ரவாந் ।।' (அயோத்யா 12-29)

இராமபிரான் பிராணிகளுக்கு நன்மையைச் செய்யும் ஸத்யவாக்கினால் எல்லாவுலகங்களையும் ஸ்வாதீனப் படுத்திக்கொள்கிறான். இரங்கத்தக்க எளியோரை தானத்தினாலும், ஆசார்யர்களைப் பணிவிடைகளினாலும், போரில் பகைவரை வில்லினாலும் ஸ்வாதீனப்படுத்துகிறான் - என்பது இதன் பொருள். இதில் ராகவன் தன்னுடைய ஸத்யவாக்த்வத்தினால் எல்லாலோகங்களையும் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுதல் என்னும் விஜயம் பேசப்படுதலால், அப்பெருமையினால் தனதான மோக்ஷலோகத்தை ஜடாயுமஹாராஜருக்குக் கொடுத்தாரேயன்றி, தன்னுடைய திருமாற்றன்மையினால் அல்ல. ஆகையால்

மனிதனாக நடித்த ராமன் பரத்வத்தை வெளிப்படுத்தி அசடாகவில்லை - என்பதே நம்பிள்ளை அருளிய விடை. இந்தச்லோகத்தில் -'ஸத்யேந லோகாந் ஜயதி' என்று - பரமபதமென்னும் மோக்ஷலோகமுட்பட எல்லா லோகங்களையும் தன்னதாக ஆக்கிக் கொள்ளுதலென்பது ஜயசப்தத்தினால் குறிக்கப்படுதலாலும் அம்மோக்ஷ லோகத்தை இத்தலத்தில் ஜடாயு மஹாராஜருக்கு அளித்ததனாலும் இத்தலத்தில் இராமபிரான் விஜயராகவனென்று பிரசித்தியடைந்தார்.

## 18

# வாழும் சோம்பர்

சோம்பராவார் - சோம்பேறிகள். சோம்பு (தல்) அதிகமாக உள்ளதனால் அதை முன்னிட்டே அறியப் படுபவர் - சோம்பர். சிறிதே சோம்புதல் இருக்கப் பெற்றவர் சோம்பர் என்று அழைக்கப்படுவதில்லை யன்றோ? சோம்பு (தல்) ஏற - மிகப் பெற்றவர் - சோம்பேறிகளாவர். ஏறுதல் - மிகுதல். ஆக இவ்விரண்டும் ஒருபொருட்கிளவிகள் என்க.

வாழும் என்பது இவர்களுக்கு அடைமொழியாகும். அடைமொழிகள் தேற்றப்பொருளையும் பிரிநிலைப் பொருளையும் காட்டக்கடவன. செஞ்ஞாயிறு என்பதில் செம்மை, 'ஞாயிறுதன்னில் செந்நிறம் இல்லாமலில்லை; நிச்சயமாக உண்டு' என்று உணர்த்துதலால் தேற்றத்தை உணர்த்தும் அடையாகும். செந்தாமரை என்பதன்கண் செம்மை, 'இத்தாமரை வெண்தாமரையன்று' என்று வெண்தாமரையிலிருந்து பிரித்துக்காட்டும் நிலையைப் பெற்றதனால் பிரிநிலையைத் தெரிவிக்கும் விசேஷணமாகும். இங்ஙனமே வாழும் சோம்பர் என்றவிடத்தில் வாழும் என்ற விசேஷணம், இச்சோம்பர் வாழாமலிருக்க மாட்டார்கள் வாழ்வது நிச்சயம் என்று தேற்றப் (நிச்சயப்) பொருளில் வந்தது. மேலும் வாழும் என்பது, இச்சோம்பர் கெடும் சோம்பர் அன்று, வாழும் சோம்பர் என்று இச்சோம்பரை கெடும் சோம்பரிலிருந்து பிரித்துக்காட்டுவதனால் பிரிநிலைப் பொருளிலும் வந்தது. இவற்றை முறையே வடமொழியாளர் அயோகவ்யவச்சேதகம் என்றும் அந்யயோகவ்யவச் சேதகம் என்றும் வழங்குவர்.

வாழும் சோம்பராவார் ஆரென்னில் நம்முடைய பூர்வர்களான ஆழ்வார்களும் ஆசார்யர்களுமே ஆவர். இவர்களுக்குச் சோம்புதலும் வாழ்வும் (=ஸுகமும்) உண்டாவது எங்ஙனம்? சோம்பேறிகளை துக்கப்படு பவர்களாக அன்றோ உலகில் நாம் காண்பது என்னில் - கேண்மின் : இவ்வாழ்வார்களும் ஆசார்யர்களும் வேத வேதாந்த சாஸ்த்ரங்களில் மிகவும் ஆஸ்திகராய் (=நம்பிக்கையுள்ளவர்களாய்) மோக்ஷத்திற்கு உபாயம் கருமயோகாதிகளன்று, பரமசேதநனான ஸ்ரீமந்நாரா யணனே என்றறிந்து அவனையே உபாயமாகப் பற்றிக் கலக்கம் தீர்ந்து இம்மையில் எம்பெருமானை அனுபவித்தும், மறுமையில் மோக்ஷமடைந்து பரமாத்மாவை அநுபவித்தும் ஸுகமடைவதனாலும், கஷ்டப்பட்டு அநுஷ்டிக்க வேண்டிய கரும யோகாதிகளை விட்டொழித்த சோம்பலுடைமையாலும் வாழும் சோம்பர் எனப்படுகின்றனர். வாழுதற்கும் சோம்பேறித்தனத்திற்கும் உலகில் காண்கிற முரண்பாடு இவர்களிடம் இல்லை என்க. ஆக வாழும் சோம்பர் என்கிறது, மோக்ஷமடைவதற்காகக் கருமயோகம் முதலிய உபாயங்களைவிட்டு ஸ்ரீமந்நாராயணனையே உபாய மாகப் பற்றுதலைத் தெரிவிக்கும் த்வயமந்திரத்தில் ஊன்றியவர்களையே. இத்தகைய வாழும்சோம்பர்களை எம்பெருமான் பெறாப்பேறாகப் பெற்று உகப்பானாம். இவ்விஷயத்தைக் கூறும் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலைப் பாசுரம் ஒன்றினை அனுபவிப்போம்.

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை
மிகவுணர்ந்து
ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கிக்
காம்பறத்தலை சிரைத்து உன் கடைத்தலையிருந்து
வாழும்
சோம்பரையுகத்தி போலும் சூழ்புனலரங்கத்தானே

*(38)* என்பதே அப்பாசுரம்.

## அவதாரிகை

தொண்டரடிப்பொடிகள் திருமாலையில் இப் பாட்டுக்கு முன்பாட்டுக்களில் - 'அரங்கனார்க்கு ஆட்செய்யாதே அளியத்தேன் அயர்க்கின்றேனே' (27) என்றும், 'எம்பிராற்கு ஆட்செய்யாதே என்செய்வான் தோன்றினேனே' (28) என்றும், த்வயத்தில் உத்தர கண்டமான 'ஸ்ரீமதே நாராயணாய நம:' என்றதன் பொருளாகிய - பகவத் கைங்கர்ய ப்ரார்த்தனையை எதிர்மறையால் காட்டியருளினர். இக்கைங்கர்யமாகிய புருஷார்த்தத்தைப் பெறுவதற்குத் தம்மிடம் கருமயோக, ஞானயோக, பத்தியோகங்களாகிய உபாயம் ஏதுமில்லை என்கிற ஆகிஞ்சந்யத்தை - 'குளித்து மூன்றனலை யோம்பும் குறிகொளந்தணமை தன்னை ஒளித்திட்டேன் என்கண் இல்லை நின்கணும் பத்தனல்லேன்' (25) என்றும், அநந்யகதித்வமாகிய [illegible] வேறு கதியில்லாமையை, 'ஆருளர்களைகண அம்மா அரங்கமாநகருளானே'(29) என்றும் குறித்தருளினர். களைகண் - கதி - ரக்ஷிப்பவர் என்றபடி. இந்த - வேறு உபாயமின்மையும் வேறு கதியில்லாமையும் சரணாகதி செய்யும் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள். இவையிரண்டும் த்வயமந்த்ரத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்படாவிடினும் பூர்வகண்டத்திலுள்ள ப்ரபத்யே

(=சரணம் பற்றுகிறேன்) என்பதற்கு எழுவாயாக வருவித்துக் கொள்ளப்பட்ட அஹம் (=அடியேன்) என்பதன் விசேஷணங்களாகக் கருதப்பட்டன என்பர் பெரியோர். இனிப் பூர்வ கண்டமான ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே (=ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடியிணையை மோக்ஷோபாயமாகப் பற்றுகிறேன்) என்பதன் பொருளை - 'ஐயனே அரங்கனே உன்னருளென்னும் (=அருளைப்பெற வேண்டு மென்னும்) ஆசையினால் வந்து நின்றேன் (=உன் திருவாசலில் வந்து அதாவது உன் திருவடிகளைக் கிட்டி வந்து அவையே உபாயமென்று உறுதி பூண்டு அசையாமல் நின்றேன்) (33) என்று ரஹஸ்யமாகக் காட்டியருளினர். த்வயத்தில் இரண்டு கண்டங் களிலுமுள்ள நாராயண சப்தார்த்தத்தை, முற்காட்டிய பாசுரங்களில் 'அரங்கமாநகருளானே' என்றதனால் காட்டியருளினர். அரங்கமாநகருளான் நாரா யணனன்றோ? இவ்வெம்பெருமான் அயோத்திமாநகரில் எழுந்தருளியிருந்த காலத்தில் இவரை இராமபிரான் ஸீதையுடன் சேர்ந்து வழிபட்டதாக வால்மீகி முனிவர் குறிப்பிடும்போது, 'ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத்' (ராமா. அயோ - 6-1) (இராமன் தடங்கண்ணியான தன் மனைவியுடன் கூடி நாராயணனை த்யானம் செய்தான்) என்று அரங்கமாநகருளானை நாராயணனாக அன்றோ குறிப்பிட்டுள்ளார். த்வயத்தி லுள்ள ஸ்ரீமத் சப்தார்த்தத்தை இதன் கண் மேலே திருமறுமார்ப (40) என்று அருளிச் செய்தனர். இத்தகைய த்வயமந்த்ர நிஷ்டரான இவ்வாழ்வாரைக் கண்ட உகப்பு அழகிய மணவாளனுடைய திருமுக மண்டலத்தில் தோன்றியதாம். அதை அனுபவித்த ஆழ்வார்

அப்பெருமானை நோக்கி இப்பாசுரத்தை விண்ணப்பிக்கிறார்.

மஹாபாரதத்திற்கு சரமச்லோகம் போலே இத்திருமாலைக்கு இப்பாசுரம் ஸாரமானது என்றருளிச் செய்கிறார் வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை. பகவச்சரணாரவிந்தசரணாகதியை விதித்த சரமச்லோகம் மஹாபாரதஸாரம், அதன் அநுஷ்டான மாகிய த்வயத்தின் அர்த்தங்களை விளக்கும் இப்பாசுரம் திருமாலையின் ஸாரமென்றபடி. இவை முறையே விதிரஹஸ்யமென்றும் அநுஸந்தான ரஹஸ்யமென்றும் ரஹஸ்யமாகவன்றோ ஆசார்யர்களாலே கொண்டாடப் படுகின்றன. ஆகையாலே இவற்றை இவற்றின் ஸாரமென்னத் தட்டில்லையிறே.

த்வயத்தின் பூர்வகண்டார்த்தமான சரணாகதியை மட்டும் நம்மாழ்வார் அகலகில்லேனென்னும் பாசுரத் தாலே அநுஷ்டித்ததாகக் காட்டினார். உத்தரகண்டார்த் தமான கைங்கர்ய ப்ரார்த்தனையை மட்டும் ஆண்டாள் சிற்றஞ்சிறுகாலைப் பாசுரத்திலே, 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்றதனால் தெரிவித்தருளினாள். அவ்விரண்டையும் சேர்த்து இவ்வொரே பாட்டில் தொண்டரடிப்பொடிகள் அருளிச் செய்கிறார். இது இப்பாட்டின் விசேஷமென்று பணித்தருளுகிறார் வ்யாக்யாத்ருஸார்வபௌமர். மேலும் த்வயார்த்தத்தில் ஊன்றிநிற்பவர்கள் திறத்திலே எம்பெருமானுக்கு உண்டாகும் உகப்பையும் காட்டுவது இப்பாசுரத்தின் மற்றொரு விசேஷமென்கிறார் அவர்.

## பாசுரத்தின் விளக்கம்

மேம்பொருள் போகவிட்டு - மேலெழப் பார்த்தால் ஒருபொருள் போலே தோன்றிச் சிலநாட்கள் கழிந்தவாறே

நாசமடையும் சரீரத்தையும் அச்சரீரத்தைக் கொண்டு அனுபவிக்கப்படுகின்ற நசிக்கும் பொருள்களையும் 'இவை புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு விரோதிகள்' என்று நினைத்து இவற்றில் ஆசைவையாமல் தள்ளிவிட்டு என்றபடி. சரீரமும் மற்றுள்ள பொருள்களின் அனுபவமும் உள்ள வரையில் மோக்ஷம் ஸித்தியாதாகையால் இவையனைத்தும் மோக்ஷ விரோதியாகையால் அபுருஷார்த்தங்கள். ஆகையால் இவற்றில் பற்று வைக்கக் கூடாதென்றவாறு.

மெய்ம்மையை மிகவுணர்ந்து - பொய்ம்மையென்றால் பொய். அதுபோல் மெய்ம்மையென்றால் மெய். சரீரம்போல் நசிக்காமல் - பொய்யாகாமல் எப்போதும் நித்தியமாய் இருக்கும் ஆத்மாவே மெய்யாகும். இதுதன்னை மிகவுணர்வதாவது - இவ்வாத்மா சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது; ஸ்வயம்ப்ரகாசமென்னும் ஞானமே வடிவமானது; மற்ற பொருள்களை அறிவிக்கும் தரும பூதஞானத்தைத் தன்னிடம் கொண்டது; பரமாத்மாவுக்கு சேஷமானது = அடிமை செய்வதையே இயல்பாக உடையது; மேலும் பரமாத்ம சேஷபூதர்களான பாகவதர்களுக்கும் சேஷமானது என்று ஆத்மாவை உள்ளபடி - பூர்ணமாக உணர்வதாகும். இத்தன்மைகளெல்லாம் சரீரத்தில் இல்லாமையால் அதை அலக்ஷ்யம் செய்யவேணுமென்றும், இவையெல்லாமுள்ளமையால் ஆத்மாவை - மோக்ஷம் பெறத்தகுதியுள்ளமை காரணமாக ஆதரிக்க வேணுமென்றும் மிகவும் உணர்ந்துகொள்ள வேணுமென்றும் தெரிவித்தபடி.

ஆம்பரிசு அறிந்துகொண்டு - மேம்பொருளைப் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்தலாகிய ஞானப் பிறவி ஆத்மாவுக்குக் கூறப்பட்டது. பிறந்த ஆத்மாவின்

வளர்ச்சிக்குக் காரணம் இதனால் கூறப்படுகிறது. ஆம்பரிசு என்பது - வளர்வதற்குக் காரணமான வகை என்றபடி. ஆதல்-வளர்ச்சி. முன்காட்டியபடி ஞானமாகிய பிறவி பிறந்த ஆத்மாவின் வளர்ச்சியை உண்டாக்குமது பகவானுக்குச் செய்யும் கைங்கர்யமே யாகும். பகவானுக்கு சேஷமாகிய ஆத்மாவுக்கு, அந்த சேஷத்வத்துக்குத் தக்கபடி கைங்கர்யம் செய்வதனாலன்றோ வளர்ச்சி உண்டாவது. அக்கைங்கர்யம் புருஷார்த்தமாவது - புருஷனான ஆத்மாவால் விரும்பப்படாத போது புருஷார்த்த மாகாமையினால், ஆம்பரிசை அறிந்து கொண்டு என்பதற்கு கைங்கர்யத்தை ப்ரார்த்தித்துக் கொண்டு என்றவரையில் பொருள் சொல்ல வேண்டும்.

ஐம்புலனகத்தடக்கி - ஐம்புலன்களையும் உபயோகித்துக் கைங்கரியம் செய்யும்போது ஆசையின் மிகுதியினால், 'இது நான் செய்யும் கைங்கர்யம்' என்று அஹங்காரமும், என்னுடைய புலன்கைளை உபயோகித்துச் செய்யும் இக்கைங்கர்யம் என்னுடையது' என்றும் 'இதனால் ஏற்படும் ஸுகம் என்னுடையது' என்றும் மமகாரங்களும் உண்டாவது இயற்கை யாகையால், அஹங்கார மமகாரங்களாகிற தோஷங்கலந்த கைங்கர்யம் - புழுவும் மயிரும் கலந்த சோறுபோல் தள்ளவேண்டியதாகிவிடுகிறது எம்பெருமானுக்கு. ஆகையால் புலன்களை அடக்குவதன் வாயிலாக அஹங்கார மமகாரங்களைத் தடுக்க வேண்டுமென்பது இதனால் காட்டியபடி. இங்ஙனம் தடுத்துவிட்டால், இக்கைங்கர்யத்தை தனக்குப் பரதந்த்ரரான நம்மைக் கொண்டு அவனே செய்கிறானாகையால் எம்பெருமானே கர்த்தா என்னும் உண்மையறிவும், தானிட்ட வழக்கான

நமது புலன்களைக் கொண்டு தான் கொள்ளும் கைங்கர்யமும் அதனால் உண்டாகும் ஸுகமும் அவனுடையது என்ற அறிவும் உண்டாகிறது. இத்தகைய நம்முடைய அஹங்கார மமகாரங்களோடு சேராத கைங்கர்யம் எம்பெருமானுக்கு சுத்தமான அந்நம்போல் போக்யமாய்க் கொள்ள வேண்டியதாகிறது. ஆக இதுகாறும் - 'மேம் பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து' என்றதனால் கைங்கர்யமாகிய வளர்ச்சிக்குக் காரணமாகிய - ஆத்மாவின் ஞானப்பிறவியையும், 'ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கி' என்றதனால் - அஹங்கார மமகாரங்களற்ற - அதாவது எம்பெருமானுடைய உகப்புக்காக, அவனே நம்மையும் நம்புலன்களையும் ஏவிச் செய்விக்கிறான் என்ற எண்ணத்துடன் கூடிய பகவத் கைங்கர்யத்தையும் உள்ளபடி அறிந்து அதை ஆசைப்படுகையாகிற - த்வயத்திலுள்ள 'ஸ்ரீமதே நாராயணாய நம :' என்ற உத்தரவாக்யத்தின் அர்த்தம் கூறப்பட்டதாகும். இனி இத்தகைய கைங்கர்யத்தைப் பெறுவதற்காக 'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே' என்ற பூர்வ வாக்யத்தின் பொருளான சரணாகதியை மேற்பகுதியினால் காண்போம்.

காம்பறத் தலைசிரைத்து - மேல் 'உன்கடைத் தலையிருந்து' என்பதனால் தெரிவிக்கப்படுகின்ற சரணாகதிக்கு அங்கமாகக் கண்ணபிரான் சரமச்லோ கத்தில் விதித்த ஸர்வதர்மபரித்யாகம் இப்பகுதியினால் குறிக்கப்படுகின்றது. எம்பெருமா னுக்கு எல்லாவகை யாலும் பரதந்த்ரமான ஆத்மாவிற்கு - ஸ்வதந்த்ரன் செய்யும் தன் முயற்சியினாலான கருமயோக, ஞானயோக பக்தியோகங்களைச் செய்வது ஸ்வரூபவிருத்த

மாகையாலே அவற்றைப் பற்று அறும் படி விட்டுவிட வேணுமென்கிறது இதனால். இப்பொருளைத்ருஷ்டாந்த மாத்திரத்தாலே வெளியிடுகிறார் ஆழ்வார். எங்ஙனம் தலைமயிரைச் சிரைக்கும்போது, மயிரின்காம்பும் - அடிப்பகுதியும் அற்றுப்போம்படி கத்தியை எதிரே நாட்டுவித்துச் சிரைக்கிறோமோ, அங்ஙனம் எம்பெருமானையே மோக்ஷோபாயமாகக் பற்றப் போகிற நாம், நமக்குப் பாரமான கருமயோகாதிகளை காம்பும் - அவற்றில் பற்றும் அறும்படி விட்டொழிக்க வேணுமென்றபடி.

உன் கடைத்தலையிருந்து - உன் திருவடிகளை மோக்ஷோபாயமாக நிச்சயித்து அந்நிச்சயம் குலையாமல் நிலை பெற்றுநின்று என்பது இதன்கருத்து. திருவடிகளையென்றருளாமல் கடைத்தலை என்றருளிச் செய்தது - நீசரான தாம் கிட்டினால் திருவடிகளின் சுத்தி கெட்டுவிடும் என்ற எண்ணத்தினால் என்கிறார் வ்யாக்யாதா. கோவிலை விட்டு வெளியே நின்றால் ஸம்ஸாரவாஸனை மறுவலிடுமென்றஞ்சிக் கடைத் தலையைப் பற்றினாராம். இருந்து - திருவடிகளைப் பற்றி அதிலேயே ஊன்றி அச்சம் கெட்டிருந்து என்றபடி.

வாழும் சோம்பரை - இனி வாழப்போகும் சோம்பரை என்றும், வாழ்ந்து கொண்டிருக்கிற சோம்பரை என்றும் இரண்டு வகையாகப் பொருள் கொள்க. முதலாவதாக - ப்ரபத்தி செய்த அதிகாரிக்கு மரணமானால் வைகுந்தம் கிடைப்பது உறுதியாகையால் வாழ்வாகிய மோக்ஷவின்பத்தைப் பெறவிருக்கும் அதிகாரியையும், இரண்டாவது - ப்ரபத்தியையே ஸுகமாகக் கொண்டிருக்கிற அதிகாரியையும் குறிக்கும். ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றியதனால்

மோக்ஷமாகிய வாழ்வும், கஷ்டமான கருமயோகாதி களான ஸ்வப்ரயத்னங்களை விட்டதனால் சோம்பலும் இவர்களிடத்தில் உள்ளதனால் இத்தகைய ப்ரபந்நர்களை வாழும் சோம்பர் என்னலாமன்றோ.

உகத்திபோலும் - உகப்பாய் போலும் என்றவாறு. இதற்கு எழுவாய் சூழ்புனலரங்கத்தானே என்பது. அழகிய மணவாளன் - தன்னுடைய கைங்கர்யத்தை விரும்பி, அதற்காக, தான் சரமச்லோகத்தில் கட்டளையிட்டபடியே, ஸர்வதர்ம பரித்யாகம் செய்து தன்னையே தஞ்சமாகப் பற்றிக் கவலையற்றிருக்கிற த்வய நிஷ்டரான தம்மைக் கண்டு உகப்பெய்தியதை, ஆழ்வார் அவனது திருமுக மண்டலத்தின் மலர்ச்சியினால் அறிந்து-'வாழும் சோம்பரான அடியேன் போல்வாரை உகப்பாய் போலும்' என்றருளித் தலைக்கட்டியருளியபடி. ஆக இப்பாசுரம் - த்வயத்தின் பொருள்களையும், த்வயார்த்தமான கைங்கர்யத்தில் விருப்பங்கொண்டு அதற்காக எம்பெருமானையே தஞ்சமாகப்பற்றிய அதிகாரியின் திறத்தில் உண்டாகும் உகப்பையும் குறிப்பிட்டு இதன் மூலமாக, திருமாலையில் ஸாரமான பாசுரம் என்ற விருதுதன்னை வ்யாக்யான சக்ரவர்த்தியால் பெற்று க்ருதக்ருத்யமாயிற்று. பெரியோர்களால் கொண்டாடப் படுகையன்றோ ஒருபொருளுக்குப் பெருமையாவது.

இனி இவரைப்போலே த்வயமந்த்ர நிஷ்டராய், சரணாகதிகத்ய முகத்தாலே, கைங்கர்யத்தை விரும்பிச் சரணாகதி செய்த எம்பெருமானாரைத் திருவரங்கநாதன் 'த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவத்சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகம் ஆஸ்வ'' (த்வயத்தை அர்த்தாநுஸந்தானத்துடன் எப்போதும்

இப்படியே - இந்த கத்யத்தின் வாயிலாக அநுஸந்தித்துக் கொண்டு, விழும் உடம்பு விழுந்தனையும் இந்த ஸ்ரீரங்கத்திலேயே ஸுகமாக இருக்கக் கடவீர்) என்று தனக்கு உகப்பாக, வாழும் சோம்பராக இருக்கும்படி நியமித்ததை இங்கு நினைத்தல் தகும்.

யதீந்த்ர ப்ரவணரான மணவாளமாமுனிகள் - எம்பெருமானார்போன்று வாழும் சோம்பராகக் கோயிலில் வாழ்ந்தமை ஆர்த்திப்ரபந்தத்தின் இறுதிப் பாசுரம் கொண்டறியலாகிறது.

'இந்த வரங்கத்தினிதிரு நீயென்றரங்கர்
எந்தை யெதிராசர்க்கீந்தவரம் - சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே நற்றாதைசொம் புதல்வர் -
தம்மதன்றோ தாயமுறைதான்

(''த்வயத்தை அர்த்தத்தோடு அனுஸந்தித்துக்கொண்டு இவ்வுடல் வீழும் வரையில் இந்த ஸ்ரீரங்கத்திலேயே ஸுகமாக இருக்கக்கடவீர்'' - என்று அரங்கன் எந்தையான எதிராஜருக்குத் தந்தருளின வரம் - ஆராய்ந்து பார்த்தால் அது அவரோடு சுவறிப்போகாமல் நமக்கும் அநுவர்த்திக்குமதன்றோ? நல்ல தகப்பனாருடைய சொத்து தாயமுறையின்படி புதல்வரைச் சேருமல்லவா?) என்னும் இப்பாசுரம் நோக்கத்தக்கது.

ஆகவே ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய நாமெல்லோரும் முன்னோரைப் பின்பற்றி, வாழும் சோம்பராய் எம்பெருமானுடைய உகப்புக்கு இலக்காகப் பெறுவோமாக.

''தாழ்சடையோன் சொறக்கற்ற சோம்பர்'' (இராமா.90) என்று அமுதனார் அருளியபடியே மதாந்திரத்தில் சேர்ந்து எம்பெருமான் திறத்தில் கருமஞான பக்திகளையோ சரணாகதியையோ அநுஷ்டியாமல் கெடும் சோம்பராய்

எம்பெருமானுடைய நிக்ரஹத்திற்கு ஒருநாளும் விஷயமாகாமல், அநுக்ரஹத்திற்கே விஷயமாகி இங்குமங்கும் இன்புற்று வாழப்பெறுவோமாக.

ஆழ்வாரெம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்.

## 19

# க்ருஷ்ணன்

*க்ருஷி: பூவாசக: சப்தோ ண :ச நிர்வ்ருதிவாசக:,*
*விஷ்ணு: தத்பாவயோகாச்ச க்ருஷ்ணோ பவதி*
*ஸாத்வத:।*

என்பது, மஹாபாரதம் உத்யோகபர்வம் 69ம் அத்தியாத்தில் ஐந்தாம் ச்லோகம். இது க்ருஷ்ண: என்பதன் கண் உள்ள உறுப்புக்களைப் பிரித்துக் காட்டி, அதன் பொருளையும் விவரிக்கிறது. க்ருஷி: (க்ருஷ்) என்பது, பயிர் செய்வதற்காக உழப்படுவதன் காரணமாக பூமியின் பெயராகும். ண: என்பது சுகத்தின் பெயராகும். மஹாவிஷ்ணுவானவர் யாதவனாய் அவதரித்து பூமிதேவியின் சுகத்தை உண்டாக்குவதனால் க்ருஷ்ணனாகிறார்- க்ருஷ்ணன் எனப்படுகிறார் என்றபடி. இதுதான் இந்த ச்லோகத்திற்குப் பொருள்.

பூமிதேவிக்கு எத்தனைப் பெரியமலைகள் தன்மேல் இருந்தாலும் அவற்றை அவள் அணுவளவும் ஆயாஸமில்லாமலேயே தாங்குந்தன்மையுடையவள். அதற்கு நேர்மாறாக, ஒரு துஷ்டன் இருந்தால்கூட அவனைச் சுமக்க மிகவும் வருந்துமவள். விஷ்ணுவானவர் யதுகுலத்தில் வசுதேவர்க்குக் மகனாய்ப் பிறந்து கம்ஸன் சிசுபாலன் முதலிய பல்லாயிரக்கணக்கான துஷ்டர்களைக் கொன்று பூமிதேவியின் சுமைகளையிறக்கி அவளுக்கு சுகத்தை உண்டு பண்ணி, தனக்கு ஏற்பட்ட க்ருஷ்ணன் என்ற பெயரைப் பொருள் பெறும் படிச் செய்தார். இவ்விஷயத்தை- விஷ்ணுபுராணத்தில் கிருஷ்ணாவதார சரிதங்களைக் கூறுகின்ற ஐந்தாவது அம்சத்தில் முதலத்யாயத்திலும். முப்பத்தேழாமத்தியாயத்திலும் உள்ள சில ச்லோகங்களைக் கொண்டு அனுபவிப்போம்.

*ஏதஸ்மிந்நேவ காலேது பூரிபாராவபீடிதா,*
*ஜகாம தரணீ மேரௌ ஸமாஜே த்ரிதிவௌகஸாம்*
*(வி.பு-5-1-12)*

கம்ஸன் முதலிய துஷ்டர்கள் தோன்றி வளருங் காலத்தில், பூமிதேவியானவள் அதிகமான சுமையினால் ஹிம்ஸிக்கப்பட்டு, மேருமலையில் பிரமதேவன் இந்திராதிதேவர்களோடு கூடியிருந்த சபைக்குச் சென்றாள்- என்றும்,

*அசேஷஹிண்யோZத்ர பஹுளா: திவ்ய மூர்த்திதரா:, ஸுரா:!*
*மஹாபலாநாம் த்ருப்தாநாம் தைத்யேந்த்ராணாம் மமோபரி.*
*தத் பூரிபார பீடார்த்தா நசக்நோம்யமரேச்வரா:,*
*பிபர்த்துமாத்மாநமஹமிதி விஜ்ஞாபயாமி வ:.*
*(வி.பு.5-1-25,26)*

பூமிதேவி அச்சபைக்குச் சென்று, 'அழகிய உருவங்கொண்ட தேவச்ரேஷ்டர்களே! பலமும் கர்வமும் மிகப் பெற்ற கம்ஸன் அரிஷ்டன் கேசி தேனுகன் ப்ரலம்பன் நரகன் முதலான அசுரர்களும் அவர்களுடைய பெருப்பெருத்த சேனைகளும் என்மீது வசிப்பதனால், அதிகமான சுமையுண்டாகி மிகவும் வருந்திய நான் பிராணனைத் தாங்குவதற்கும் ஆற்றலில்லாமல் இருக்கிறேன் என்பதை உங்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன் என்று அத்தேவர்களை நோக்கிக் கூறினாள்- என்றும்.

பிறகு பிரமதேவன், தேவர்களையும் பூமிதேவியையும் அழைத்துச் சென்று திருப்பாற்கடலின் கரையை

அடைந்து, அங்கேயெழுந்தருளியுள்ள திருமாலைப் பூசித்துத் துதித்து அவரிடம்,

*ஏஷா மஹீ தேவ மஹீப்ரஸூதை :மஹாஸுரை: பீடித சைல பந்தா, பராயணம் த்வாம் ஜகதாமுபைதி பாராவ தாரார்த்தம் அபாரஸார! (வி.பு.5-1-56)*

அபாரமான பராக்ரமமுடைய பெருமானே! இப்பூமிதேவியானவள் பூமியில் பிறந்த பெரிய அசுரர்களாலே, பூமியைத் தாங்கும் மலைகளுக்கும் பூமிக்கும் உள்ள உறுதியான பிடிப்பு தளர்ச்சியடைந்து அதனால் மிக வருந்தி, அவ்வசுரர்களாகிய தனது சுமையைப் போக்குவதற்காக, எல்லாவுலகத்திற்கும் உயர்ந்த கதியான உன்னைச் சரணமடைகின்றாள்- என்று கூறியதாகவும், அதற்கு பகவான்-

*உஜ்ஜஹாராத்மந: கேசௌ ஸிதக்ருஷ்ணௌ*
*மஹாமுனே,*
*உவாச ச ஸுராந் ஏதௌ மத்கேசௌ வஸுதாதலே,*
*அவதீர்ய புவோ பார க்லேசஹாநிம் கரிஷ்யத:.*
*(வி.பு.5-1-59,60)*

தனது வெளுப்பும் கறுப்புமான இரண்டு கேசங்களை (-தலைமயிர்களை) வாங்கி, இந்த என் தலைமயிர்கள் (பலராமனும் க்ருஷ்ணனுமாக முறையே) பூவுலகில் அவதரித்து பூமிதேவியின் சுமைத்துன்பம் நீங்கும்படி செய்யக்கடவன என்று பிரமன் முதலிய தேவர்களிடம் கூறினான்- என்பதும்,

அங்ஙனம் க்ருஷ்ணன் பலராமனுடன் அவதரித்து பூமியின் சுமையைப் போக்கிப் பரமபதம் சென்று சேர்ந்தான் என்பதை -

*க்ருத்வா பாராவதரணம் புவோ ஹத்வா அகிலாந்*
*ந்ருபாந்,*
*ஸாம்சோ விஷ்ணுமயம் ஸ்தாநம் ப்ரவிவேச முநே*
*நிஜம்.*
*(வி.பு.5-37-3, 4)*

*எல்லா துஷ்டவரசர்களையும் கொன்று பூமியின் பாரத்தை இறக்கி, தனது மற்றோ ரம்சமான பலராமனுடன் கூடித் தனக்கு உரிய விஷ்ணுமயமான ஸ்தானத்தை - பரமபதத்தைச் சென்றடைந்தான் என்று கூறியதும் கொண்டு -- க்ருஷ்ணாவதாரம், பூமிபாரத்தைப் போக்கி பூமிதேவிக்கு ஸுகத்தை உண்டு பண்ணுவதற்காகவே ஏற்பட்ட தென்று தெளியலாகும்.*

*மஹாபாரதம் மௌஸல பர்வத்திலும், க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யாம் ப்ருது லோசந:। மோஹயித்வா ஜகத்ஸர்வம் கத: ஸ்வம் ஸ்தான முத்தமம்।।*

*தடங்கண்ணனான க்ருஷ்ணன் பூமியில் பாரமான அசுரர்களை அழித்து, தன்னிடம் அன்புள்ள உலகமக்க ளனைவரையும் தன் கண்ணழகைக் காட்டி மோஹிக்கச் செய்து, தனக்கேயுரிய பரமபதமாகிய உயர்ந்த இடத்தைச் சென்று சேர்ந்தான் - என்று பூமியின் பாரத்தைப் போக்கினமை கூறப்பட்டுள்ளது காண்க.*

*இனி மயர்வற மதிநலமருளப் பெற்றவர்களில் நம்மாழ்வார் - 'மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான், கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்' (திருவாய் 9-1-10) என்றும், திருமங்கையாழ்வார்- 'துவரிக்கனிவாய் நிலமங்கை துயர்தீர்ந்துய்யப் பாரதத்துள் இவரித்தரசர் தடுமாற இருள்நாள் பிறந்த அம்மானை' (பெரியதிரு 8-8-9) என்றும், பெரியாழ்வார் -*

'போரொக்கப்பண்ணி இப்பூமிப்பொறை தீர்ப்பான் தேரொக்கவூர்ந்தாய் செழுந்தார் விசயற்காய்' (பெரியாழ்வார்திரு 1-8-6) என்றும் பூமியின் பாரத்தைக்கழித்தலே க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரயோ ஜனம் என்று அருளிச் செய்துள்ளமை கவனிக்கத்தக்கது.

ஆக க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரயோஜனமாகிய பூபாராவதரணத்தைச் செய்து அதன் வாயிலாக அப்பூமிக்கு ஸுகத்தை யுண்டு பண்ணுமவன் என்ற பொருள் க்ருஷ்ண சப்தத்திலிருந்து கிடைக்கிறதென்பது கூறப்பட்டதாயிற்று.

மேலும் க்ருஷ்ண: என்பதற்குச் சில பொருள்கள் உள்ளன. விரிவுக் கஞ்சி விடை பெறுகிறேன்.

# ஆழ்வார்களும் அருளிச்செயல்களும்

''**பொ**ய்கையார் பூதத்தார், பேயார், புகழ் மழிசையையன் அருள்மாறன் சேரலர்கோன், துய்யபட்டநாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன் ஈதிவர் தோற்றத்தடைவாமிங்கு'' (உபதேச ரத்னமாலை 4) என்கிறபடியே ஆழ்வார்கள் பதின்மர் ஆவர். இவர்களோடு நம்மாழ்வாருக்குச் சிஷ்யரான ஸ்ரீமதுரகவிகளையும் பெரியாழ்வாருக்குப் பெண் பிள்ளையான ஆண்டாளையும் சேர்த்து ஆழ்வார்கள் பன்னிருவரென்பதும் உண்டு.

இவர்களில் ஆண்டாள் பூமிப் பிராட்டியாரின் அவதாரம். 'அல்லிநாள் தாமரை மேலாரணங்கின் இன்துணைவி' என்று திருக்கண்ண மங்கையாண்டான் இவளை ஸ்ரீமஹாலக்ஷ்மியின் தோழியான பூமிப்பிராட்டி யாராக அருளிச்செய்துள்ளமை காணத்தக்கது. மேலும் வேதாந்ததேசிகர் கோதா ஸ்துதியில் 'ஸாக்ஷாத் க்ஷமாம் கோதாம்' என்றும், மணவாள மாமுனிகள் உபதேச ரத்ன மாலையில் 'எமக்காகவன்றோ இங்காண்டாள் (பூமிதேவி) அவதரித்தாள் ஆழ்வார் திருமகளாராய்' என்றும் இவளை பூமிதேவியின் அவதாரமாகவே குறித்தருளியிருப்பதும் இங்கு நினைக்கத்தகும். 'தேவிமாராவார் திருமகள் பூமி' என்ற (திருவாய்மொழி 8-1-1) பாசுரத்தின் ஈட்டில் 'பூமி' என்பதற்கு 'ஆண்டாளார்' என்று விவரித்துள்ளமையைக் கொண்டு மணவாள மாமுனிகள் முன்காட்டிய பாசுரத்தில் ஆண்டாளென்ற

சொல்லால் பூமிதேவியைக் குறித்தன ரென்று கொள்க. பூமிப்பிராட்டிக்கு இயற்பெயரான ஆண்டாளென்ற சொல்லே அவளுடைய அவதாரமான கோதைக்கும் தொடர்ந்து வந்ததென்று பிள்ளைலோகாரியசீயர் 'அன்னவயல் புதுவை' என்று தொடங்கும் தனியனுரையில் கூறியருளியதை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானது.

மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து ஸம்ஸாரிகளாகவே இருப்பவர்களில் சிலரை ஸ்ரீமந் நாராயணன் தனது இன்னருளுக்கு இலக்காக்கி ஞான பக்திகளை உண்டாக்கி தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபம், திவ்ய மங்களத்திருமேனி, அவ்விரண்டின் திருக்கல்யாண குணங்கள், ஸ்ரீவைகுண்டம் பிரகிருதி மண்டலமென்னும் உபய விபூதிகள் இவையெல்லாவற்றையும் அவர்களுக்கு விளக்கமாக அறிவிக்க, அவர்கள் அவனருளிய பக்தியினாலே எல்லாவற்றையுமறிந்து அவனுடைய குணங்களாகிய கடலில் மூழ்கித்தரை கண்டவர்களாய் 'ஆழ்வார்கள்' என்று பெயர் பெற்றார்கள்.

இவர்கள் திறத்தில் நித்ய ஸூரிகளின் அம்சமும் உண்டு. பொய்கையாழ்வாரிடம் சங்கின் அம்சமும், பூதத்தாழ்வாரிடம் கதையின் அம்சமும், பேயாழ்வாரிடம் நாந்தகவாளின் அம்சமும், திருமழிசையாழ்வாரிடம் சக்கரத்தின் அம்சமும், மாறனென்னும் நம்மாழ்வாரிடம் ஸ்ரீசேனைமுதலியாரின் அம்சமும் சேரலர்கோனான குலசேகராழ்வாரிடம் கௌஸ்துபத்தின் அம்சமும், பட்டநாதனாம் பெரியாழ்வாரிடம் கருடாழ்வாரின் அம்சமும், அன்பர் தாள் தூளியான தொண்டரடிப்பொடி யாழ்வாரிடம் வனமாலையின் அம்சமும், திருப்பாணழ்வாரிடம் ஸ்ரீவத்ஸமென்னும் திருமறுவின்

அம்சமும், கலியனாகிய திருமங்கையாழ்வாரிடம் சார்ங்கவில்லின் அம்சமும், மதுரகவிகளிடம் குமுதரென்னும் கணேசரின் அம்சமும் கலந்துள்ளதாக எம்பெருமானாருடைய சிஷ்யரான கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்ய ஸூரி சரிதத்தில் பேசப்பட்டுள்ளது. இவ்வாழ்வார்களில் முதல் நால்வரும் மதுரகவிகளும் துவாபரயுகத்தின் இறுதியிலும், மற்ற ஐவரும் கலியுகத்தின் ஆதியிலும் அவதரித்தவராவர். மற்றுமுள்ள இவர்களது சரித விளக்கமனைத்தும் முற்கூறிய திவ்ய ஸூரிசரிதம் பின்பழகிய பெருமாள் சீயர் அருளிச்செய்த குருபரம்பரா ப்ரபாவம் முதலிய புராதன நூல்களில் காணலாம்.

'பூதம் சிரோ ஹ்ரதமஹாஹ்வய மக்ஷியுக்மம்,
பட்டார்யமாஸ்யம் அதபார்க்கவ மஸ்ய கர்ணம் ।
பாஹூ வதந்தி குலசேகர யோகிவாஹௌ,
தோர்மத்ய நாபி சரணௌ இதராந் சடாரே: ॥'

என்றிந்த பிராசீந ச்லோகத்தில் நம்மாழ்வாரை அவயவி (முழுவுடல்)யாகவும், அவருக்குப் பூதத்தாழ்வாரைத் தலையாகவும், பொய்கை-பேயாழ்வார்களை இருகண்களாகவும், பெரியாழ்வாரைத் திருமுகமாகவும், திருமழிசையாழ்வாரைச் செவிகளாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் இருகைகளாகவும், தொண்டரடிப் பொடிகளைத் திருமார்பாகவும், திருமங்கையாழ்வாரை நாபியாகவும், மதுரகவிகளையும் ஆசார்ய ச்ரேஷ்டராய்ப் பின்பு அவதரித்த எம்பெருமானாரையும் திருவடிகளாகவும் ரூபணம் செய்துள்ளமையால், இவர்களுக்குள்ளே நம்மாழ்வார் முக்கியமானவரென்றும் ஏனைய

அனைவரும் அவருக்கு அங்கங்களாவரென்றும் அறியப்படுகின்றது.

இந்த நம்மாழ்வார் ஆழ்வார்களுக்குள் முக்கியமானவர் என்பது மட்டுமேயல்ல. நம்முடைய ஆசாரிய பரம்பரையில் பெரிய பெருமாள் பெரிய பிராட்டியார் சேனை முதலியார் ஆகிய இம்மூவர்க்குப் பின்பு நான்காவது ஆசார்யராகவும் விளங்கி, ஸ்ரீமந்நாத முனிகளுக்கு நாலாயிரத் திவ்யபிரபந்தம் யோகரகசியம் ரஹஸ்யத்ரயம் முதலியவற்றையும் உபதேசித்து இன்றளவும் இடைவிடாமல் ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்தை வளர்த்து வரும் பெருமையும் இவரைச் சேர்ந்ததேயாகும்.

''லக்ஷ்மீநாதாக்யஸிந்தௌ சடரிபுஜலத:
ப்ராப்ய காருண்ய நீரம்
நாதாத்ரௌ அப்யஷிஞ்சத் ததநு
ரகுவராம்போஜசக்ஷுர் ஜராப்யாம் ।
கத்வா ஸ்ரீயாமுநாக்யாம் ஸரிதம் அத
யதீந்த்ராக்ய பத்மாகரேந்த்ரம்
ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி
பஹுதா தேசிகேந்த்ர ப்ரமௌகை: ॥''

என்று எம்பார் அருளிய ச்லோகம் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. திருமகள் நாதனாகிய பெருங்கடலில் நம்மாழ்வாராகிய மேகம் கருணையாகிய நீரைப் பருகி, நாதமுனிகளாகிய மலையில் மழையாகப் பொழிந்தது. அந்நீர் உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி ஆகிய இரண்டு அருவிகளின் வாயிலாக ஆளவந்தாரென்னும் பெரிய ஆற்றினை அடைந்து, அதிலிருந்து (பெரிய நம்பிகள் முதலிய ஆசாரியர்கள் ஐவராகிய வாய்க்கால்களின் மூலமாக) எம்பெருமானாரென்னும்

பெரியதோர் ஏரியைச் சேர்ந்து நிரப்பி, எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளென்னும் மதகுகளின் தொகுதிகள் வழியாக இவ்வுலகிலுள்ள உயிர்களென்னும் பயிர்களில் பலவகையாகப் பெருகுகின்றது என்பது இந்த ச்லோகத்தின் பொருள்.

தாம் தாம் தவமியற்றி அதற்குத் தக்கவாறு அளவுபட்ட அறிவாற்றலைப் பெற்ற பராசராதி முனிவர்களைக் காட்டிலும் ஸ்ரீமந்நாராயணனுடைய நிர்ஹேதுகமான (இயல்பான=தவம் முதலிய காரணத்தால் உண்டாகாத) அருள் நோக்கைப் பெற்று அது காரணமாக அளவிறந்த அறிவாற்றல்களை லபித்த ஆழ்வார்கள் மிகமிக உயர்ந்தவர்களென்றும், அம்மகரிஷிகள் பணித்த இதிஹாஸ புராணங்களைவிட, ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப்ரபந்தங்கள் பரம்பொருள், அதனை யடைந்து பெறும் பயன், அப்பயனையடைவிக்கும் வழி ஆகிய (தத்வம் புருஷார்த்தம் ஹிதம் ஆகிய)வற்றைத் தெளிவாகத் தெரிவிக்கின்றனவாகையால் சாலவும் சிறந்தனவென்றும் பெரியவாச்சான்பிள்ளை தொடக்க மான ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் அருளிச் செய்வர்.

இம்மஹாநுபவர்களுக்குள்ளே முதலாழ்வார்களும் ஆண்டாளும் அயோநிஜர்கள். அதாவது ஒரு தாய் வயிற்றிலிருந்து பிறவாமல் தாமே மலர்களிலிருந்தும் பூமியிலிருந்தும் தோன்றினவர்களென்றபடி. திரு மழிசைப்பிரான் பார்க்கவமுனிவர்க்குக் கனகாங்கியென்ற அப்ஸரஸ்ஸினிடம் அவதரித்தவர். நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் நான்காம் வருணத்தில் அவதரித்தவர்கள். குலசேகரப்பெருமாள் சேரவரசர் குலத்தில் அவதரித்தவர். பெரியாழ்வாரும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஸ்ரீமதுரகவிகளும்

ப்ராஹ்மணர்கள். திருப்பாணாழ்வார் பஞ்சமகுலத்தில் அவதரித்தவர். இவரை நெற்கதிரில் அவதரித்து, பஞ்சம சாதியினரால் வளர்க்கப்பட்டவராகவும் கூறுவது உண்டு. இவர்களில் சிலர் தாழ்ந்த சாதியில் தோன்றிய வராயிருப்பினும், பகவத் பக்தியின் பெருமையினால் உயர்ந்தவராகவே பெரியோர்களால் கருதப்பட்டனர்.

''கிமப்யத்ராபிஜாயந்தே யோகிந:
ஸர்வயோநிஷு ।
ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம்
நைஷாம் சிந்த்யம் குலாதிகம் ॥''

(எல்லாச் சாதிகளிலும் யோகிகள் (ஸ்ரீமந்நாராயண பக்தர்கள்) பாசுரங்களைப்பாடி உலகத்தைத் திருத்துதலாகிய மிக மிக முக்கியமான காரியத்தைச் செய்வதற்கென்றே இட்டுப் பிறக்கிறார்கள். ஸகலாத் மாக்களுக்கும் நாதனாகிய ஸ்ரீமந்நாராயணனை ஸாக்ஷாத்காரம் செய்த இவர்களை சாதியின் உயர்வுதாழ்வுகளை ஆராயாமல் கௌரவிக்க வேண்டும்) என்ற பவிஷ்யோத்தர புராணச்லோகம் இங்கு ப்ரமாணமாக நினைக்கத் தக்கது.

மேலும்

''ந சூத்ரா: பகவத்பக்தா: விப்ரா: பாகவதா:
ஸ்ம்ருதா: ।
ஸர்வவர்ணேஷு தே சூத்ரா: யே ஹ்யபக்தா:
ஜநார்த்தநே ॥''

(விஷ்ணு பக்தர்கள் சூத்ரர்களாயிருந்தாலும் அந்த பாகவதர்கள் ப்ராஹ்மணர்களாகவே கருதப்பட்டனர். ப்ராஹ்மண சாதியில் பிறந்தவராயிருப்பினும் விஷ்ணு பக்தி யில்லாதவர்கள் சூத்ரர்களாகவே கருதப்பட்டனர்.) என்றதோர் பழைய ச்லோகமும் இவ்விடத்தில் கருதத்தக்கதாகும்.

இவ்வுயர்ந்த சாஸ்த்ரார்த்த தத்துவத்தை உட்கொண்டே ப்ராஹ்மணச்ரேஷ்டரான ஸ்ரீமதுரகவிகள் நம்மாழ்வாரை ஆசார்யராகத் தேர்ந்து அவரிடம் தத்வ ஹித புருஷார்த்தங்களின் உபதேசம் பெற்றார். அதன் பின்புள்ள ஸ்ரீவைஷ்ணவாசாரியர் பெருமக்களனைவரும் நம்மாழ்வாரைத் தமது குலபதியாகக் கொண்டதற்கும் இதுவே மூலமாகும்.

இப்பெருமக்களுடைய அவதாரத்தை ஸ்ரீபாகவதம் 11ம் ஸ்கந்தம் 5ம் அத்தியாயத்தில் வேதவியாச பகவான் குறிப்பாகக் காட்டியுள்ளார்.

"க்ருதாதிஷு நரா: ராஜந் கலௌ இச்சந்தி ஸம்பவம் ।
கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: ॥
கவ்சித் க்வசித் மஹாராஜ த்ராவிடேஷு ச பூரிச: ।
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ ॥
காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ ।
யே பிபந்தி ஜலம்தாஸாம் மநுஜா: மநுஜேச்வர ।
தேஷாம் நாராயணே பக்தி: பூயஸீ நிருபத்ரவா ॥

(அரசே! க்ருதயுகம் முதலிய முந்திய யுகங்களில் பிறந்த மனிதர்கள்- தாங்கள் கலியுகத்தில் பிறக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றனர். (ஏனெனில்) கலியுகத்தில் ஸ்ரீமந்நாராயணனையே தெய்வமாகவும் பயனாகவும் அதைப்பெறும் உபாயமாகவும் கொண்ட பக்தர்கள் ஆங்காங்கே உண்டாகப் போகின்றனர். சிறப்பாகத் தமிழ்நாடுகளில் மிகமிக உண்டாகப்போகிறார்கள். தமிழ்நாடாவது தாமிரபரணீ வைகை பாலாறு காவேரீ மஹாநதீ முதலான நதிகள் ஓடுமிடமான பகுதியாகும். அந்நதிகளின் நீரைப் பருகுவோர்க்கு நாராயணனிடத்தில் பக்தி தடையின்றி அதிகமாக உண்டாகும்.) என்று கூறப்பட்டுள்ளமை காண்க. க்ருதாதியுகங்களில்

வருந்திப்பெறவேண்டிய விஷ்ணு பக்தியானது கலியுகத்தில் இந்நதீதீரங்களில் அவதரித்த ஆழ்வார்களின் அருள் மொழிகளாலும் அந்நதிகளின் தூய நீரைப் பருகுவதாலும் மிக எளிதாக உண்டாகுமென்ற காரணத்தினால் முன்யுகங்களில் பிறந்த மனிதர்கள் கலியுகத்தில், அதிலும் தமிழ் நாட்டில் பிறக்க ஆசைப்படுவதாக முனிவர்பெருமான் குறித்துள்ளமை கருதத்தக்கது.

இதுவரை ஆழ்வார்களைப் பற்றிச் சிறிது அனுபவித்தோம். இனி அவர்கள் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தங்களையும் சிறிது அனுபவிப்போம்.

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய இந்நான்கும் முறையே ரிக்வேதம், யஜுர்வேதம் அதர்வவேதம், ஸாமவேதமாகிய இந்நான்கின் ஸாரமாகும். திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்னுமிவையாறும் அங்கங்கள். மற்றவர் அருளிய பதினான்கு பிரபந்தங்களும் உபாங்கங்கள். இவை யனைத்தும் ஸ்ரீமந்நாராயணனையே பரம்பொருளாகக் கூறுவதிலே நோக்குடையவை. மஹாபாரதம் வேதத்திற்கு உபப்ரும்ஹண (விவரண)மாக இருந்தாலும், ஐந்தாவது வேதமாகவும் இருப்பது போல, நம்மாழ்வார் அருளியவை தவிர மற்றவை அவற்றுக்கு அங்கமாக இருந்தபோதிலும், வேதமாகவும் கருதப்படுகின்றன. இவற்றுக்கு வேதமாந்தன்மையும், அத்யயன உத்ஸர்ஜன ஆரம்ப காலங்களும் (ஓதுதலை விடும் காலமும்

தொடங்கும் காலமும்) யாஜ்ஞவல்க்ய ப்ரஹ்மோப நிஷத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

''த்ராமிடப்ரஹ்மஸம்ஹிதா:
சத்வாரோ வேதா: பவந்தி ।
தேஷு சத்வாரோ வேதா:
நாராயணாம்ச பூத
சடாரிணா ப்ரகாச்யந்தே.
ஷட் அங்காநி கலிவைரிணா
ப்ராஜமாநாநி. சேரேச பட்டாத்யை:
தீப்யமாநா:
சதுர்த்தச வித்யா:. ஏதே? காயத்ர்-
யாத்மகா: சதுர்விம்
சதிஸங்க்யா: சதுஸ்ஸஹஸ்ரகாதா:
த்ராவிட ச்ருதய:
வாஸுதேவ விஷயா: ப்ரவர்த்தந்தே.
தத் ச அத்யயனம்
கிம்ரூபம்? கதம்ச கர்த்தவ்யம்?
தப்தசக்ராதிதாரணாத்
ஊர்த்வம் அத்யாபயேத், தைஷ்யாம்
ஸௌர்யர்க்ஷே
த்ராமிடம் அதீயீத, ஊர்ஜே
ஹி அஜர்க்ஷே ஹி
உத்ஸர்ஜநம்''
என்பதே அவ்வுபநிஷத்து.

த்ராவிட ப்ரஹ்ம ஸம்ஹிதைகள் நான்கும் நான்கு வேதங்களாகும். அவ்வேதங்கள் நான்கும் நாராயணனின் அம்சமான நம்மாழ்வாரால் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆறு அங்கங்கள் கலியனால் விளங்குகின்றன. குலசேகரர் பெரியாழ்வார் முதலானவர்களால் விளக்கம் பெறுவன

மற்ற பதினான்கு வித்யைகள். இவையனைத்தும் காயத்ரீ ரூபங்களாய், இருபத்து நான்கென்னும் எண்ணையும் நாலாயிரப் பாசுரங்களையும் கொண்ட த்ராவிட வேதங்கள் ஸ்ரீமந்நாராயணனையே விஷயமாகப் பெற்று நடக்கின்றன. அவற்றை ஓதுவது எப்படி? எவ்வங்கத்தோடு ஓத வேண்டும்? (என்றால்) தப்த சக்ராதிதாரணம் (காய்ச்சிய சங்கு சக்கரங்களை ஆசார்யரின் திருக்கையினால் சிஷ்யன் தன் தோள்களில் ஒற்றிக் கொள்ளுதல்) ஆனபின்பு ஆசார்யன் சிஷ்யர்களுக்கு ஓதுவிக்க வேண்டும். தைமாத ஹஸ்த நக்ஷத்திரத்தில் இத்திவ்ய ப்ரபந்தங்களைத் தொடங்க வேண்டும். கார்த்திகை மாத ரோஹிணியன்று நிறுத்திவிடவேண்டும் என்பது முற்காட்டிய வடமொழி வசனங்களின் பொருள். இதுகாறும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் வேதம் போன்றவை என்று அறிந்தோம். இனி இவை வேதங்களைவிட உயர்ந்தவை என்பதையும் நன்றாக அறிவோம்:

''அதீதத்ராவிடாம்நாயாம் ஸ்த்ரியம்
ப்ரஹ்மவிதம் நரம்,
ஆரோப்ய தேவை: நிர்ணீதம்
துலாயாம் அதிகா வதூ:।।
இத்யநேகை: ச முநிபி: குஷ்யதே
ஸகலஸ்ம்ருதெள।
தஸ்மாத் அத்யயனம் கார்யம்
த்ராவிடாம்நாய ஸந்ததே: ।।

(த்ராவிட வேதத்தை ஓதிய பெண்மணியையும் ப்ரஹ்மமென்னும் ஸம்ஸ்க்ருத வேதத்தையோதின புருஷனையும் தராசில் ஏற்றி, முற்கூறிய பெண்மணி உயர்ந்தவள் என்று தேவர்களால் அறுதியிடப்பெற்றது

என்று பல முனிவர்களால் பல ஸ்மிருதி நூல்களில் உரக்கப் பேசப்படுகின்றது. ஆகையால் தமிழ்வேதத் தொகுதியைக் கட்டாயமாக ஓத வேண்டும்) என்று பிரம்மாண்ட புராணத்தில் ஸநத்குமார திலீப ஸம்வாதத்தில் குறிக்கப்பட்டுள்ளதனால் இது தெளிவாகின்றது.

பெருமாளுடைய திருவீதிப் புறப்பாட்டில் ஸம்ஸ்க்ருத வேதம் முதலியவற்றைப் பின் புறத்திலும், தமிழ் வேதங்களை முன்புறத்திலும் ஓத வேண்டுமென்பது ஸ்ரீபாஞ்சராத்ர வாஸுதேவஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளதைக் காண்போம்.

''ருகாதீந் தேவயாத்ராயாம்
தக்ஷிணாதிஷு வை க்ரமாத் ।
படேத் தேவஸ்ய பரத: ஸ்துதீரந்யா: ச
மாநுஷீ: ॥
புரதோ தேவ யாத்ராயாம்
த்ராவிட ச்ருதிலக்ஷணா: ।
ஆபத்தபாணயோ ஹர்ஷாத்
படேயு: பரமா: ஸ்துதீ: ॥

(பெருமாளுடைய திருவீதி யுத்ஸவத்தில் பெருமாளுக்குப் பின் புறத்தில் தெற்கு முதலிய திக்குகளில் முறையே ருக்கு முதலான வேதங்களையும் மனிதரியற்றிய மற்ற துதிநூல்களையும் ஓதவேண்டும். பெருமாளுடைய முன்புறத்தில் தமிழ் வேதரூபமான உயர்ந்த ஸ்தோத்ரங்களை கைகளைக் கட்டிக்கொண்டு ஸந்தோஷத்துடன் ஓதக் கடவர்கள்) என்பதே அவ்வாஸுதேவ ஸம்ஹிதா வசனம்.

மேலும் அவ்வாஸுதேவ ஸம்ஹிதையிலே, மூன்று தலைமுறைகள் ஸம்ஸ்க்ருத வேதத்தையும் த்ராவிட வேதமான திவ்யப்ரபந்தத்தையும் அத்யயனம்

செய்யாவிட்டால், ப்ராஹ்மண்யம் அழிந்துவிடுமென்று கூறப்பட்டுள்ளது.

''ஸ்வசாகா த்ராவிடாம்நாயௌ
விச்சித்யேதே த்ரிபூருஷம் ।
ஸ்ரவதிஸ்ம யதஸ் தஸ்மாத்
ப்ராஹ்மண த்வமிதி ச்ருதி: ॥
த்ராவிடாம்நாயஸஹிதா
(அ) த்யேத்வயா வைஷ்ணவை: ச்ருதி: ।
நிஷ்பலா தேந ரஹிதா
ஸாத்வப்ரணவமந்த்ரவத் ॥''

(ஒருவனுக்குத் தன் சாகையான (நான்கு வேதங்களில் தான் ஓத வேண்டிய பகுதியான) ஸம்ஸ்க்ருத வேதத்தினுடையவும் தமிழ் வேதத்தினுடையவும் அத்யயனம் மூன்று தலைமுறைகள் விட்டுப்போனால் அவனிடமிருந்து ப்ராஹ்மணத்வம் விலகிப் போய்விடுமென்று பெரியோர்கள் சொல்லக் கேள்வி. அதனால் விஷ்ணு பக்தர்களால் ஸம்ஸ்க்ருதவேதம் தமிழ் வேதத்துடன் கூடியதாகவே ஓதப்பட வேண்டும். தமிழ் வேதத்தை விட்டு ஸம்ஸ்க்ருத வேதத்தை ஓதினால் அது ப்ரணவத்தை விட்டு ஓதிய மந்திரம் போல் பயனற்றதாகிவிடும்) என்பது காண்க.

சுப காரியங்களுக்கு முன்பும் அசுபகாரியங்களுக்குப் பின்பும் திவ்ய ப்ரபந்தத்தை ஓதவேண்டுமென்னும் விஷயம் ப்ரஹ்மாண்ட புராணத்திலும் வ்ருத்த வாஸிஷ்டத்திலும் ஒரேவிதமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

''வ்ருத்தௌ ஆதௌ க்ஷயேசாந்தே
த்ராவிட ப்ரஹ்மஸம்ஹிதா ।
அத்யேதவ்யா த்விஜவரை:
ஆத்யம் கீதிஸஹஸ்ரகம் ॥

*சுபாதௌ த்விஜவர்யை: ச*
*ஸர்வ ஸம்பத் சுபாவஹம்*
*ஸஹஸ்ர சாகாத்யயனம் காரயேத் வை*
*த்விஜோத்தம: ॥*
*அசுபாந்தே விசேஷேண*
*த்ராவிட பரஹ்மஸம்ஹிதா ।*
*அத்யேதவ்யா த்விஜவரை:*
*ஆசௌசாகவிநாசிநீ ।*

*''த்ராவிட ப்ரஹ்ஸம்ஹிதை சுபத்திற்கு (பிள்ளை பிறப்பதற்கு) முன்பும் அசுபத்திற்கு (இறப்பதற்கு) பின்பும் ஓதப் பட வேண்டும். ப்ராஹ்மணோத்தமன் ப்ராஹ்மணோத்தமர்களைக் கொண்டு சுபத்திற்கு முன்பு ஓதுவிக்கப்பட்ட உயர்ந்த திருவாய்மொழியானது எல்லாச் செல்வங்களையும் மற்றுமுள்ள நன்மைகளையும் பயக்கவல்லது. அசுபத்திற்குப் பின்பு ஓதுவிக்கப்பட்ட திருவாய்மொழியாயிரம் தீட்டாலுண்டாகும் பாவங்களை அறவே போக்க வல்லது. ஆகையால் அந்தணன் திருவாய்மொழியை ஓதுவிக்க வேண்டும் என்றது நோக்குக.*

*இறுதியாக, இவ்வாழ்வார்கள் விஷயத்திலும் அருளிச்செயல்கள் திறத்திலும், ஸகல திவ்யத் தலங்களிலும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள எம்பெருமான்களுக்குள்ளே உயர்ந்தவனான ஶ்ரீரங்க நாதனாம் அழகிய மணவாளன் காட்டும் அபிமானத்தை ரஸிக வித்வத்ஸார்வ பௌமராய் ஶ்ரீரங்கேசபு ரோஹதராகிய ஶ்ரீபராசர பட்டர் அருளிச் செய்த ச்லோக ரத்னத்தின் வாயிலாக அனுபவிப்போம்.*

''வித்யந்தே ஹி பராசராதி முநிபி: ப்ரோக்தா:
ப்ரபந்தா: புரா, பக்தா ஏவ ஹி தே ததாபி
ஸகலம் த்யக்த்வா(அ)த்ர ரங்கேச்வர: ।।
பக்தாநேவ பராங்குசாதி புருஷாந்
தத்தத் ப்ரபந்தாந் ச தாந் ।
அத்யாத்ருத்ய ஸதோபலாலயதி யத்
தத் ஜ்ஞாபநம் தத்ப்ரியே ।।''

''பராசரர் முதலிய மகரிஷிகளால் முன்பே பணிக்கப்பட்ட இதிஹாஸ புராணாதி க்ரந்தங்கள் இருக்கின்றன அல்லவா? அம்மகரிஷிகள் பக்தர்கள் அல்லவா? அங்ஙனம் இருந்தும் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் அந்த மகரிஷிகளையும் அவர்களின் நூல்களையும் விட்டு, நம்மாழ்வார் தொடக்கமான மஹாபுருஷர்களான ஆழ்வார்களையும் அவர்களருளிய அவ்வப் பிரபந்தங்களையுமே எப்பொழுதும் மிகவும் ஆதரித்து கௌரவித்துக் கொண்டாடுகிறார் என்பது, அவ்வாழ்வார்கள் திறத்திலும் அவ்வருளிச்செயல்கள் பக்கலிலும் அவ்வழகிய மணவாளன் வைத்துள்ள அன்பிற்கு அறிகுறியாகும்'' என்றிந்த பட்டர் பணித்தருளிய ச்லோகத்தை அனுஸந்திப்பவர்களுக்கு ஆழ்வார்களின் சீர்மையும் அருளிச் செயல்களின் சிறப்பும் நன்றாக விளங்கும்.

மேலும் இவற்றை விளக்கமாக அறிய விரும்புவோர், ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிய 'திவ்யப்ரபந்த வைபவ விவேக:' என்னும் நூலின்கண் கண் செலுத்தும்படி வேண்டுகிறேன். அந்நூல் தமிழ் மொழி

பெயர்ப்புடன் பதிப்பிக்கப்பட்டு கீதாசார்யன் பதிப்பகம் 7, தென்னண்டை மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை-600 005 என்ற முகவரியில் கிடைக்கிறது.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்.